களுகங்கை கருத்திட்டத்தின் தற்காப்பு வலய விருத்தி

உத்தேச களுகங்கை நீர்த்தேக்கத்தைச் சுற்றி அமையப்பெற்றுள்ள 100 மீற்றர் கொண்ட தற்காப்பு வலயத்தினுள் 1100 மரக்கன்றுகள் வரை நடப்பட்டன. களுகங்கை நீர்த்தேக்கத்தின் தற்காப்பு வலய எல்கைகள் அடையாளமிடப்பட்டன.

மரநடுகை நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வனப்பயிரிடல் நிகழ்ச்சித் திட்டம்

- களுகங்கை பிரதேசத்தினுள் அமைந்துள்ள குள ஒதுக்குக் காடுகளில் (குளம் இல 07, குளம் இல 09, குளம் இல 05) 5000 மரக்கன்றுகள் நடப்பட்டன.
- வீதியின் இரு மருங்கிலும் மரங்கள் நடப்படடு வீதி இரு மருங்கும் அலங்காரம் செய்தல்
  -அடவி வன அலுவலகம்
  -பிரதேச வைத்தியசாலை- லக்கல
  -விவசாய சேவை நிலையம் லக்கல
  -லக்கல மத்திய ம.வித்
  -ஹிரடிஎலியா,குரவெல ஆரம்பப் பாடசாலை

- இதற்கு மேலதிகமாக பாடசாலைகள், பிரதேச செயலகம், கமநல சேவை திணைக்களம் ஆகிய அரசாங்க அலுவலகங்களுக்கு மரக்கன்றுகளை வழங்குதல்.
- கிராமப்புற நாற்றுமேடைகள் 04 ஐ உருவாக்குதல்.

- மா ஓயா புனரமைக்கப்பட்ட இடங்களின் பராமரிப்பு அலுவல்களை மேற்கொள்ளல்.

லக்கல் ஹரித நகர நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் லக்கல் பிரதான வீதி உள்ளிட்ட ஏனைய பிரதேசங்கள் உள்ளடங்கும் வகையில் 9 கி.மீ வரையான வீதியில் 2257 வரையான மரக் கன்றுகளை நாட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

வன பாதுகாப்பு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.

இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் வனப் பாதகாப்புத் திணைக்களம் ஆகியவற்றுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைய, காடு வளர்ப்பு பராமரிப்பு, தற்காப்பு வலய அபிவிருத்தி தீப்பட்டி தாபித்தல், புதிய காடு வளர்ப்பு பிரதேசங்களை அடையாளமிடல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகியவற்றுக்காக வனப்பாதுகாப்புத் திணைகளத்திற்கு 15 மில்லியன் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

- போஷிப்பு காடு வளர்ப்பு பராமரிப்பு நடவடிக்கைகள் - 10 ஹெக்டயார்
- தற்காப்பு வலயத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் - 60 ஹெக்டயார்
- தற்காப்பு வலய எல்லை அடையாளமிடல் - 42 கி.மீ

களுகங்கை மத்திய நாற்று மேடை மூலம் கன்றுகள் உற்பத்தி

2018 ஆம் ஆண்டு 17729 கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டதோடு, இதன் மூலம் 13900 கன்றுகள் களுகங்கை நீர்தேக்க மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்திற்காக விநியோகிக்கப்பட்டுள்ளன.

களுகங்கை மத்திய நாற்றுமேடைக்கான,புதிய அலுவலகக் கட்டிடம் அதனைச் சுற்றி மதில் ,நீர் தொட்டி நிர்மாணம் ஆகிய பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

மண் பாதுகாப்பு செயற்பாடுகள்

களுகங்கை மேல் நீரேந்துப் பிரதேச விவசாயிகள் 10 பேருக்கு மண் பாதுகாப்புக்காக ஊக்குவிப்புக்காக (30 ஏக்கர்கள்) கொடுப்பனவு வழங்கப்பட்டது.

- **களுகங்கை நீர்தேக்க பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக சிறியளவிலான நீர்பாசன வசதிகள் நிர்மான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல.**

மறுசீரமைக்கப்பட்ட இரண்டு அணைக்கட்டுகளின் பணிகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டன.

அணைக்கட்டு	மதிப்பிடப்பட்ட தொகை ரூபா	நிலைமை
பத்தட்டவெல அணை – தம்மன்தென்னை	1,477,014.25	பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன
மத்திய அணை மற்றும் கால்வாய் - புவக்பிட்டிய	770,085.45	பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- அணை மற்றும் கால்வாய் நிருமாணிப்பதற்கான ஆறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

வன சீவராசிகள் பாதுகாப்பு நடவடிக்கைகள்

- புதிய குடியிருப்புக்களை மின்சார வேலிக்கு சமாந்திரமாக சணல் பயிர், போகன்விலா மற்றும் எலுமிச்சை மரங்கள் நடப்பட்டன.
- குருவெல மத்திய யானைகள் கட்டுப்பாட்டுப் பிரிவொன்றுக்காக 2015 ஆம் ஆண்டு தொடக்கம் வசதிகள் தொடர்ச்சியாக 2018 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.
  -ஒரு மாதத்திற்கு 400 லீட்டர் எரிபொருள் நிரப்பப்பட்ட வாகனமொன்றை வழங்கல்
  -மாதத்திற்கு யானை பட்டாசு 500 வழங்குதல்.
  -தங்குமிட வசதிகள் வழங்குதல்
  -மின்சாரம் மற்றும் தொலைபேசி வசதிகள் வழங்குதல்
  -வனசீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு வழங்குதல்.
- யானைக் கட்டுப்பாட்டு குழுக்களை நிறுவுதல் மற்றும் பேணிவரல். - யானைக் கட்டுப்பாட்டு குழுக்களின் எண்ணிக்கை 9 ஆகும் (நவஇமாமடுவ, கஜுவத்தை, தோரபிட்டிய, , தேவாலதெனிய, குருவெல (34 ஆம் பகுதி), ஹபரகெய்மட, மஹபிட்டிய, மத்திய யானை கட்டுப்பாட்டு பிரிவு அமைக்கப்பட்டதோடு தொடர்ச்சியாக் கொண்டுநடாத்தல்.
- புதிய குடியிருப்பு வலயத்தைச் சுற்றி 62 கி.மீ. மின்சார வேலியை அமைத்து பராமரித்தல்.
- வலது கரை பிரதான கால்வாய்(தோராபிட்டிய) நிருமானித்தலின் போது 2.5 கி.மீ மின் வேலி விஸ்தரித்தல்.

உயிர் பல்வகைமை பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம்

- புதிய அபிவிருத்தி வலயத்தினுள் அமையப்பெற்றுள்ள குளம் இல 04 இன் செல்வீனியா அகற்றுவதற்காக பூச்சிகளை அறிமுகம் செய்தல்.
- அபிவிருத்தி வலயத்தினுள் பரந்துள்ள பாரிய தொட்டாற்சிணுங்கி செடிகளை 12 ஹெக்டயார்கள் அகற்றுதல் -(யகா கடுல்ல வெவ மற்றும் வீதி ஒதுக்கு)
- வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின் அலுவலர்கள் மற்றும் பொலிஸ் அலுவலர்களுடன் இணைந்து களுகங்கைப் நீர்த்தேக்கத்தினால் இடம்பெயர் விலங்குகளை விடுவித்தல் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல்

உயிரின வகை	மீட்கப்பட்ட எண்ணிக்கை
முலையூட்டிகள்	12
ஊர்வன	3056
பூச்சிகள்	109
மூட்டுக்காலிகள்	05
முள்ளந்தண்டுளிகள்	67
மொத்தம்	3249

உத்தியோகத்தர்கள் மற்றும் மீள் குடியேற்றக்காரர்களுக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல்

- நீர்தேக்கப் பிரதேசத்தினுள் மண் பாதுகாப்பு மற்றும் நாற்றுமேடை பராமரிப்பு பற்றிய 08நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
- பாடசாலைப் பிள்ளைகளுக்கு பண்ணை முகாமைத்துவம் மற்றும் சுழல் பாதுகாப்பு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 04 நடாத்துதல்.
- மண்பாதுகாப்புத் தொடர்பான இயற்கை வளங்கள் முகாமைத்துவ வளப் பங்களிப்போடு நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்
- மூடு தாவரங்கள் பற்றிய அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை விவசாயத் திணைக்களத்தின் தாவரப் பாதுகாப்பு சேவையுடன் இணைந்து ஏற்பார்டு யெ்தல்
- கழிவு முகாமைத்துவ நகழ்ச்சித்திட்டமொன்று சிறு கைத்தொழில் திணைக்களத்தின் வழிகாட்டலின் கீழ் MAS holding நிறுவனம் ஊடாக ஏற்பார்டு செய்தல்.

திண்மக் கழிவு முகாமைத்துவம்

லக்கல புதிய நகரத்திற்காக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் திண்மக் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தும் ஒழுங்கு செய்தல்

சூழல் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்புடைய ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்

- களுகங்கை கருத்திட்டத்தின் சுற்றாடல் தாக்க அறிக்கையின் செல்லுபடிக்காலத்தை காநீடிப்புச் செய்வதற்கு நடவடிக்கையெடுத்தல்
- இடது கரை பிரதான கால்வாயின் உத்தேச சுரங்கத்திற்கான சுற்றாடல் பரிந்துரையைப் பெற்றுக் கொள்ளல்.
- களுகங்கை அணை நிருமான வேலைகளுக்காக Q1,Q2 பிரதேசங்களுக்கு அனுமதிப்ப்த்திரம் வழங்குதல்
- நிருமான காணியினுள் சுற்றாடல் தாக்க குறைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஆராய்ச்சி
- வெல்லேவல,லேல்ஓய கால்வாய் நிருமானத்தின் போது சுற்றியுள்ள வீடுகளின் பாதிப்புக்களை மதிப்பிடல்
- ஹத்தோட்டை அணையை அண்மித்த தொல்பொருள் தூபியை சுற்றி ஒதுக்கை வேறுபடுத்தல்

உமா ஓயா பலநோக்கு அபிவிருத்தி கருத்திட்டம்

உமா ஓயா நதிப் பள்ளத்தாக்கின் சூழல் மற்றும் ஏனைய நீர் தேவைப்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் அந்தப் பள்ளத்தாக்கிலிருந்து நீர் பற்றாக்குறை நிலவுகின்ற தென் பிராந்தியத்தின் கிரிந்தி ஓயா பள்ளத்தாக்கு வரை 145 மில்லியன் கன மீட்டர் நீரை வருடாந்தம் திருப்பி அனுப்புவது கருத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

அதன் மூலம் மொணராகலை மாவட்டத்தின் வெள்ளவாய மற்றும் தணமல்வில பிரதேச செயலகங்கப் பிரதேசங்களில் அமைந்துள்ள புதிய காணிகள் 4500 ஹெக்டயர்கள், தற்போது பயிரிடப்படுகின்ற 1500 ஹெக்டயர் காணிகளுக்கு நீர்பாசன வசதியை வழங்குவதற்கும் மெ.வொ. 120 கொள்திறன் கொண்ட நிலக்கீழ் மின்வலு நிலயத்தினூடாக மணிக்கு 290 கி.வொ. மின்சாரத்தை உற்பத்தி செய்து தேசிய மின்வலுத் தொகுதியுடன் சேர்ப்பதற்கும் மொணராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்ட குடிநீர் மற்றும் கைத்தொழில் தேவைகளுக்காக 30 மில்லியன் கன மீட்டர் நீரை வழங்குவதற்கும் டயரபா நீர்த்தேக்கத்தினூடாக பதுளை மாவடத்தின் பண்டாரவளை பாரிய நீர் வழங்கல் திட்டத்தின் குடிநீர் தேவைப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கும் புஹுல்பொல நீர்த்தேக்கத்தின் பதுளை மாவட்டதின் எட்டாம்பிட்டிய நீர் வழங்கல் கருத்திட்டத்தின் மூலம் குடிநீர் தேவைப்பாட்டை நிவர்த்திப்பதற்கும் குடாஓயா நீர்த்தேக்கத்தினூடாக மொனராகலை மாவட்டத்தின் ஹம்பேகமுவ பிரதேசத்தின் குடிநீர் தேவைப்பாட்டை நிவர்த்திப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கருத்திட்டத்தின் பிரதான பிரிவுகளும் செலவும்



மைய வேலைகள்



கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி

கருத்திட்டத்தின் பிரதான மையத்தின் வேலைகள் மற்றும் கிரிந்திஓயா அண்டிய கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி பிரதான 02 அங்கங்களைக் கொண்டுள்ளதோடு, பிரதான நிலைய வேலைகள் பொறியியல் பெறுகை மற்றும் நிர்மாண ஒப்பந்தத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அத்தோடு, கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி நீர்பாசனத் திணைக்களத்தின் நேரடி உழைப்பினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

கருத்திட்டத்தின் மொத்தச் செலவினம் 514.5 மில். அமெரிக்க டொலர்களுடன் இலங்கை ரூ.மில். 15,474.25 ஆகும். பிரதான நிலைய வேலைகளுக்கான மொத்தச் செலவினம் 514.5 மில். அமெரிக்க டொலர்களுடன் ரூ.மில். 6,122 ஆகும். கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி வேலைகளின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூ.மில். 9,352.5 ஆகும

பிரதான செயற்பாடுகள் - மைய வேலைகள்

உமா ஓயா ஊடாக புஹுல்பொல பிரதேசத்தில் 35 மீட்டர் உயரத்தில் ரோலர் அழுத்த கொன்கிரீட் அணையுடன் கூடிய நீர்த்தேக்கமொன்றை அமைத்து அந்த நீர்த்தேக்கத்திற்குச் சேரும் நீர் மாதெடில்ல ஆறு ஊடாக டயரபா பிரதேசத்தில் 50 மீட்டர் உயரத்தில் நிர்மாணிக்கப்படும் ரோலர் அழுத்த கொன்கிரீட் அணைக்கட்டுடன் கூடிய நீர்த்தேக்கத்திற்கு 3718 மீட்டர் சுரங்கப் பாதை ஊடாக திருப்பி டயரபா நீர்த்தேக்கத்திலிருந்து 15.4 கி.மீ. நீளமான பெரார சுரங்கத்தின் ஊடாக கரந்தகொல்லையில் நிர்மாணிக்கப்படும் மெ.வொ. 120 நிலக்கீழ் மின்வலு நிலையத்தினூடாக மேல் கிரிந்தி ஓயா பள்ளத்தாக்கில் அலிகொட்டஆரயில் சேரும் வகையில் நீர் திருப்பி அனுப்பப்படுகின்றது.

மின்வலு நிலையத்திற்கு அண்மையில் 618 மீட்டர் உயரத்தில் செங்குத்தான சுரங்கமொன்றும், 150 மீட்டர் உயரத்தில் சுழற்சிக் கிணறொன்றும் மின்வலு நிலையத்தின் பின்னர் வெளியேற்றப்படும் நீர் 3600 மீட்டர் நீளமான இறுதி சுரங்க வாயில் ஊடாக (Tailrace Tunnel) புதிதாக நிர்மாணிக்கப்படும் அலிகொட்டஆர கட்டுப்பாட்டு நீர்த்தேக்கத்திற்கு சேர்கின்றது. மேலும், மின்வலு நிலையத்தை அண்டிய நிலைமாற்றி செயற்களம் (Switch Yard) மற்றும் பதுளை மின் உப நிலையம் வரை செல்லும் 23 கி.மீ. நீளமான கி.வோ. 132 மின் பரிமாற்ற வழி என்பன மைய வேலைகளுக்குள் உள்ளடங்குகின்றன.

கிரிந்தி ஓயா பள்ளத்தாக்கை அண்டிய கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி

உமா ஓயா பள்ளத்தாக்கிலிருந்து கிரிந்தி ஓயா பள்ளத்தாக்கிற்கு வருடாந்தம் திருப்பப்படும் 145 மில்லியன் கன மீட்டர் நீரினால் போஷிக்கப்படும் பிரதேசங்களில் நீர்பாசன மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்தல், கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தியின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. பயனடையும் பிரதேசங்களாக மொணராகாலை மாவட்டத்தின் வெள்ளவாய மற்றும் தணமல்வில பிரதேச செயலகப் பிரிவுகளாகும். இதன் கீழ் நிர்மாணிக்கப்படும் அலிகொட்டஆர மற்றும் குடாஓய நீர்த்தேக்கங்கள் பதுளை மாவட்டத்தின் எல்லையில் அமைந்துள்ளன.

இந்த அபிவிருத்தி திட்டத்தில், கிரிந்திஓயாவின் கிளை ஆறான அலிகொட்டஆர ஊடாக நிர்மாணிக்கப்படும் 6.5 மில்லியன் கன மீட்டர் கொள்திறன் கொண்ட அலிகொட்ட கட்டுப்பாட்டு நீர்த்தேக்கத்தை நிர்மாணித்தல், கிரிந்தி ஓயாவின் கிளை ஆறான குடாஓயா ஊடாக நிர்மாணிக்கப்படும் 29 மில்லியன் கன மீட்டர் கொள்திறன் கொண்ட குடாஓயா நீர்த்தேக்கத்தை நிர்மாணித்தல், ஹந்தபானகல குளத்தின் கொள்திறனை 6.5 மில்லியன் கன மீட்டரிலிருந்து 14 மில்லியன் கன மீட்டர் வரை அதிகரித்தல், 48 கி.மீ. நீளமான திருப்ப கால்வாய் மற்றும் அதனை அண்டிய நீர்பாசன வசதிகள் மற்றும் கிராமிய குளத் தொகுதிகள் 100 அளவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

பௌதீக முன்னேற்றம் - மைய வேலைகள்

புஹுல்பொல அணைக்கட்டு

டயரபா அணைக்கட்டு

நீர்த்தேக்கங்களை இணைக்கும் சுரங்கம்

பிரதான சுரங்கம்

நிலக்கீழ் மின் உற்பத்தி நிலையம்

பொருத்தப்பட்டு வருகின்ற பிரதான ரான்ஸ்பேமர்



தி.உ.நிலையத்தின் மின்பிறப்பாக்கி

நிருமாணிக்கப்பட்டு வருகின்ற மின் உற்பத்தி நிலையத்திலிருந்து பதுளை வரை மின் விநியோகப் பாதை

கருத்திட்டத்தின் மைய வேலைகள் 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், 2018 ஆம் ஆண்டு திசெம்பர் நடுப்பகுதியில் மைய வேலைகளின் முன்னேற்றம் 87.80% ஆக இருந்தது. தற்போது டயரபா அணை மற்றும் நீர்த்தேக்கததை இணைக்கும் சுரங்கம் மற்றும் மற்ற சுரங்கத்தின் பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு, இந்திரம் பொருத்துதல் மற்றும் நிலக்கீழ் மின் உற்பத்தி நிலையம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன.இப்பணிகளை இவ்வருடத்தில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதோடு,பிரதான சுரங்கத்தின் 2.7 கி.மீற்றர் வரையான பகுதி தோண்டுவதற்காக மீதமாகவுள்ளது.

கருத்திட்ட செயற்பாடுகளின் விரிவான முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

உமா ஓயா பலநோக்கு அபிவிருத்தி கருத்திட்டத்தின் மைய வேலைகளிள் 2018.12.31 ஆம் திகதிக்கு செயற்பாடுகளின் முன்னேற்றம்	
செயற்பாடுகள்	பௌதீக முன்னேற்றம்
புஹுல்பொல அணைக்கட்டு	82.33%
நீர்த்தேக்கத்துடன் தொடர்புடைய சுரங்கம்	93.98%
டயரபா அணைக்கட்டு	91.97%
பிரதான சுரங்கம்	73.19%
சுழற்சிக் கிணறு	51.68%
நீர் அழுத்த செங்குத்துச் சுரங்கம்	92.17%
நிலக் கீழ் மின் உற்பத்தி நிலையம்	90.46%
நுழைவுச் சுரங்கம்	94.77%
நுழைவு மற்றும் மீளமைப்பு வீதிகள்	78.51%
மின்சார பரிமாற்ற வழிகள்	87.27%
நீர் வெளியேற்றப்படும் சுரங்கம்	95.86%
மொத்த மைய வேலைகள்	87.80%

கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி வேலைகளின் முன்னேற்றம்

கருத்திட்டத்தின் கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்திப் பணிகள் நீர்பாசன திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றதோடு, அந்த நிர்மாணப் பணிகள் 2013 ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. 2018 யூன் மாதம் நிறைவடையும் போது அலிகொட்டஆர கட்டுப்பாட்டு நீர்த்தேக்கத்தின் மற்றும் ஹந்தபானாகல நீர்த்தேக்கத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடையும்நிலையில் உள்ளன

கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்திப் பணிகள் 2018 திசெம்பர் நடுப்பகுதியில் மொத்த முன்னேறற்றம் 72.0% ஆகும். கருத்திட்டத்தின் செயற்பாடுகளின் விபரமான முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

அலிகொட்டஆர நீர்த்தேக்கம்

அலிகொட்டஆர நீர்த்தேக்கத்தின் வழிப்படலை

திருப்பு கால்வாய்

கிராமிய குளக் கட்டமைப்பு அபிவிருத்தி

உமா ஓயா பலநோக்கு அபிவிருத்தி கருத்திட்டம் - கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி வேலைகள் 2018.12.31 ஆம் திகதிக்கு செயற்பாடுகளின் முன்னேற்றம்	
செயற்பாடுகள்	பௌதீக முன்னேற்றம்
அலிகொட்டஆர நீர்த்தேக்கத்தின் நிர்மாணப் பணிகள்	99.5%
குடாஓய நீர்த்தேக்கத்தின் நிர்மாணப் பணிகள்	54.0%
ஹந்தபானாகல குளத்தை விஸ்தரித்தல்	88.0%
ஹந்தபானாகல இடது கரை கால்வாய் தொகுதி	47.0%
அலிகொட்டஆர – குடாஓய திருப்ப கால்வாய் -	48.0%
குடாஓய – சிங்களயாகம குளம் திருப்ப கால்வாய்	64.0%
சிறு குளங்கள் புனரமைப்பு	32/96
மொத்தம்	**72.0%**

விசேடமாக குறிப்பிடவேண்டிய விடயம் யாதெனில், தற்போது நிறைவுசெய்யப்பட்டுள்ள நிர்மாணப் பணிகள் காரணமாக ஹந்தபானாகல திட்டத்தில் தற்போதுள்ள மொத்த வயற் காணிகளிலும் 2017 சிறு போகத்தில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியதாகவிருந்ததோடு, அது கருத்திட்டத்தின் நன்மைகள் தற்போது அடையப்பெற்றுள்ளமைக்கு சிறந்த சான்றாகும்.

கருத்திட்டத்தின் மொத்த முன்னேற்றம்

2018 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கருத்திட்டத்தின் மொத்த பௌதீக முன்னேற்றம் 86.2% என்பதோடு, திரண்ட செலவு 68,584.2 மில்லியன் ரூபாவாகும்.

செயற்பாடுகள்	பௌதீகமுன்னேற்றம்		நிதி முன்னேற்றம்			
	திரண்ட முன்னேற்றம் 2017 இறுதி வரை (%)	2018 இறுதியில் திரண்ட முன்னேற்றம் (%)	மொத்த மதிப்பிடப்பட்ட செலவு	2018 இறுதியில் திரண்ட செலவு (மி.ரூபா)	கையிலுள்ள பில்(பட்டியல்கள் (மி.ரூபா)	2018 இறுதியில் திரண்ட நிதி முன்னேற்றம் கையிலுள்ள பில் (பட்டியல்கள்) சகிதம் (மி.ரூபா)
1.மைய வேலைகள்	82.38	87.80	80,447.5	62,884.4	209.8	63,094.2
2.கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி வேலைகள்	48.0	72.0	9,352.5	5,699.8	710.8	6,410.6
மொத்த கருத்திட்ட முன்னேற்றம்	78.9	86.22	89,800.0	68,584.2	920.6	69,504.8

கருத்திட்ட நிர்மாணிப்பின் போது ஏற்பட்ட பிரதான பிரச்சினைகள்

கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு வரும் போது முகம் கொடுக்க நேரிட்ட பிரதான பிரச்சினை யாதெனில், பிரதான சுரங்கத்தின் அகழ்வு வேலைகளை மேற்கொள்ளும் போது ஏற்பட்ட நீர் கசிவாகும். கருத்திட்டத்தின் பிரதான சுரங்கத்தை அகழ்வு செய்யும் போது முதன் முறையாக 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் எதிர்பாராதவாறு சுரங்கத்தில் கீழ் மூலையிலிருந்து கி.மீ. 3.8 தூரத்தில் நொடிக்கு 450 லீட்டர் அளவு நீர் கசிவு ஏற்பட்டது. அதன் காரணமாக பதுளை மாவட்டத்தின் பண்டாரவளை பிரதேச செயலகப் பிரிவின் மகுல்எல்ல, வெஹரகலதென்ன, உடபேருவ, பம்பரகம மற்றும் ஹீல்ஓயா கிராம சேகவர் பிரிவுகளில் சுரங்கப் பாதையில் நீர் கசிவு ஏற்பட்ட இடத்தை அண்மித்த பிரதேசங்களில் கிணறுகள் வற்றிப்போதல், நிலக்கீழ் நீர் மட்டம் குறைதல் மற்றும் வீடுகளில் வெடிப்புகள் ஏற்படல் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு நீர் பற்றாக்குறை ஏற்பட்டதன் காரணமாக பொதுமக்களுக்கு பாதிப்புக்கள் ஏற்பட்டன.

சுரங்கப் பாதைகளின் நீர் கசிவுகளை அடைப்பது மிகவும் சிக்கலான மற்றும் சவால்மிக்க செயற்பாடாகும். அதற்காக விசேட நிபுணத்துவ அறிவுபெற்ற தொழில் வல்லுநர்கள் மற்றும் அனுபவமுள்ள ஆளணியொன்றும் விசேட பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தேவைப்படுகின்றன. அதற்கமைய, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விசேட நிபுணர்களின் அறிவுரையைப் பெற்ற பின்னர் அது தொடர்பான விசேட ஒப்பந்தக்காரரான சுவிட்சர்லாந்து மார்ட் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டது. 2015 திசெம்பர் நடுப்பகுதியில் நீர் கசிவை நொடிக்கு 47 லீட்டர் வரை குறைத்துக்கொள்ள முடிந்தது. அதன் பின்னர், சுரங்கத்தின் அகழ்வுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. பாரிய பிரச்சினைகள் ஏதும் இன்றி அந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க முடிந்தது.

ஆயினும், 2017 ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி சுரங்கத்தின் கீழ் மூலையிலிருந்து 8.1 கி.மீ. தொலைவில் அகழ்வுப் பணிகளை மேற்கொண்ட போது சுரங்கத்தின் துளையிடும் கற்பாறையின் மேற்பரப்பில் காணப்பட்ட வெடிப்புக்கள் காரணமாக மீண்டும் பாரிய நீர் கசிவுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. இம்முறை நீர் கசிவு 50 மீட்டர் தூரத்திற்கு நொடிக்கு 1200 லீட்டர் ஆக இருந்தது. ஆரம்ப கட்டத்தில் நிகழ்ந்த நெடிக்கு 450 லீட்டர் நீர் கசிவுடன் ஒப்பிடும் போது அது பாரிய அளவாகும்.

நீர் கசிவை அடைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

இந்த நீர் கசிவு ஏற்பட்டவுடன் சுரங்கத்தின் அகழ்வுப் பணிகள் உடனடியாக இடைநிறுத்தப்பட்டன. இது தொடர்பாக அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் தலையீடு செய்ததன் காரணமாக பெற்றுக்கொள்ளப்பட்ட நோர்வே மற்றும் சுவிட்சர்லாந்து விசேட நிபுணர்களின் அறிவுரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இந்த விசேட நிபுணர்களின் அறிவுரைக்கு அமைய, மேற்பரப்பு நிலத்தில் சூழல் தாக்கங்கள் நிகழாதிருப்பதற்கு முத்திரையிடும் நடவடிக்கை மூலம் சுரங்கத்தின் 100 மீட்டர் நீளத்தில் நிமிடத்திற்கு 20 லீட்டர் அதாவது நொடிக்கு லீட்டர் 1/3 அளவு மட்டத்தில் நீர் கசிவை குறைக்க வேண்டும் என்பதாகும்.

இந்த இலக்கை அடைந்துகொள்வதற்கு சுரங்க அகழ்லு இயந்திரத்திற்கு மேலும் உபகரணங்கள் பொறுத்தப்பட்ட தோடு, அதன் மூலம் அந்த இயந்திரத்தின் சாந்து துளைகள் 12 இலிருந்து 27 வரை அதிகரிக்கப்பட்டது. அதன் மூலம் சாந்து தெளிப்பு உயர் மட்டத்தில் இருந்ததோடு சுரங்கத் தின் மொத்தப் பரிதியையும் உள்ளடக்கியவாறு மிகவும் பயனுள்ள விதத்தில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு முன்னர் கற்பாறைகளின் காணப்படும் மூட்டுக்கள் மற்றும் வெடிப்புக்களை மூடிவிட முடியும். மேலும், பயனுள்ள விதத்தில் நீர் கசிவை மூடும் வகையில் தேவையான போது விசேட சீமேந்து அதற்காக பயன்படுத்தப்படுகின்றது. கூடிய அழுத்தத்துடன் சாந்து தெளிக்கக்கூடிய வகையில் புதிய இயந்திர உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

மேலும், இந்த நடவடிக்கைகளை மேலும் வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு பின்வரும் புலனாய்வு நடவடிக்கைகள் மற்றும் பின்னூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(1) அவதானிப்புச் செய்யப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்கள் ஊடாக சுரங்கத்தின் அகழ்வு காரணமாக பாதிப்பு ஏற்படக்கூடிய இடங்களை வரைபடமாக்குதல்.
(2) கற்பாறையில் ஆராய்ச்சி துளைகளின் நீர் மட்டத்தை அளவிடுதல்.
(3) நாளாந்தம் கிணற்று குழியின் நீர் மட்டத்தை அளவிடுதல்.
(4) வீடுகளின் வெடிப்புக்கள் தொடர்பாக ஆய்வுகள் மற்றும் பின்னூட்டல்களை தொடர்ந்து மேற்கொள்ளல்.
(5) தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிவுரைகளைப் பெற்று பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிகழ முடியுமான மண்சரிவு அபாயங்கள் தொடர்பில் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல்.
(6) புவியியல் வரைபடங்களை தயாரித்தல் மற்றும் பாறைகளை ஆழத்திற்கு துளையிடுவதன் மூலம் பாறைப் படிவுகளின் அமைப்பு பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.
(7) புவியியல் ஆய்வுகள் மூலம் நிலக்கீழ் நீர் மற்றும் பாறைகளின் தன்மை தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.

கருத்திட்டத்தின் பிரதான சுரங்கத்தின் நீர் கசிவை அடைப்பதற்கு தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் முன் அகழ்வு சாந்து தெளியும் முறை திருப்திகரமானதோடு, அதன் மூலம் நீர் கசிவை தேவையான ஆகக் குறைந்த அளவு குறைத்துக்கொள்ள முடியுமென அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும் 2017 ஆம் ஆண்டு இறுதியில் சுரங்கத்திலிருந்து வெளியேறும் மொத்த நீர்க் கசிவின் அளவு நொடிக்கு 200 லீட்டர் வரை குறைவடைந்துள்ளது. அதற்கிணங்க, ஆராய்ச்சி துளையிடல் மூலம் பாறையில் நீர் உள்ள இடத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். அதற்கமைய, முன் அகழ்வு சாந்து தெளித்தல் மூலம் அந்த கசிவை அடைத்து எஞ்சியுள்ள சுரங்க பகுதியில் அகழ்வுகள் நடைபெறுகின்றன.

அதற்கமைய, இறுதிப் பகுதி முன் அகழ்வு சாந்து தெளியும் முறை மூலம் பூச்சிய சூழல் பாதிப்பு நிலமையின் கீழ் கொண்டு நடாத்துவது நோக்கமாக உள்ளது. தற்போது அகழ்வுகள் நிறைவுசெய்யப்பட்டுள்ள பகுதியின் அகழ்வின் பின் சாந்து தெளியும் முறை மூலம் கசிவு ஆகக் குறைந்த மட்டத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளத் திட்டமிடல் கருத்திட்டம்

அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளத் திட்டமிடல் கருத்திட்டத்தினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதோடு கருத்திட்டத்தின் அபிப்பிராயங்களை மேலும் விரிவாக்கிக் கொள்வதற்காக இலங்கை அரசு உலக வங்கியிடம் மேலதிக நிதி உதவியினைக் கோரியது. அதற்கமைய கருத்திட்டத்தின் நோக்கங்களை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்காக உலக வங்கியினால் 83 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டது.

அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளத் திட்டமிடல் கருத்திட்டத்தின் (மேலதிக நிதியீடு) பிரதான நோக்கங்கள்

1. பாரிய நீர்த்தேக்கங்களின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் என்பவற்றிற்காக நீண்ட கால மற்றும் நிலையான நடைமுறை ஒன்றினை ஏற்படுத்தல்.
2. நீர் வளத் திட்டமிடலினை விருத்தி செய்தல்.

உத்தேசிக்கப்பட்ட மேலதிக நிதி ஒதுக்கீடுகள் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள செலவுகளை ஈடுசெய்வதற்காக பயன்படுத்தப்படும்.

1.ஆரம்ப அ.பா.நீ.வ.தி.கருத்திட்டத்தினை பூர்த்தி செய்துகொள்ள முடியாமல் சென்ற வேலைகளுக்காக செலவிடப்பட்ட மேலதிக செலவு.

2. நீர்த்தேக்கங்களை மறுசீரமைத்தல் மற்றும் புதுப்பித்தல் என்பவற்றினை மேலும் விரிவுபடுத்தல் மற்றும் ஆரம்பக் கருத்திட்டத்திற்கு உரித்தற்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு விரிவுபடுத்தல்.

ஆரம்பக் கருத்திட்ட அளவைகள்

கருத்திட்டம் அமுலுக்கு வரும் திகதி	: 2014 ஒக்தோபர் 23
கருத்திட்டம் பூர்த்தியடையும் திகதி	: 2018 மே 15
கருத்திட்டத்தின் நிதி நடவடிக்கைகள் பூர்த்தியடையும் திகதி	: 2018 செப்தெம்பர் 30
கருத்திட்டத்தின் கால அளவு	: 4 ஆண்டுகள்

மேலதிக 100% நிதி வசதிகளும் உலக வங்கியின் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிலையத்தினால் வழங்கப்படும். அதற்கு மேலதிகமாக இலங்கை அரசு 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் நடைமுறைப்படுத்தும் குழுவின் செலவுகளை ஈடு செய்வதற்காக வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்தது.

கருத்திட்டம் 4 பகுதிகளைக் கொண்டிருக்கும்.

பகுதி 01. அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் செயற்பாட்டு வினைத்திறனினை விருத்தி செய்தல்.ஆரம்ப கருத்திட்ட காலப்பகுதியில் வேலை பூர்த்தி செய்யப்படாத 14 அணைக்கட்டுக்களின் மறுசீரமைப்பினைப் பூர்த்தி செய்வதற்காக செலவிடப்பட்ட செலவினை ஈடுசெய்தல் மற்றும் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டிய இன்னும் 31 அணைக்கட்டுக்களின் புனரமைப்பு நடவடிக்கைகளை விருத்தி செய்தல்,பராமரிப்பு உபகரணங்களை வழங்குதல்,செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் அவசர நடவடிக்கைத் திட்டங்களைத் தயாரித்தல்.

பகுதி 02. நீர் அளவைகளின் தரவுக் கட்டமைப்பினை விருத்தி செய்தல். 46 நவீன நீர் அளவைகளின் தரவு மத்தியநிலையங்களைத் தாபித்தல்,ஆரம்பக் கருத்திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட நிலக்கீழ் நீர் கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை விரிவுபடுத்தல் மற்றும் மேலதிகமாக நிலக்கீழ் நீரினை மதிப்பிடும் பிரதேசம் ஒன்றாக சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் பொலன்னறுவை பிரதேசத்தில் நிலக்கீழ் நீரினைக் கணிப்பிடும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினைத் தாபித்தல்.

பகுதி 03. பல் துறை நீர் வள திட்டமிடல்கள். முன்னனி நீர் வள அபிவிருத்தி மற்றும் விருத்தி செய்தல் என்பவற்றிற்காக சாத்தியவள ஆய்வுகளை மேற்கொள்ளல், கல்கமுவ மற்றும் கொத்மலை நீர்ப்பாசனப் பயிற்சி நிலையங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் அதனூடாக நீர்ப்பாசனத் திணைக்களம்,இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் ஏனைய நீர் முகாமைத்துவ நிறுவனங்கள் என்பவற்றின் அலுவலர் குழாத்தினருக்கு அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வள திட்டமிடல்கள் தொடர்பான பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

பகுதி 04. கருத்திட்ட முகாமைத்துவம், அளவீடுகள் மற்றும் மதிப்பீடுகள்.தற்போது மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சில் தாபிக்கப்பட்டு உள்ள கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் ஒருங்கிணைப்பு மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக ஒத்தழைப்பினை வழங்கும்.

1. அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளத் திட்டமிடல் கருத்திட்டத்தின் (மேலதிக முதலீடு) கீழ் உள்ளடக்கப்படும் செயற்பாடுகள்

கருத்திட்டத்தின் பல்வேறு பணிகளுக்காக உலக வங்கியின் நிதி உதவி கிடைக்கப்பெறும். அவையாவன

1. செலவு அதிகரிப்பதனை ஈடுசெய்வதற்குத் தேவையான நிதியங்கள் : மேற்படி பிரிவின் கீழ் ஆரம்ப அணைக்கட்டுப் பாதுகாப்புக் கருத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு இருந்த மற்றும் எனினும் உரிய காலத்தில் பூர்த்தி செய்வதற்கோ அல்லது நிறைவேற்றுவதற்கோ இயலாமல் சென்ற பிரிவுகள் உள்ளடக்கப்படும்.

2. நீர் வளங்கள் சபையின் உத்தேசிக்கப்பட்ட நவீன செயற்பாடுகளுக்கான தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கும் மற்றும் நவீன நீர் அளவைகளின் தரவு மத்தியநிலையங்கள் 46 இனை நிர்மாணிப்பதற்கும் தேவையான நிதியங்களை வழங்குதல் தெரிவுசெய்யப்பட்ட அச்சுருத்தல்கள் நிலவும் 07 பிரதேசங்களில் நிலக்கீழ் நீரினை மதிப்பீடு செய்வதற்காக முன்னோடி மதிப்பீட்டு வலையமைப்பு ஒன்று ˙தாபிக்கப்பட்டுள்ளது. அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளத் திட்டமிடல் கருத்திட்டத்தின் (மேலதிக நிதியீடு) கீழ் மேற்படி வலையமைப்பினை அதனோடிணைந்த பிரதேசங்களுக்கும் விரிவடையச் செய்வதுடன் தொற்றாத சிறுநீரக நோயாளிகள் அதிகமாக அறிக்கையிடப்படும் பிரதேசங்களிலுள்ள நீரின் தரம் தொடர்பாக பரீட்சிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

   ஆரம்பக் கருத்திட்டத்தின் கீழ் 122 நீர் அளவைகளின் தரவு மத்தியநிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டதுடன் மேற்படி ஸ்தாபிக்கப்பட்ட மத்தியநிலையங்களினால் தழுவப்படாத பிரதேசங்களில் மேலும் 46 மத்திய நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட உள்ளன.

3. அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளத் திட்டமிடல் கருத்திட்டத்தின் (மேலதிக நிதியீடு) கீழ் உத்தேசிக்கப்பட்ட நவீன செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியத்தினை திரட்டிக்கொள்வதற்கு ˙ மேற்படி பகுதியின் கீழ் துரித மறுசீரமைப்புக்கள் தேவைப்பட்ட மேலும் 31 அணைக்கட்டுக்கள் தெரிவு செய்யப்பட்டன. அணைக்கட்டுக்களைத் தெரிவு செய்தல் நடைமுறைப்படுத்தும் உரிய நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது. அதற்கு மேலதிகமாக, நடைமுறைப்படுத்தும் சகல நிறுவனங்களிலும் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள்,தரக் கட்டுப்பாட்டு வசதிகள் என்பவற்றினை விருத்தி செய்வதற்குத் தேவையான நவீன உபகரணங்களை வழங்குவதற்கும்,கொள்ளளவுகளை அதிகரிப்பதற்கும் மற்றும் ஏனைய அதிகரித்துள்ள செயற்பாட்டுச் செலவுகளை திரட்டிக்கொள்ளவும் இதனூடாக ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறும்.

2 அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளத் திட்டமிடல் கருத்திட்டத்தின் வேலைகளுக்குரிய செயலாற்றுகை

ஆரம்பக் கருத்திட்டத்தின் மேலதிக வேலைகளுக்காக கொடுப்பனவுகள் பூர்த்தி அடைந்து உள்ளதுடன் தடுத்து வைத்துக் கொள்ளப்பட்ட சில தொகைகள் மாத்திரம் செலுத்தப்பட உள்ளன. 31 மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு உள்ளதுடன் அவற்றுள் 16 பூர்த்தி செய்யப்பட்டு உள்ளதுடன் விக்டோரியா நீர்த் தேக்கத்தின் மறுசீரமைப்பு ஒப்பந்தமும் அவற்றுள் உள்ளடங்கும். மேற்படி 31 ஒப்பந்தங்களின் செயலாற்றுகை கீழ் வருமாறு அமையும்.

.

நவீனமயப்படுத்தப்பட்ட பம்பரவான நீர்த்தேக்கத்தின் வான் கதவுகளின செயற்பாட்டுக் கட்டமைப்பு

பம்பரவான நீர்த்தேக்கத்தின் அணைகரையினை மறுசீரமைப்பு செய்யும்போது

இல	அணை	ஒப்பந்தப் பெறுமதி (மில்.ரூபா)	ஆரம்பிக்கப்பட்ட திகதி	நிறைவு செய்த அல்லது நிறைவு செய்யப்படவுள்ள திகதி	பிரதான பகுதி 2018 செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னேற்றம்
நீர்ப்பாசனத் திணைக்களம்					
1	அங்கமுவ	172.99	2016.03.01	2016.12.05	භෞතික ප්‍රගතිය - 100% සහ මූල්‍ය ප්‍රගතිය -100%
2	பதவியா	131.1	2016.02.25	2017.08.25	භෞතික ප්‍රගතිය - 100% සහ මූල්‍ය ප්‍රගතිය -87.53%
3	தோப்பூர்	48.3	2016.05.24	2017.10.20	භෞතික ප්‍රගතිය - 100% සහ මූල්‍ය ප්‍රගතිය - 87%
4	மஹகனந்தராவ	105.99	2016.02.25	2017.03.01	භෞතික ප්‍රගතිය - 100% සහ මූල්‍ය ප්‍රගතිය– 100 %
5	மஹவிலச்சிய	218.08	2016.02.03	2017.08.03	භෞතික ප්‍රගතිය - 100% සහ මූල්‍ය ප්‍රගතිය - 95%
6	வான்எல	69.17	2016.05.08	2017.12.01	භෞතික ප්‍රගතිය - 100% සහ මූල්‍ය ප්‍රගතිය -97.50%
7	சொரபொரவெவ	20.17	2016.08.04	2017.11.30	භෞතික ප්‍රගතිය - 100% සහ මූල්‍ය ප්‍රගතිය -100%
8	ஜனரஞ்சனவெவ	108.47	2016.08.15	2018.03.30	භෞතික ප්‍රගතිය - 100% සහ මූල්‍ය ප්‍රගතිය - 98.80% මූල්‍ය ප්‍රගතිය - 80.97%
9	கொட்டுகச்சி	74.54	2016.08.02	2018.03.30	භෞතික ප්‍රගතිය - 100% සහ මූල්‍ය ප්‍රගතිය - 80.80%
10	பந்தகிரிய	78.29	2016.08.30	2018.04.11	භෞතික ප්‍රගතිය - 100% සහ මූල්‍ය ප්‍රගතිය - 67%
11	நவகிரிவெவ	89.06	2016.08.22	2018.04.11	භෞතික ප්‍රගතිය - 100% සහ මූල්‍ය ප්‍රගතිය - 91%
12	உன்னச்சிய	76.47	2016.09.19	2018.04.11	භෞතික ප්‍රගතිය -100% සහ මූල්‍ය ප්‍රගතිය– 68.08%
13	கச்சிமடு	97	2016.08.08	2018.05.15	භෞතික ප්‍රගතිය - 60% සහ මූල්‍ය ප්‍රගතිය - 58.23% (දුර්වල භෞතික ප්‍රගතිය නිසා කොන්ත්‍රාත්තුව අත්හිටුවා ඇත)
14	பதுலுஓய	59.85	2016.11.23	2018.05.15	භෞතික ප්‍රගතිය - 100% සහ මූල්‍ය ප්‍රගතිය - 63%
15	முத்துக்கண்டி	20.45			භෞතික ප්‍රගතිය - 100% සහ මූල්‍ය ප්‍රගතිය - 91%
இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகார சபை					

இல	அணை	ஒப்பந்தப் பெறுமதி (மில்.ரூபா)	ஆரம்பிக்கப்பட்ட திகதி	நிறைவு செய்த அல்லது நிறைவு செய்யப்படவுள்ள திகதி	பிரதான பகுதி 2018 செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னேற்றம்
1	விக்டோரியா	1,453.20	2015.01.29	2017.03.08	භෞතික ප්‍රගතිය - 100% සහ
					මූල්‍ය ප්‍රගතිය -100%
2	ஹென்னானிகல	130.08	2016.01.23	2017.04. 22	භෞතික ප්‍රගතිය 100% සහ
					මූල්‍ය ප්‍රගතිය– 100%
3	பம்பரவான	61.41	2016.01.14	2017.04. 14	භෞතික ප්‍රගතිය 100 % සහ
					මූල්‍ය ප්‍රගතිය– 98.92%
4	புஸ்ஸலவின்ன	43.94	2016.01.14	2017.06.11	භෞතික ප්‍රගතිය 100% සහ
					මූල්‍ය ප්‍රගතිය– 98.81%
5	உல்ஹிட்டியரக்கிந்த	266.4	2015.08.12	2017.03.26	භෞතික ප්‍රගතිය 100% සහ
					நிதி முன்னேற்றம் – 87.23%
6	உருசிட்டாவெவ	48.66	2016.11.09	2017.12.09	பௌதீக முன்னேற்றம் - 100%
					நிதி முன்னேற்றம; – 100 %
7	அம்பகஹகம	34.72	2016.09.16	2018.02.28	பௌதீக முன்னேற்றம் - 100% ,
					நிதி முன்னேற்றம் – 82.5%
8	பனன்கானிய	13.82	2016.09.13	2018.04.10	பௌதீக முன்னேற்றம் - 100%
					நிதி முன்னேற்றம் – 91.12 %
9	பிம்புரத்தேவ பிம்புரத்தாவ	270.41	2016.04.08	2018.04.11	பௌதீக முன்னேற்றம் - 100%
					நிதி முன்னேற்றம் – 100 %
10	முவகம்மன	64.09	2016.03.28	2018.03.31	பௌதீக முன்னேற்றம் - 100%
					நிதி முன்னேற்றம் – 70%
11	மினிப்பே இடைகரை கால்வாய்	495.47	2014.11.07	2018.02.28	பௌதீக முன்னேற்றம் - 100%
					நிதி முன்னேற்றம் – 100%
12	உடவலவ	91.47	2016.08.11	2018.03.31	பௌதீக முன்னேற்றம் - 100 %
					நிதி முன்னேற்றம் 97.58%
வட மாகாண சபை நீர்ப்பாசனத் திணைக்களம்					
1	பெரியபண்டிவிரிச்சான்	72.44	2014.11.08	2016.04.30	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
					நிதி முன்னேற்றம் - 100%
2	முத்தியன்காடு	171.5	2015.02.20	2016.12.01	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
	சிவில்				நிதி முன்னேற்றம் - 100%
	முத்தியன்காடு	428	2015.03.01	2016.03.12	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
	மின்				நிதி முன்னேற்றம் - 100%
	இயந்திரம்				
3	தொண்டமானாறு	112.37	2016.07.25	2018.04.30	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
	சிவில்				நிதி முன்னேற்றம் - 100%

இல	அணை	ஒப்பந்தப் பெறுமதி (மில்.ரூபா)	ஆரம்பிக்கப்பட்ட திகதி	நிறைவு செய்த அல்லது நிறைவு செய்யப்படவுள்ள திகதி	பிரதான பகுதி 2018 செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னேற்றம்
	தொண்டமானாறு மின் இயந்திரம்	297.85	2016.06.17	2018.04.30	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது நிதி முன்னேற்றம் - 100%
கண்டி மாநகர சபை					
1	ரோசநெத்	24.62	2016.07.27	2017.11. 30	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது நிதி முன்னேற்றம் - 96.45%
2	துனுமண்டலாவ	43.94	2016.08.18	2018.05. 15	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது நிதி முன்னேற்றம் - 52%
இலங்கை மின்சார சபை					
1	மாஉஸ்ஸாகெலே	69.24	2017.07.26	2018.04. 11	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது நிதி முன்னேற்றம் - 100%

அணைப்பாதுகாப்பு மற்றும் நீர்வளங்கள் திட்டமிடல் கருத்திட்டம்(மேலதிக நிதி) கீழ் வருகின்ற ஏனைய பிரதான ஒப்பந்தங்களின் முன்னேற்றம்

இல	ஒப்பந்தத்தின் பெயர்	முன்னேற்றம்	ஒப்பந்தப் பெறுமதி
1	ராஜாங்கனை மற்றும் கவுடுல்ல நீர்த்தேக்கங்களின் வான் கதவுகளை மின்சாரம் ஊடாக தொழிற்படச் செய்தல் மற்றும் தண்ணியக்க செயற்பாடு	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது	226.47 மில்.ரூபா
2	பொல்கொள்ள வெள்ள மற்றம் நீர்தேக்க கட்டுப்பாட்டு நிலையம்	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது	307.15 மில்.ரூபா
3	அணை பாதுகாப்பு தொடர்பான தேசிய நிலையம்	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது	25.17 மில்.ரூபா
4	ராஜாங்கனை அணைக்கரை 1-15 வான் கதவு மறுசீரமைப்பு	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது	282.58 மில்.ரூபா
5	ராஜாங்கனை அணைக்கரை 16 -30 வான் கதவு மறுசீரமைப்பு	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது	255.79 மில்.ரூபா
6	மீதமான 8 அணைகளுக்கான அவசர செயற்பாட்டுத்திட்டம் தயாரித்தல்.	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது	12.89 மில்.ரூபா
7	நீர் அளவு வாசிப்பு தரவு முறைமைத் தாபித்தல்	ஆரம்ப ஒப்பந்தம்: 122 நிலையங்களில் 120 நிறைவு செய்யப்பட்டுள்ளது 120 இல் 4 நிலையங்களுக்கு உபகரணங்களைப் பொருத்துதல் செயற்படுத்தல் நிறுவனங்களில் பயிற்சி வழங்கப்பட்ட பணியாட்குழுவினரால் மேற்கொள்ளப்பட்டன. இரண்டு தரவு நிலையங்களின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு உள்ளக தரவு முகாமை பணிக்குழுவினருக்கு தரவுகளைப் பெற்றுக்கொள்ளத்தக்கவாறு இணையத் தொடர்பு செயற்பாட்டில் உள்ளது. மேலதிக நிதிக் கருத்திட்டம்: 45 புதிய நிலையங்கள் தாபித்தல் நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு நீர் வளங்கள் திட்டமிடல் மற்றும் வெள்ள கண்காணிப்புக்காக இரண்டு நிலையங்களுக்கு 165 இடங்களிலிருந்து புதிய தரவுகள் பெறப்படுகின்றன.	
8	நிலக்கீழ் நீர் மேற்பார்வை முறைமையை விஸ்தரித்தல்	பூரணப்படுத்தப்பட்ட முன்னோடிபிரதேசம் 7 இற்கான நிலக்கீழ் நீர் மேற்பார்வை வலையமைப்பை விஸ்தரித்தல்.	

9	அணைகளில் செயற்பாட்டுப் பணிகளில் ஈடுபடுகின்ற பணியாட்குழுவினரை பயிற்றுவிப்பதற்காக கல்கமுவ பயிற்சி நிலையத்தை மேம்படுத்தல்.	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது	184.4 மில்.ரூபா
10	அணைகளில் செயற்பாட்டுப் பணிகளில் ஈடுபடுகின்ற பணியாட்குழுவினரை பயிற்றுவிப்பதற்காக கொத்மலை அலுவலகம் மற்றும் பயிற்சி நிலையத்தை தாபித்தல்	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது	152.78 மில்.ரூபா
11	காசல்ரீ நீர்த்தேக்கத்தின் கழிவு நீர் அகற்றும் மதகை மறுசீரமைத்தல்	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது	2017 ஆகஸ்ட் 28 83.40 மில்.ரூபா
12	இலங்கை மகாவலி அதிகார சபையின் வலையமைப்பு செயலாளர் அலுவலகத்திற்கு வழிநடாத்தல் மாதிரி (கணனி நிகழ்ச்சித் திடமொன்றை) தயாரித்தல்	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது . நிதி முன்னேற்றம் 32.72%	151.96 மில்.ரூபா
13	விக்டோரியா நீர்த்தேக்கத்தின் புவிப்பகுப்பளவியல் ஆய்வு	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது நிதி முன்னேற்றம் 18.73%	2017 யூலை 17 88.20 மில்.ரூபா

சுற்றாடல் முகாமைத்துவத் திட்டத்தினைத் தயாரித்தல்

கருத்திட்ட முகாமைத்துவ அலகின் ஊடாக ஒவ்வொரு வேலைத் தளத்திற்காகவும் சுற்றாடல் முகாமைத்துவத் திட்டத்திற்கு அமைய மதிப்பீட்டு மாதிரி ஒன்று தயாரிக்கப்பட்டு உள்ளது. ஒப்பந்தகாரருக்கு மேற்படி மாதிரியினைப் பூர்த்திசெய்வதற்காக வழங்கப்படுவதுடன் மாதாந்தம் அவர் அதனை உரிய நடைமுறைப்படுத்தும் நிறுவனத்திற்கு வழங்குதல் வேண்டும். நடைமுறைப்படுத்தும் நிறுவனம் வெளிக்களக் கண்காணிப்புக்களை மேற்கொண்டு திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் திருப்திகரமானதா என்பது தொடர்பாக உறுதிப்படுத்தி மற்றும் கையொப்பமிட்டு கருத்திட்ட முகாமைத்துவ அலகிற்கு அனுப்புதல் வேண்டும். கருத்திட்ட முகாமைத்துவ அலகில் சுற்றாடல் தொடர்பான நிபுணர்கள் அவ்வப்போது அணைக்கட்டு வேளைத்தளத்திற்கு சென்று திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் திருப்திகரமாக மேற்கொள்ளப்படுகின்றதா என்பது தொடர்பாக பரீட்சித்துப் பார்ப்பார். சுற்றாடல் முகாமைத்துவத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் செயன்முறையுடன் தொடர்படும். ஆதலால் சுற்றாடல் முகாமைத்துவத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் திருப்திகரமானதாயின் மாத்திரமே நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களுக்கு கொடுப்பனவுகளை விடுவிக்க முடியும். சுற்றாடல் முகாமைத்துவத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் தற்போதைய செயலாற்றுகை கீழே குறிப்பிடப்பட்டு உள்ளது.

	அணை	சுற்றாடல் மதிப்பீடு தயாரித்தல்	சுற்றாடல் முகாமைத்து திட்டத்திற்கு விலைகோரல் ஆவணத்தில் உட்சேரத்தல்	உத்தேச படிவம் தயாரித்தல்	சுற்றாடல் முகாமை திட்டம் செயற்படுத்தல் முன்னேற்றம்
	வட மாகாண சபை				
1	*முத்தியன்கட்டு*	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
2	*பெரியபண்டிவிரச்சான்*	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
3	*தொன்டமானாறு*	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
	இலங்கை மாகாவலி அதிகார சபை				
4	உல்ஹிட்டிய – ரக்கிந்த	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
5	ஹென்னானிகல	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
6	பம்பரவான	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
7	புஸ்செலவின்ன	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
8	ஊருசிட்டான	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
9	விக்டோரியா	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
10	அம்பகஹகம	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
11	பனக்கானிய	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
12	முவகம்மன	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
13	மினிப்பே இடைக்கரை கால்வாய்	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
14	பிமிபிருத்தாவ	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
15	உடவலவ	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
	நீர்ப்பாசனத் திணைக்களம்				
16	பதவியா	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
17	அங்கமுவ	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
18	மஹகனந்தராவ	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
19	வான்எல	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
20	தோப்பூர்	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
21	சொரபொரவெவ	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
22	ரொசனெத்	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
23	மஹவிலச்சிய	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
24	ஜனரஞ்சனவெவ	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
25	கொட்டுக்கச்சி	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
26	பந்தகிரிய	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
27	நவகிரிவெவ	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
28	துனுமடலாவ	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
29	உன்னிச்சிய	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
30	கச்சிமடு	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
31	முத்துக்கண்டிய	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
32	பதுளுஓயா	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி
	இலங்கை மின்சார சபை				
33	மாஉஸ்ஸாகெலே	பூர்த்தி	பூர்த்தி	பூர்த்தி	100 % பூர்த்தி

சமூக பாதுகாப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்

மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் காரணமாக நீர்த்தேக்கத்தில் நீரினை அகற்ற வேண்டியேற்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் சமூக பாதுகாப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

- மஹகனதராவ,மஹவிலச்சிய மற்றும் முத்தியன்காடு ஆகிய நீர்த்தேக்கங்களை மறுசீரமைப்பு செய்யும்போது 2016 ஆம் ஆண்டு சிறு போகத்தில் பயிர் செய்ய முடியாமல் சென்றமையினால் மக்களின் வாழ்வாதாரங்களில் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளைத் தடுப்பதற்காக வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டது.

- சமூக பாதுகாப்பு முகாமைத்தவத் திட்டத்தின் கீழ் தகவல்கள், கல்வி மற்றும் தொடர்பாடல் வியாபாரம் ஒன்று கொண்டு நடாத்தப்பட்டதுடன் சமூக பொருளாதார எல்லைக்கோட்டுக் கணக்கெடுப்பு ஒன்றின் மூலம் தாக்கத்திற்கு உட்படும் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை மதிப்பீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டது.

- மூன்று உப திட்டங்கள் அதற்கமைய நடைமுறைப்படுத்தப்பட்டன.
  - உழைப்பிற்கான வாடகைச் சலுகைத் திட்டம்
  - குடி நீரினை விநியோகிக்கும் திட்டம்
  - பெண்களை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் (Gender Assistance Plan (GAP))

நீர்த்தேக்கம்	பாதிப்பிற்கு உட்பட்ட விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை	மீன்பிடிக் குடும்பங்கள்	விவசாயத் தொழிலாளர்கள்	பாதிப்பிற்கு உட்பட்ட மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை	பாதிப்பிற்கு உட்பட்ட மொத்த சனத்தொகை
மஹகனதராவ	2,765	86	-	2,851	11,062
மஹவிலச்சிய	1,778	-	-	1,778	7,645
முத்தியன்காடு	1,663	52	505	2,220	7,650
	6,206	138	505	6,987	26,357

- கருத்திட்டத்தின் மூலம் மூன்று நீர்த்தேக்கங்களிலும் வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் 2016 யூன் மற்றும் ஒக்தோபர் மாதங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி

திட்டம்	மஹகனதராவ	மஹவிலச்சிய	முத்தியன்காடு	மொத்தம்
உழைப்பு வாடகைச் சலுகைத் திட்டம்	75.8	44.75	54.7	175.25
குடிநீர் வழங்கும் திட்டம்	5.65	4.41	3.14	13.2
மகளிர் வலுவுட்டல் செயலாற்றுகைத் திட்டம் (Gender Action Plan)	1.2	1	0.6	2.8
நீர்த்தேக்கத்தில் மீன் வளர்த்தல் மற்றும் குஞ்சுகளை இடல்	1.6	0.8	0.6	3
மொத்த எண்ணிக்கை	84.25	50.96	59.04	194.25

வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது. எஞ்சிய தொகை அநுராதபுர நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவின் கட்டிடத்தினை பழுதுபார்ப்பதற்காக பயன்படுத்தப்பட்டது.

கருத்திட்டத்தின் நிதிச் செயலாற்றுகை



	2014	2015	2016	2,017	2,018
Allocation	150	1950	3719	3920	2435
Expenditure	114.37	1,914.00	3,698.10	3017.1	2,179.56
Project Cumm Ex Precentage	1%	18%	51%	78%	98%

ஜனரஞ்ஜன வாவியின் அணைகரை மறுசீரமைப்பு

வான் கதவுகளுக்கு கீழ்ப்பகுதி பாதுகாப்புக்களை நிர்மாணித்தல் – ஜனரஞ்ஜன வாவி

கசிவுகளை வடிக்கும் மற்றும் கசியும் நீரினைக்கொண்டு செல்லும் கால்வாய்

வலுவாக நிர்மாணிக்கப்பட்ட தோப்பூர் வாவியின் அணைக்கட்டு

உல்ஹிட்டிய ரன்கிந்த மறுசீரமைப்பின் பின்னர்

விருத்தி செய்யப்பட்ட வான் கதவுகளின் செயற்பாட்டுக் கட்டமைப்பு – உல்ஹிட்டிய ரன்கிந்த



விக்டோரியா அணைக்கட்டு மறுசீரமைப்பு

மறுசீரமைக்கப்பட்ட சொரபொரவெவ

மறுசீரமைக்கப்பட்ட முதியன்கட்டு அணை

மறுசீரமைக்கப்பட்ட ராஜாங்கனை அணைக்கட்டு

மறுசீரமைக்கப்பட்ட மாஉஸ்கெலே அணை

நீர் காலநிலை அறிவியல் தகவல் முறைமை (HMIS) நிலையம்







மகாவலி நீர்ப் பாதுகாப்பு மற்றும் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டம் மூலம், மஹாவலி ஆற்றின் மேலதிக நீரை வடக்கு உலர்வலயப்பிரதேசத்திற்கு வழங்குவதன் மூலம் பொருளாதார அலுவல்களை துரிதப்படுத்துவதோடு பயிர் நிலங்கள் மற்றும் வணிக நடவடிக்கைகளுக்காகவும் நீரைப் பெற்றுக் கொடுத்தல் இந்த நிகழ்ச்சித்திட்டம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. வட மத்திய மாகாணத்தில் நீர்த்தேக்கங்களில் நீரைச் சேமித்து வைப்பதற்கும் 1973 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மஹவலி அபிவிருத்தித் திட்டத்தின் நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தினால் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கமும் ஒப்பந்தத்தில் சைக்காத்திட்டதோடு அதற்கு அமைய 5453 அமேரிக்க டொலர் 2015 - 2024 காலப்பகுதிக்காக பெற்றுக் கொடுப்பட்டதோடு அது 2015 யூன் 24 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

திட்டத்தின் நிறைவு இல. 1 கீழ் மேல் எலஹெர கருத்திட்டத்தின் 101 கி.மீற்றர் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மூலம் களுகங்கை, மொரகஹகந்த, ஹுரூளு வெவ, ஏரு வெவ மற்றும் மஹகனந்தராவ வரை நீர் பெற்றுக் கொடுக்கப்படும். மேலும் வடமேல் மாகாண கருத்திட்டத்தின் கீழ் 91 கி.மீற்றர் விருத்தி செய்வதற்கும் 02 நீர்தேக்கங்களை உருவாக்குதல் மூலம் காணப்படுகின்ற நீர்பாசன மற்றும் நகர வழங்கல் மேற்கொள்ளபபடும்.

மேலும் நிறைவு இல. 1 மினிபே கருத்திட்டத்தின் கீழ் 74 கிமீற்றருக்கான வீதி அபிவிருத்தி செய்தலும் மேற்கொள்ளப்படுகின்றன.

கடன் தவணைக் கட்டம் 2 இன் கீழ் வடமேல் கால்வாய் கருத்திடடத்தின் அபிவிருத்தி பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளல், எலஹர கால்வாய் கருத்திட்டத்தின். 8.8 கி.மீ. களுகங்க மொரகஹாகந்த சுரங்க வீதி 28 கி.மீற்றர் அபிவிருத்தி செய்தலும் மேற்கொள்ளப்படுகின்றன.

நிகழ்ச்சித்திட்டத்தின் விளைவுகள்

வடமத்திய,மத்திய,வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களின் விவசாய விளைதிறன் மற்றும் நிலையான பொருளாதார அபிவிருத்தி மேம்படுத்தப்படும.

நிகழ்ச்சித்திட்டத்தின் விளைவளவு

கருத்திட்டப் பிரதேசங்களில் விவசாய தொழிநுட்ப மற்றும் குடிநீர் பாதுகாப்பை ஏற்படுத்தல்

கருத்திட்ட விளைவளவு

1. நீர் விநியோகம் மற்றும் களஞ்சியப்புடுத்துவதற்காக புதிய மற்றும் மேலதிக அபிவிருத்தி செய்ய உருவாக்க நிர்மாணங்கள்
2. நீர்வள முகாமைத்துவம் மற்றும் விளைதிறனை அபிவிருத்தி செய்தல்.
3. பலவகை முதலீட்டு நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம்

மொத்தப் பொருளாதார விளைவு
பயிரிடல் தீவிரத்தை 130% முதல் 180% வரை அதிகரித்தல் மூலம் நெல் உற்பத்தியை 3 முதல் 6 மெட்ரிக் டொன் வரை அதிகரிப்பதற்காக காணப்படுகின்ற பயிர்ச் செய்கை நிலங்களில் 32,800 ஹெக்டெயார் காணியை மேம்படுத்தல்.

ஏனைய பயன்கள்
260 கி.மீ மேற்பட்ட புதிய் மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்ட கால்வாய்களை மற்றும் நீர்த்தேக்கங்கள் ஏனைய நீர்பாசன மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் நிர்மாணித்தல்.

- 350,000 மேற்பட்ட மக்களுக் சுத்தமான குடிநீரை வழங்க உதவுதல்
- நீரின் வினைத்திறன் மேம்படுத்தல்
- வடமேல் மாகாணத்தில் பிரதான 13 நீர்த்தேக்கங்கள் மற்றும் 353 சிறிய குளங்களுக்கு நீர் வழங்கல்.

மினிபே இடது கரை கால்வாய் புனரமைப்பு கருத்திட்டம்

- 74 கி.மீ. கால்வாய் புனரமைப்பு
- மின்சாரத்தினால் இயக்கப்படும் கதவு (கேற்) புனரமைப்பு
- 3..5 மீ. மினிபே அணைக்கட்டை உயர்த்தல் மற்றும் பிரதான நிருமானம



மினிபே இடது கரை கால்வாய் புனரமைப்பு கருத்திட்டம்

வடமேல் மாகாண கால்வாய் கருத்திட்டம்

- 96 கி.மீ. மேம்படுத்தப்பட்ட கால்வாய் (940 மீ. சுரங்க வீதி நிருமாணம் அடங்கலாக)
- 26 மீ உயரமான மண் குளக்கட்டு 02 நிருமாணம்.

.



வேமெடில்ல இடது கரை கால்வாயை நபடகஹவத்தை வரை மேம்படுத்தல்

வடமத்திய மாகாண கால்வாய் கருத்திட்டம்

- 65 மீ புதிய கால்வாய்/conduit
- 8 மீ. களுகங்கை மற்றும் மொரகஹகந்த இணைக்கும் சுரங்கப்பாதை



வட மத்திய கால்வாய் கருத்திட்டத்தின் நிருமாணப் பணிகள

கருத்திடடத்தின் மொத்த முன்னேற்றம் மற்றும் பிரதான செயற்பாடுகள்

திட்டத்தின் முன்னேற்றம்

இந்த அறிக்கை மூலம் 2018.01.01 ஆம் திகதி முதல் 2018.12.30 வரையிலான 2018 வருடத்தின் அமுலாக்கல் திட்டத்தின் படி நிதி மற்றும் பௌதீக ரீதியான முன்னேற்றம் முன்வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மினிப்பே இடது கரை கால்வாய் புனரமைப்பு கருத்திட்டத்தின், வடமேல் மாகாண கால்வாய் கருத்திட்டத்தின், வடமத்திய மாகாணத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி என்பன பிரதான செயற்பாடுகளாக மேற்கொள்ளப்பட்டன.இதற்கு மேலதிகமாக மொத்த நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் முன்வைக்கப்பட்டுள்ளதோடு வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் முன்னேற்றமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மொத்த நிதி முன்னேற்றம்

கருத்திட்டக் காலப்குதி	மொத்த மதிப்பீடு மில்.ரூபா (தவனை 1 மற்றும் 2)	வருடாந்த ஒதுக்கீடு (2018) ரூபா.மில்	2018.12.31 ஆம் திகதிக்கு			வருடாந்த முன்னேற்றம் %	மொத்த முன்னேற்றம் 2018.12.31 ஆம் திகதிக்கு	
			இலக்கு மில்.ரூபா	முன்னேற்றம் மில்.ரூபா	முன்னேற்றம் %		ரூபா.மில்	%
2015-2024	64,282.00	5,199.00	5,199.00	5,065.37	97	98	8,271.61	13

மொத்த பௌதீக முன்னேற்றம்

விடயம்	**வருடாந்த பௌதீக முன்னேற்றம்** %	2018.12.31 ஆம் திகதிக்கு	
		இலக்கு %	முன்னேற்றம் %
மினிப்பே இடது கரை கால்வாய் புனரமைப்பு (மின்ப்பே இடது கரை கால்ய் கருத்திட்டம்)	24	24	24
வடமேல் கால்வாய் விருத்தி(வடமேல் கால்வாய் கருத்திட்டம்)	31	31	30.5
இஹல எலஹர கால்வாய் நிருமாணம்(இஹல எலஹர கால்வாய் கருத்திட்டம்)	22	22	21
மதியுரை சேவை மேற்கொள்ளல்(நிகழ்ச்சித்திட்ட முகாமைத் திடடம் மற்றும் மதியுரை சே.நிறு)	12	12	12
நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவப் பிரிவு மற்றும் நிகழ்ச்சித்திட்ட மேற்கொள்ளல் பிரிவு வழிநாடாத்தல் மற்றும் பராமரிப்பு அலுவல்கள்பிரஜா மூலஒப்பந்தம்(கள அலுவலகம்,பயிற்சி,சுற்றாடல்ஈ தொடர்பாடல்,மீள் குடியேற்றம்,ஏனைய மிண்டெழும்நிகழ்ச்சித்திட்டம்)	11	11	10.5
மொத்தம்	**100**	**100**	**98**

வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

பணித்தொகுதி	ஒப்பந்த பெறுமதி (மில். ரூபா)	செலவு(உ.நி.வேலை) (மில்.ரூபா)	பௌதீக முன்னேற்றம் 2018.12.31 திகதிக்கு(%)
MLBCR-NCB-1	414.16	202.2	**71**
MLBCR-NCB-2	343.03	98.17	**59**
MLBCR-NCB-3	829.03	262.58	**34**
MLBCR-NCB-4	246.98	136.35	**90**
MLBCR-NCB-5	425.5	40.35	**23**
MLBCR-ICB-1	2144.52	123.82	**10**
UEC-ICB-1	3742.44	813.25	**28**
UEC-ICB-2B	8218.95		**2**
NWPC-NCB-1	926.11	468.32	**60**
NWPC-ICB-2	7266.82		**1**

சுற்றாடல் கட்டமைப்புப் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவக் கருத்திட்டம்

இலங்கையின் சுற்றாடல் கட்டமைப்பு முகாமைத்துவத்தினை விருத்தி செய்வதன் ஊடாக மேற்படி கட்டமைப்பு பாதுகாப்பு மற்றும் அதனூடாக சுற்றாடல் கட்டமைப்பினைச் சார்ந்த வகையில் வாழும் மக்களுக்குத் தேவையான பயன்களைப் பெற்றுக் கொடுத்தல் என்பன மேற்படி கருத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும

இந்த கருத்திட்டம் மூலம் தேசிய மட்டத்திலான சுற்றாடல் முறைமை பேணிக்காப்பு மற்றும் முகாமைத்துவம் மற்றும் அது சார்ந்து வாழும் மக்களுக்கு பயனைப் பெற்றுக் கொடுப்பதும் மேற்கொள்ளப்படுகின்றன. தேசிய மட்டத்தில் முறைமை பேணிக்காப்பு மற்றும் முகாமைத்துவத்திற்குரிய வன பாதுகாப்புத் திணைக்களம், வனசீவராசிகள் திணைக்களத்தின் கொள்திறனை அபிவிருத்தி செய்வதன் மூலம் வினைத்திறனான சேவையை வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை அண்மித்து வாழுகின்ற மக்களின் வாழ்க்கை நிலைமைகள் மேலும் அபிவிருத்தி செய்வதும் கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் மூலம் 15,000 பயனாளிகளுக்கு நன்மைகளை வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது. உயிரியல் பல்வகைமை பாதுகாப்பு அதிகரிப்பு, யானை - மனித மோதலைத் தவிர்ப்பதற்குத் தேவையான மூலோபாயத்திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் வனப் பாதுகாப்பு, வன சீவராசிகள் திணைக்களங்களின் நிறுவன அபிவிருத்திக்குத் தேவையான நிகழ்ச்சிமுறையை மேற்கொள்ளல் ஆகியன விசேட குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக இந்த கருத்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

கருத்திட்டக்காலப்பகுதி 5 வருடங்களாகும். இக்கருத்திட்டம் 2017 தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்படவுள்ளது.

உலக வங்கியுடன் (World Bank) இணைந்த சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் (IDA) வழங்கப்பட்ட 45 மில்லியன் அமேரிக்க டொலர் கடன் தொகை மூலம் இக்கருத்திட்டத்திற்கான நிதி பெறப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்பட்டுள்ள விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

தொ.அல	ஆக்கக் கூறு	கருத்திட்ட ஒதுக்கீடு அ. டொலர்
1	முன்னோடி புவி வரைபடத் திட்டம் தயாரித்தல் மற்றும் முகாமைத்துவம்	2.8
2	வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக இயற்கை வளங்கள் நிலைத்திருக்கத்தகு விதத்தில் பயன்படுத்தல் மற்றும் மனிதனின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்காக யானை –மனிதன் சகவாழ்வு	17.0
3	ஒதுக்குப் பிரடீதச முகாமைத்துவம் மற்றும் நிறுவன திறன் அபிவிருத்தி	24.2
4	கருத்திட்ட முகாமைத்துவம்	1.0
மொத்தம்		45.0

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு மற்றும் நிலையான அபிவிருத்தி, வனசீவராசிகள் அமைச்சு என்பன கருத்திட்டத்தை மேற்கொள்ளும் அதிகாரமளிக்கப்பெற்ற நிறுவனங்களாகும். வன பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனசீவராசிகள் திணைக்களம் கருத்திட்டதை மேற்கொள்கின்ற.. பாதுகாக்கப்பட்ட பிரதேசதத்தை அண்மித்து வசிக்கும் வனவிலங்குகள், பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தை அணிமித்து வசிக்கும் மக்கள், பாதுகாக்கப்பட்ட பிரதேசதத்தை அண்மித்து யானை-மனித மோதல்களை எதிர்நோக்கும் மக்கள், இயற்கை வள முகாமைத்துவம் செய்யப்படும் நிறுவனங்கள் என்பன இந்த் கருத்திட்டத்தின் பயனாளிகளாவர்.

கருத்திட்டத்தை மேற்கொள்வதற்காக 2018 ஆம் ஆண்டுக்கான 910 மில்லியன் ரூபா தொகை அங்கீகரிக்கப்பட்டது. அந்த இலக்கை அடைந்து கொண்டு 950 மில்லியன் ரூபாவை கருத்திட்ட முகாமைத்துவ அலகு செலவிட்டுள்ளது.

கருத்திட்டம் மூலம் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள்

கருத்திட்டம் மூலம் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள் 2018

ஆக்கக் கூறு 1- முன்னோடி புவி வரைடத் திட்டம் தயாரித்தல் மற்றும் முகாமைத்துவம்

• பிரதேச மட்டத்திலான திட்டமிடல் குழு கூட்டங்கள் 3 நடாத்தப்பட்டன. அதற்கமைய அந்த குழுக்களின் சிபாரிசுகளின் அடிப்படையில் பணிப்பொறுப்புக்கள் குழுக் கூட்டங்கள் 6 நடாத்தப்பட்டன.

• தரவுகளைத் திரட்டுதல், பகுப்பாய்வு மற்றும் அறிக்கை தயாரித்தல் நிறைவு செய்யப்பட்டுள்ளது.
• முன்னோடி புவி வரைடத் திட்டம் தயாரித்தலுக்குரிய அடிப்படை மூல அறிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ளது.

• முன்னோடி புவி வரைடத் திட்டம் தயாரிப்பதற்காக தயார் செய்யப்பட்ட கருத்திட்டப் பிரேரணை அமைவாக அடிப்படை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

• முன்னோடி புவி வரைடத் திட்டம் தயாரித்தல் தொடர்பாக வீடியோ மற்றும் வானொலி நிகழ்ச்சிகள் இரண்டு நடாத்தப்பட்டன.
• உலர் வலயத்துக்குரிய இறுதி முன்னோடி புவி வரைடத் திட்டம் தொடர்பாக மதியுரைச் சேவைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த கருத்திட்டம் மூலம் ஒதுக்குப் பிரிவுகளில் வசிக்கும், மக்களின், நிலைத்திருக்கத்தகு இயற்கை வளங்களை அடிப்படையாகக் கொண்ட வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும், அவர்களின் தங்கி வாழ்தலைக் குறைத்தல், பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக, மக்களுக்கு பங்களிக்கச் செய்வதற்கு உதவுதல்

வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் 91 கிராமங்கள் உள்ளடக்கும் வகையில் மக்கள் செயற்பாட்டுத்திட்டங்கள் 41 விருத்தி செய்யப்பட்டுள்ளன. 2018 தொடக்கத்தில் கருத்திட்டதை மேற்கிள்கின்ற பிரிவு, மக்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்வாதாரம் தொடர்பான குறுகிய கால ஆலோசகர் ஒருவரை வாடகை அடிப்படையில் நியமித்துள்ளதோடு அவரால் மக்கள் செயற்பாட்டுத்திட்டங்கள் திட்டமிடல் தயார் செய்தல், கருத்திட்த்தை எழுதுதல், பங்கேற்பு முகாமைத்துவும், வாழ்வாதார விருத்தி , மற்றும் அதாடர்புடைய பயிற்சிகள் மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் 07, தெரிவு செய்யப்பட்ட வன பாதுகாப்புத் திணைக்களத்தின் அலுவலர்கள் தொடர்பாக நடாத்தப்பட்டன. பின்வரும் அட்டவணை மூலம், பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்களின் 2018.12.31 வரையிலான முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளது.

கருத்திட்டப் பிரதேசம்	**ஆக்கக் கூறு 2(a) முன்னேற்றம்**
அநுராதபுரம்	தேனீ வளர்ப்பு, பெறுமதி சேர்க்கப்பட்ட உணவு உற்பத்தி மற்றும் மக்கள் வனச் செயற்பாடுகள் பற்றிய தெரிவு செய்யப்பட்ட சமூக உறுப்பினர்களுக்கான் பயிற்சி நிகழ்ச்சிகள் 222 நடாத்தப்பட்டன. வருமான வழி உருவாக்கல்செயற்பாடுகள் 64 பேர் ஆரம்பிப்பதற்காக (23 மகளிர் பயனாளிகள்) தையல் உபகரணம், கைத்தறி உபகரணம், தேனீ வளர்ப்பு தொடர்பாக தேவையான உபகரணங்கள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உணவு உற்பத்தி தொடர்பாக உதவி வழங்கப்பட்டது நோயாளிகள் 255 பேர் கலந்து கொண்ட மருத்துவ முகாம் இரண்டு (02) நடாத்தப்பட்டது. 472 வீட்டுத் தோட்டப் பயிரிடல் அபிவிருத்தி செய்யபட்டதோடு அதன் 352 பேர் (74%) பயன்கள் பெண்களுக்கு கிடைத்தது.
பொலன்னறுவை	சுகாதாரப் பண்புகள் நிறைந்த உணவு உற்பத்தி, தேனீ வளர்ப்பு, தையல் பயிற்சி மற்றும் கைப்பை தைத்தல் பயிற்சி பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகள் 4 (பயிற்சி பெறுவோர் 163) தொடர்பாக நடாத்தப்பட்டது
புத்தளம்	மக்கள் அறிவூட்டல் நிகழ்ச்சிமுறை நடாத்தப்பட்டது 500 வீட்டுத் தோட்டப் பயிரிடல் ஆரம்பிக்கப்பட்டன.
குருணாகல்	வருமான மேம்பாட்டுச் செயற்பாடாக 2 உழவு இயந்திரம் வழங்கப்பட்டது, 100 வீட்டுத் தோட்டப் பயிரிடல் ஆரம்பிக்கப்பட்டன.
மாத்தளை	வீட்டுத்தோட்டங்களை 482 பேர் ஆரம்பிப்பதற்கு ஆதரவு வழங்குதல் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு போஷித்த எல (110) மூலம் இலுக்கும்புர பிரதேசத்தில் வயற்காணி 60 ஏக்கர் உள்ளடக்கப்பட்டுள்ளது குடிநீர் கிணறுகள் (02) மறுசீரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. எட்டவன்வெல கிராமத்தில் நிரந்தர மலசல கூடங்கள் இல்லாத 8 குடும்பங்களுக்கு சுகாதாரப்பாதுகாப்பு உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.
கண்டி	தேனீ வளர்ப்பு, நாற்றுமேடை ஒன்றைத் தாபித்தல், கோபி உற்பத்தி, காபன் பயிர்ச்செய்கை, நவீன கமத்தொழில்சார் முறைமை, மிளகு பயிரிடல் மற்றும் இஞ்சி, மஞ்சள் கமப்பொருளாதார கைத்தொழில் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகள் 8 நடாத்தப்பட்டன(649 பயிற்சியார்கள்) 30 ஹெக்டயார் காணி காணிக்காக கொரக்கா கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. தேனீ வளர்ப்புப் பெட்டி மற்றும் வளர்ப்பு உபகரணங்களை பெற்றுக் கொடுத்தல். குடிநீர் வசதிகளை மேம்படுத்தல் மற்றும் துப்புரவேற்பாட்டுச் பொருட்களை பகிர்ந்தளித்தல். வீட்டுத்தோட்டங்களை ஆரம்பிப்பதற்கு 83 பேருக்கு உதவுதல். பாடசாலை உபகரணங்களை190 மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படடன. சுகாதாரப் பாதுகாப்பு முகாம்கள் 2 நடாத்தப்பட்டன.
இரத்தினபுரி	குடாவ மற்றும் பிட்டகெலே கிராமத்தில் வீட்டு வசதிகள் ஆறு (06) அபிவிருத்தி செய்தல். சனசமூக மண்டபம் நிருமாணித்தல். – பயனாளிகள் 247 குடும்பங்கள்.
மாத்தறை	ஏடுகள் வைத்தல், நுன் நிதியிடல், கிதுல் உற்பத்தி, ஏற்றுமதி விவசாயம் மற்றும் சுற்றுலா பயிற்சிகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 6 நடாத்தப்பட்டன். பயிற்சிபெற்றவர்களில் 280/ பேர் (27% மகளிர்)

கருத்திட்டப் பிரதேசம்	**ஆக்கக் கூறு 2(a) முன்னேற்றம்**
காலி	வீட்டு வசதிகளை அபிவிருத்தி செய்தல் 10, சனசமூக மண்டபம் இரண்டு (02) மற்றும் குடிநீர் வழங்கல் திட்டம் (01) அபிவிருத்தி செய்வதற்கு உதவி வழங்குதல் நன்பெற்ற குடும்பங்கள் 264 ஆகும் 5 கிராமங்களில் வீட்டுப் பூங்கா 103 அபிவிருத்தி செய்தல் (48% மகளிர் பயனாளிகள்).

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் முன்னேற்றம்

ஆக்கக்கூறு 2 (a) க்கு ஏற்ப பொருத்தமான வாழ்வாதாரங்களை அபிவிருத்தி செய்யும் முறைமை மற்றும் அவைகளை மேற்கொள்ளும் முறைமை தொடர்பான 3 செயலமர்வுகள் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் தெற்கு வலயத்தின் உத்தியோகஸ்தர்களுக்கான நடாத்தப்பட்டன.

இந்த ஆக்கக்கூறு தொடர்பாக வனசீவராசிகள் திணைக்களத்தினால் புன்தல தேசிய வனப்பூங்காவில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு.

கிராமம்	**செயற்பாடு**	**பௌதீக முன்னேற்றம்**
கொன்வலான	மக்கள் மைய நீர்க்கருத்திட்டம் நிருமாணம்	மக்கள் மைய அமைப்பு மூலம் நிருமாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.
நெதிகம்வில	மக்கள் மைய கெட்டரின் (catering service) ஆரம்பித்தல்	தேவையான பெறுகை அலுவல்கள் இறுதிக்கட்டத்தில் உள்ளன.
யஹன்கல – கிழக்கு	சுற்றாடல் நட்பான சிறுவர் பூங்காவை ஆரம்பித்தல்	நிருமாணப்பணிகளுக்காக மக்கள் மைய அமைப்பொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

உப - ஆக்கக் கூறு 2b யானை- மனித சகவாழ்வு மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்பு

தொடர் - ஆக்கக்கூறு 2ஆ மூலம் யானை - மனித மோதல் உள்ள பிரதேசங்களில் மேற்படி மோதலைக் குறைந்துக் கொள்வதற்கு தேவையான சகவாழ்வு மூலோபாயங்களை மேற்கொள்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டுத் தொகை குறித்தொதுக்கப்பட்டுள்ளது. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் மற்றும் மக்கள் மைய அமைப்புக்களின் பங்களிப்புடன் இந்த ஆக்கக் கூறுக்குரிய நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் இந்த பிரச்சினையால் துண்புரும் மக்களுக்கான பொருளாதார ஊக்குவிப்பு வழங்குதல் மற்றும் பிரச்சினைகளைக் குறைப்பதற்கான உரிய கொள்கை வகுக்கப்பட்டது. இதனூடாக பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் உரிய கருத்திட்டக் காலத்தினுள் மேற்கொள்ளப்பட்டன.

தன்கஹவெவ நிருமாணம்

நிகழ்ச்சித்திட்டம்	முன்னேற்றம்
1.நாடளாவிய காட்டு யானைகள் கணக்டிகடுப்பு	- கணக்கெடுப்பு வழிமுறை மற்றும் தரவுகளை ஒன்று திரட்டல் பற்றிய ஒருநாள் செயலமர்வு நடாத்தப்பட்டது. - பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய உயிரியல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு சாணத்தின் மரபணு நிலைமைகள் பரிசீலனை செய்வதற்கான ஒப்பந்தம் கையளிக்கப்பட்டது. - துளைகள் கணக்கெடுப்பு முறையை இணைப்பு செய்தல் தொடர்பாக தலைமை அலுவலகத்திற்கு உதவி பணிப்பாளர்கள் மற்றும் பிரதி பணிப்பாளர்கள் 11 பேர் நியமனம் செய்யப்பட்டனர்
2காட்டு யானை பரம்பல் மற்றும் அவர்களின் பயணப்பாதை பற்றிய ஆராய்ச்சி	- ரேடியோ கழுத்துப்பட்டி 40 கொள்வனவு செய்யப்பட்டு வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது.
3. குருணாகல மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் கிராமங்கள் மற்றும் பயிர் நிலங்களுக்கு பாதுகாப்பு மின் வேலி அமைத்தல்	- குருநாகல் மாவட்டத்தில் 11 பிரதேசங்கள்,அனுராதபுரம் மாவட்டத்தில் பிரதேசங்கள் இனங்கண்டு ஆரம்பிக்கப்பட்டது. - கருத்திட்டம் தொடர்பாக இந்த கிராமங்களின் பொதுமக்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. - தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் மூலம் ஒப்பந்தம் வழங்கப்பட்டதோடு அந்த பொருட்கள் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டு வருகின்றன. இடம்பெறுகின்றன. - யானை - மனித மோதல் தொடர்பாக அடிப்படை ஆராய்சியொன்றை மேற்கொள்வதற்கு தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக 02 கிராமம் தெரிவு செய்யப்பட்டது - யானை - மனித சகவாழ்வு பற்றிய வீதி நாடகமொன்று 27 தடவைகள் காட்சிப்படுத்தப்பட்டன. - இது தொடர்பாக தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்படடது (தெரண அலைவரிசையுடன்)
4. லுனுகம்வெஹெர கரைச்சலான யானைகள் கட்டுப்படுத்தல் மற்றும் புனர்வாழ்வு நிலையம்	- பெறுகை முறையை மேம்படுத்துவதற்கு பாராளுமன்ற அனுமதிக்காக தொழில்நுட்ப குழுவொன்று நியமனம் செய்யப்பட்டது மின்சார வேலி நிருமாணத்திற்கு தேவையான பிரதேசங்களை

நிகழ்ச்சித்திட்டம்	முன்னேற்றம்
தாபித்தல்.	துப்பரவு செய்தல் தொடர்பாக கேள்விமனுக்கோரல் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. - இந்த யானைகள் புனர்வாழ்வுப் வளாகத்தில் அமைந்துள்ள 05 குளங்களைப் புனரமைப்புச் செய்தல் பணிகள் தற்போது 35% அளவில் பூரணப்படுத்தப்பட்டுள்ளது - உள்புறம் மற்றும் நிலம் உள்ளடங்கும் விதத்தில் நிருமாணிக்கப்படுகின்ற வீதி முறைமைக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

2.4 உப- ஆக்கக் கூறு 3(a): ஒதுக்குப் பிரதேச பேணிக்காப்பு மற்றும் முகாமைத்துவம்

வன பாதுகாப்புத் திணைக்களத்துக்கும், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்கும் சொந்தமான ஒதுக்குப் பிரதேசங்கங்களிலுள்ள வனசீவராசிகளின் வாழிடங்களை மேம்படுத்த உதவுதல் இந்த உப – ஆக்கக்கூறின் பிரதானமான நோக்கமாகும். முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்குப் பிரதேச பாதுகாப்புக்கு மற்றும் முகாமைத்துவத்திற்குரிய திட்டமிடலுக்காக நிதி வசதிகள் இந்த உப - ஆக்கக் கூறு மூலம் வழங்கப்படுகின்றது. தெரிவு செய்யப்பட்ட பௌதீக, கடல் மற்றும் ஈரலிப்புச் வலய சுற்றாடல் முறைமை இதனூடாக உள்ளடக்கப்படுகின்றது.

வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் முன்னேற்றம்

செயற்பாடு	**பௌதீக முன்னேற்றம்**
(1) முகாமைத்துவ திட்டத்தைஇற்றைப்படுத்துவதற்காக அதனை மீளாய்வு செய்தல்	சிங்கராஜ ஒதுக்கு வனம் மற்றம் ஹுருலு வன ஒதுக்குக்கான வன முகாமைத்திட்டம் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.
(2) ஒதுக்குப் பிரதேச எல்லைகளை வேறு பிரித்தல் மற்றும் பராமரிப்புச் செய்தல்	- மேதல் தவிர்ப்பு செயற்பாடுகள் மூலம் 18 கிராமங்களில் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. 241 கி.மீ வன எல்லைகள் கணக்கிடப்பட்டது.230 கி.மீ அடையாளமிடப்பட்டது 6,560 எல்லைத் தூண்கள் கொள்வனவு செய்யப்பட்டது வனத்தில் 431 கி.மீ பராமரிக்கப்பட்டது.
(3) மூடுதாவரங்களை கட்டுப்படுத்தல	– 128 ஹெக்டயார் மூடு தாவரங்கள் அகற்றப்பட்டது. அதே போன்று 592 ஹெக்டயார் – பிரதேசங்கள் பராமரிக்கப்பட்டது
(4) இயற்கைக் காடுகள் மீள் உருவாக்கம்	- 128 ஹெக்டயார் இயற்கைக் காடுகள் மீள் உருவாக்கம் செய்யப்பட்டதோடு, 86 ஹெக்டயாரில் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. - 086 ஹெக். பயினஸ் பயிரிடல் செய்வதற்காக கீழ் வளர்ச்சி செய்யப்பட்டது.
(5) ஒதுக்குப் பிரதேச முகாமைத்துவத்திற்குரிய அடிப்படை சசதிகள் விருத்தி	- பிட்டு வன் உத்தியோகத்தர்களின் 11 விடுதிகளின் நிருமாணப்பணிகள் 60% நிறைவு செய்யப்பட்டுள்ளன. - வீரக்கொடிசோலை ஒதுக்கு வனப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட கல்வில eco-park இன் உத்தியோகபூர்வ விடுதிக் கட்டிடத் மற்றும் அலுவலக கட்டிடத்தின் பணிகள் 60% நிறைவு செய்யப்பட்டுள்ளன.

(6) வனப்பகுதிகளில் தீ படடி அறிமுகம்	- தீப்பிடிப்பதைத தவிர்ப்பதற்காக 4 குழுக்கள் மாத்தறை - சிங்கராஜ ஒதுக்கு பிரதேசத்தில் தாபிக்கப்பட்டன. - தீ பட்டி. 17கி.மீ புதிதாக வெட்டப்பட்டதோடு 103 கி.மீ. பராமரிப்பு செய்யப்பட்டன.
(7) பாதுகாக்கப்பட்டபிரதேசங்களில் வீதி முறைமை விருத்தி செய்தல்	- சிங்கராஜ குடவ நுழைவாயிலின் நிருமாணப்பணிகள் 15% நிறைவு செய்யப்பட்டுள்ளது. - கன்னெலிய வன நுழைவாயில் புனரமைப்பு மற்றும் அதன் வாகனத்தரிப்பிட நிர்மானம் தொடர்பாக பெறுகை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

ஒதுக்குப் பிரதேச எல்லைகளை அடையாளமிடல்

மூடு தாவரங்களை அகற்றுதல்

வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் முன்னேற்றம்

செயற்பாடு	**பௌதீக முன்னேற்றம்**
(1) ஒதுக்குப்பிரதேச முகாமைத்துவ திட்டத்தை இற்றைப்படுத்தல்	- முகாமைத்துவ திட்டத்ததை நிகழ்நிலைப்படுத்துவதற்காக ஆலோசகர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.
(2) நடமாடும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான SMART Tool கருவி அறிமுகப்படுத்தல்	- ஆரம்பமாக தேசிய வனப்பூங்காக்கள் 7 இற்கு இந்த கருவியை அறிமுகப்படுத்தல் மற்றும் தேவையானஅனைத்து அடிப்படை பயிற்சி நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. - இந்த கருவியின் இரண்டாம் கட்ட அறிமுகத்திற்குத் தேவையான அடிப்படை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல். அதற்காக தேசிய வனப்பூங்காக்கள் 22 தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ளன. - எல்லைகளை அடையாளமிடல் செய்வதற்கு 6560 எல்லைக் கற்கள் கொள்வனவு கொள்ளப்பட்டன. - சிங்கராஜ ஒதுக்குக்காட்டின் எல்லைகள் 431 கி.மீ. பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
(3) யால தேசிய வனப்பூங்காவினுள் உள்ள சிறியளவு குளங்களைப் புனரமைப்புச் செய்தல்	- 10 குளங்களின் நிருமாணப்பணிகள் 90% நிறைவு செய்யப்பட்டுள்ளது. - பாறைச்சுனைகள் 4 முழுமையாக சுத்தம் செய்து புனரமைக்கப்பட்டது. - 11 கொங்கிறீட் நீர்த்தடாகங்களை அமைப்பதற்கு அவசியமான அடிப்படை மூலப் அளவை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

(4) மூடு தாவரகள் கட்டுப்பாடு	- 170 ஹெக். (லுணகம்வெஹர- 20 ஹெக். மற்றும் புந்தல - 150 ஹெக்) மூடு தாவரங்கள் அகற்றி முடிக்கப்பட்டுள்ளன. லுணகம்வெஹர-. 200ஹெக். மற்றும் புந்தல - 400 ஹெக் அகற்றப்பட்டு வருகின்றன.
(5) தேசிய வனப்பூங்காக்களில் யூ பிரிவுகள் ம- ජරයතිමාරය தொடர்பாக ஆராய்ச்சி செய்தல்	- ம- ජරලතිමාරය தொடர்பாக செயலமர்வுகள் இரண்டு நடாத்தப்பட்டன. - ம- ජරලතිමාරය தொடர்பான இடைக் கருத்திட்ட பிரேரணையொன்று தயார் செய்யப்பட்டது.

2.5 துணை ஆக்கக் கூறு 3 (b)- ஒதுக்குப் பிரதேசத்தினுள் மேற்கொள்ளப்படும் இயற்கை (சுற்றாடல்) சுற்றுலா வியாபாரம்.
சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை இனங்கண்டு கொண்டு உரிய சுற்றாடல் முறைமையின் கொள்ளளவை ஆராய்ச்சி செய்து ஒதுக்கு பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் இயற்கை சுற்றாடல் சுற்றுலா கருத்திட்டதிதன் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் சேவைகளை வழங்குதல் இந்த உப ஆக்கக் கூறின் நோக்கமாகும்.

மேலும் இந்த பிரதேசத்தினுள் செல்லக் கூடிய சுற்றுலாப்பயணிகளின் அளவு மற்றும் அவர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் உள்ளிட்ட இயற்கை சுற்றாடல் சுற்றுலா திட்டத்தை மேம்படுத்துவதற்காக ஒழுங்கமைந்த அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்கு இந்த உபஎ- ஆக்கக் கூறு உதவுகின்றது. மேலும் இந்த துணை ஆக்கக் கூறு கீழ், வழிகாட்டல் சேவை மற்றும் மக்கள் அடிப்படை சுற்றுலா சேவை போன்ற விருந்தினர் உபசரிப்பு சேவைகளின் தற்போதைய நிலையை மேம்படுத்தல் தொடர்பாகவும் பங்களிப்புச் செய்கின்றது.

சர்வதேச ஆலோசகர் ஒருவரின் உதவியுடன் சிங்கராஜ, நகல்ஸ், புந்தல மற்றும் உடவலவ ஆகிய ஒதுக்குப் பிரதேசங்களில் இயற்கை சுற்றாடல் சுற்றுலா திட்டங்கள் நான்கு விருத்தி செய்யப்பட்டதோடு. யால வனப்பூங்காவுக்கான சுற்றாடல் முறைமை கொள்ளவு ஆற்றல் அறிக்கையை தயாரித்து. இறுதி அறிக்கை தயாரிப்பதற்கு முன்னர் மீளாய்வுக்காக இந்த திட்டம் மற்றும் உரிய அறிக்கைகள் வனப் பாதுகாப்பு திணைக்களம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் உலக வங்கிக்கு ஆகியவற்றுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

சர்வதேசப் ஆலோசகரின் ஏற்பாட்டில் சுற்றாடல் சுற்றுலா திட்டம் தொடர்பான திட்டம் மற்றும் மேற்கொள்ளும் பொறுப்புகளை வகிக்கும் திணைக்களங்கள் இரண்டின் குறித்த பொறுப்பான அலுவலர்களை வலுப்பெறச் செய்வதற்காக 9 செயலமர்வுகள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.

கருத்திட்ட மீள்நோக்கு காலப்பகுதியில், கருத்திட்ட முகாமைத்துவ அலகின் மூலம் இயற்கை சுற்றாடல் சுற்றுலா திட்டத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் சர்வதேச ஆலோசகர் ஒருவரின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டதோடு அவரால் சிங்கராஜ, நகல்ஸ், புந்தல மற்றும் உடவலவ ஆகிய ஒதுக்குப் பிரதேசங்களுக்காக இயற்கை சுற்றாடல் சுற்றுலா திட்டங்கள் நான்கு விருத்தி செய்யப்பட்டதோடு, யால வனப்பூங்கா தொடர்பாக, சுற்றாடல் முறையின் கொள்ளளவு தொடர்பாக அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதோடு அதற்கான சுற்றுலா சந்தை கேள்வி, மனங்கவர் இடங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவை வழங்குதல் மற்றும் போட்டித்தன்மை, மனித வளங்கள் மற்றும் தாபன கொள்ளளவு மற்றும் சுற்றாடல் காரணிகள் என்பன கவனத்திற் கொள்ளப்பட்டது.

மேலும், நகல்ஸ் ஒதுக்குப் பிரதேசத்திற்காக (மாத்தளை மாவட்டம்), இயற்கை (சுற்றாடல்) சுற்றுலா வியாபாரத்தை (NBTP) விருத்தி செய்வதற்காக மூன்று நாள் செயலமர்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டது இங்கு கருத்திட்டம் பற்றிய மீளாய்வொன்று செய்யப்பட்டதோடு விரிவான அமுலாக்கல் திட்டமொன்றம், தயாரிக்கப்பட்டது.

ஹுருளு- பொலொன்னறுவை ஒதுக்கினுள் 12 கி.மீ.இயற்கை வழிப்பாதை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. கன்னெலிய மற்றும் நகல்ஸ் ஆகிய ஒதுக்குக் காடுகளினுள் 30 கி.மீ. இயற்கை சுற்றுலா வழிப்பாதையை மேம்படுத்துவதற்கான டென்டர் வழங்கப்பட்டுள்ளது. நிர்மாணப் பணிகளில் 60% வீதம் வரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இயற்கைவழி சுற்றுலாக் கருத்திடடத்தை அபிவிருத்தி செய்வதற்காக விரிவான பிரேரணைகளை சமர்ப்பிப்பதற்காக வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் கிரிதலே தேசிய வனசீவராசிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தில் மூன்று நாள் செயலமர்வொன்று நடாத்தப்பட்டது. அதற்கமைய வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் இயற்கைவழி சுற்றுலா வியாபாரத்தை அபிவிருத்தி செய்தல் தொடர்பான புதிய 25 முன்மொழிவுகள் வரைவு செய்யப்பட்டுள்ளதோடு, அவற்றை மேற்பார்வை செய்தல் மற்றும் அனுமதி வழங்குதல் செயற்பாடுகளுக்காக கருத்திட்ட முகாமைத்துவ அலகிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2.6 துணை ஆக்கக் கூறு 3 (c)- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின், பாதுகாப்பு திணைக்களத்தின் நிறுவனக் கொள்ளளவு மற்றும் முதலீட்டு சாத்தியப்பாடுகள்

வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் முன்னேற்றம்

வனப் பாதுகாப்பு திணைக்களததின் பயிற்சி நிலையத்தை மேம்படுத்தல் மற்றும் நிறுவன நிலைமையை மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இலங்கை வனவியல் பயிற்சி நிலையத்தின்)SLFI) அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் நிர்மாணப் பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன.

இனாமலுவ களப்பயிற்சி நிலையத்தின் எண்ணக்கருத்திட்டம் (conceptual design) தயாரித்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு விரிவான திட்டம் இறுதிக் கட்டத்தில் உள்ளது.

. வன பாதுகாப்புத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் வேண்டுகோளுக்கு அமைய அவர்களுக்குத் தேவையான வெளிக்கள மற்றும் அலுவலக உபகரணங்கள் (GPS, கணினி, ஏனைய அலுவலக உபகரணங்களை) கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகளுக்கு கருத்திட்ட முகாமைத்துவ அலகிற்கு ஒத்தழைப்பு வழங்கப்பட்டது.

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் முன்னேற்றம்

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பயிற்சி நிறுவனம் மேம்படுத்தலுக்கான நிதி உதவி வழங்கப்பட்டது. தேசிய வனசீவராசிகள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (NWRTC) மேம்படுத்தலுக்கான விரிவான திட்டம் தயாரித்து நிறைவு செய்யப்பட்டதோடு இதன் எதிர்கால மதியுரை நடவடிக்கைகளுக்காக விலைகூறல்கள் பத்திரம் கோரப்பட்டுள்ளது.

கருத்திட்டத்தின் நிதியை பயன்படுத்தி வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் 27 பேர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வனசீவராசிகள் டிப்புளோமா பாடநெறிக்கான ஆரம்பப் பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளனர் 2018 ஆகஸ்ட் 7 9 வரை நடாத்தப்பட்ட WILDLANKA- 2018 வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு கருத்திட்டத்தின் மூலம் நிதி பெற்றுக்கொடுக்கப்பட்டது .

சுற்றாடல் முறைமை முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை துரிதப்படுத்துவதற்காக கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவின் மூலம் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு 08 டெக்டர வாகணங்கள் மற்றும் மூடு தாவரங்களை அகற்றும் 10 இயந்திரங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காக நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

குடியிருப்புக்கள் முகாமைத்துவம் மற்றும் வீதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்காக அகழ்வு இயந்திரங்கள் 4 வழங்கப்பட்டுள்ளது.

வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு டெஸ்க்டொப் கணினி, மடிக்கணினி கணினி வழங்கி நிறுவனத்தின் கொள்ளளவை வலுவாக்கம் செய்வதற்காக ஒதுக்கீட பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.



மாதுருஓயா தென்கரை அபிவிருத்திக் கருத்திட்டம்

துரித மாகாவலி அபிவிருத்தித் திட்டத்திக் கீழ்)AMDP) நிருமாணிக்கப்பட்ட முதலாவது கருத்திட்டம் மாதுரு ஓயா அபிவிருத்திக் கருத்திட்டமாகும். மாதுரு ஓயா,மகாவலி கங்கை மற்றும் முந்தெனி ஆறு ஆகியவற்றுக்கிடையில் 135 கி.மீற்றர் நீளமும் மற்றும் 453 சுதுர கி.மீற்றர் பரப்பிலுமான உள்ளடக்கப் பகுதியில் அமைந்துள்ளது. மாதுரு ஓயா அபிவிருத்திக் கருத்திட்டம் மொத்தமாக 135,000 ஹெக்டயார் நிலப்பகுதிக்குட்பட்டதோடு அதற்குரிய நீர்பாசன வசதி வழங்கக்கூடிய காணியின் அளவு 37,500 ஹெக்டயார் ஆகும். (இடது கரை 22,000 ஹெக்டயார் மற்றும் இடதுகரை 15,500 ஹெக்டயார்) மாதுருஓயா இடது கரை கிழக்கே கிரான் களப்பையும் தென்கிழக்காக நியன்கொள்ள கால்வாயையும் வடக்கு மற்றும் மேற்குத் திசைகளில் மாதுரு ஓயாவையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

கருத்திட்டச் செலவு - 475 மில்.அ.டொலர்
கருத்திட்டக் காலப்பகுதி - 04 வருடங்கள்
ஒப்பந்தக்காரர் - China CAMC Engineering Co.Ltd

செயற்பாட்டுத் திட்டம்

Project Implementation Schedule

	Description of Work Item	YEAR - 1												YEAR - 2												YEAR - 3												YEAR - 4					
		1	2	3	4	5	6	7	8	9	10	11	12	1	2	3	4	5	6	7	8	9	10	11	12	1	2	3	4	5	6	7	8	9	10	11	12	1	2	3	4	5	6
1	Project Preperation																																										
2	Construction of Diversion Works																																										
3	Construction of Main Canal																																										
4	Construction of Branch Canals																																										
5	Construction of Distributary & Field Canals																																										
6	Structures of Main & Branch Canals																																										
7	Structures ofDistributary Canals																																										
8	Structures of Field Canals																																										
9	Construction of Reservoirs																																										
10	Social Infrastructure																																										
11	Transfer of Project																																										

2018 வருடத்தில் அடைந்து கொண்ட முன்னேற்றம்

- சீனாவின் CAMC பொறியியல் கம்பனியுடன் பொறியியல் பெறுகை நிருமாண)EPC) ப்பந்தம் கைச்சாத்திடல்
- சுற்றாடல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கையைச் சமர்ப்பித்தல்
- மேலதிக சுற்றாடல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல்.

III ஆம் பகுதி

நேரடி வெளிநாட்டுக் கொடைகள் மூலம் அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டங்களின் முன்னேற்றம்

1.அமைச்சினால் நேரடியாக மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டங்கள்

- இலங்கையில் மொன்றியல் உடன்படிக்கை ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்
- மனித போஷாக்கு மற்றும் வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்காக உயிரியல் பல்வகைமை மற்றும் நிலையான பயன்பாட்டிற்கு பழக்கப்படுத்தும் கருத்திட்டம்
- இலங்கையின் விவசாய சுற்றாடல் வலயப் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு மக்களை இசைவாக்கம் செய்யும் கருத்திடடம்
- மினமாடா உடன்படிக்கைக்குரிய மதிப்பீடு
- சுகாதார மற்றும் சுற்றாடல் கொள்கைக்கான வாயு நிலைமை மதிப்பீடு தொடர்பான கருத்திட்டம்



இலங்கையில் மொன்ரியல் ஏற்பாடுகளை செயற்படுத்தல்

மொன்ரியலசுட்டமைப்பு மூலம் இதுவரை ஓசோன் மிதமாக்கல் பொருட்கள் 96 இல் 55 பொருட்கள் முழுமையாக பாவனையில் இருந்து அகற்றப்பட்டுள்ளன. கால்நடை மற்றும் தாவர தொற்றுநோய்த்தடை நடவடிக்கைகள் மற்றும் கப்பலில ஏற்றுதல்பணிகளை தவிர்ந்த (QPS) ஏனைய நடவடிக்கைகளுக்காக மீதயில் பிரோக்கமயிட்உபயேகம் முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய இரசாயனஹைட்ரோ குளொரோ புளொரோ காபன்(Hydrochloroflurocarbons- HCFCs) 2013 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக பாவனையிலிருந்து அகற்றுவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு 2030 ஆம் ஆண்டாகும் போது பூர்த்தி செய்யப்படவுள்ளது..

ஓசோன் படையை மீண்டும் நல்ல நிலைக்கு கொண்டுவருதல; மற்றும் உலக வெப்பமடைதலைக் குறைத்து புவியில் வாழ்க்கையை பாதுகாப்பபை உறுதிப்படுத்துவதற்காக ஓசோன் படையை பாகுாக்கும் நோக்கில் 2018 ஆம் ஆண்டில் தேசிய ஓசோன் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பல மேற்கொள்ளப்பட்டன.

இலங்கையில் மென்டறியல் அமைப்பின் ஏற்பாடுகளை மேற்கொள்ளும் கருத்திட்டத்திற்காக கருத்திட்ட செயற்பாட்டு குழுவை (PSC) தாபித்தல்.

2018 ஆம் ஆண்டு இலங்கையில் மொன்டறியல் அமைப்பின் ஏற்பாடுகளை மெற்கொள்ளும் கருத்திட்டத்திற்காக பங்குதாரத்தரப்புக்களை பலப்படுத்துவதற்கு துறைசார் நிபுணத்துவம் கொண்ட பங்குத்தரப்பினர் மற்றும் நிபுணர்கள் அடங்கிய செயற்படுத்து.. வழிநடாத்தல் குழுவை (ீளுஊ) நிறுவுதல். மொன்றியல் அமைப்பின் இலக்குகளை அடைதல் மற்றும் சிக்கலான நிலைமைகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு எடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகளை தீர்மானிக்கும் பொறுப்பு இந்த குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

HCFC இறக்குமதி பங்கு முறைமை (quota distribution) கீழ் 2018 ஆம் ஆண்டு தொடர்பாக கோட்டா வழங்கல் (ஓசோன் மிதமாக்கல் பொருட்கள் கட்டுப்பாட்டுக்கான செயன்முறை பொறிமுறை)

ஓசோன் மிதமாக்கல் இரசாயனமான ஹைட்ரோகுளோரோபுளோக்காபன் (HCFC) பாவனையை அகற்ற செய்வதற்காக இலங்கையில் HCFC முகாமைத்திட்டம் மேற்கொள்ளப்படுவதோடு குளிரூட்டல் மற்றும் குளிரூட்டி சேவைகளுக்காக தேவையான HCFC இறக்குமதி தேசிய ஓசோன் பிரிவினால் கட்டுப்பாடு. செய்யப்படுகின்றது.அதற்கமைய 2018 ஆம் ஆண்டில் அமைச்சில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் 24க்கு மாத்திரமே HCFC இறக்குமதி செய்வதற்கான quota வழங்கப்பட்டதோடு இறக்குமதியை 164.761மெ.டொன் வரை குறைத்துக் கொள்வதற்கு முடிந்தது.

வருடாந்த ஓசோன் அதிகரிப்பு திரவப் பாவனையை அறிக்கையிடல்

மொன்ரிசயல் கூட்டமைப்பின்7 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த ஓசோன் அதிகரிப்பு திரவப் பாவனை ஓசோன் செயலாளர் காரியாலயத்துக்கு மற்றும் பல் தரப்புநிதியத்தின் செயலாளர் காரியாலயத்துக்கு அறிக்கையிடுவதுஇன்றியமையாததாகும். இது மிக முக்கியமாகும். மற்றும் முதன்மைப்பொறுப்பாகும். அதற்கமைய 2017 ஆம் ஆண்டு ஓசோன் அதிகரிப்பு திரவப்பாவனை2018 ஏப்ரல்மாதத்தில் குறித்த நிறுவனங்களுக்கு அறிக்கையிடப்பட்டது. கூட்டமைப்பின்அனைத்து தரப்புக்களும் இறக்குமதி, ஏற்றுமதி செய்கின்ற இரசாயனத் திரவங்கள் தொடர்பான தரவுகளை இந்த செயலாளர் காரியாலயத்திடம் உள்ளதால்,சட்ட விரோதமான ஏற்றமதி மற்றும் இறக்குமதிகளின் கட்டுப்படுத்தலுக்கு இது உதவியாகவுள்ளது.

பூச்சிய ஓசோன் சிதைவடைதல் சாத்தியம் மற்றும் குறைந்த உலக வெப்பம் கொண்ட குளிர்பதனத்தைப்பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ள குளிரூட்களைக் கொள்வனவு செய்வதற்கு கொடுப்பனவுகள் வழங்குதல்

தற்போது குளிரூட்களுக்கு அதிகம் பயன்படுத்தப்படும் ஸ்பிலிட்மற்றும் பொதிசெய்த (Split and Package)குளிரூட்களின் அதாழிற்பாட்ட குளிர்பதன் HCFC 22 (R 22) ஆவதோடு R 22 ஓசோன சிதைவடைதல்சாத்தியம்மற்றும் உயர் உலக வெப்பமடைதல் சாத்தியம் கொண்ட குளிரூட்டி என்பதால் காலநிலை மாற்றங்களைக் குறைக்கும் சர்வதேச கூட்டு இணக்கப்பாட்டுக்கு கட்டுப்பட்டு இலங்கயும் R 22பயன்படுத்தப்படும் குளிரூட்டி இறக்கமதியைக்கட்டுப்படுத்துவதற்கானசட்டரீதியான

நடவடிக்கைகள் இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பூச்சி ஓசோன் කීඡයකාරක சாததியப்பாடு(0 ODP) மற்றும் குறைந்த உலக வெப்பமடைதல் சாத்தியப்பாடு கொண்ட குளிரூட்டி (R 32, R 290)பயன்படுத்தப்படும் கொள்ளளவு 9,000Btu/ h முதல் 24,000Btu/ h வரையான குளிரூட்டிகளை கொள்வனவு செய்வதை ஆர்வமூட்டுவதற்காக விசேட கொடுப்பனவுகள் வழங்கும் (Incentive payment scheme) கருத்திட்டமொன்று முன்னோடிக் கருத்திட்டமாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (UNDP) பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த கருத்திட்டத்தின்கீழ் அரச,பகுதியளவு நிறுவனங்களுக்கு97 குளிரூட்டிகளை கொள்வனவு செய்வதற்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் 2018 இல் வழங்கப்பட்டன.

R- 22 குளிரூட்டி சீர் செய்யும் நிலையம் (Refrigerant Reclamation Centers) ஒன்றைத் தாபித்தல்

ஹயிட்ரோ குளரோபுளரோ காபன்(HCFC)பாவனையை அகற்றல் நிகழ்ச்சித்திட்டம் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2030ஆம் வரை நடைறைப்படுத்தப்படவுள்ளது.இங்கு (HCFC) இறக்குமதி (HPMP) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கட்டுப்படுத்தப்படுலதால்இந்த உபகரணங்களின் சேவைகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக HCFC இல் தட்டுப்பாடு ஏற்படமுடியும். இந்த சிரம்ங்களைக் குறைப்பத்காகHCFCகுளிடூட்களை சீராக்கம்செய்து மீண்டும் உபயேகப்படுத்துவதைத் ஊக்குவிப்பதற்கு HCFCகுளிரூட்டி சீர் செய்யும் 8நிலையங்கள், தொழினுட்பக் கல்லூரிகளுடன் ஒன்றிணைத்து தாபிக்கப்பட்டுள்ளதோடு,2018 ஆம் ஆண்டு ஜுன் 05 ஆந் திகதி உலக சுற்றாடல் தினத்திற்கு இணையாக புதிய ஒன்தாவது (09) குளிரூட்டி சீர் செய்யம் நிலையம் கம்பஹா தொழினுட்பக் கல்லூரியில்ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை சுங்கத்திற்கு குளிரூட்டல் பகுப்புமுறை (Refrigerant Analyzers) வழங்கல்

குளிரூட்டல் பகுப்புமுறை இயந்திரம் மூலம் பல்வேறு வகை குளிடூட்களை வேறுபடுத்தி அடையாளம் காணக்கூடியதாகவும் மேற்படி குளிரூட்டிகளை பகுப்பாய்வு செய்து அதன் அமைப்பு உள்ளடக்கத்தை அறிய முடியும். எனவே இந்த உபகரணம் மூலம் குளிரூட்களை சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்வதைத த தடுத்துக்கொள்ள முடியும். இந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு தேசிய ஓசோன் பிரிவு, 2018 சர்வதேச ஓசோன் தினத்திற்கு இணையாக இலங்கை சுங்கத்திற்கு குளிரூட்டி பகுப்புமுறை 02 இயந்திர்கள் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் வழங்கப்பட்டது.

குளிரூட்டல் மற்றும் குளிரூட்டி துறையில் ஈடுபட்டுள்ள சேவை மற்றும் பராமரிப்பு நிறுவனங்கள் தொடர்பாக தரவு முறைமையைத் தயார் செய்தல்.

குளிரூட்டல் மற்றும் குளிரூட்டி சாதன துறையுடன் தொடர்பான நிறுவனங்கள் மற்றும் தொழினுட்பவல்லுனர்கள் தொடர்பாக தரவு முறைமையை பேணுதல் கட்டாயமானதென மொன்றியல் அமைப்பு தொடர்பான தரப்புக்களின் கூட்டங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளன. எனவே இலங்கை முழுவதும் பரவி இருக்கும் குளிரூட்டல் மற்றும் வளிமிதமாக்கல் (RAC) சேவை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் தொழினுட்பவியலாளர்களைப் பதிவு செய்வதற்காக உள்நாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து மாவட்ட செயலாளர் ஊடாக பிரதேச செயலகப்பிரிவு மட்டத்தில் 2018 ஆம் ஆண்டுடினுள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

குளிரூட்டல் மற்றும் குளிரூட்டி துறையில் ஈடுபட்டுள்ள தொழிநுட்பவியலாளர்களுக்கு விதிமுறையான பயிற்சி மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதலொன்றை வழங்குதல்.

இந்த துறை சேவையில் ஈடுபட்டுள்ள தொழிநுட்பவியலாளர்களில் அதிகமானோர் விதிமுறையான பயிற்சியொன்றைப் பெற்றுககொண்டுள்ள் போதிலும் செயன்முயைுடன் கூடிய பயிற்சியற்ற தொழிநுட்பவியலாளர்கள் மூலம் வீனாக குளிரூட்டல் வாயுக்கள் அதிகளவு சுற்றாடலுக்கு விடுவித்தல் செய்யப்படுகின்றது. இவ்வாறான தொழிநுட்பவியலாளர்களின் சேவையைத் தரங்கொண்டதாக மாற்றம் செய்வதற்காக குளிரூட்டல் மற்றும் குளிரூட்டி உபகரண பழுதுபார்ப்பு சுற்றாடல் நட்பான தொழில்நுட்பம் பற்றிய பயிற்சியொன்று அவர்களுக்கு வழங்கப்பட்டதன் பின்னர் நடைபெறும் பரீட்சையின் பின்னர் அவர்கள்

Recognition for Prior Learning (RPL) எனும் பெயரில் சான்றிதழ் வழங்க தேவையான நடவடிக்கைகள் 2018 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

கிலாலி திருத்தம்.



2016 ஆம் ஆண்டில் மொன்றியல் அமைப்பு மூலம் நிறைவேற்றப்பட்ட கிலாலி திருத்தத்தின் கீழ் அனைத்து அரசுகளும் தனது HFC உற்பத்தி மற்றும் உபயேகத்தை எதிர்வரும் 30 ஆண்டுகளினுள் 80% குறைக்க இனக்கம் தெரிவித்தன். இதனூடாக இந்த நூற்றாண்டு இறுதியில் 0.5 செல்சியஸ் உலக வெப்பம் அதிகரிப்பதை குறைத்துக்கொள்ள முடியும். இந்த திருத்தத்தின் கீழ் அபிவிருத்தி அடைந்த நாடுகள் 2019 ஆணடிலும், குழு 1 உட்படுகின்ற அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகள் 2024 ஆணுடிலும் குழு 2 உட்படுகின்ற அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகள் 2028 ஆண்டிலும; HFCs உபயேகக் கட்டுப்பாட்டை ஆரம்பிக்கவுள்ளன.

கிலாலி ஒப்பந்தத்திற்கு கைச்சாத்திட்டு இலங்கை கிலாலி திருத்தத்திற்கு இணைந்து கொண்ட 28 வது நாடாகும்..

கிலாலி திருத்தத்தின் கீழ் HFCs உபயேகத்தை வரையறை செய்தல் மற்றும் ஓசோன் மிதமாக்கல் பாவனையை அகற்றும் நிகழ்ச்சித்திட்டத்தைெ பிரச்சாரம் செய்தல்



இந்த பணிக்குத் தேவையானகாக அடிப்படை பிரச்சார நடவடிக்கைகளுக்காக தேசிய ஓசோன் பிரிவின் மூலம் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டன. இதன் கீழ் துண்டுப்பிரசுரம், சிறு புத்தகம், பல்வேறு நூல்கள் அச்சிடப்பட்டதோடு ஓசோன் படை பாதுகாப்புத் தொடர்பாக குறிப்பிட்ட தகவல்கள் அடங்கிய வீடியோ 02 தயாரிப்பதற்கான அடிப்படை பணிகளை நிறைவு செய்யப்பட்டனஇ இதற்கு மேலதிகமாக இது தொடர்பாக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்பட்ட 04 பத்திரிகை விளம்பரங்கள் மூலம் மிகப்பெரியளவில் வாடிகக்கையாளர்கள் ஈர்த்துக் கொள்வதற்கு சாத்தியம் கிடைத்தது.

அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்.

சுங்க உத்தியோகத்தர்களுக்கான திறன் விருத்தி நிகழ்ச்சித்திடடம் (ஓசோன் அதிகரித்தல் திரவங்கள் சட்ட முறையற்ற விதத்தில் இறக்குமதி செய்வதை தவிர்த்தல்)

ஓசோன் சிதைவு திரவங்களை சட்ட முறையற்ற விதத்தில் இறக்குமதி செய்வதைத் தடுப்பதற்காக தேசிய ஓசோன் பிரிவினால் சுங்க அதிகாரிகள் 116 பேர் மற்றும் ஏற்றுமதி , இறக்குமதி கட்டுப்பாட்டு அலுவலர்கள் 100 பேருக்கு பயிற்சி வழங்கல் செயலமர்வுகள் இரண்டு நடாத்தப்பட்டன. இந்த பயிற்சிச் செயலமர்வுகளில ஓசோன் படையைதெப்படுத்துகின்ற குளிரூட்டிகளை இனங்கண்டு கொள்ளும் கண்காட்சி ரீதியான பயிற்சியொன்றும் நடாத்தப்பட்டது. அதன் மூலம் குளிரூடிகளைசுங்கத்திலிருந்து விடுவிக்க முன்னர் அடையாளங்காணும் ஆற்றல் தொடர்பாக சுங்கத் உத்தியோகத்தர்களுக்கு தேவையான. அறிவு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

குளிரூட்டல்/குளிரூட்டி சேவை வழங்கும் துறைதொடர்பாக ஹரித தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தல்

இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற HCFC- 22 குளிரூட்டியாகும். இதனை பழுதுபார்க்கும் போது இந்த குளிர்பதனப் பொருட்கள் வளிக்கோலத்திற்கு விடுவிக்கின்றது அவ்வாறு விடுவிக்கும் போது ஓசோன் தட்டுக்கள் சிதைவடைந்து மற்றும் உலக வெப்பம் அதிகரிப்பதற்கு காரணமாக அமைகின்றது.. எனவே இந்த உபகரணங்களைச் சேவை செய்யும் போது குளிர்பதனப் பொருள்வளிக்கோலத்திற்கு விடுவிக்கப்படாமல் சேவை செய்யும் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யப்பட்டுள்ளதோடு அது அந்த உபகரணங்கள் சேவை செய்யும் ஹரித தொழில்நுட்பம் என அழைக்கப்படுகின்றது.. இதற்காக ஐக்கிய நாடுகள் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து இந்த தொழில்நுட்பத்தை தேசிய மட்டத்தில் கற்பித்தல் தொடர்பாக பயிற்றுவிப்பாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

ஆசிரியர்கள்,அரசஊழியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பொலீஸ் அலுவலர்களுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் அறிவூட்டுதல்

தேசிய ஓசோன்பிரிவினால் ஓசோன் படை தொடர்பாகவும் அது சிதைவடையும் விதம் மற்றும் அந்த நிலைமை மனித சுகாதாரத்திற்கும், உயிரியல் பல்வகைமை மற்றும் காலநிலை மாற்றங்கள்தொடர்பில் தாக்கம் செலுத்தும் விதம் தொடர்பாகவும் அதனைப் பாதுகாத்துக் கொள்வது எவ்வாறு என்பது தெடர்பாகவும் பாடசாலை மாணவர்கள்,ஆசிரியர்கள்,அரச ஊழியர்களின் அறிவுறுத்தப்பட்டனர். மாணவர்கள், அசிரியர், அரச அலுவலர்கள் மற்றும் பொலீஸ் அலுவலர்களுக்காக 26 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

சுற்றாடல் முன்னோடிகளுக்காக நடத்தப்பட்ட அறிவுறுத்தல் விசேட நிகழ்ச்சித்திட்டம்

தேசிய ஓசோன்பிரிவு மத்தியசுற்றாடல் அதிகார சபை மற்றும் கல்வி அமைச்சுஆகியன இணைந்து தங்கம் மற்றும் வெள்ளி பதக்கம் பெற்ற் சுற்றாடல் முன்னோடிகளுக்காக விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டம் இரண்டு கட்டங்களின் கீழ் நடாத்தப்பட்டன.

1). ஓசோன் படை சேதமடைதல் மற்றும் அதற்கு சமாந்தரமாக ஏற்படுகின்ற காலநிலை மாற்றங்கள், உயிரியற் பல்வகைமை மற்றும் மனித சுகாதாரம் தொடர்பில் ஏற்படுகின்ற தாக்கங்கள் ஓசோன் படையை பாதுகாத்தல்தொடர்பான இரண்டு நாள் வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.

2). பாடசாலை மாணவர்களுக்காக நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட போட்டித் தொடர் 2018 ஆம் ஆண்டு ஓசோன் தின வைபவத்திற்குச் சமாந்தரமாக நடாத்தப்பட்டதோடு தங்க, வெள்ளிப் பதக்கம் பெற்றவர்கள் இதில் கலந்து கொள்ளச் செய்யப்பட்டனர். இதில் சிங்கள் மொழில் 16 மாவட்டங்களிலிலிருந்து 16 குழுக்களும், தமிழ் மொழியில் 05 மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தி 05 குழுக்களும் கலந்து கொண்டன. இதன் போது 07 சிங்கள மொழி நிகழ்ச்சிகளும் 01 தமிழ் மொழி நிகழ்ச்சியும் சுயாதீன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது

சர்வதேச ஓசோன் தினம் - 2018

இம்முறை மொன்றியல் அமைப்பு தாபிக்கப்பட்டு 31 வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு " குளிர்ச்சியுட முன்னோக்கி "என்பதை தொனிப்பொருளாகக் கொண்டு இலங்கையிலும் 2018 ஆம் ஆண்டு செப்தெம்பர் 17 ஆம் திகதி சர்வதேச ஓசோன் தினம் அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் சுற்றாடல் அமைச்சர் இஜித் மான்னப்பெரும் ஆகியோரின் பங்கேற்புடன் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெகு சிறப்பாக நடாத்தப்பட்டது.இங்கு அமான்றியல் உடன்படிக்கைக்கு இசைவாக நவீன உலகிற்கு பொருத்தமான சுற்றாடல் நட்பான குளிரூட்டிகள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகளுக்கான தொமிநுட்ப வழிமுறையொன்றை அறிமுகம் செய்வதற்காக குளிரூட்டி மற்றும் வளி சீராக்கல்துறையில் மகம் கொடுக்கின்ற பிரச்சினைகள் தொடர்பான வட்டமேசை கலந்துரையாடலொன்றும் அங்கு நடாத்தப்பட்டது.

மனித போஷாக்கு மற்றும் வாழ்க்கை மேம்படுத்தல் தொடர்பாக உயிரியல் பல் வகைமை மற்றும் வளமான உபயோகத்திற்கு இசைவாக்கம் செய்யும் கருத்திட்டம் (BFN)

•அறிவை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகள்-

உணவு அமைப்பு பகுப்பாய்வு-

உணவுகளின் போசணைகளின் பயன்களின் முக்கியத்துவத்தை மக்கள் மத்தியில் பிரபல்யம் செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட குறைவாகப் பயன்படுத்தப்படும் பழங்கள், காய்கறிகள், கீரை வகைகளின் போசணை அமைப்பு முறையை பகுப்பாய்வு செய்வது இந்த கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.. கன்னொருவ பழவகைகள் ஆராய்ச்சி நிலையம், பேராதனை பல்கலைக்கழகத்திக் விவசாயக் கல்லூரியின் உணவு விஞ்ஞானத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் 2018 ஆம் ஆண்டு 33 குறைப்பயன்பாட்டு பொருட்களின் போஷாக்கு நிலைமை பகுப்பாய்வு செய்யப்பட்டது.

• கொள்கை, வழிநடாத்தல் சட்டகம் மற்றும் சந்தை

விவசாய பல்வகைமை மற்றும் உயர் போஷாக்கு பெறுமதி கொண்ட உணவுகளை இனங்காணல், பெறுமதி சேர்த்தல், அபிவிருத்தி மற்றும் புதிய விற்பனை மாற்றுவழிகள் மற்றும் வழிகாட்டலகளைத் தயாரித்தல் பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாயக் கல்லூரியின் விவசாய வியாபார நிலையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பின்னர் அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் துறையில் இது தொடர்பிலான பிரதான பங்குதாரத்தரப்பினர்களிடையே இந்த அறிவு பரிமாறப்பட்டன.

• அறிவூட்டல் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகள்

கருத்திட்ட முன்னேடித் துறைகளின் வகையீடு

கம்பளை மற்றும் கிரிபாவ கருத்திட்ட முன்னோடிப் பிரிவுகளில். 50 வீட்டுத் தோட்டங்களை பல்வகைப்படுத்தல், விவசாய உயிரியல் பல்வகைமை மற்றும் சுகாதார போஷாக்கு உணவு பழக்கத்தை மேம்படுத்தல் உட்பட பண்புசார் நிகழ்ச்சித்திட்டங்கள் பல இக்கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டன. . பல்வகைப்படுத்தல் உபகரணங்கள், வளர்ப்பு பொருட்கள், சேதனப் பசளை, குறைந்த நீர் அளவின் கீழ் பயிரிடும் மறைகளுக்கு உதவி செய்தல் 2018 ஆம் ஆண்டினுள் இந்த கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

இணைந்த பூச்சிகொல்லிகள் நிகழ்ச்சித்திட்டமொன்று நடத்தப்பட்டதுடன் அதன் பிரதான நொக்கம் வீட்டுத் தோட்டப் பயிர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற பூச்சி நோய்களிலிருந்து பயிர்களை பாதுகாப்பதாகும். இந்த சுற்றுசூழல் நட்பான பூச்சிகள் தாக்க நோய் கட்டுப்பாட்டுத் முறைமை கன்னொருவ தாவரங்கள் பாதுகாப்பு நிலையத்தின் ஊழியர்களின் ஆலோசனைகளின் படி வழங்கப்பட்டது.



இலங்கையின் விவசாய சுற்றாடல் வலயப் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு மக்களை இயைபுபடுத்தல் கருத்திட்டம் (BACC)

- **பாரம்பரிய மற்றும் விருத்தி செய்யப்பட்ட பயிர்கள் அறிமுகம்**

- பாரம்பரிய மற்றும் விருத்தி செய்யப்பட்ட பயிர்கள் கன்னொருவ கன்றுகள் மரபணு வள நிலையத்தில்) PGRC) மறறும் பூங்கா பயிர்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களில் ஆராய்ச்சி பிரிவில் பெருக்கம் செய்து விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற விதைகள் அவவை படிப்படியாக அதிகரித்து தொடர்ந்து மாதிரிக் கூடங்களைப் பெற்றுக் கொடுத்தல் இடம்பெற்றது. அவ்வாறு பெருக்கம் செய்யப்பட்ட விதைகளைப் பயன்படுத்தி கருத்திட்டத்தின் அதிகார பிரதேசங்கள் 3 பங்கேற்பு விவசாய ஆராய்ச்சி கூடங்கள் (Farm Fild Fora) தாபிக்கப்பட்டு காலநிலை மாற்றத்தை வெற்றி கொள்வதற்கு மற்றும் விவசாயிகள் விருப்பம் காட்டுகின்ற பயிர் வகைகள் தெரிவு செய்யப்பட்டது.

- உயிரியல் பல்வகைமை சந்தையை நடாத்தல் (Bio diversity Fair)

- கிரிபாவ கம்பளை மற்றும் வன்னிக்குடாவெவா விவசாயிகள் 88 பேரின் பங்குபற்றலுடன் கிரிபாவ கம்பளை கனிஷ்ட வித்யாலயத்தில் நடத்தப்பட்ட உயிரியல் பல்வகைமை சந்தை மூலம் பாரம்பரி பயிர் வகைகளை இனங்கண்டு கொள்ளல் பிரதானமாக மேற்கொள்ளப்பட்டது. இங்கு உயிரியல் பல்வகைமையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி வகையும் அவற்றுடன் உரிய பாரம்பரிய அறிவு இந்த சந்தைக்கு விவசாயிகள் எடுத்து வந்ததோடு அவற்றை காட்சிப்படுத்தல் மற்றும் பரிமாற்றம் செய்தல் என்பன மேற்கொள்ளப்பட்டது. இங்கு உயர் பல்வகைமையை முன்வைத்த சிறந்த விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்பட்டது.

- சமூக அடிப்படை உயிரியல் பல்வகைமை ஆவணம் தயாரித்தல் **(**Community Biodiversity Registers**)**

- பிரதேசத்தில் காணப்படுகின்ற உயிரியல் பலவகைமை மற்றும் அதற்கு உரிய பாரம்பரிய அறிவை இனங்கண்டு அதனை ஆவணப்படுத்தும் எதிர்பார்ப்பில் தயாரிக்கப்படும் மக்கள் அடிப்படையிலான உயிரியல் பல்வகைமை ஆவணங்கள் 03 வீதம் ஒரு கருத்திட்ட அதிகார

பிரதேசத்திற்காக தயார் செய்யப்பட்டது. ஒரு ஆவணத்தை பயிர் செய்கைக்காவும், மேலும் ஓர் ஆவணத்தை மருந்து மூலிகைக் கன்றுகளுக்காவும் ஏனைய ஆவணம் கால்நடை வளர்ப்பிற்காகவும் தயாரிக்கப்பட்டுள்ளது.

- மண் மற்றும் நீர் பாதுகாப்பு உபாயங்கள் அறிமுகம்

கம்பளை மில்லெனிய மற்றும் உடுகும்புர கருத்திட்ட அதிகார பிரதேசத்திற்காக மண் மற்றும் நீர் பாதுகாப்பு முறைகள் மண் தளம், கல் தளம், கான் முறை, கிலிரிசீடியா தடைகள் அணை, தனி அரங்கு மற்றும் நீர் ஈர்ப்பு கட்டமைப்பு என்பன 13 விவசாய நிலங்களில் தாபிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக மண் உயிரியற் பல்வகைமையை மேம்படுத்தல் தொடர்பாக கூட்டுப்பசளை உற்பத்தி மற்றும் பாவனை தொடர்பாக விவாயிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

• மகரந்த காவுகை, பூச்சிகொல்லிகள் போன்ற இயற்கை விரோதிகளை இனங்காணல் மற்றும் அவைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் காரணிகள் தொடர்பாக ஆராய்ச்சி செய்தல்

சுற்றாடல் முறைமை மற்றும் சேவைகளை இனங்காண்பதற்கு மற்றும் மேம்படுத்தலை குறிக்கோளாகக் கொண்டு கன்னோருவ HORDI நிறுவனத்தினால் பின்வரும் கீழ்வரும் அடையிலக்குகள் உட்டப்பட்டுள்ளன.

- ஆய்வு மூலம் ஒவ்வொரு பிரதேசம் தொடர்பாக மகரந்தக் காவுகை மற்றும் அவை விருப்பம் காட்டும் பயிர் வகைகளை இனங்காணல். உதா: Apidae (honeybees), Megachilidae (pollen bees), Halictidae)
- மகரந்தக் காவுகை தொடர்பாக மேற்கொள்ளப்பட ஆராய்ச்சிகளை உள்ளடக்கியதாக பெற்றுக் கொண்ட அறிவு மற்றும் தகவல்களை பயிற்சி அலுவல்களுக்கு பயன்படுத்தல் தொடர்பாக HORDI நிறுவனத்தில் கண்காட்சி அறையொன்றை கட்டி நிறைவு செய்தல், 6 சுவரொட்டிகளை தயாரித்து அச்சிடல்.
- மகரந்தக் காவுகைகளாக தேனீக்களை பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக 4 பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் கருத்திட்ட அதிகார பிரதேசமொன்றுக்கு தேனீப் பெட்டிகள் 10 வீதம் வழங்குதல்.
- 6 சுவரொட்டிகளை தயாரித்து அச்சிடல்.
- கருத்திட்ட அதிகார பிரதேசப் பிரிவுகளில் உள்ள மகரந்தக் காவுகை, பூச்சிகொல்லிகள், உள்ளிட்ட இயற்கை விரோதிகளின அடர்த்தி தொடர்பாக வலுவிலுள்ள காலநிலைக் காரணிகளை அறிந்து கொள்வதற்காக ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல்.

- **மக்கள் அடிப்படையிலான விதை வங்கி ஒன்றைத் தாபித்தல்**

பாரம்பரிய பயிர் வகைகள் பேணிக்காப்பு மற்றும் பரப்புவதற்குத் தேவையான விதை வகைகளை பிரதேசத்தினுள் பாதுகாத்துக் கொள்ளும் எதிர்பார்ப்பில் மக்கள் அடிப்படையிலான விதைசார் வங்கி ஒவ்வொரு அதிகார பிரதேசத்திற்கும் பெற்றுக் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மக்கள் அடிப்படையிலான விதை வங்கி ஒன்றின் கீழ் உள்ளக விதை வங்கி 5 - 10 வரை தாபித்து வெளிக்கள மட்டத்தில் விதைகளை பெருக்கம் செய்தல் மற்றும் மக்களிடம் பாரம்பரிய விதை மரிமாற்றத்தை பலப்படுத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய கம்பொளை கருத்திட்ட அதிகார பிரதேசத்தில் 6 உள்ளக விதை வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன.

- உயிரியல் பல்வகைமையை அடிப்படையாகக் கொண்ட விளைபொருடகளை அறிமுகம் செய்தல் மற்றும் தொழில் மேம்பாடு
- மருந்து மூலிகைக்கன்றுகள் விநியோகம்
- உயிர் பல்வகைமை வீட்டுத் தோட்ட எண்ணக்கரு அறிமுகம்

தோட்டங்களில் காணப்படுகின்ற உயிரியல் பல்வகைமை மேம்படுத்தும் எதிர்பார்ப்பில் உயிரியல் பல்வகைமை எண்ணக்கரு கம்பொளை ஹமமில்லலெனிய கருத்திட்ட அதிகார பிரதேசத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. இதன் கீழ் கம்பளை கருத்திட்ட அதிகார பிரதேசத்தில் 107 வீட்டுத்தோட்டங்களும், மில்லெனிய கருத்திட்ட அதிகார பிரதேசத்தில். 103 வீட்டுத் தொட்டங்களும் அமைக்கப்பட்டுள்ளன. கம்பளை கருத்திட்ட அதிகார பிரதேசத்தினுள் பராமரிக்கப்படுகின்ற வீட்டுத் தோட்டங்களில் இருந்து சிறந்த 6 வீட்டுத்தோட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்பட்டது.

- வெளிக்கள மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் கருத்திட்ட அதிகார பிரதேசத்திலுள்ள மக்களை அறிவூட்டல் செய்வதற்காக 2 செய்திப் பத்திரிகைகள்(News Letters) வழங்கப்பட்டுள்ளது.

மினமாடா உடன்படிக்கைக்குரிய மதிப்பீடு

மினமாடா உடன்படிக்கையின் கீழ் இரசம் பற்றிய அடிப்படை மதிப்பீட்டு அறிக்கை தொடர்பான கருத்திட்டம்

இரசம் சுவாச பாதிப்பை ஏற்படுத்துவதோடு இக்கருத்திட்டம் மூலம் சுகாதார, தொழிநுட்ப மற்றும் கல்வித் துறைகளில் இரசத்தின் உபயேகம் தொடர்பாக நாடளாவிய ஆய்வொன்றின் மூலம் அடிப்படை மதிப்பீட்டு அறிக்கையொன்றை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் பின்வரும் துறைகளுக்கான இன்வென்றியொன்று(பொருட் பதிவேடு) தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவு நாட்டினுள் இரசம் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளப்படுவதோடு கல்வித் துறையில் இரசம் உபயேகிக்கப்படுவதை குறைந்த மட்டத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதோடு. சுகாதாரப் பிரிவு இரசம் பயன்படுத்துவதிலிருந்து விடுபட்டு வருகின்றது.

இரசம் தொடர்பான ஆரம்ப மதிப்பீட்டு அறிக்கை பற்றிய செயற்பாட்டுக்குழு மூலம் இலங்கையின் இரசம் முகாமைத்துவப் பணிகளின் முன்னேற்றம், மீளாய்வு செய்யப்படுகின்றது.

மினமாடா உடன்படிக்கை மற்றும் இரசம் முகாமைத்துவம் தொடர்பாக மாணவர்கள் அறிவூட்டப்பட்டனர். - காலி மற்றும் கொழும்பு மாவட்டங்களில் 02 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

தங்கப் பொருட்கள் உற்பத்தி செய்யும் சிறிய அளவிலான வியாபாரிகள் பற்றிய ஆய்வொன்றைச் செய்வதற்காக இரத்திணக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட்டு கணக்கெடுப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பு சிறிய அளவிலான தங்கப் பொருட்கள் உற்பத்தியாளர்களின் இரச உபயேகம் பற்றிய விடயங்களை தேடிக் கொள்வதற்கு உதவுவதோடு அதன் மூலம் இரசம் சார்பாக மாற்றீடொன்றை அறிமுகம் செய்து அவர்களின் சுகாதாரம் மற்றும் சூழலைப் பாதுகாப்பதற்கு உதவியாக அமையும்.



சுகாதாரம் மற்றும் சூழல் கொள்கைக்கான வாயு நிலைமை மதிப்பீடு தொடர்பான கருத்திட்டம்

வளி/வாயு மாசடைதல் மனித சுகாதாரம் தொடர்பில் தாக்கம் செலுத்தும் முறை தொடர்பாக ஆராய்ந்து கொள்கைகளை வகுப்பதன் மூலம் வாயு மாசுப் பொருட்கள் சுற்றாடலுக்கு வெளிவிடப்படுவதை கட்டுப்படுத்தி சுகாதார வகையில் இருக்கும் ஆபத்தைக் குறைத்துக் கொள்வதற்கான வாய்ப்பு உண்டு. எனவே வாயு வள முகாமைத்துவப் பிரிவின் மூலம் ஐக்கிய நாடுகள் சுற்றாடல் (UNEP) நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய குறித்த கருத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் கீழ் துறை சார்ந்த நிபுணத்துவ ஆலோசகர்கள் மூலம் சுற்றாடல் வாயு நிலைமைகளினால் மனித சுகாதாரம் பாதிக்கக்கூடிய முறை பற்றிய முழுமையான அறிக்கை, அதற்கான கொள்கை மற்றும் திட்டம் பற்றிய மீள்நோக்கு அறிக்கையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த அறிவியல் சான்றை அடிப்படையாகக் கொண்டு வாயு மாசடைதல் மூலம் ஏற்படக் கூடிய சுகாதார ஆபத்தை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகளை தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது வாயு வளங்கள் பிரிவினால் உரிய ஆலோசகர்களை ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு இதற்காக ஆரம்ப கலந்துரையாடலொன்றும் நடாத்தப்பட்டுள்ளது. கருத்திட்டத்திற்குரிய அடிப்படை அறிக்கை (inception report) தற்போது ஆலோசகர்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

2. அமைச்சு மற்றும் ஐக்கிய நாடுகளின் இணை நிறுவனங்களின் ஒன்றிணைந்த கருத்திட்டங்கள்

I. காலநிலை மாற்றங்களுக்கு பழக்கப்படுத்துவதற்கான இணைந்த நீர்முகாமைத்துவக் கருத்திட்டம்

II. மகாவலி ஆற்றங்கரை சார்ந்த கமத்தொழில்சார் சமூகத்தவர்களை காலநிலை மாற்றங்களின் பாதகமான தாக்கங்கள் ஆகியவற்றுக்கு இசைவாகப்படுத்தும் கருத்திட்டம்

III.சுற்றாடல் உணர்திறனமிக்க நிலப் பிரதேசங்களில் உயிரியல் பல்வகைமை பாதுகாப்பை மேம்படுத்தல் மற்றும் சுற்றாடல் முறைமை சேவைப் பராமரிப்பு கருத்திட்டம்

IV.மத்திய மலை நாட்டின் அரிப்புக்குற்பட்ட விவசாயக் காணிகளை புனரமைக்கும் கருத்திட்டம்

V.பொலிக்லோரனேடட் பயிபினயில் அடங்கிய உபகரணங்கள் சுற்றாடல் நட்புறவான விதத்தில் முகாமைத்துவம் மற்றும் வெளியேற்றல் கருத்திட்டம்

VI.இலங்கையில் மூன்றாம் தேசிய காலநிலை மாற்றங்கள் தொடர்பாடல் அறிக்கை தயாரித்தல் கருத்திட்டம் **(SLTNC)**



காலநிலை மாற்றங்களுக்கு பழக்கப்படுத்துவதற்கான இணைந்த நீர் முகாமைத்துவக் கருத்திட்டம்

உலர் வலய கிராமிய குளங்கள் முறைமை புனரமைப்பு மற்றும் உலர்வலயத்தின் 03 ஆற்றங்கரைகளுக்கு அண்மையில் கமத்தொழில் சார் நடவடிக்கைகளை காலநிலை மாற்றங்களுக்கு தாக்குப்பிடிக்கும் விதத்தில் அபிவிருத்திசெய்தல்

- மொத்த கருத்திட்டக் காலத்திற்குள் மறுசீரமைப்பதற்கு எல்லங்கா முறைமையை அடையாளம் காணுதல்
- எல்லங்கா முறைமை மட்டத்தில் நீர்முகாமைத்துவ திட்டத்தை தயாரிப்பதற்கு தொழில்நுட்ப அறிவுறுத்தல் கோப்பை தயாரிக்க் ஆரம்பித்தல்
- அனுராதபுரம் மாவட்டத்தில் 42 குளங்கள் மற்றும் வவுனியா மாவட்டத்தில் 14 குளங்களை புனரமைப்புச் செய்தல்
- 2019 ஆண்டில் புனரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அனுராதபுரம், வவுனியா, குருணாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களின் 81 குளங்களின் அளவை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அதற்கு உரிய திட்டத்தைத் தயாரித்தல்
- புனரமைப்புச் செய்யப்பட்ட குளங்களில் மரம் நடல் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்.
- குருணாகல், புத்தளம், அனுராதபுரம், வவுனியா, திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் காலநிலை சுஹுரு விவசாயம் பற்றி சகல கமத்தொழிற் திணைக்களத் உத்தியோகத்தர்களையும் அறிவூட்டுதல் மற்றும் பயிற்சிகளை நடாத்த ஆரம்பித்தல் (பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 15)
- மேற்படி 5 மாவட்டங்களில் விவசாய் திணைக்களத்துடன் எதிர்கால கருத்திட்டங்களில் கடமையாற்றுவதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுதல் 2018/2019 மத்திய போகத்தில் விவசாய நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல் (சுற்றாடல் நட்பு 700 வீட்டுத் தோட்டங்களுக்காக வாணிக பழக்கன்றுகள் - 351000, கால்நடை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கோழிப் பண்ணை , கால்நடை தொழுவங்கள், புல் பயிர் உற்பத்தி- அலகுகள் - 107, விதை நெல் பயிரிடலுக்கான வசதிகள் வழங்குதல் - 250 ஏக்கர்)
    - சிவில் சமூக அமைப்புக்கள் 04 மற்றும் உரிய தொழில்நுட்ப நிபுணர்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டு கருத்திட்ட நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்

புனரமைக்க முன்னர்

புனரமைத்த பின்னர்

கட்டுபொத்தவெ – புனரமைக்க முன்னர் மற்றும் பின்னர் -பண்டார கும்புக்வெவ எல்லங்கா முறைமை – அநுராதபுர மாவட்டம்.

ஆபத்துக்குட்பட்டுள்ள மக்களுக்கு பாதுகாப்பான குடி நீர் வழங்குவதற்காக பன்முகப்படுத்தப்பட்ட நீர் வழங்கல் மற்றும் நீர் முகாமைத்துவ தீர்வுகளைக் மேம்படுத்தல்

• எதிர்கால கருத்திட்டத்தில் கடமையாற்றுவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையுடன் மற்றும் தேசிய நீர் வழங்கல் திணைக்களத்துடன் 2 அடிப்படை புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டது

• குருணாகல், புத்தளம், வவுனியா, அனுராதபுரம் ஆகிய 4 மாவட்டங்கள் உள்ளடக்கும் வகையில் கிராமிய மக்கள் நீர் வழங்கல் முறைமைகள் 11 தாபிப்பதற்குப் பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அவற்றின் சாத்தியப்பாட்டு

ஆய்வு கணிசமானளவு நிறைவு செய்யப்பட்டுள்ளது. இவற்றை ஆரம்பிப்பதற்கு பொருத்தமான நீர் தோற்றுவாய்களை தெரிவு செய்வதற்காக கிணறுகளைத் தோண்டுதல், இதற்காக பொருத்தமான காணிகளுக்கான ஆனமதியைப் பெற்றுக்கொள்ளல், உரிய நீரின் அளவு மற்றும் தரப் பரிசீலனை, இந்த நீர் வழங்கலை மேற்கொள்வதற்கு சனசமூக அமைப்புக்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேறகொள்ளப்பட்டு வருகின்றன. இவைகளை அளந்து உரிய திட்டத்தைத் தயாரிக்க ஆலோசனைக் குழுவொன்று ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.

• இலங்கையின் பல்வேறு தொழிநுட்ப நிறுவனங்களை ஒன்றிணைத்துக் கொண்டு உலக நீர் தினத்தில் கண்காட்சியொன்றை நடாத்துவதல் மூலம், இலங்கையில் பல்வகையான நீரை சுத்தம் செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்ற தொழிநுட்ப முறைகளை இனங்காணல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

• உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய 24 நீர் சுத்திகரிப்பு முறைமைகள் (கிராமிய விநியோக முறைமைக்காக – பாரிய வடிகட்டல் முறைமை 15 மற்றும் கிராமிய வைத்தியசாலைகள் மற்றும் பாடசாலைகளுக்காக சிறிய அளவிலான வடிகட்டல் முறைமை 09) ஆரம்பிப்பதற்கு இடங்களைத் தெரிவு செய்தல், பொருத்தமான தொழில்நுட்ப முறைமையை தீர்மானித்தலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவைகளை அளந்து உரிய திட்டத்தை தயாரிக்க மதியுரைக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது.

• மழை நீர் தாங்கிகள் தொடர்பான மக்களின் மனநிலையை அறிதல் மற்றும் அவர்களுக்கு தேவையான மழை நீர் தாங்கிகளின் தன்மையை முடிவு செய்வதற்கும் மழைநீர் அமைப்புடன் இணைந்து ஆய்வு மேற்கொள்ளல் மற்றும் அதன் பின்னர் ஆய்விலிருந்து இந்த மழை நீர் தாங்கிகளின் தேவைப்பாடுள்ள பயனாளிகளைத் தெரிவு செய்தல் மற்றும் குருநாகல், புத்தளம், வவுனியா, அனுராதபுரம் ஆகிய 04 மாவட்டங்கள் உள்ளடக்கும் வகையில் 545 மழை நீர் சேகரிப்பு தாங்கிகளைத் தாபித்தல்.
•சிவில் சமூக அமைப்புக்கள் 04 மற்றும் உரிய தொழில்நுட்ப நிபுணர்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டு கருத்திட்ட நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்

குடிநீர் விநியோக முறைமையைத் தாபிப்பதற்குள்ள சாத்தியப்பாட்டை பரீட்சித்தல்

மழைநீர் தாங்கி வழங்கல்

காலநிலை,நீர்அறிவியல் கண்காணிப்பு மற்றும் கணிப்பீட்டு முறைமையை மேம்படுத்தல் மூலம் சிறு காணி உரித்துடைய விவசாயிகளின் வரட்சி மற்றும் வெள்ளம் எதிரில் பழக்கப்படுத் தல் கொள்திறனை அதிகரித்தல்

- கருத்திட்ட அதிகார பிரதேசத்தினுள் தற்போது நிலவும் காலநிலை கண்காணிப்பு நிலையங்கள் வலையமைப்பை நிலவரைபடமாக்கல் செய்தல் மூலம் தற்போது காலநிலை கண்காணிப்பு நிலையங்கள் குறைந்த இடங்களைத் தேடிப் பார்த்தல்
- காலநிலை எதிர்வு கூறல் எண்ரீதியான முறைமை மூலம் காநிலை எதிர்வு கூறல் ˙ தொழில்நுட்பம் தொடர்பாக காலநிலை திணைக்கள

அலுவலரொருவருக்கு 12 நாள் வெளிநாட்டுப் பயிற்சியொன்றைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் காலநிலை எதிர்வு கூறல் GIS தொழிநுட்பத்தை பயன்படுத்தல் தொடர்பாக காலநிலை திணைக்களத்தின் 12 அலுவலர்களுக்கு உள்நாட்டுப் பயிற்சி வழங்குதல்.

- மாவட்டத்தில் தற்போதுள்ள காலநிலை அவதான நிலைய வலையமைப்பை அபிவிருத்தி செய்வதற்காக 05 விவசாய காலநிலை அவதானிப்பு நிலையங்கள் , 10 தன்னியக்க மழைமாணிகள்,01 GIS server ஆகியவற்றைப் பொருத்துவதற்கு பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்தல் மற்றும் அவற்றின் விவரக்கூற்றை (specifications) அடையாளம் காணல் நிறைவு செய்யப்பட்டு இவற்றை வழங்குவதற்காக உரிய ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுள்ளது.
- நீர் முகாமைத்துவம் மற்றும் வெள்ளநீர்முகாமைத்துவத்திற்கு பயன்படுத்திக் கொள்வதற்காக மல்வத்து ஓயா மற்றும் யான் ஓயாவில் பொருத்துவதற்காக நீர்பாசனத் திணைக்களம் 8 தன்னியக்க ஆற்று நீர் அளவு கருவிகளை கொள்வனவு செய்துள்ளது
- கருத்திட்டப் பிரதேசங்களில் விவசாய மக்கள் சேவை நிலையங்களுக்காக காலநிலை திணைக்களத்தினால் பத்து நாட்கள் கால இடைவெளியில் எதிர்வு கூறலை ஆரம்பித்தல்
- காலநிலை திணைக்களத்தின் மூலம் மட்டத்தில் மட்டம் எதிர்வு கூறல் வழங்க உதவக் கூடிய இணைய GIS Server கொள்வனவு செய்தல்
- இயற்கை வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் பெரும் போகத்திற்காக விவசாய அறிவுறுத்துரைகளை 04 மாவட்டங்களின் பங்குதாரத்தரப்புக்களுக்கு வழங்குதல்
- மல்வத்து ஓயாவில் வெள்ள நீர் முன் ஆபத்து எதிர்வுகூறல் முறைமையை மேம்படுத்துவதற்காக வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்கில் பிரிவுகள் வெள்ளநீர் ஆபத்துக்களை மதிப்பீடு செய்தல்.
- கருத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்ற எல்லங்கா முறைமை 08 கிராம அலுவலர் பிரிவுகள் 25 இல் அனர்த்தங்களுக்கு பதிலளித்தல் திட்டத்தைத் தயாரித்தல்
- சிவில் சமூக அமைப்புக்கள் 04 மற்றும் உரிய தொழில்நுட்ப நிபுணர்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டு கருத்திட்ட நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்

மகாவலி ஆற்றங்கரை சார்ந்த கமத்தொழில்சார் சமூகத்தவர்களை காலநிலை மாற்றங்களின் பாதகமான தாக்கங்கள் ஆகியவற்றுக்கு இசைவாகப்படுத்தும் கருத்திட்டம்

காலநிலை மாற்றங்களின் அச்சுறுத்தலுக்கு இலக்கான மழைவீழ்ச்சி மாற்றங்களின் காரணமாக அதிக மழைவீழ்ச்சி மற்றும் நீண்டகால வரட்சிக்கு எதிராக பிரசைகளிக் சீவனோபாயம் மற்றும் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகும்.அதற்காக புதிய மற்றும் வரட்சிக்கு தாக்குப்பிடிக்கக் கூடிய கமத்தொழில்சார் முறை உபாயங்கள் அறிமுகப்படுத்தல் மற்றும் விவசாய மக்கள் வசிக்கும் பிரதேசங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நீர்ப்பாசன நீர் வழங்கல் வசதிகளை மேம்படுத்தல் இதன் மூலம்எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காகபழக்கப்படுத்தல் நிதியத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டதுடன் உலகஉணவுதாபனம்WFP மூலம் இதன் ஒருங்கிணைப்புநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கைஅரசாங்கத்தின் தரப்பில் மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் மூலம் மஹாவலி நதிக்கரை சார்ந்தவிவசாயக் குடியேற்றங்களின் கமத்தொழில்சார் சமூகத்தவர்கள் காலநிலை மாற்றங்களின் பாதகமான தாக்கங்களுக்கு பழக்கப்படுத்தும் கருத்திட்டப்பிரிவினால் உரியகருதிட்டத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.கருத்திட்டத்தின் பயன்களைஅதிகரிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் ஐக்கியநாடுகளின் அபிவிருத்திநிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இரண்டாம் செயற்படுத்தும் நிறுவனமானதொடர்புகொள்ளப்பட்டது.

இந்தக்கருத்திட்டம் மூலம் பொலொன்னறுவை மாவட்டத்தின் மெதிரிஹிரிய மற்றும் லங்காபுற ஆகிய பிரதேசசெயலாளர் பிரிவுகளிலும்,நுவரெலியா மாவட்டத்தில் வலபனை பிரிவும் உள்ளடக்கும் வகையில் கருத்திட்டம் தயாரிக்கபடுவதோடுபிரதேசசெயலகப் பிரிவுகளின்கமநலசேவைகள் நிலையங்கள் ஊடாக கமநலஅமைப்புகளை அடிப்படையாகக் கொண்டு நன்மைகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.மெதிரிஹிரிய பிரதேச செயலாளர் பிரிவில் மெதிரிஹிரிய மற்றும் அம்பகஸ்வெவ கமநலசேவைகள் நிலையங்களில் 52 கமநலஅமைப்புகளின் மற்றும் லங்காபுற பிரதேச செயலாளர்பிரிவில் புலதிசிகிராமம் மற்றும் கல்அமுன கமநலசேவைகள் நிலையங்களின் கமநல18 அமைப்புகள் உள்ளிட்ட பொலொன்னறுவை மாவட்டத்தில் 70 மொத்த கமநலசேவை அமைப்புகளின் மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் வலபனை பிரதேச செயலகம் பிரிவில் தெரிபஹ,ரூபஹ,முன்வத்தை,நில்லன்தாஹின்ன மற்றும் வலபனை விவசாயமக்கள் சேவை நிலையங்களின் மொத்த கமநல அமைப்புகள்113 என்ற வகையில் மொத்த கமநலஅமைப்புகள்183 உள்ளடக்கப்படும்

2018 காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள;

பிரதானமாக அடிப்படையில் இரண்டு மூலப்பிரமாணங்களின் ஊடாக கருத்திட்டம் மேற்கொள்ளப்படுவதோடு அந்தந்த மூலப்பிரமாணங்களின் கடந்த ஆண்டுக்கான முன்னேற்றம் பின்வருமாறு. கருத்திட்டம் மூலம் 2018.01.01முதல் 2018.12.31 ஆம் திகதி வரையான ஆண்டினுள் விவசாய கிணறுகள், விவசாயபாதை நிருமாணம் மற்றும் நீர்ப்பாசன நீர்வழங்கல் கருத்திட்டம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளைமேம்படுத்தல் 76 உப கருத்திட்டங்கள் 79.07மில்லியன் ரூபா ஒதுக்கீட்டின் கீழ் இக்கருத்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்டன

இல	உப கருத்திட்டம்	உப கருத்திட்டஎண்ணிக்கை	செலவிடப்பட்டதொகை (ரூ.மில்)	பயனாளிகளின் எண்ணிக்கை
1	நீர்பானசகருத்திட்டம்	8	10.53	3421
2	விவசாயவீதி	15	19.07	6048
3	சிறியகுளம்	11	11.45	2640
4	குடிநீர் கருத்திட்டம்	3	3	137
5	விவசாயக் கிணறு	34	6.8	352
6	மண் பாதுகாப்புகருத்திட்டம்	1	1	221
7	விவசாயவனப்பயிர்	1	2	330
8	மழைநீர் சேகரிப்பு	2	2	26
9	மின்வேலி	1	1	582
மொத்தம்		**76**	**56.55**	**13,757**

மனைசார் உணவுப் பாதுகாப்பை விருத்தி செய்தல் மற்றும் மழை நீரினால் பயிரிடும் விவசாய குடும்பங்களுக்கு நெகிழ்வான சீவனோபாயத்தை மேம்படுத்தலின் கீழ் களான் பயிர்கருத்திட்டம்,பால் பசு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பான வீடு நிருமாணம் உள்ளிட்ட பழக்கப்படுத்தும் வாழ்வாதாரம் அடங்கிய 72 உப கருத்திட்டங்கள் 40.1 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட உப கருத்திட்டங்கள்

இல	உப கருத்திட்டம்	உப கருத்திட்டஎண்ணிக்கை	செலவிடப்பட்டதொகை (ரூ.மில்)	பயனாளிகளின் எண்ணிக்கை
1	பாதுகாப்புவீட்டுநிருமாணம்	7	3.84	200
2	விவசாயஅபிவிருத்திகருத்திட்டம்	2	11.6	854
3	கால் நடைஉற்பத்திகருத்திட்டம்	1	2.27	158
4	இயந்திரம்,உபகரணம் வழங்கல	2	3	78
5	பின் அறுவடைதொழிநுட்பம்	5	5.61	9119
மொத்தம்			**26.32**	**10,409**

காலநிலை மாற்றங்களின் தாக்கங்கள் மூலமான மழைவீழ்ச்சி மாற்றங்கள் தொடர்பாக ஆபத்தைக் குறைத்துக் கொள்வதற்காக கிராமிய,உள்நாட்டு மற்றும் பிரதேசமட்டத்தில் சேவைவழங்கும் நிறுவன இயலளவை மேம்படுத்தும் நிகழ்ச்சதிதட்டம்,பூமி வரைபடங்கள் தயாரித்தல் மற்றும் அனர்த்தமுன் அறிவிப்புச் முறைமை ஏற்படுத்தல் உள்ளிட்ட பின்வரும் 12 உப கருத்திட்டங்கள் 8.5மில்லியன் ரூபாசெலவில் நிர்மாணிக்கப்பட்டது.

இல	உப கருத்திட்டம்	உப கருத்திட்டஎண்ணிக்கை	செலவிடப்பட்டதாகை (ரூ.மில்)	பயனாளிகளின் எண்ணிக்கை
1	இடர் முன்னறிவிப்பு முறைமை	1	5.78	வலப்பனை பி .செ. பிரிவு
2	இயலளவை மேம்படுத்தல் கருத்திட்டம்	4	3.39	2500
3	புவி வரைபடம் தயாரித்தல்	1	0.43	வலப்பனை பி .செ. பிரிவு
4	வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்	6	15.89	60
மொத்தம்		**12**	**25.49**	**2,560** மற்றும் வலப்பனை பி .செ. பிரிவு

2018 ஆம ஆண்டினுள் மகாவலி ஆற்றங்கரையை அண்மித்த குடியேற்றங்களின் மக்களுக்கு கால நிலை மாற்றங்களால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு இசைவாக்கம அடையச் செய்யும் கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட மொத்த உப கருத்திட்டங்களின் எண்ணிக்கை 113 ஆகும் நருவாகச் செலவு உள்ளடங்கலாக கருத்திட்டத்திற்கான வருடத்தின் மொத்தச் சலவு 127.89 மில்லியன் ரூபாவாகும்.

புதிய மரக்கறி விற்பனை நிலையம் (வலப்பனை)

சுற்றாடல் உணர்திறனமிக்க நிலப் பிரதேசங்களில் உயிரியல் பல்வகைமை பாதுகாப்பை மேம்படுத்தல் மற்றும் சுற்றாடல் முறைமை சேவைப் பராமரிப்பு (நுளுயு) கருத்திட்டம்

மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுஐந்து வருட திட்டமொன்றின் கீழ் நடைமுறைப்படுத்துகின்ற சுற்றாடல் உணர்திறன்மிக்க நிலப் பிரதேசங்களில் உயிரியல் பல்வகைமை பாதுகாப்பை மேம்படுத்தல் மற்றும் சுற்றாடல் முறைமை சேவைப் பராமரிப்பு கருத்திட்டத்திற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (UNDP) உதவி கிடைக்கப்படுவதோடு, உலக சுற்றாடல் வசதிகள் (GEF) மூலம் நிதியுதவி வழங்கப்படுகின்றது. உயிரியல் பல்வகைமைக்கு ஏற்படுகின்ற அச்சுருத்தல்களைகுறைத்துக் கொள்ளும் பொருட்டு,உயர் பாதுகாப்பு முக்கியத்துவம் கொண்ட சுற்றாடல் உணர்திறன்மிக்க நிலப்பிரதேசங்களை மையமாகக் கொண்டு பாதகாக்கப்பட்ட பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களுக்குபுறம்பாக வெளியேயுள்ள சுற்றாடல் முறைமை சேவைகள் மற்றும் உயிரியல் பல்வகைமை அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுச்சூழல் உணர்திறன்மிக்க வலயங்களை இனங்கண்டு உயிரியல் பல்வகைமை பாதுகாப்பு மற்றும் நிலைத்திருக்கத்தகு அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட காணி பயன்பாட்டுத் திட்டமாதிரியொன்றின் மூலம் சுற்றாடல் முறைமை முகாமை அபிவிருத்தியுடன் இசைவுறச் செய்தல்இந்த கருத்திடடத்திச் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தக் கருத்திட்டத்தை மேற்கொள்ளும்போது வனப் பாதுகாப்புத் திணைக்களம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், காணி பயன்பாட்டுமற்றும் கொள்கைத்திட்டமிடல் திணைக்களம், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், கமத்தொழிற் திணைக்களம்,நீர்பாசனத் திணைக்களம்,இலங்கை மஹாவலி அதிகார சபை,மத்தியசுற்றாடல் அதிகார சபை, உயிரியல் பல்வகைமை செயலாளர் காரியாலயம் ஆகிய அரசநிறுவனங்கள் பங்குத்தரப்பினர்களாக செயற்படுகின்றன.

அதன் மூலம் அரச,அரசசார்பற்ற தனியார் பிரிவு மற்றும் சமூகத்தை வலுப்படுத்தி சுற்றாடல் உணர்திறனமிக்க பிரதேச முகாமைத்துவத்தின் பங்குதாரர்களாக அவர்களை ஆக்குவதோடு, பாதுகாக்கப்பட்ட பிரதேசம் மற்றும் சுற்றாடல் உணர்திறன்மிக்க பிரதேசங்களில் வளமான சமூக-பொருளாதார அபிவிருத்தி நன்மைகளைஅடைந்து கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படும். சுற்றாடல் முறைமை சேவைகள் மற்றும் உயிரியல் பல்வகைமை பற்றிய தரவுகள் உள்ளடக்கப்பட்ட புவிக்காட்சிகள் மற்றும் கடல்காமட்சிகளை அடிப்படையாகக் கொண்ட காணி பயன்பாட்டுத்திட்டத்தைதயார் செய்தலும்,அதன் அடிப்படையில் கமத்தொழில், கடற்றொழில்,சுற்றுலா போன்ற பிரிவின் ஊடாக துறைசார் திட்டங்களை மேற்கொள்ளல் உள்ளிட்ட செயற்பாடுகள்பல இதனூடாக மேற்கொள்ளப்படுகின்றன.



அதன்படி சூழல் முறைமை முகாமைத்துவத்துடன் அபிவிருத்தியை இசைவாக்கம்செய்தல் மூலம் இலங்கையில் நீண்ட காலமாக வளமான அபிவிருத்தி உறுதி செய்து கொள்வதற்கு இந்த கருத்திட்டம்ஊடாக அடிப்படையொன்று கிடைக்கும்அவ்வாறே இந்த கருத்திட்டத்தின் அனுபவங்களைப் இலங்கையில் ஏனைய சுற்றாடல் உணர்தகு வலயங்களுக்கும் எதிர்காலத்தில் விஸதரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

பெறுபேறு 1: சுற்றாடல் உணர்தகு பிரதேசங்களைமுகாமைத்துவம் செய்வதற்காக நிறுவன ரீதியான மற்றும் சட்டரீதியான சட்டகமொன்றைஏற்படுத்தல் மற்றும் வழிகாட்டல்களைத் தயாரித்தல்

பெறுபேறு 2: கலா ஓயா கரையோரத்தில்சுற்றாடல் உணர்தகு வலயங்களில் உயிரியல் பல்வகைமையை பாதுக்காத்தல

2018 இல் இந்தக் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான மனேவகந்த உத்தேச ஒதுக்கிற்கான சூழலியல் திட்டம் தயார் செய்யப்பட்டது. அத்திட்டத்தின்படி மானேவகந்த, சுற்றாடல் பூங்காவாகஅபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இக்கருத்திட்டதின் கீழ் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன

மானேவகந்த சுற்றாடல் பூங்கவில் அமைக்கப்பட்டுள்ள சுற்றாடல் முகாம்

பளிங்குப்பாறை கடல் சரணாலய முகாமைத்துவத் திட்டமொன்றைத் தயாரிதல், கற்பிட்டி பளிங்குப்பாறையின் தற்போதைய நிலைமை தொடர்பாக ஆராய்ந்து அதற்கமைய பளிங்குப்பாறையில் பாதிப்புக்கு உட்பட்டுள்ள வலங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன

கற்பிட்டி பளிங்குப்பாறையில் இனங்காணப்பட்ட ஆபத்துக்கு உட்பட்ட வலயத்தினுள் மிதவைகளை அமைத்தல் மற்றும் கடல் சரணாலயத்திற்காக தயாரிக்கப்பட்ட முகாமைத்துவ திட்டம்.

- அநுராதபும் ஈபொலன்னறுவை விவசாயக் குடியேற்றங்களில் உயிரியல் பல்வைமை பாதுகாப்புக்காக வழிகாட்டுநெறிகள் 12 தயாரிக்கப்பட்டுள்ளன. அது தொடர்பாக திணைக்கள அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் சுற்றாடல் விவசாய மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தல்..

தடிங்கல்ல(இபலோகம) மற்றும் நெல்லியாகம (கெகிராவ) -12ha விவசாயிகளின் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டத்தை மெற்கொள்ளல்.

- இலங்கையில் காட்டு யானைகள் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொளள்கைமீளாய்வு செய்தல் நிறைவு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அமைச்சரவைஅனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக நிலையான அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திஅபிவிருத்தி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஏனைய வன உயிரினமுகாமைத்துவம் தொடர்பான மூலோபாய சட்டகம் தயாரிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

- உயிரியல் பல்வகைமை அடிப்படைக் கணக்கெடுப்புச் செய்து கலாஓயா ஆற்றுப்பள்ளத்தாக்கிற்கான உயிரியல் பல்வகைமை இணைந்த காணிப்பயன்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டள்ளது.





உயிரியல் பல்வகைமை இணைந்த காணிப்பயன்பாட்டு திட்டம் தயாரித்தல் மற்றும் தயாரிக்கப்பட்ட பயிற்சி கைநூல் மற்றும் வழிகாட்டுநெறி



கலா ஓயா ஆற்றுப்பள்ளத்தாக்கில் இனங்காணப்பட்ட உணர்திறன்மிக்க 10 வலயங்கள்

- கலாவெவ கரையோரத்தில் இனங்காணப்பட்ட உயிரியல் பல்வகைமை பாதுகாப்பு வலயத்திற்கு அப்பால் 08 வன ஒதுக்குகளுக்கான முகாமைத்துவத்திட்டம் தயாரித்தல். (ரிடிகல,குடாகந்த,காலாவெவ,நிதிகம,கடியன்கல்ல,நெல்லியாகம,கட்டுபொத,கஹல்லபல்பேகலஆ கிய வனங்களின்) எல்லைகளை அடையாளமிடல் .

கலாவெவ குளக்கரைப் பள்ளத்தாக்குப் பகுதியில் இனங்காணப்பட்ட உயிரியல் பல்வகைமை கொண்ட வனப்பகுதிகுளை எல்லைக்கல் நாட்டி அடையாளமிடல்

- வெட்டகொழுவாகம்,குனுபிச்சியாகம,பஹல ஹபரவத்தை மற்றும் இஹல ஹபரவத்தை குள மளுசீரமைப்புப் பணிகள் 100மூ நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு குளத்தின் ஒதுக்குப்பகுதி காடு இனங்காணப்பட்டு எலல்லலையிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.இதன் நிர் போஷாக்குப் பிரதேசம் மறுசீரமைக்கப்பட்டு வருகின்றது.

ஹபரவத்தை எல்லங்கா முறைமை மறுசீரமைப்பு

- பலாகல பி.செ.பிரிவில் கஹல்ல வனப்பகுதியில் 50 ஹெக். இயற்கையாக மீள் உருவாக்கப் பணிகள் (Assisted Natural Regeneration) ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



- காட்டுயானைகள் கிராமங்களுக்குள் பிரவேசிக்கும் முன் ஆபத்து அறிவிப்பு முறைமையைத் தாபித்தல் தொடர்பாக கிராமமக்களை அறிவுறுத்தல் மற்றும் முன்னோடித்திட்டதை புத்தளம் தேவநுவர கிராமத்தை சுற்றி மேற்கொள்ளல்.

காட்டுயானைகள் கிராமங்களுக்குள் பிரவேசிக்கும் முன் ஆபத்து அறிவிப்பு முறைமையைத் தொடர்பாக கிராமமக்களை அறிவுறுத்தல்

கலா ஓயா ஆற்றுப்பள்ளத்தாக்கில் வாழுகின்ற மக்களின் சமூக தொழில் முயலுநர் விருத்திற்கான அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கருத்திட்டத்தை மேற்கொள்ளல்(மானேவகந்த பிரதேசத்தில் பொதுசன அமைப்புக்களால் மேற்கொள்ளப்படுகின்ற மருத்துவ எண்ணை பிழிதல் கருத்திட்டம்.'. பெண் தொழில் முயலுநர்களை ஊக்குவித்தல் கருத்திட்டம்

மத்திய மலைநாட்டின் அரிப்புக்குற்பட்ட விவசாயக் காணிகளை புனரமைக்கும் கருத்திட்டம்

இந்தக் கருத்திட்டம் கண்டி மாவட்டத்தில் தொலுவ மற்றும் தெல்தொட்ட ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் பதுளை மாவட்டத்தில் ஹாலிஎல., வெளிமட, ஊவபரணகம மற்றும் பண்டாரவலை பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் வல்பனை மற்றும் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்த கருத்திட்டதின் முதலாவது ஆக்கக்கூறின் கீழ் பங்கேற்பு காணிப் பயன்பாட்டு திட்டம் தயாரிப்பதற்கான் மதியுரைகளைத் தயாரிக்கப்படவுள்ளதோடு தற்போது உத்தேச வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது

நிலைத்திருக்கத்தகு நில முகாமைத்துவம் தொடர்பாக தாக்கம் செலுத்தும் கொள்கைகளில் உள்ள பிரச்சினைகள் இனம்காணப்பட்டு அதற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

நிலைத்திருக்கத்தகு நில முகாமைத்துவம் தொடர்பான மாதிரிகளைத் தயாரிப்பதற்காக தற்போது 80 விவசாயிகள் தெரிவு செய்துள்ளதுடன் 10 இடங்களின் நிருமாணப்பணிகள் தற்போது ஆரம்பிக்கபட்டுள்ளதோடு ஏனைய இடங்களின் வேலைகளை ஆரம்பிப்பதற்கு சகல நடவடிக்கைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அமைக்கப்படவுள்ள பங்கேற்பு காணி பயன்பாட்டு திட்டம் 08 இல் 08 தற்போது தயார் செய்யப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது நிலைத்திருக்கத்தகு பூமி முகாமைத்துவம் தொடர்பான பொதுமக்களின் அறிவை விருத்தி செய்வதற்காக அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் இந்தக் கருத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டுளளன. .

பணிகள்	முன்னேற்றம்
பங்களிப்பு காணிப்பயன்பாட்டுதிட்டம் தயாரித்தல் அறிவுறுத்துரைகளைத் தயாரித்தல்	வரைவு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
நிலையான நில முகாமைத்துவம் தொடர்பாக தாக்கம் செலுத்துகின்ற கொள்கைகளில் உள்ள பிரச்சினைகளை இனங்கண்டு அதற்குப் பொருத்தமான திருத்தங்களுக்கான முன்மொழிவுகளை சமர்ப்பித்தல	ஆரம்ப ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது
காணித் தகவல் முறைமையைத் தயாரித்தல்	தேவையான ஆரம்ப திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது
நிலையான நில முகாமைத்துவும் தொடர்பான பயிற்சிக் கைநூல் தயாரித்தல்	ஆரம்ப திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது
மாதிரிகளைத் தாபித்தல்	மூன்று அரச நிறுவனங்கள் 08 நீர் போஷனைப் பிரதேசங்களின் பணிகள் ஆரம்பிக்கபட்டுள்ளன
சுற்றாடல் முறைமை மதிப்பீடு	IUCN இணைந்து பூர்வாங்கள் பணிகள் ஆரும்பிக்கபட்டுள்ளன
மக்களை அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டம்	5 மேற்கொள்ளப்பட்டுள்ளன

பொலிக்லோரனேடட் பயிபினயில் அடங்கிய உபகரணங்கள் சுற்றாடல் நட்புறவான விதத்தில் முகாமைத்துவம் மற்றும் வெளியேற்றல் கருத்திட்டம்.

பொலிக்லோரனேட் பயிபினயில் அடங்கிய கழிவுப் பொருட்கள காரணமாக புற்றுநோய் மற்றும்விருத்திக் குறைபாடு போன்ற சுகாதார பல ஏற்படுகின்றன. இவ்வரசாயனம் 1980 களில் உலகம் பூராகவும் தடைசெய்யப்பட்டதோடுஇதனை இலங்கை மின்சார சபை ரான்ஸ்போமர்கள் மற்றும் வெல்டிங் ரான்ஸ்போமர்களில் காணமுடியும்.தற்போது ரான்ஸ்போமர் மூலம் PCB பரவிவருகின்றது.

இந்த கருத்திட்டத்தின் நோக்கம் மின்வலு துறை மற்றும் வேல்டிங் பிரிவின் PCB அடங்கிய எண்ணெய் மற்றும் ரான்ஸபோமர் தற்போது உள்ள அளவை இனங்கண்டு, பொருட்பதிவேட்டைத் தயாரித்து அவற்றை சுற்றுசூழல் நட்பான விதத்தில் வெளியேற்றுவதாகும்.

இதற்கான வேல்டிங் பிரிவின் இன்வென்றி தயாரித்து முடிக்கும் இறுதிக்கட்டத்தில் உள்ளதோடு ரான்ஸ்போமர் எண்ணெய் மாதிரிகள் சோதனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.. மின்சக்திப் பிரிவின் PCB ரான்ஸ்போமர் இன்வென்றியை தயாரிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ஆலோசகர் பேராசிரியர் காலோ லூபி அவர்கள் தொழிநுட்ப அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கும காட்சி

பயிற்சி பெறுவோர் எண்ணை மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல்

ரான்ஸ்போமர் லேபல்

ரான்ஸ்போமர் சேகரித்து வைப்பதற்கான இடம்- கஹதுடுவ

- உரிய குழுக்கள் மற்றும் மக்களை அறிவுறுத்துவதற்டகாக PCB தொடர்பான இணையத்தளம் மற்றும் வீடியோ தயாரிக்கப்பட்டுள்ளது.

PCB இணையத்தளம

PCB வீடியோ

பாடசாலை, பல்கலைக்கழகங்கள் மற்றும் திறன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக நீண்டகாலம் நிலைத்திருக்கக் கூடிய உயிரியல் மற்றும் விஷம் கொண்ட இரசாயனத் திரவங்கள் பற்றிய பாடநெறியொன்றைத் தயாரித்தல் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதனூடாக மேற்படி மாணவர்களிடையே இந்த இரசாயனத் திரவங்கள் பற்றிய அறிவை ஏற்படுத்துவதற்கும், அதன் உரிய பயன்பாடு, களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து மற்றும் சுற்றாடல் நட்பான வித்ததில் வெளியேற்றல் வழிமுறைகளை மேம்படுத்துவதற்கு அதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது..



இலங்கையில் முன்றாம் தேசிய காலநிலை மாற்றங்கள் தொடர்பாடல் அறிக்கை தயாரித்தல் கருத்திட்டம் (SLTNC)

இலங்கையில் மூன்றாம் தேசிய காலநிலை மாற்றங்கள் அறிக்கை தளாரித்தல் கருத்திட்டம் (TNC) 2016 மார்ச் மாதம் 18 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP) யுடன் மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு கைச்சாத்திட்டதோடு இக்கருத்திடத்தை மேற்கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. இந்தக்கருத்திட்டம் மூன்று ஆண்டுகளினுள் 2016-2018 கருத்திட்ட முகாமைத்துவ முகாமைத்துவ பிரிவினால் மேற்கொப்படும்

இந்த கருத்திட்த்தின் அடிப்படை நோக்கமாக இருப்பது ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றங்கள் பற்றிய கட்டமைப்பு உடன்படிக்கையின் (UNFCCC) இனக்கப்பாடுகளுக்கேற்ப பச்சை வீட்டு வாயு வெளிப்பாட்டைக் குறைப்பதற்கான மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு ஒத்துப போவதற்கான மூலோபாயங்களை பயனுள்ள வகையில் தயாரித்து தரப்புக்கள் வசமுள்ள தொழில்நுட்ப மற்றும் மனித வளங்களைப் பயன்படுத்திக் கொண்டு மூன்றாம் தேசிய தொடர்பாடல் அறிக்கையைத் தயாரிப்பதாகும். இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்காக உலக சுற்றாடல் வசதிகள் (Global Environment Facility) கீழ் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் உதவியுடன் 500, 000 அமேரிக்க டொலர் நிதி ஒதுக்கீடு கிடைத்துள்ளது.

முன்னேற்றம் அறிக்கையிடப்படுகின்ற கால எல்லையினுள்

- மூன்றாம் தேசிய தொடர்பாடல் அறிக்கையைத் தயாரிப்பதற்காக பொருத்தமான நிபுணர்கள் மற்றும் கல்வியியலாளர் குழு நியமனம் செய்யப்பட்டதோடு, பிரதாக ஆக்கக்கூறு இரண்டாம் செயலாற்று அறிக்கை கருத்திட்ட முகாமைத்துவ அலகிற்கு முன்வைக்கப்பட்டன.
- சுதந்திர மீளாய்வுக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டதோடு 08 முன்னேற்ற மிளாய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. அதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கள் அந்த அறிக்கையை மேலும் விருத்தி செய்வதற்காகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.
- காலநிலை மாற்ங்களுக்கு பழக்கப்படுதல் மற்றும் பச்சைவீட்டு வாயு வெளியேற்ற செயற்பாடுகள் தொடர்பாக நிபுணர் குழுவிற்கு சமர்ப்பித்து ஆலோசனைகள் பெறப்பட்டன.
- சர்வதேச மதியுரைஞரின் வளப் பங்களிப்பின் அடிப்படையில் பச்சை வீட்டு வாயு இன்வென்றி வேண்டும் தயாரித்தல் மற்றும் மூன்றாம் தேசிய தொடர்பாடல் அறிக்கை தொடர்பான ஏனைய உரிய பிரிவுகள் தொடர்பான தரப்புக்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.
- மூன்றாம் தேசிய தொடர்பாடல் அறிக்கையைத் தயாரிப்பதற்காக செயலமர்வுகள், விரிவுரைகள், அறிவூட்டும் கருவிகள் தயாரித்தல் மற்றும் தொடர்பாடல் நிகழ்ச்சிமுறை ஏற்பாடு செய்வதற்காக வழங்குநர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளது.
- தரவுகளைத் திரட்டுதல், பகுப்பாய்வு மற்றும் வரைவுப் பந்திகளைத் தயாரித்தல் என்பன நடைபெற்று வருகின்றன.

மேலும், மூன்றாம் தேசிய தொடர்பாடல் அறிக்கையின் செயற்பாடுகளை செயற்படுத்துவதற்காக, கருத்திட்டங்களை இலக்காகக் கொண்டு செயற்படுவதைத் அத்தாட்சிப்படுத்துவதற்கான கருத்திட்ட சபை நடத்தப்பட்டதோடு, கருத்திட்டம் முழுவதும் பெறுபேறும், கருத்திடத்தின் மூலோபாயம் பெறுபேற்றுச் சட்டகத்தினுள் குறிபபிடத்தக்க முன்னேற்றம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதன் அடிப்படையில், செலவுகளை பயனுள்ள மற்றும் மீள்உருவாக்க முறையினை மற்றும் கருத்திட்டத்தின் இனங்காணப்பட்ட செயற்பாடுகளுக்கு அச்சபையின் இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டது.

3. ஐக்கிய நாடுகள் இணை நிறுவனங்கள் மூலம் நேரடியாக மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டங்கள்

I. **SWITCH – Asia,** நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி தொடர்பான தேசிய கொள்கை ஆக்கக்கூறு கருத்திட்டம்

II. உயிரியல் பல்வகைமைக்குரிய 6 வது தேசிய அறிக்கை தயாரித்தல் - (2016-2018)

III. உயிரியல் பாதுகாப்புக்குத் தேவையான நிதித் தேவைப்பாடுகள் (BIOFIN)

IV. உயிரியல் பாதுகாப்பு தொடர்பான கார்டஜினா உடன்படிக்ககைக்கு உட்பட்டு தேசிய உயிரியல் பாதுகாப்பு முன்மாதிரியை செயற்படுத்தல் கருத்திட்டம்

V. தேசிய ரீதியில் பொருத்தமான பச்சசைவீட்டு வாயு வெளியேறல் கட்டுப்படுத்தல் செயற்பாடுகளைத் தயாரித்தல்

VI. காலநிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படுகின்ற ஆபத்து மதிப்பீடு மற்றும் தேசிய அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு தகவமைத்தல் செயற்பாடுகளை உள்ளடக்குவதற்கான தொழிநுட்பக் கருத்திட்டம்



ளுறுஜவுஊர் – யுளையெஇ நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி தொடர்பான தேசிய கொள்கை ஆக்கக்கூறு கருத்திட்டம்

இக்கருத்திட்டம் ஐரோப்பிய சங்கம் மூலம் சுற்றாடல் அமைச்சின் கோரிக்கைக்கிணங்க வழங்கப்பட்ட கருத்திட்டமாகும். இந்தக் கருத்திட்டத்தின் பிரதான நோக்கமாவது கொள்கை வகுப்பாளர்கள், பங்குத்தரப்பினர் மற்றும் பொதுமக்களின் நிலைபேறான பாவனை மற்றும் உற்பத்தி தொடர்பான அறிவு மற்றும் திறன் விருத்தி செய்யும் 4 வருடத்திற்கான பெரும் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படத்தும் தொழில்நுட்ப பங்களிப்புக் கருத்திட்டமாகும்.. இந்தக் கருத்திட்டம் 2015 ஜனவரி முதல் 2019 ஜனவரி மாதம் வரை ஐரோப்பா சங்கத்தின் நேரடி உதவியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

01. இலங்கையில் தேசிய கொள்கையைத் தயாரிக்கும் செயற்பாடுகளைத் தர நிர்ணயம் செய்தல்

02. தேசிய நிலைத்திருக்கத்தகு நுகர்வு மற்றும் உற்பத்தி கொள்கை வரைவைத் தயாரித்தல்

03. நிலைத்திருக்கத்தகு உற்பத்தி மற்றும் நிலைத்திருக்கத்தகு நுகர்வுக்கான தேசிய குறிகாட்டியைத் தயாரித்தல்

04. நிலைத்திருக்கத்தகு நுகர்வு மற்றும் உற்பத்தி பற்றிய கல்வி நிகழ்ச்சித் திட்டமொன்றையும் மற்றும் பல்கலைக்கழகங்களின் பயிற்சிக் கருவிகளையும் தயாரித்தல்

05. நிலைத்திருக்கத்தகு உற்பத்தி, நுகர்வு தொடர்பான அறிவூட்டல் மற்றும் ஆற்றல்விருத்தி நிகழ்ச்சிகளை நடத்துதல். அதற்கமைய இந்த அமைச்சின் உத்தியோகத்தர்கள் இருவருக்கு பட்டப்பின் படிப்பு பாடநெறியைத் தொடர்வதற்காக வசதிகளை வழங்குதல் மற்றும் தெரிவு செய்யப்பட்டஅரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய இணை நிறுவனங்களின் 15 அலுவலர்களுக்கு தாய்லாந்தின் ஆசிய தொழிழநுட்ப நிறுவனத்தில் (AIT) 10 நாள் பயிற்சி வழங்குதல்

06 நிலையான பெறுகை வரைவை மேம்மபடுத்தல் அமுலாக்கல் திட்டம் மற்றும் பெறுகை அலுவலர்களுக்கான பயிற்சிக் கருவியொன்றைத் தயாரித்தல்

07 அறிவூட்டும் மற்றும் பயிற்சி செயலமர்வுகளை நிலையான அபிவிருத்தி மற்றும் நுகர்வு தொடர்பான பிரதான அமைப்புக்களுக்காக. (MoMDE, SLIDA, IESL, University of kelaniya) நடாத்துதல்

08 இலங்கையில் சுற்றுசூழல் நட்பான உரையாட ஒன்றுக்கான பிரச்சார செயலமர்வை நடாத்துதல்.

09 சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான அமைச்சு, SCP மற்றும் SDG போன்ற் மேல் மாகாண கழிவு முகாமைத்துவ அதிகாரசபை போன்ற பிரதான அமைப்புக்களின் உறுப்பினர்கள் 997 பேருக்கு SCP தொடர்பாக அறிவூட்டும்/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 19 நடாத்தப்பட்டது.

10 விளைபொருட்களுக்கான ஆயட்காலம் மற்றும் சுற்றாடல் புத்தாக்கத்தை அறிமுகப்படுத்தல் சார்பாக 03 பிரிவுகளுக்கு (அரிசி/ பால்/ தேயிலை) அறிவுறுத்துரை செயலமர்வு நடாத்துதல். (TOT)

11 அரச மற்றும் தனியார் பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 29 உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி தொடர்பாக பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சியளித்தல்

12 வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சின் அலுவலரொருவருக்கு தாய்லாந்தில் AIT பல்கலைக்கழகத்தில் சான்றிதழ் பாடநெறியொன்றை தொடர்வதற்கு இந்தக் குருதிட்டம் மூலம் முழு அனுசரணை வழங்கபடபட்டது.

13 நிலைபேறான உற்பத்தி, நுகர்வு தொடர்பான அறிவை மேலும் அபிவிருத்தி செய்தலும் அதற்கமைய அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலினுள் நிலைத்திருக்கத்தகு உற்பத்தி மற்றும் நுகர்வு தொடர்பாக கவனம் செலுத்தும் நோக்கில் நேரடியாக உரிய அமைச்சுக்களின் செயலாளர்கள் 09 பேருக்கு ஐரோப்பாவின் கல்விச் சுற்றுலாவொன்றிட்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது

ஐரோப்பா கல்விச் சுற்றுலா

14 நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி பற்றிய இணைப்பு பொறிமுறையைத் தயாரித்தல். இங்கு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் நிலைத்திருக்கத்தகு நுகர்வு மற்றும் உற்பத்தி பற்றிய பிரிவைத்தாபித்து நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி தொடர்பான நிபுணர்கள் குழுவின் மற்றும் ஏனைய உரிய நிறுவனங்களின் ஒத்துழைப்போடு நிலைத்திருக்கத்தகு உற்பத்தி, நுகர்வு செயற்பாடுகள் எதிர்காலத்திலும் மேற்கொள்ளப்படவுள்ளன..

15 இலங்கையின் சுற்றுசூழல் நட்பான ஊரையாடலொன்றை ஏற்படுத்தல் தொடர்பான பிரச்சாரச் செயலமர்வொன்று ஊடகவியலாளர்களுக்கு நடாத்தப்பட்டது

16 தகவல் முகாமைத்துவ பொறிமுறையொன்றை தேசிய நிலைத்திருக்கத்தகு உற்பத்தி மற்றும் நுகர்வுவை இணையத்தளம் ஊடாக ஏற்படுத்தல் மற்றும் இலத்திரனியல் கற்றலுக்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன

17 வளமான உற்பத்தி, நுகர்வு தொடர்பான அறிக்கை நிகழ்ச்சித்திட்டமொன்றை மும்மொழிகளிலும் தயாரித்தல்

18 தெரிவு செய்யப்பட்ட உற்பத்திகளுக்கான (தேனீர், அரிசி மற்றும் பால்) நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்திக்குரிய அமுலாக்கல் திட்டத்தைத் தயாரித்தல் இதன் மூலம் நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி முன்னோடிக் கருத்திட்டத்தை மேற்கொள்ள முடியும்.

19 நிலைபேறான உற்பத்தி, நுகர்வு பற்றிய நிதிக்கருவியொன்றைத் தயாரித்தல்.

20 விளைபொருட்களுக்கான சுற்றுசூழல் நட்பான முகப்படையாளம் (லேபல்) (Eco Label) அறிமுகப்படுத்துவதற்காக வழிமுறையொன்றை அறிமுகப்படுத்தல்.

21 விளைபொருடகளின் ஆயட்காலம் மற்றும் சுற்றாடல் புத்தாக்கத்தை (Eco Innovation and Life Cycle Analysis) அறிமுகம் செய்தல்.

உயிரியல் பல்வகைமைக்குரிய 6 வது தேசிய அறிக்கை தயாரித்தல்



ஐக்கிய நாடுகளின் உயிரியல் பல்வகைமை உடன்படிக்கையின் தரப்புக்களின் 13 வது கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைய அனைத்து தரப்பு நாடுகளும் உயிரியல் பல்வகைமை உட்டன்படிக்கையின் குறிக்கோள்களை ஆற்றுவதற்குரிய தேசிய உயிரியல் பல்வகைமை திட்டம் முன்னேற்றம் தொடர்பான வது அறிக்கை 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதமளவில் முன்வைக்கப்பட்ட வேண்டியுள்ளது.

அதற்கமைய இவ்வுடன்படிக்கையின் முன்மாதிரி இடமாக மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் உயிரியல் பல்வகைமைப் பிரிவினால் , 6 தேசிய அறிக்கை வரைவு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.
அனைத்து பங்குதாரத்தரப்புக்கள் (அரசுகள்) இவ்வறிக்கையை நான்கு வருடங்களுக்குடிகாரு முறை தயாரித்து உயிரியல் பல்வகைமை உடன்படிக்கை செயலாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.இவ்வறிக்கையைத் தயாரிப்பதற்காக தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் செயலமர்வுகள் பல நடாத்தப்பட்டு ஆராய்ச்சி மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 6 வது தேசிய அறிக்கை வரைவு தயாரிக்கப்பட்டு உயிரியல் பல்வகைமை செயலாளர் அலுவலகத்திற்கு 2018 திசெம்பர் மாதம் சமர்ப்பிக்ப்பட்டது.

உயிரியல் பாதுகாப்புக்குத் தேவையான நிதித் தேவைப்பாடுகள் (BIOFIN-2016-2018)

உயிரியல் பல்வகைமை உடன்படிக்கையின் 11ஆம் பங்குதார தரப்பினர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய உயிரியல் பல்வகைமையை பேணிக்காத்தல் தொடர்பாக தேவையான நிதித் தேவைப்பாடுகள் (BIOFIN) என்ற கருத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. இது இரண்டு வருட குறுகிய கால கருத்திட்டம் என்பதோடு இதன் அனைத்து நிதிச் செலவுகளும் ஐரோப்பிய சங்கத்தின் மூலம் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் இலங்கை முகவர் நிறுவனத்தினால் உயிரியல் பல்வகைமை செயலாளர் காரியாலயத்தின் ஒருங்கிணைப்பில் தயாரிக்கப்படுகின்றன.இலங்கை அரசாங்கத்தின் சார்பில் கருத்திட்ட கேந்திர் நிலையமாக மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு செயற்படுகின்றது.

இங்கு நான்கு அறிக்கைகள் அதாவது கொள்கை மற்றும் நிறுவன மீளாய்வுப் பகுப்பாய்வு அறிக்கை, உயிரியல் பல்வகைமை மீளாய்வுப் பகுப்பாய்வு அறிக்கை மற்றும் நிதித் தேவைப்பாட்டு ஒப்படை மற்றும் உயிரியல் பல்வகைமை பாதுகாப்புக்குத் தேவையான நிதித்திட்டமிடல் ஆகிய அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. உயிரியல் பல்வகைமை பாதுகாப்புக்குத் தேவையான நிதித்திட்டமிடலின் கீழ் இனங்காணப்பட்ட முதன்மை நிதித் தேவைப்பாடுகளான சுற்றாடல் பாதுகாப்புக்கான நிதித் தேவைப்பாடுகளை வழங்குதல்,நிலையான சுற்றுலாக் கைத்தொழில் விருத்தி,உயிரியல் பல்வகைமை மற்றும் சுற்றாடல் முறைமை விருத்தி பெறுமதி நிர்ணயம் போன்ற நிதித் தீர்வுகள் இதன் கீழ் இனங்காணப்பட்டுள்ளன.

உயிரியல் பாதுகாப்பு தொடர்பான கார்டஜினா உடன்படிக்கைக்கு உட்பட்டு தேசிய உயிரியல் பாதுகாப்பு முன்மாதிரியை செயற்படுத்தல் கருத்திட்டம்

இந்தக் கருத்திட்டம் உலக சுற்றாடல் வசதிகள் மூலம் வழங்கப்படுகின்நிதியுதவியின் கீழ் ஐக்கிய நாடுகள் உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஒத்துழைப்புடன் மஹவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தக் கருத்திட்டத்தின் கீழ் உயிரியல் பாதுகாப்புக்குரிய தகவல் பொறிமுறையொன்றைத் தயார் செய்து செயற்படுத்தல் மரபணு மாற்றம் செய்யப்பட்ட உயிரினங்கள் மூலம் ஏற்படக்கூடிய ஆபத்து மதிப்பீடு மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக தெவையான பொறிமுறையைத் தயாரித்தல், தொழில்நுட்ப தகவல் கொண்ட தரவு முறைமையைத் தயாரித்தல், மரபணு மாற்றம் செய்யப்பட்டுள்ள உயிரினங்களை அறிந்து கொள்ளவதற்குரிய திறன் மற்றும் ஆற்றல்களை விருத்தி செய்தல், ஆய்வுகூட தொழில்நுட்ப உட்கடடமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் பொது மக்கள் மத்தியில் உயிரியல் பாதகாப்பு பற்றிய அறிவு மற்றும் புரிந்துணர்வை விருத்தி செய்தல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

- ✓ ஊடக செயலமர்வு மற்றும் உயிரியல் பாதுகாப்பு தொடர்பான செய்தி அறிவித்தல் வெளியிடல்

உயிரியல் பாதுகாப்பு தொடர்பாக மற்றும் இந்தக் கருத்திட்ம் பற்றிய கூட்டுமொத்தப் தகவலகளைப் பிரச்சார்ம செய்யும் நோக்கில் பொதுமக்களை அறிவூட்டும் முதலாவது செயலமர்வாக ஊடகச் செயலமர்வு நடாத்தப்பட்டது. அவ்வாறே 2018 மார்ச் 29 ஆம் திகதி Water Edge ஹோட்டலில் நடாத்தப்பட்டது. இலங்கையினுள் காணப்படுகின்ற மரபணு மாற்றம் செய்யப்பட்ட உயிர்ததொகுதி தொடர்பாக உள்ள சந்தேகம் மற்றும் ஐயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வாய்ப்பும் இதனூடாக ஊடகவியலாளர்களுக்கு கிடைத்தது. அதற்கமைய உயிரியல் பாதுகாப்பு தொடர்பாக பொது மக்களை அறிவுறுத்த முடிந்த விதத்திலான பல்வேறு செய்திகள் மற்றும் விசேட கட்டுரைகள் தயாரிப்பதற்கான பெறுமதியான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு அனைவருக்கும் சாத்தியம் கிடைத்தது. உயிரியல் பாதுகாப்பு பற்றிய செய்தி அறிக்கையின் முதலாவது இதழ் இங்கு வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் பின்னர் இரண்டாவது இதழும் வெளியிடப்பட்டது.

கருத்திட்டத்தின் முதலாவது ஆக்கக் கூறு அதாவது " உயிரியல் பாதுகாப்புத் தொடர்பான நிறுவன மற்றும் வழிநடாத்தல் செயல் சட்டகத்தை வலுப்படுத்தல்" இற்காக சட்ட ரீதியான அலுவல்கள் மற்றும் உயிரியல் பாதுகாப்பு கொள்கை விருத்திக்காக தேசிய மதியுரைஞர்கள் இர்டு பேர் மற்றும் சர்வதேச மதியுரைஞர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டனர். மேலும் தேசிய நிறுவன பிரதிநிதித்துவ தொழிற்படு குழு நியமனம் செய்யப்பட்டதோடுகுழுக் கூட்டங்கள் 04 நடாத்தப்பட்ட ஏற்கனவே இலங்கையின் உயிரியல் பாதுகாப்புக்கான உயிரியல் பாதுகாப்பு ட்ட விதிகள்,பிரதான திட்டம் (Biosafety Master Plan) ,நிருவாக மற்றும் வழிநடாத்தல் செயற்பாடுகளுக்குரிய தகவல்கள் தொகுக்கப்பட்டு இறுதி வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கைகள் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

- ✓ மரபனுமாற்றம் செய்யப்பட்ட உயிரினங்கள் காரணமாகசுற்றாடலுக்கு மற்றும் மானுட சுகாதாரத்திற்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்களை குறைத்து மற்றும் தவிர்ததுக்கொள்வதற்கான உயிரியல்பாதுகாப்பு சட்டம்
  இந்த சட்டத்தை வரைவு செய்வதற்காக குறித்த நிறுவனங்களின் பங்களிப்புடன் பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு அவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டு அவற்றையும் உள்ளடக்கி சட்ட வரைஞர் திணைக்களத்தினால் வரையப்பட்ட உயிரியல் பாதுகாப்பு தொடர்பான சட்டம் தேவையான அனுமதிக்காக சட்டமாஅதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- ✓ **உயிரியல் பாதுகாப்புத் தொடர்பான அறிவுறுத்தும் அச்சிடப்பட்ட நூல்கள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் சஞ்சிகைகள்**
  உயிரியல் பாதுகாப்புத் தொடர்பாக அனைத்து தரப்பினர்களையும் அறிவுறுத்துவதற்காக நூல்கள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் சஞ்சிகைகள் வெளியிடப்பட்டு உரிய நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

தேசிய ரீதியில் பொருத்தமான பச்சசைவீட்டு வாயு வெளியேறல் கட்டுப்படுத்தல் செயற்பாடுகளைத் தயாரித்தல (NAMAs)

சக்திவளப் பிரிவுக்காக தேசிய அடிப்படையில் பொருத்தமான பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தல்

சக்திவள உற்பத்தி, சக்திவள நுகர்வு ஆகிய துறைகளுக்காக தேசிய ரீதியில் பொருத்தமான பசச்சை வாயு வெளியேற்றத்ததைக் மட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகளை தயாரித்தல் (NAMAs) கருத்திட்டம் மின்வலு மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுவதோடு கருத்திட்டத்தின 4ஆம் ஆக்கக்கூறான‘‘ சக்திவள உற்பத்தி மற்றும் நுகர்வு ஆகிய துறைகளுக்கான மதிபீடு, அறிக்கையிடல் மற்றும் உறுதிசெய்தல் வழிமுறையைத்(MRV) தயாரித்தல் மற்றும் தேசிய பதிவு ஆவணத்தைத் தயாரித்தல்” என்பன காலநிலை மாற்றங்கள் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

.

இதன் கீழ் தேசிய அடிப்படையில் பொருத்தமான பச்சைவீட்டு வாயு கட்டுப்படுத்தல் தொடர்பான நிறுவன சட்டகம், கருத்திட்டத்தை அனுமதிக்கும் வழிமுறை, தேசிய பதிவு ஆவணம், சக்திவளத் துறைக்கான மதிபீடு, அறிக்கையிடல் மற்றும் உறுதிசெய்தல் வழிமுறை (MRV) மேற்கொள்ளல், இணையத்தளத்தைத் தயாரித்தல் என்பனபிரதான செயற்பாடுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

முன்னேற்றம் அறிக்கையிடப்படுகின்ற காலப்பகுதியினுள்

- தேசிய அடிப்படையில் பொருத்தமான பச்சை வீட்டு வாயு கட்டுப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பான நிறுவனச் சட்டகம் மற்றும் அனுமதிக்கும் வழிமுறையைத் தயாரிப்பதற்காக அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக் கொள்ளல்

- இலங்கையினுள் தேசிய ரீதியில் பொருத்தமான பச்சைவீட்டு வாயு குறைத்தல் செயற்பாடுகளை செயற்படுத்தல் தொடர்பான சிறிய நூலொன்றைத் தயாரித்தல்

- சக்திவளத்துறை மற்றும் முன்னோடிக் கருத்திட்டங்கள் 03 இன் மதிபீடு, அறிக்கையிடல் மற்றும் உறுதிப்படுத்தல் வழிமுறையைத் (MRV) தயாரித்தல்.

- அறிவூட்டும் பத்திரங்களை அச்சிடல்

- MRV மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு வளங்கள் அணியொன்றைத் தாபித்தல்

- இணையத்தளம், இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட ரெஜிஸ்டர், தேசிய பதிவு ஆவணத்தைத் தயாரித்தல்.

- இலங்கையினுள் தேசிய ரீதியில் பொருத்தமான பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தை குறைக்கும் செயற்பாடகளைத் தயாரிப்பதற்காக பங்குதார தரப்புக்களுடன் கூட்டங்களை நடாத்தல்.

- புதிய யுஆயு கருத்திட்ட முன்மொழிவு தயாரித்தல் தொடர்பாக பயிற்சிச் செயலமர்வு நடாத்தல்,அதற்கமைய புதிய கருத்திட்ட முன்மொழிவுகள் 6 தயாரிக்கப்பட்டுள்ளன.

காலநிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படுகின்ற ஆபத்து மதிப்பீடு மற்றும் தேசிய அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு தகவமைத்தல் செயற்பாடுகளை உள்ளடக்குவதற்கான தொழிநுட்பக் கருத்திட்டம்

இலங்கை காலநிலை மாற்றங்களினால் ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்கள் காரணமாக பலத்த ஆபத்துக்கு உள்ளாகியுள்ளது. இது தொடர்பாக கவனம் செலுத்தி அமைச்சினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழிநுட்பக் கருத்திட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டில் கால நிலை மாற்றம் காரணமாக ஏற்படுகின்ற ஆபத்துக்களை மதிப்பிடல் மற்றும் வரைபடப்படுத்தப்பட்டது. இந்த கருத்திட்டத்தின் நீட்சியாக அக்கருத்திட்டத்தினால் தயாரிக்கப்பட்ட ஆபத்து உருத்தோற்றங்கள் (Vulnerability Profiles) மேலும் விருத்தி செய்யும் வழிமுறைகளை பயன்படுத்தி முழு நாடும் உள்ளடங்கும் வதத்தில் இற்றைப்படுத்துவதற்கும்,அதனுள் அண்மையில் கண்டறிப்பட்ட பழக்கப்படுதல் புதிய முறையை உட்சேர்ப்பதற்கும் ஆசிய அபிவிருத்தி வஙிகியினால மீண்டும் தொழிநுட்பக் கருத்திட்டம் அனுமதிக்கப்பட்டது

இக்கருத்திட்டத்தின் பிரதான நோக்கம்

- அரச மட்டத்தில் திறன் விருத்தியூடாக தேசிய அபிவிருத்திக் கொள்கைகளுக்கு காலநிலை மாற்றங்களினால் ஏற்படுகின்ற தாக்கங்களை உள்ளடக்குவதும் அதன் மூலம் மக்களிடத்தில் காலநிலை மாற்றங்களின் பாதகமான தாக்கங்களுக்கு முகம் கொடுப்பதற்கான ஆற்றல்களை மேம்படுத்தல்.
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள், மலைநாட்டுப் பிரதேசம் மற்றம் கரையோரப் பிரதேசம் ஆகியவற்றில் இயற்கை வளங்களை சிறப்பாகத் திட்டமிடுதல் மற்றும் விசேடமாக காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஆபத்துக்களை இனங்காணல்,ஆபத்து மதிப்பீடு மற்றும் தாக்கங்களின் மதிப்பீட்டுக்கான திறன் விருத்தி
- காநிலை மாற்றங்களுக்கு இசைந்து போதல் தொடர்பான திட்டம் மற்றும் கொள்கைகளுக்குரிய கருவிகளைத் தயாரித்தல்.

முன்னேற்றம் அறிக்கையிடப்படுகின்ற காலப்பகுதியினுள் உரிய நிறுவனங்கள் மற்றும் நிபுணர்களுடன் ஆலோசனைக் கூட்டங்களை நடாத்துதல், வரைபட விருத்திக்கான பகுப்பாய்வு என்பன மேற்கொள்ளப்பட்டன.

(1) உணவ பாதுகாப்பு (விவசாயம்,மீன்பிடி மற்றும் கால்நடை வளங்கள்)
(2) நீர்ப்பாதுகாப்பு,
(3) மக்கள் சுகாதாரம்,
(4) உயிரியல் பல்வகைமை மற்றும் சுற்றாடல் முறைமை சேவை மற்றும்
(5) நகர விருத்தி/மக்கள் குடியிருப்பு மறற்றம் பொருளாதார அடிப்படை வசதிகள் ஆகிய ஐந்து துறைகளுக்காக தயாரிக்கப்பட்ட ஆபத்து பக்கத்தோற்றம் (Risk Profiles) மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஆபத்தது தரவுப் புத்தகத்தின் இறுதி வரைவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் கரையோரம் மற்றம் மலையக வலயங்களுக்காக காலநிலை மாற்றங்கள் ஆபத்து பக்கத் தோற்றம் (Vulnerability Profile) வரைவு செய்யப்பட்டுள்ளது.

IV ஆம் பகுதி

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்குரிய அரச மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் முன்னேற்றம்

I. இலங்கை மகாவலி அதிகார சபை

II. வனப்பாதுகாப்புத் திணைக்களம்

III. கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம்

IV. மத்திய சுற்றாடல் அதிகார சபை

V. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபை

VI. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

VII. கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை

VIII. அரச மரக் கூட்டுத்தாகனம்

IX. புவியியல் ஆராய்ச்சி மற்றும் சுரங்க அகழ்வுப் பணியகம்

X. பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகம்

XI. மகாவலி ஆலோசனைப் பணியகம்

இலங்கை மகாவலி அதிகார சபை

2018ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள்

திரண்ட நிதி முன்னேற்றம்

2018 ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட மொத்த மூலதன முதலீடு2,733.50 மில்லியன் ரூபாவென்பதோடு,அதன்நிதி முன்னேற்றம் பின்வருமாறு.

மில்.ரூபா

விபரம்	வரவு செ. திட்ட ஒதுக்கீடு 2018	செலவு (2018.12.31)
மகாவலி கருத்திட்டம்	**1,158.00**	**1,080.00**
மகாவலி ஒன்றிணைந்த கருத்திட்டம் (ஒ.நி)	290.00	290.00
பி வலய மாதுருஓயா தென் கரையோர அபிவிருத்திக் கருத்திட்டம்	60.00	60.00
ரிதிமாலியத்தஒன்றிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம்	76.00	64.00
ரஓகென் ஓயாஒன்றிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம்	108.00	94.00
வெலிஓயா ஒன்றிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம் எல் வலயம்	260.00	260.00
அவசர அடிப்படைவசதிகள் மறுசீரமைப்பு உள்ளிட்ட பாரிய மற்றும் நடுத்தர நீர்பாசனக் கருத்திட்ட மறுசீரமைப்பு	150.00	137.00
விவசாய மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்திக் கருத்திட்டம்	214.00	175.00
நிருவாகம் மற்றும் பராமரிப்பு	**1,575.50**	**1,498.18**
மொத்தம்	**2,733.50**	**2,578.18**

மகாவலி கருத்திட்டம்

மகாவலி ஒன்றிணைந்த கருத்திட்டம்

நிதி ஒதுக்கீடு : உள்ளநாட்டு நிதி

மதிப்பீட்டுச் செலவு : 4,910 மில். ரூபா. (திருத்தம் செய்யப்பட்ட வ.செலவுத் திட்டம்)

கருத்திட்டக் காலப்பகுதி : 2007-2018

மகாவலி இணைந்த கருத்திட்டம்நீர் வழங்கலை பாதுகாத்துவிவசாயப் பொருளாதாரத்தை மேம்படுத்தல் ஊடாக மாதுருஓயாகரையோரப் பிரதேசத்தில்வசிக்கின்ற கிராமிய பிரசைகளின்பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. கருத்திட்ட செயற்பாடுகளின்கீழ் 1982 ஆம் –1986 காலப்பகுதியில் அமைக்கப்பட்ட நீர்ப்பாசன முறைமையை மறுசீரமைத்தல் உள்ளடக்கும். (அ) மாதுருஓயாதென் கரையோர நீர்ப்பாசன மறுசீரமைப்பின் கீழ். 52 கி.மீ பிரதான கால்வாய்,65 கி .மீ ˙ கிளை வாய்க்கால்,459 கி.மீ விநியோகக் வாய்க்கால்.1,138 கி.மீ.வயல்வாய்க்கால். 54 கி.மீநீர் வழங்கல் வாய்க்கால் 80 கி.மீ கிராமிய வீதி

வழிநடாத்தல்,மற்றும் பராமரிப்பு, மற்றும் சிறிய குளங்களை புனரமைப்புநடவடிக்கை உள்ளிட்ட நீர் முகாமைத்துவம் தொடர்பாக மாதுருஓயாஇடது கரையோர 1981- 1986 காலப் பகுதியில் அமைக்கப்பட்ட நீர்ப்பாசனத்தொகுதியை புனரமைத்தல் (ஆ) கிராமியசுய உதவி கருத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட தெரிவு செய்யப்பட்ட நீர் வழங்கல் சேவையை விதிமுறைப்படுத்தி மேம்படுத்தல் (இ) விவசாய அபிவிருத்திக்காக ஆதரவு பெற்றுக் கொடுத்தல் மற்றும் கமநல அமைப்புகளைவலுவூட்டுதல்.(ஈ) பொருத்தமானசுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பன உள்ளடங்கும்.

,2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 290 மில்லியன ரூபாவாகும்.(திருத்திய)வருட இறுதியில் அந்நிதி பயனுள்ளவிதத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது

இல.	விபரம்	பௌதீக முன்னேற்றம் 2018.12.31
01	நீர் விநியோக கால்வாய் நிருமானம்/மறுசீரமைப்பு	13.2 கி.மீ
02	கிராமிய குளங்களை மேம்படுத்தல்	70.4 கி.மீ
03	கிளைக் கால்வாயகள் மறுசீரமைப்பு (LBR1)	03
06	கட்டிடப் பழுதுபார்ப்பு	2.5
09	ஒத்துழைப்பு வயல் வாய்க்கால் மறுசீரமைப்பு	2.1 கி.மீ

பி வலய மாதுருஓயா தென் கரை அபிவிருத்திக் கருத்திட்டம்(மல்வென்ன மற்றும் மஹாவெலிதென்ன)

நிதி ஒதுக்கீடு :உள்நாட்டு நிதி

மதிப்பீட்டுச் செலவு : *935.49* மி.ரூபா

கருத்திட்டக் காலப்பகுதி : 2014-2018

பொலன்னறுவைமற்றும் மட்டக்களப்பு நிருவாக மாவட்டங்களில் மகாவலி பீ வலயம் உள்ளடக்கும் சிங்ஹபுரமேல் பகுதியின் மஹாவெலிதென்ன மற்றும் மல்வென்னமகாவலி வலயங்கள் அமைந்துள்ளதோடு இக்கருத்திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. இந்தப் பிரதேசங்களில்கடந்த பல தசாப்தங்களாக நிலவிய உள்ளக குழப்பமான சூழல் காரணமாக மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களில் அதிகமானோர் உள்ளக அடிப்படையில் இடம்பெயர்ந்து விட்டனர்.அதன் பயனாகஅண்ணளவாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 1200 குடும்பங்கள் வரை மீண்டும் அவர்களின் முதல் கிராமத்திற்கு சென்றுவிட்டனர்.

குழப்பமானசூழல் நீங்கியதைத் தொடர்ந்து2014 ஆம் ஆண்டில் இந்த விசேட கருத்திட்டத்தின்கீழ் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இங்கு சிங்ஹபுரபிரிவில் மல்வென்னமற்றும் மஹாவெலிதென்ன அலகுகளின் வீட்டுத் தோட்டக் காணி 859 மற்றும் நீர்பாசனக் காணி 859 அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்டது. கருத்திட்டத்தின் பிரதானபணிகளாக (அ) இடம்பெயர்ந்தகுடும்பங்களில் 859 குடும்பங்களை சிங்ஹபுரபகுதியின் மீள்குடியேற்றம் மற்றும் வதிவை மீண்டும் தாபித்தல் (ஆ) தற்போது நிலவும் நீர்பாசனத்திற்குஅடிப்படையான 521 ஹெக்டயாரில் விவசாயத்தைஅபிவிருத்தி செய்தல் மற்றும் 174 ஹெக்டயாரிலவீட்டுத் தோட்டக் காணியை அபிவிருத்தி செய்தல் மற்றும் (ஈ)மஹாவெலிதென்னகுளம் மற்றும் ஏனைய நீர்பாசனமுறைமையை நிருமானித்தல்.

,2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 60 மில்லியன ரூபாவாகும்.வருட இறுதியில் அனைத்து நிதியும் பயனுள்ளவிதத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது

இல.	விபரம்	பௌதீக முன்னேற்றம் 2018.12.31
01	நீர் விநியோக கால்வாய் நிருமானம்	6.8கிமீ
02	*வயல் வாய்க்கால் நிருமானம்*	3 கிமீ
03	வர்த்தக நிலைய மற்றும் கிராமிய வீதி நிருமானம	4கிமீ
04	மீள் நடுகை –மரக்கன்றுகள்	2000 மரக்கன்றுகள்

ரிதிமாலியத்த ஒன்றிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம்

நிதி ஒதுக்கீடு :உள்நாட்டு நிதி

மதிப்பீட்டுச் செலவு : 1,100மி.ரூபா

கருத்திட்டக் காலப்பகுதி : 2012-2018

குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவபரத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட வீட்டு வருமானம் மற்றும் செலவு ஆய்வின் படி பதுளை நிருவாக மாவட்டத்தின் ரிதிமாலியத்த பிரதேசசெயலாளர் பிரிவு மிகவும் தூர இடத்தில் அமையப்பெற்றுள்ளமற்றும் மிகவும் வறுமைமிக்க பிரதேச செயலாளர் பிரிவாகஇனங்காணப்பட்டுள்ளது. எனவே மேற்படி பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இலங்கை மகாவலி அதிகார சபையினால் ஐந்து வருட முதலீட்டு திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. இந்தப் பிரதேசத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் இந்த பிரதேசத்தில்வசிக்கின்ற குடும்பங்களுக்குவிவசாய அடிப்படையில் பயனுள்ள மற்றும் நிலைத்திருக்கத்தகு பொருளாதார வழிமுறையொன்றை உருவாக்குவது இந்த கருத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இதன் கீழ் (அ) வர்த்தகப் பயிர் உற்பத்தியை மேம்படுத்தல் (ஆ) கால்நடை வளங்கள் அபிவிருத்தி (இ) கைத்தொழில்அபிவிருத்தி தொடர்பில் பிரதானமாக கவனம் செலுத்தப்படும்

,2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 76 மில்லியன ் ரூபாவாகும்.(திருத்திய)2018 திசெம்பர் மாத இறுதியில் அதில்64 மில்லியன் ரூபா பயனுள்ளவிதத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது

இல	விபரம்	பௌதீக முன்னேற்றம் 2018.12.31
01	நீர்பாசன முறைமை மறுசீரமைப்பு	2 அணைக்கட்டு
		3.3 கி.மீ. நீர்பாசன கால்வாய்
02	வீதி மறுசீரமைப்பு	5.2 கி.மீ. தார் வீதி
		150 மீ. கொங்கிரீட் வீதி
03	கட்டிட நிருமானம்	09
04	பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	74நீகழ்ச்சித்திட்டம்
05	விவசாயமற்றம் கால்நடை வளர்ப்பு நி.திட்டம்	1,439 குடும்பங்கள்

ரம்பகென்ஓயா ஒன்றிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம்

நிதி ஒதுக்கீடு :உள்நாட்டு நிதி

மதிப்பீட்டுச் செலவு : 1,086 மி.ரூபா

கருத்திட்டக் காலப்பகுதி : 2012-2019

ரம்பகென்ஓயா இணைந்த அபிவிருத்தி கருத்திட்டம் மூலம் அம்பாறை மாவட்டத்தின்மஹாஓயாமற்றும் பதியதலாவ பிரதேச செயலாளர் பிரிவில் நீர்த்தேக்கம் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி தொடர்பாக அடிப்படைக் கவனம் செலுத்தப்படும். இந்த கருத்திட்டத்தின்அடிப்படை நோக்கங்களாக அமைவது (அ) சிறிய மற்றும் நடுத்தர குளங்கள் மற்றும் அணைகளைபுனரமைப்புச் செய்தல் (ஆ) கிராமிய வீதிகள்70 கிலோ மீற்றர் புனரமைப்புச் செய்தல் (இ) விவசாய உற்பத்தியை 50% அதிகரிக்கச் செய்தல் (ஈ) குடி நீர் கிணறுகளை நிருமானித்து அதன் ஊடாக நீர் வழங்கல் (உ) கிணறுகள் மற்றும் துப்பரவேற்பாட்டுச் சுகாதாரப்பாதுகாப்பு வேலைத்திட்டம் (மலசலகூட நிர்மாணம்).

,2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 108 மில்லியன ் ரூபாவாகும் 2018 மாத இறுதியில் அதில் 94 மில்லியன் ரூபா பயனுள்ள விதத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது

இல	விபரம்	பௌதீக முன்னேற்றம் 2018.12.31
01	நீர்பாசன முறைமை மறுசீரமைப்பு	2 அணைக்கட்டு
		1.925 கி.மீ. நீர்.கால்வாய்
02	வீதி மறுசீரமைப்பு	0.55 கிமீ. வீதி
		4 கி.மீ தார் வீதி
03	கட்டிட நிருமானம்	06
04	காணி மற்றும் காணி விருத்தி(நட்டஈடு வழங்கல்)	22 கட்டி
05	விவசாய மற்றம் கால்நடை வளர்ப்பு நி.திட்டம	1,557 குடும்பம்

வெலிஓயா ஒன்றிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம் - எல் வலயம்

நிதி ஒதுக்கீடு :உள்நாட்டு நிதி

மதிப்பீட்டுச் செலவு : 3,957 மி.ரூபா

கருத்திட்டக் காலப்பகுதி : 2012-2018

அனுராதபுரம், வவுனியா, முல்லைத்தீவு, திருக்கோணமலைஆகிய நிருவாக மாவட்டங்கள் உள்ளடங்கும்வகையில் மகாவலி வலயத்தின் அபிவிருத்திக்காக இக்கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.இடம்பெயர்ந்த6,788 குடும்பங்களுக்கான வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை, நீர்பாசனக்காணிகள், தேவையான பௌதீக மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் இந்த கருத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதன் கீழ் (அ) 11 கிராமங்களில் 6,788 விவசாய குடும்பங்களை மீள்குடியேற்றம் செய்தல் (ஆ)4,187 ஹெ. விவசாயக்காணிகளை அபிவிருத்தி செய்தல் (இ) வியாபார நிலையம் மற்றும் கிராம வீதிகளை நிருமாணித்தல்மற்றும் மேம்படுத்தல் (ஈ) சமூக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

,2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 260 மில்லியன ரூபாவாகும். (திருத்திய)2018 வருட முடிவில்அந்நிதி பயனுள்ள விதத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது

இல	விபரம்	பௌதீக முன்னேற்றம் 2018.12.31
01	காணிகளை அடையாளமிடல் மற்றும் அளத்தல்	2000கட்டி
01	நீர்பாசனக் கால்வாயகள் புனரமைப்பு	5கி.மீ
02	கட்டிடங்கரளை அமைத்தல்	23
03	பெருத்தெருக்கள் அமைத்தல்	55கி.மீ

இல	விபரம்	பௌதீக முன்னேற்றம் 2018.12.31
04	விவசாயக் கிணறுகள் அமைத்தல்	19
05	குடிநீர் வழங்கல் கருத்திட்டம்	80தாங்கிகள்
06	பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	157 நிகழ்ச்சித்திட்டங்கள்
07	விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு	3000 குடும்பங்கள்

அவசர கீழ்க்கட்டமைப்பு வசதிகள் மறுசீரமைப்பு உள்ளிட்ட பாரிய மற்றும் மத்திய நீர்பாசனக் கருத்திட்டப் புனரமைப்பு

நிதி ஒதுக்கீடு :உள்நாட்டு நிதி

மதிப்பீட்டுச் செலவு : 825 மி.ரூபா

கருத்திட்டக் காலப்பகுதி : 2015 -2018

(அ) பூர்வாங்க வேலைகள் மற்றும் நீர்நிலைகளைத் திருத்துதல் மற்றும் பராமரிப்பு (ஆ) நீர்பாசனஉட்கட்டமைப்பு வசதிகள் மறுசீரமைப்புமற்றும் (இ) இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் வரும் ஹுரூலுவெவ, உடவளவ, மகாவலி வலய பீ,சி.எச்,எல் மற்றும் பூர்வாங்க வேலைகள் கட்டுப்பாட்டு மற்றும்பராமரிப்பு மற்றும் நிறைவேற்றுப் பிரிவின் கீழ் வரும் பணிப்பொறுப்பு பொறியியற் பிரிவுகளின் நீர்பாசனபிரிவிடல், வாய்க்கால்களுக்கிடையில் பாதை அமைத்தல் மற்றும் புனரமைத்தல் இந்தக் கருத்திட்டம் மூலம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 150 மில்லியன ரூபாவாகும்.(திருத்திய) 2018 திசெம்பர் இறுதியில் அதில் 137 மில்லியன் ரூபா பயனுள்ள விதத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது

இல	விபரம்	பௌதீக முன்னேற்றம் 2018.12.31
01	பிரதான நீர்தேக்கங்களுக்குரிய கீழ்க்கட்டுமான வசதிகளை மறுசீரமைத்தல்	நீர்தேக்கங்கள்8 இன் 95%
01	2018 ஆம்வருடத்திற்கானபஹல கீழ்க்கட்டுமான நீர்பாசன வசதிகள் புனரமைப்பு	100 %

விவசாய மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி கருத்திட்டம்

நிதி ஒதுக்கீடு :உள்நாட்டு நிதி

மதிப்பீட்டுச் செலவு : 214மி.ரூபா(திருத்தம் செய்யப்பட்ட)

கருத்திட்டக் காலப்பகுதி : ஒரு வருடம் (01.01.2018 - 31.12.2018)

தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்திற்கு இணையாக நாட்டின் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தேசிய விவசாய இறக்குமதி குறைப்பதற்கு காரணமான தேசிய உணவு பயிர் பயிர்ச்செய்கை மற்றும் கால்நடை வளங்கள் உற்பத்தியை முழுமையான வகையில் மேம்படுத்துவதற்காக இக்கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் கமத்தொழில்சார் முதன்மையாகஅமைவது, பயிர்கள் பல்வகைப்படுத்தல், மகாவலி எல் வலயத்திற்குப் பொருத்தமான மிளகாய் வகையை இனங்காணல், தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள், பழ மரங்கள் தொடர்பான புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், உயிரில் பசளை உபயேகத்தை அதிகரித்தல். வரடசியான காலநிலைக்கு தாக்குப்பிடிக்ககூடிய விவசாயக் கிணறுகளைநிர்மாணித்தல் மற்றும் மறுசீரமைப்புச்செய்தல், தேசிய பொருளாதார அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் மற்றும் நீர் வினைத்திறன் என்பவற்றை. மேம்படுத்தல். விருத்தி செய்யப்பட்ட கால்நடை அபிவிருத்தி வேலைத்திட்டம், பால் உற்பத்தி, கோழி வளர்ப்பு, நன்னீர் மற்றும் அலங்கார மீன்கள்உற்பத்தி தொடர்பாக அறிவூட்டும் செயலமர்வுகள் மற்றும் செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

2018 ஆம் வருடத்திற்கான நிதி ஒதுக்கீடு 220 மில். ரூபாவென்பதோடு அதில் 175 மில்லியன் ரூபா இக்காலத்தின் போது பயனுள்ள விதத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது

விவசாயப் பயிர்ச் செய்கை

2017/2018 மத்திய போகத்தில் மகாவலி பிரதேசத்தில் பயிரிடப்பட்டுள்ள காணியின் அளவு84,460 ஹெக்டயார் என்பதுடன் மகாவலி வலயங்களில் நெல் உற்பத்தி அண்ணளவாக 469,176 மெ.டொ. ஆகும்.2018சிறு போகத்தில் பயிரிடப்பட்டுள்ளகாணியின் அளவு80,960 ஹெக்டயார் என்பதோடு நெல் உற்பத்தி. 469.570. மெ.டொ. ஆகும். 2017/2018ரும்போக மற்றும் 2018 சிறுபோகத்தில் மொத்த நெல் உற்பத்தி 906,052. மெ.டொ. ஆகும்.இக்காலப்பகுதியில் மகாவலி வலயத்தில் சாதாரண விளைச்சல் ஹெக்டயாருக்கு 5.5 மெ.டொன் ஆகும்

ஏனைய பயிர்கள் பயிர் செய்தல் (ஏனைய களப்பயிர்கள், பழங்கள், மரக்கறி மற்றும் நிரந்தரப்பயிர்கள்) 36,164 ஹெக். பயிரிடப்பட்டுள்ளதுடன். அதில சேயாபோஞ்சி 1,510 ஹெக்டயார், சோளம் 3,805 ஹெக்டயார், பெரிய வெங்காயம். 535 ஹெக்டயார்,மிளகாய் 683 ஹெக்டயார், கறுப்பு கௌப்பி. 137 ஹெக்டயார்,கௌப்பி ஹெக் 443 நிலக்கடலை 704 ஹெக்டயார். என்றவகையிலும். மேலும், 13,557 ஹெக்டயார் பழங்கள், 6,312நிரந்தரப் பயிர்கள் என்பனவும் பயிரிடப்பட்டுள்ளன.

கமத்தொழில் திணைக்களத்தின் தரவுப்படி இந்தக் காலத்திற்குள் நெல் விளைச்சல் 24% சேயாபோஞ்சி 85%,நிலக்கடலை 6%,மற்றும் மிளகாய் 9% என்ற ரீதியில் உள்நாட்டு விவசாய உற்பத்திமற்றும் அபிவிருத்தி பணிகளில்இலங்கை மகாவலி அதிகார சபை மிக உயர் பங்களிப்பை வழங்கியுள்ளது.

பால் பண்ணை அபிவிருத்திக் கருத்திட்டம்

இலங்கை மகாவலி அதிகார சபையின் கால்நடை அபிவிருத்தி பிரிவு ஊடாக மகாவலி பிரதேசங்களில் மேலதிக வருமான வழிகளை அறிமுகம் செய்தல் மற்றும் மகாவலி குடியேற்றவாசிகளின்பேசனை நிலைமை என்பவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு பால் பசுக்கள்வளர்ப்பைமேம்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.மகாவலி வலயங்களில் பால் உற்பத்தியை அபிவிருத்தி செய்தல் மற்றும் நெறிப்படுத்தல் இலங்கை மகாவலி அதிகார சபையின் கால்நடை அபிவிருத்தி பிரிவின் பொறுப்பாகும்.

2018ஆம்ஆண்டு யூன் தொடக்கம் திசெம்பர வரையான காலத்திற்குள் மகாவலி பிரதேசங்களில் 109,060 மொத்த பால் பசுக்கள்அறிக்கையிடப்பட்டதோடு, இந்தக் காலத்திற்குள் அண்ணளவாக27.1 மில்லியன் லீற்றர் பால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதியினுள் மாட்டுத் தொழுவங்கள் 98நிர்மாணிக்கப்பட்டதோடு, மேலும் விலங்கு விருத்தியைமேம்படுத்தலின் கீழ் 02 இனவிருத்தி நிலையங்கள்தாபிக்கப்பட்டன. மேலும் மாதிரி விவசாயப் பண்ணைக்காக நடமாடும் பால் கறத்தல்22 இயந்திங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. 42 விலங்கு பரிசோதனை மற்றும் தடுப்பூசி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

நன்னீர் மீன் வளர்ப்புக் கைத்தொழில் மற்றும் அழகு மீன் உற்பத்தி

மகாவலி குடியேற்வாசிகளின்போஷாக்கு மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக மகாவலி நீர்த்தேக்கங்களில்நண்ணீர் மீன்வளர்ப்புக்கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல் பிரதானபணியாகும். 2018 ஆம் ஆண்டில் மீன்உற்பத்தி 13.7 மெ.டொன் ஆகும். மீன்உற்பத்தி அதிகரிப்பதற்காக இனவிருத்தி நிலையங்கள் 20 நிர்மாணிக்கப்பட்டுள்ளது.அலங்கார மீன் உற்பத்தியை விருத்திசெய்தல் குறித்த காலப் பகுதியினுள் மட பொக்குன41மற்றும் சீமெந்து தாங்கிகள் 26அமைக்கப்பட்டுள்ளதோடு, தொடர்ந்தும் கடற்றொழிலாளர்களைவலுவூட்டுவதற்காக 36 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி

தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்திற்கு இணையாக விவசாயப் பொருளாதார கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்காகக் கொண்டுஇலங்கை மகாவலி அதிகார சபை அதன் 10 வலயங்களினுள் 106,971 ஹெக். நீர்பாசனக்காணிகளுக்கு நீர் வழங்கலை உறுதி செய்வதற்காக பாரிய,மத்திய, சிறிய அளவிலான 484 நீர்தேக்கங்களைக் உள்ளடக்கிய 10,202 கி.மீ நீர்பாசன வலையமைப்பின்செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு செய்தல் தொடர்பான பொறுப்புடைய நிறுவனமாகும். இதேவேளை 330,000 க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு நன்மைகளைவழங்குவதற்காக மகாவலி வீதி முறைமை மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் பராமரிப்பு மற்றும் புனரமைப்பு என்பன இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் வருகின்ற பணிகளாகும்.

மேலும், பிரதேசத்தில் தற்போது வாழுகின்ற மற்றும் எதிர்கால சமூகத்தின் முன்னேற்றத்திற்காக பயனுள்ளவகையில் காணி நிர்வாகம், கைத்தொழில் அபிவிருத்தி, சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் நிறுவன அபிவிருத்தி மற்றும் மகாவலி குடியேற்றத்திட்ட பிரதேசங்களில் விளையாட்டுநடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல் இலங்கை மகாவலி அதிகார சபையின் பிரதான பணிகளாகும். இதற்காக 2018 ஆம் ஆண்டின்வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு1,575.00 மி.ரூபா என்பதுடன் இந்த ஆண்டில் அதில் 1,498.18மி.ரூபா.பயனுள்ள முறையில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளது

நீர்ப்பாசனக் கால்வாய் முறைமை பராமரிப்பு

இரண்டாம் தடைவை காடுகளை சுத்தம் செய்தல், நீர்ப்பாசன அணைகளின் கழிவு மண் அகழ்தல், நீர்பாசனவீதி முறைமை மற்றும் பழுதுபார்த்தல்கள் மற்றும் அபிவிருத்தி, பாதைகளுக்கு கிரவல் இடுதல்என்பன மகாவலி நீர்ப்பாசன முறைமை பராமரிப்பின் கீழ் வருகின்ற விடயங்களாகும்.2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 482.65மி.ரூபாநீர்ப்பாசன முறைமை பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதோடு, மேற்படி பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக 2018 திசெம்பர் வரை அதில் 430.31 மி.ரூபாபயனுள்ள வகையில் செலவு செய்யப்பட்டுள்ளது.

மகாவலி வலயத்தல்1,014 கமநல அமைப்புகள்செயற்படுவதோடு நீர்விநியோகக் கால்வாய்முறைமை பராமரிப்பு மற்றும் வழிநடாத்தல் நடவடிக்கைகள் உயர் செயற்பாட்டுடன்கூடியதாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், நிறுவன அபிவிருத்திப் பிரிவின் ஆலோசனைகளின் படி 2018ஆம் ஆண்டில் 16 கமநல அமைப்புகள் வர்த்தக மட்டத்தில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

காணி உரித்து வழங்கல்

காணி உரித்துப் பத்திரங்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 39,172 பேருக்கு காணி உரிமைப்பத்திரகள் வழங்கி வைக்கப்பட்டன.

வலயம்	இலக்கு 2018	அன்பளிப்பு பத்திரம்/அனுமதிப்பத்திரம்/நீண்டகால குத்தகைப் பத்திரம்
பி	9,174	8,270
சீ	8,440	8,440
டீ	1,198	1,990
எச்	5,230	4,240
எல்	2,750	2,750
மொரகஹகந்த	1,857	1,857
விக்டோரியா	920	255
ஹுருலுவெவ	1,302	1,300
வலவ	8,570	8,570
ரவுக்கன்ஓயா	1,500	1,500
மொத்தம்	**41,741**	**39,172**

நிறுவன அபிவிருத்தி

கைத்தொழில் வாய்ப்புக்கள், தனி நபர் அபிவிருத்தி, நிறுவன வலுவூட்டல், பெண்கள் வலுவூட்டல், சமூக மற்றும் கலாச்சார அபிவிருத்தியை குடியேற்றவாசிகளுக்கு பெற்றுக்கொடுத்து மகாவலி பிரதேசத்தில் வசிக்கும் மக்களின்சமூக பொருளாதார நிலைமை என்பவற்றை மேம்படுத்தல், அவர்களைவதியச் செய்தல்இலங்கை மகாவலி அதிகார சபையின் பிரதான பணியாகும். அதற்கமைய வசிக்கும் மக்களின்இரண்டாம் மற்றும் மூன்றாம் பரம்பரைகளின்முன்னேற்றம் கருதி இலங்கை மகாவலி அதிகார சபையின் நிறுவன அபிவிருத்தி பிரிவினால் மேற்படி துறையை உள்ளடக்கும் வகையில் பல்வேறு வேலை திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

அதற்கமைய் 2018 திசெம்பர் வரையான காலப்பகுதியினுள் நிறுவன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 3090மக்கள்அபிவிருத்தி நிகழ்ச்சிததிட்டங்கள் 651, மகளிர் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள்88 என்பவற்றை நடத்துவதற்கான சாத்தியம் கிடைத்தது.

வனங்கள் மற்றும் சுற்றாடல்

- **வனங்கள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு**

வாயு வள முகாமைத்துவ மற்றும் பின்னாய்வுப் பிரிவினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி வழங்கும் போது, முறைப்பாடுகளை விசாரணை போதும், வாணிக அடிப்படையில் தினமும் மேற்பார்வை செய்யும் போதும் சட்டமயமான தேவைப்பாடுகள் வாயு இருப்புநிலைப் மற்றும் ஒலி மட்டங்கள் பின்னாய்வு செய்யப்பட்டு அனுமதிச்சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

• மாலை வெளியீட்டின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தேசிய நிறுவனமாக செயற்படுதல்

மாலை வெளியீட்டின் கெயற்பாடுகளுக்கு அமைவாக தெற்கு ஆசிய நாடுகளின் சுற்றுலாப் எல்லை ஊடாக ஏற்படுகின்ற வாயு மாசு நிலைமை, அதன் விளைவு மற்றும் வாயு மாசு நிலைமையை தவிர்த்தல் மற்றும் கட்டுப்பாடு பணிகளை மேற்கொள்ளும் போது மாலை வெளியீட்டின் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தேசிய நிறுவனமாக மத்திய சுற்றாடல் அதிகார சபை செயற்படுகின்றது. வாயு வள முகாமைத்துவ மற்றும் பின்னாய்வுப்பிரிவினால் அநுராதபுரம் தொரமடலாவ பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலா எல்லை வாயு மாசடைவு கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்படுவதோடு 2018 மார்ச் மாதம் நடுப்பகுதியிலி SO2> NO2 , PM10 மாதிரிகள் 10 சேகரிக்ப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது.

நீர் இருப்புநிலைப் பின்னாய்வுப் பிரிவு

மேல் மாகாண மற்றும் ஏனைய மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட நீர் மூலங்களில் தொழிலக நீரியல் கழிவுகள் (effluents) பின்னாய்வு செய்தல் மற்றும் பகுப்பாய்வு அறிக்கை வழங்குதல் மூலம் நாட்டின் நீரை முகாமைத்துவம் செய்தல் மற்றும் பேணிக்காத்தல் இந்த பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான பணிகளாகும்.

• நில மேல் நீர் நிலைகளின் நீர் மாதிரிகள் பகுப்பாய்வு

2018 ஆம் ஆண்டினுள் இந்த பரிசோதனைக்கூடம் மூலம் நீர் மாதிரிகள் மற்றும் தொழிற்சாலை நீர் மாதிரி 1168 சேர்க்கப்பட்டதோடு பல்வேறு தரங்களைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டது இந்தக் காலப்பகுதியில், களனி கங்கை பெந்தோட்ட கங்கை, மாஓயா மற்றும் தியவன்னா ஓயா பேன்ற் தெரிவு செய்யப்பட்ட நீர் மூலங்களின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு குறித்த 17 தரங்கள் பயன்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது

• இலங்கை தர நிரணய சபை மூலம் நீர் நிலைமை பின்னாய்வு பிரிவிடம் தர நிலைமைகள் பற்றிய சான்றிதழ் பெற்றுக் கொள்ளல்

• இலங்கை தர நிர்ணய சபையின் (ளுடுயுடீ) தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ததன் பின்னர் 2018 நவம்பர் மாதம் 15 ஆம் திகதி பரிசோதனைக்கூட சேவையின் நீர் இருப்புநிலைப் பின்னாய்வுப் பிரிவுக்கு ISO/ IEC 17025 தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டது. அவ்வாறே தேவையான உபகரணங்கள் சகலதும் பொறுத்தப்பட்டன.இலங்கை தர நிர்ணய சபையின் தொடர்புடைய ஆய்வு கூட அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

கழிவு முகாமைத்துவ

இரசாயன மற்றும் ஆபத்தான கழிவுப்பொருட்கள் முகாமைத்துவ அலகு

பின்வரும் நடவடிக்கைகளை நிறைவு செய்யும் பொறுப்பு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கழிவு முகாமைத்துவ பிரிவுக்கு உரிய இரசாயனர் மற்றும் ஆபத்தான கழிவுகள் முகாமைத்துவ அலகிற்கு வழங்கப்பட்டுள்ளது.

அ. ஆபத்தான கழிவுக் முகாமைத்துவத்திற்கு உரிய ஒழுங்குவிதிகளை மேற்கொள்ளல்.

ஆ. சர்வதேச உடன்படிக்கைளுக்குரிய நடவடிக்கைகள் தொடர்பாக செயற்படுதல்

2018 ஆம் ஆண்டின் அமுலாக்கல் திட்டத்தில் இன்காணப்பட்ட இரசாயனர் மற்றும் ஆபத்தான கழிவுகள் முகாமை செய்வதற்குரிய கருத்திட்டம்.. நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல்

• இலங்கையில் ஆபத்தான கழிவுகள் முகாமைத்துவ ஒழுங்குவிதிகளை மேற்கொள்ளல்.

- இலங்கையில் ஆபத்தான கழிவுகள் முகாமைத்துவத்திற்குரிய ஒழுங்குவிதிகள் (இலக்கம் 1534.18 கொண்ட 2008 பெப்ரவரி 01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) மேற்கொள்ளலின் ஒருபகுதியாக 2018 ஆம் ஆண்டினுள் அட்டவணைப்படுத்தப்பட்ட கழிவுகள் முகாமைத்துவ அனுமதிப்பத்திரங்கள் (SWML) 343 வழங்கப்பட்டன.

- பயனுள்ள வகையில் ஆபத்தான கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான பிரதான தடையாக ஆபத்தான கழிவுப் பொருட்கள் பற்றிய தரவு முறைமை இனன்மையை குறிப்பிடமுடியும். எனவே, நாட்டில் உருவாக்கப்பட்ட செய்யப்பட்ட ஆபத்தான கழிவுப் பொருட்கள் தொடர்பான தரவுகளை ஒன்று திரட்டுவதற்கான வெளிக்கள ஆய்வொன்று நடாத்தப்பட்டு ஆபத்தான கழிவுப் பொருட்கள் அளவை கணித்தல் இலங்கை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (ITI) மூலம் மேற்கொள்ளப்பட்டதோடு இந்த ஆய்வு அறிக்கையின் வரைவு மத்திய சுற்றாடல் அதிகார சபைக்குக் அலங்கை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

• பாசல் உடன்படிக்கையை செயற்படுத்தல்

- பாசல் உடன்படிக்கையை செயற்படுத்துவதற்காக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய இணைப்பு குழுவின் (NCC) மூலம் நாட்டில் ஆபத்தான கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பாக தேவையான தொழில்நுட்ப விடயங்களுக்குரிய தீர்வுகளை மேற' கொள்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு உதவிகளை வழங்குவதற்கு தொழில்நுட்ப நிபுணர்கள் கொண்ட குழுவொன்று நியமனம் செய்யப்ட்டுள்ளது.

- ஆபத்தான இரசாயனத் பொருட்கள் மற்றும் ஆபத்தான கழிவுகளை இறக்குமதி செய்தல் தொடர்பாக நடைமுறைப்படுதப்படுகின்ற விதிகளுக்கு ஏற்ப பாசல் உடன்படிக்கையின் B" பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ள ஆபத்தான இரசாயன பொருட்கள் மற்றும் ஆபத்தான கழிவுகள் இறக்குமதிக்காக 2018 ஆழ் ஆண்டினுள் 230 அனுமதிகள் வழங்கப்பட்டன.

- பாசல் உடன்படிக்கையை இலங்கையில் செற்படுத்தும் அதிகாரமளிக்கப்பெற்ற நிறுவனமாக 2018 வருடத்தினுள் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் பாசல் உடன்கடிக்கையின்" A" பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ள கழிவுகள் இந்நாட்டின் எல்லையூடாக போக்குவருத்துச் செய்வதற்கான 47 அனுமதிகளும், தேச எல்லையூடாக இந்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்வதற்கான 8 அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

• இரசாயனப் பொருட்கள் முகாமைத்துவம்

இரசாயனப் பொருட்கள் முகாமைத்துவம் செய்தலின் கீழ் இரசாயனப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக சுற்றாடல் சிபாரிசுகள் 128 உம், இரசாயனப் பொருட்கள் இறக்குமதி செங்வதற்கான அனுமதிகள் 293 உம் வழங்கப்பட்டன.

• ரொடர்டேம் உடன்கடிக்கை நடைமுறைப்படுத்தல்

இரசாயனப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பான தொழிநுட்ப ஆலோசனைக் குழு (TACMIC) 3 கூட்டங்கள் 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டதோடு அக்கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய வெளள்ளை எஸ்பெஸ்டோ இறக்குமதி செய்வதற்கான இறக்குமதி அனுமதிகள் 32 பெற்றுக்கொடுக்கப்பட்டன.

• இரக்ரோனிக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம்

முறையற்ற விதத்தில் இலக்ரோனிக் கழிவுப் பொருட்களை சேகரிப்போர்களை அறிவூட்டும் நிகழ்ச்சிததிட்டங்களை நடத்துவதற்கு இரசாயன மற்றும் ஆபத்தான கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ பிரிவு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, களுத்துறை மாவட்டத்தில் விதிமுறைப்படாதவாறு வழிநடாத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வோர்களை அறிவூட்டும் செயலமர்வொன்று நடாத்தப்பட்டது.

• அறிவுறுத்தல் நடவடிக்கைகளுக்குத் தேவையான பொருட்களைத் தயாரித்தல்

2018 ஆம் ஆண்டினுள் கீழுள்ள சிறு நூல்கள் மற்றும் கைநூல்கள் அச்சிட்டு வெளியடப்பட்டன.

- சிங்கள் மொழியில் எஸ்பெஸ்டோ முகாமைத்துவ வழிகாட்டல் துண்டுப்பிரசுரம் 5000 பிரதிகள்.

- சகிச்சசை கழிவுப்பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பான துண்டுப்பிரசுரம் 5000 பிரதிகள்.

- பாதரசம் முகாமைத்துவம் தொடர்பான துண்டுப்பிரசுரம் 7000 பிரதிகள்.சுற்றாடல்

முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு

சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீட்டுப் பிரிவு

கருத்திட்டத்தின் மூலம் ஏற்படுகின்ற சுற்றாடல் தாக்கங்களை மதிபீடு செய்யும் நோக்கில் அனைத்து உரிய கருத்திட்டத்தின் சுற்றாடல் தாக்கங்கள் மதிபீட்டு நிருவாக செயற்பாடுகளை பேணுதல் இந்த பிரிவின் பிரதான பணியாகும்.

• உரிய கருத்திட்டங்களின் சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீடு.். அடிப்படை சுற்றாடல் பரிசீலனை EIA/ IEE செயற்பாடுகளை மேற்கொள்ளல்

2018 ஆம் ஆண்டில், தேசிய சுற்றாடல் சட்டத்தின் IVC பிரிவின் கீழ் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டிய 50 கருத்திட்டங்களுக்கான இப்பிரிவினால் நடவடிக்கையெடுக்கப்பட்டர். இந்தக் கருத்திட்டங்களில் 17 கருதிட்டங்களுக்கான அனுமதி வழங்கப்பட்டதோடு, 33 கருதிட்டங்களுக்கான அனுமதி வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.சுற்றாட்ல் தாக்க மதிப்பீட்டு செயற்பாடுகளின் கீழ் அனுமதி வழங்க வேண்டி 19 கருத்திட்டங்கள் கருத்திட்டங்களுக்கு அனுமதி வழங்கும் நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீடு.். அடிப்படை சுற்றாடல் பரிசீலனை EIA/ IEE செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஏனைய நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்

சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீட்டுப் பிரிவின் மூலம் உரிய 50 கருத்திட்டங்களுக்கு தொழில்நுட்ப உதவி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீட்டு பிரிவின் மூலம் சுற்றாடல் மதியுரைச் குழு கூட்டங்கள் 14 நடாத்தப்பட்டன.

• வெற்றிகரமான செயற்பாடுகளுக்காக நிலவும் சூழல் தாக்கங்கள் தொடர்பான சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் நடவடிக்கைகளை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தல்

சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீட்டு பிரிவின் மூலம் சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீட்டு நிபந்தனைகள், கருத்திட்டங்களை அனுமதிக்கின்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் பெயர்ப் பட்டியல் மற்றும் தற்போது காணப்படுகின்ற உரிய கருத்திட்ட ஆவணத்தை திருத்தம் செய்வதற்காக சட்ட வரைவு திணைக்களம் உட்பட உரிய பங்குதாரத்தரப்புக்களுடன் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் பல நடாத்தப்பட்டன. இந்த திருத்தத்தின் இறுதி வரைவு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்காக சட்ட வரைவு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

• அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்களை பின்னாய்வு செய்தல்

மத்திய சுற்றாடல் அதிகார சபை ஊடாக அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்ப செயற்படுகின்றனவா என்பதை தேடிப் பார்ப்பதற்காக் சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீட்டுப் பிரிவினால் தொடர்ச்சியாக கருத்திட்ட பின்னாய்வு செய்யப்படுகின்றன. அதன் கீழ் 2018 ஆம் ஆண்டில் 30 கருத்திட்டங்கள் பின்னாய்வு செய்யப்பட்டன.

• அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கான சுற்றாடல் மூலங்கள் (E- Flows) தீர்மானிப்பதற்கான வழிகாட்டல் நூல்

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீடு செய்தல் பிரிவினால் இலங்கையினுள் நீர் வடிதல் மற்றும் திசை திருப்புதுல் கருத்திட்டங்கள் பல மதிப்பீடு செய்வதற்காக ஆராய்ச்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் பயனாக சுற்றாடல் மூலங்களைத் தீர்மானிக்கும் போது பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய கைநூல் தயாரித்து வெளியிடப்பட்டுள்ளது

இயற்கை வளங்கள் முகாமைத்துவ அலகு

சுற்றாடல் பாதுகாப்பு வலயங்களை (EPAs) பிரகடனம் செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல், இயற்கை வள முகாமைத்துவம் மற்றும் தேசிய ஈரலிப்புச் நில கொள்கை - 2006 இல் குறிப்பிடப்பட்டுள்ள மூலோபாயங்கள் மற்றும் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தல் இயற்கை வளங்கள் முகாமைத்துவ அலகின் பிரதான பணிப்பொறுப்பாகும்.

- **கல்வி உபகரணங்கள்**

2018 ஆம் ஆண்டில் இயற்கை வளங்கள் முகாமைத்துவப் பிரிவினால் கீழ்வரும் கல்வி உபகரணங்கள் தயாரிக்கப்பட்டன

- மணல் வளங்கள் தொடர்பான பயிற்சி கைநூலின் தமிழ் மொழிபெயர்ப்பு (125 பிரதிகள் மற்றும் இறுவட்டு) அச்சிடப்பட்டதோடு மாகாண மற்றும் மாவட்ட அலுவலகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

- ‘‘ஈர நிலங்களின் விந்தை" தமிழ் மொழிபெயர்ப்பின் 125 பிரதிகள் அச்சிடப்பட்டன.

- பொல்கொட சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசம் தொடர்பான துண்டுப்பிரசுரம் தயாரிக்கப்பட்டு 5000 பிரதிகள் அச்சிடப்பட்டன.

- பன்சலாதென்னை, வராதென்ன ஹக்கிந்த சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசம் தொடர்பான துண்டுப்பிரசுரம் தயாரிக்கப்பட்டு அச்சிடுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டது

- மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மாகாண அலுவலகத்தினால் சுற்றாடல் பரிந்துரை வழங்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது பின்பற்றவேண்டிய வழிகாட்டுநெறிகள் (சுற்றாடல் சிபாரிசு வழங்கப்பட்ட கடிதத்தில் பொது மாதிரி, செவ்வை பார்த்தல் பட்டியல், விசாரணை அறிக்கைகள் மாதிரி என்பன) தயாரிக்கப்பட்டன.

-‘‘ஈர நில இலங்கை” சஞ்சிகைக்காக ஈர நிலம் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள் 7 கிடைக்கப்பெற்றதுடன் அவை பிரதம தொகுப்பாளரால் தொகுக்கப்பட்டன. இந்த சஞ்சிகையின் 500 பிரதிகள் அச்சிடப்பட்டன.

- **சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களைப் (EPAs) பிரகடனம் செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்**

இயற்கை வளங்கள் முகாமைத்துவப் பிரிவு, தனிச்சிறப்பான சுற்றாடல் இரட்சனம் கொண்ட மற்றும் பாரியளவில் ஆபத்துக்கு உட்படக்கூடிய பிரதேசங்களை சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களாக பிரகடனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் 2018 ஆம் ஆண்டு வரை சுற்றாடல் பாதுகாப்பு 10 பிரதேசங்கள் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. 2018 வருடத்தினுள் மாத்தளை மாவட்டத்தில் பன்சலாதென்ன – மவுஸ்ஸாவ சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசமாக 2018 யூன் 11 ஆம் திகதிய 2075.׳.15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்பட்டது.

- **சுற்றாடல் பாதுகாப்பு பிரதேச முகாமைத்துவம்.**

- முத்துராஜவெல ஈர நிலங்கள் சுற்றாடல் முறைமை பேணிக்காத்தல் பற்றிய அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகளுக்காக உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

- நீர் வீழ்ச்சிகள் பட்டியல் (547) பிரதேச செயலாளர்களின் ஒருங்கிணைப்புடன் இற்றைப்படுத்தப்பட்டது

- 2018 ஆம் ஆண்டில் விஜய பத்திரிகை தனியார் கம்பனி உடன் இணைந்து பன்சலாதென்னை சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசம் தொடர்பான அறிக்கை திரைப்படமொன்று தயாரிக்கப்பட்டது.

- நகல்ஸ் பாதுகாப்பு காடு தொடர்பான அறிக்கையின் வரைவு தயாரிக்கப்பட்டது

- இயற்கை வளங்கள் முகாமைத்துவப் பிரிவினால் ஜின்ஓயா, பதனகந்த, ஹாலிஎல நீரேந்து பிரதேசங்கள், தெடிகமுவ கந்த மற்றும் கோனுமரியாவ நீர் ஊற்று ஆகிய பிரதேசங்கள் சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களாக பிரகடனம் செய்வதற்கு தேவையான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- **பிரகடனம் செய்யப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்கள் கணக்கெடுப்பு மற்றும் எல்லை நிர்ணயம் செய்தல்**

நில அளவைத் திணைக்களத்துடன் இணைந்து மரகல கந்த திருத்தியமைக்கப்பட்ட எல்லை பற்றிய இறுதி ஆய்வு திட்டதத்தைத் தயாரித்தல் தொடர்பான வீதி ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது.

• உலக ஈர நிலங்கள் தின தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொள்ளல்

உலக ஈர நிலங்கள் தினக் கொண்டாட்ட தேசிய நிகழ்ச்சித்திட்டம் 2018 பெப்ரவரி 02 ஆம் திகதி பத்தரமுல்லையில் அமைந்துள்ள" எமது கிராமம்" வளாகத்தில் நடாத்தப்பட்டது. இந்த வைபவத்தில் பிரதம அதிதிகளாக அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களும் மற்றும் மாநகர, மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் அவர்களுமக கலந்து கொண்டனர். இதற்கு அமைவாக மாவட்ட மட்டத்தில் பிரதேச நிகழ்ச்சித்திட்டங்கள் 25 மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் மற்றும் நேரடி ஒருங்கிணைப்பின் கீழ் நடாத்தப்பட்டன.

• இயற்கை வளங்கள் தொடர்பான முறைப்பாடுகள் விசாரணை

இயற்கை வளங்கள் தொடர்பான 28 முறைப்பாடுகள் நேரடியாகவும் மற்றும்" சனாதிபதிக்கு சொல்லுங்கள்" நிகழ்ச்சித்திட்டம் ஊடாகவும் கிடைத்துள்ளன, இம்முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக இயங்கை வளங்கள் முகாமைத்துவப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டுப் பிரிவு

இந்த அலகு புதிதாக தாபிக்கப்பட்டுள்ளதோடு அப்பிரிவின் நோக்கமாக இருப்பது சுற்றாடல் தாக்கங்களை ஏற்படுத்துகின்ற கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டு செயற்பாடுகளை மேற்கொள்வாகும்.

• இலங்கையில் மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டு மூலோபாய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான சட்ட சட்டகத்தைத் தயாரித்தல்

- மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கோரிக்கைக்கிணங்க குறிப்பிடதக்களவு சூழல் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய கொள்ளைகள் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிதிட்டங்களுக்கான மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டு செயற்பாடுகளை அறிமுகம் செய்வதற்கான சட்ட வரைவைத் தயாரிக்குமாறு அமைச்சரவையினால் சட்ட வரைவு திணைக்களத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது

- மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டு செயற்பாடுகளுக்குரிய ஏற்பாடுகளை தேசிய சுற்றாடல் சட்டத்தில் அறிமுகப்படுத்துவது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் இரண்டு மதியுரைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

• முன்னோடி அடிப்படையில் சுற்றாடல் மதிப்பீட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பங்குதாரத் தரப்புக்களை பயன்படுத்தி கொள்ளல்

- நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஆலோசனையுடன் 76 கருத்திட்டங்களைக் கொண்ட நீர்ப்பாசன, நீர்வள பிரிவின் திட்டத்திற்காக மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டு ஆராய்ச்சியொன்று மேற்கொள்ளப்பட்டது. இந்தத் திட்டத்திற்காக மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிப்பதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் உதவி வழங்கப்பட்டது

- நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சின் காலநிலை மாற்றத் தாக்கங்களைக் குறைத்கும் கருத்திட்டம் (CRIP), ஆற்றுப்பள்ளத்தாக்கு 4 இல் காலநிலை மாற்றங்களின் தாக்கங்ளை குறைக்கும் கருத்திட்டத்தின் திட்டத்திற்கான மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டுகள் 4 நடாத்தப்பட்டன. மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை மதிப்பிடலுக்கு உதவி வழங்கப்பட்டது.

- மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் கங்வெல்லை பிரதேச செயலாளர் பிரிவில் தித்தெணிய பிரதேசத்தில் காணப்படுகின்ற கற்குழிகள் காரணமாக ஏற்படக்கூடிய திரண்ட விளைவுகளை ஆராய்வதற்காக இப்பிரதேச மக்களுக்கு மேற்படி பிரதேசத்தில் காணப்படுகின்ற நிலக்கீழ் நீருக்கு தாக்கத்தை ஏற்படுத்தாதவாறு கருங்கல் அகழ்வு அனுமதி வலயங்களை திட்டமிடல் செய்வதற்காக மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டு ஆராய்ச்சியொன்று ஆரம்பிக்கப்பட்டது.

- இலங்கை பேண்தகு சக்தி அதிகார சபை, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு ஆகியவற்றின் வழிகாட்டலிக் கீழ் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஆலோசனையுடன் ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களை தாபிப்பதற்கான மூலோபாய சுற்றாடல் மதிப்பிடல் ஆராய்ச்சியொன்று மேற்கொள்ளப்படுகின்றது.

சுற்றாடல் கல்வி மற்றும் அறிவூட்டல்
சுற்றாடல் கல்வி மற்றும் அறிவூட்டல் பிரிவு

சூழல் தொடர்பாக சமூகத்தில் பல்வேறு அடையிலக்குகள் கொண்ட குழுக்களின் அறிவு மற்றும் கல்வியை மேம்படுத்தல் மூலம் சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் சுற்றுசூழல் நட்பான முகாமைத்துவ செயற்பாடுகளை ஏற்படுத்துவதற்காக அவர்களின் தொழிபாட்டு பங்குபற்றலை பெற்றுக் கொள்ளல் கல்வி மற்றும் அறிவூட்டல் பிரிவின் பிரதான பணிப்பொறுப்பாகும். இந்த அலகு பிரதானமாக் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்கின்றது.

- **பாடசாலை மாணவர்களுக்கான ஓசோன் படை, காலநிலை மாற்றங்கள் மற்றும் வாயு மாசடைவு பற்றிய நாடளாவிய வினாவிடைப் போட்டி (ஓசோன் மாணவர் வினாக்கள்)**

2018 ஆம் ஆண்டில், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, வாயு வள முகாமைத்துவ மற்றும் தேசிய ஓசோன் பிரிவின் தலைமையில் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஒத்துழைப்புடன் வெள்ளி மற்றும் தங்க சுற்றாடல் முன்னோடிகள் தொடர்பாக சிங்களம் மற்றும் தமிழ் அமாழிகள் இரண்டும் உள்ளடக்கும் வகையில் தேசிய மட்டத்தில் இந்த நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

- **சுற்றாடல் முன்னோடிகளுக்காக ஓசோன் படை சேதமடைதல் மற்றும் ஏனைய சுற்றுச்சூழல் உணர்திறன் பாடங்கள் பற்றி அறிவூட்டல் (முகாம்) தொடர்.**

2018 ஆம் ஆண்டினுள் மத்திய சுற்றாடல் அதிகார சபை மூலம் மெயற்படுத்தப்பட்ட சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் சார்ந்ததாக அதிக புள்ளிகள் பெற்றுக் கொண்ட தங்கப் பதக்கம் சென்றவர்கள் தொடர்பாக இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முகாம் நிகழ்ச்சித்திட்டங்கள் 05 மாகாண மட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டன.

சுற்றாடல் மேம்பாடு

இந்த அலகு புதிதாக தாபிக்கப்பட்டுள்ளதோடு சுற்றாடல் கல்வி அறிவூட்டல் மற்றும் பசுமை விருது கருத்திட்டத்தை மேற்கொள்வதற்காக தாபிக்கப்பட்டது.

- **கல்விப் பொருட்களைத் தயாரித்தல் மற்றும் மீண்டும் அச்சிடல் (சுவரொட்டிகள், சிறுநூல்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள்)**

அறிவைப் பரப்புவதன் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய 3 மொழிகளிலும் 3 தலைப்புக்களில் 9 துண்டுப்பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டன.

- **கண்காட்சிப் பண்டங்கள் உற்பத்தி**

பொதுமக்கள் காண்காட்சிகளுக்கு பயன்படுத்திக் கொள்ளக் கூடிய கட்டமைக்கப்பட்ட அடுப்புடன் கூடிய உயிரியல் வாயு அலகு, கல் மற்றும் கனியம் அடங்கிய கனிபொருள் கொள்கலள், சக்தி சேமிப்பு அடுபபு மற்றும் தாவர உருமாதிரிகள் இந்த பிரிவினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

- **சொபாகெத நிலையங்களில் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல்**

4 சொபாகெத நிலையங்கள் ரூமஸ்சல, குண்டசாலே, கேகாலை மற்றும் அத்திதிய ஆகிய பிரதேசங்களில் செயற்படுவதோடு இதன் மூலம் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாததுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில், பாடசாலை மாணவர்கள் மற்றம் ஏனைய இலக்குக் குழுக்களை அறிவூட்டும் 77 நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த நிலையங்களில் நடாத்தப்பட்டன.

- **சமகாலப் பிரச்சினைகள் பற்றிய அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை (டெங்கு மற்றும் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம்) நடாத்துதல்**

டெங்கு மற்றும் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் அறிவூட்டும் 21 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

- **கலாசார விழாக்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை (கண்டி, அநுராதபுரம், பொலநறுவை, கதிர்காமம், நல்லூர் மற்றும் தலவில) நடாத்துதல்**

மாகாண மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள், சுற்றாடல் முன்னோடிகள் மற்றும் பொதுமக்களின் பங்குபற்றலுடன் அறிவூட்டும் மற்றும் சுத்தம் செய்யும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

- **உலக சுற்றாடல் தின நிகழ்ச்சித்திட்டம்**

- உலக சுற்றாடல் தின தேசிய நிகழ்ச்சித்திட்டம் அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் 2018 யூன் மாதம் 04 ஆம் திகதி கேகாலை நகரத்தில் நடத்தப்பட்டதோடு பாடசாலை மாணவர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர்களை பிரதிநிதித்துவப்படுத்தி 3000 இற்கு மேற்பட்டோர் குழுவொன்று இவ்விழாவின் கலந்து கொண்டனர்.

- இதற்கு மேலதிகமாக, உலக சுற்றாடல் தினத்திற்கு இணையாக மரக்கன்றுகள் நாடல், கழிவு முகாமைத்துவம் மற்றும் சுவரொட்டி மற்றும் துண்டுப்பிரசுரம் விநியோகம் ஆகிய நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளிட்ட 25 மாவட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

- **தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டம் (வனரோபா)**

தேசிய மர நடுகைத் தினத்தை கொண்டாடும் முகமாக ஒக்டோபர் முதலாம் திகதி நாடு முழுவதும் பாடசாலை வளவு மறற்றும் நீரேந்தும் பிரதேசங்களில் பழமரக்கன்றுகள் மற்றும் பலகை முக்கியத்துவதம் கொண்ட தாவரங்கள் பயிரிட்டு மரம் நடல் வேலைத்திட்டங்கள் 25 நடாத்தப்பட்டன.

- **அரச அலுவலர்களுக்கான சுற்றாடல் அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துதல்**

சுற்றாடல் பாதுகாப்புக்காக அரச அலுவலர்களிடமிருந்து சிறந்த சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக கிராமிய மற்றும் நகர மட்டத்தில் 755அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

- **சனாதிபதி சுற்றாடல் விருது நிகழ்ச்சி**

சனாதிபதி சுற்றாடல் விருது நிகழ்ச்சித்திட்டம் பல்வேறு 19 வகுதிகளின் கீழ் சுற்றுசூழல் நட்பான நிறுவனங்களை இனங்கண்டு கொள்வதற்காக மேற்கொள்ளப்படுகின்றன. செயற்திறன் மட்டம், தங்கம், வெள்ளி, வெண்கலம் மற்றும் திறமை என்றவாறு வகுப்பீடு செய்யப்பட்டுள்ளதோடு வெற்றியாளர்களுக்கு 60 பதக்கங்கள் வழங்கப்பட்டன. 5 வகுதிகளின் கீழ் தங்கப் பதக்கத்திற்கான வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இந்த ஆண்டில் சனாதிபதி சுற்றாடல் விருது விழா, பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களைப் பிரதிநிதிப்படுத்தி 1500 இற்கும் மேற்பட்ட குழுவினரின் பங்குபற்றலுடன் ஒக்தோபர் மாதம் 19 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

- **சொபாகெத வானொலி நிகழ்ச்சித்திட்டம்.**

2018 ஆம் ஆண்டில் சொபாகெத ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் 44 ஒலிபரப்புச் செய்யப்பட்டன. இந் நிகழ்ச்சிகளில் வளவாளர்கள் 44 பேர் மற்றும் சுற்றாடல் முன்னோடிகள் 41 பேர் கலந்து கொண்டதோடு இந்த நிகழ்ச்சியின் போது செய்திக் கடிதங்கள் 132 ஒளிபரப்புச் செய்யப்பட்டன.

- **அரச சார்பற்ற நிறுவனங்களைப் பதிவு செய்தல்**

இந்த நிகழ்ச்சிதிட்டத்திக் கீழ் அரச சார்பற்ற நிறுவனங்கள் 47 பதிவு செய்யப்பட்டுள்ளன. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் செயற்பாடுகள் தொடர்பாக மக்களை விழிப்புணர்வூட்டுவதற்கு மற்றும் சூழல் தொடர்பாகவுள்ள பிரச்சனைகள் பற்றி கலந்துரையாடல் தொடர்பாகவும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சியொன்று ஒழுங்கு செய்யப்பட்டதோடு இந்த நிகழ்ச்சிக்காக 94 அரச சார்பற்ற நிறுவனங்களைப் பிரதிநிதித்துவம் செய்து 150 உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

- **சுற்றாடல் செய்தி மடல்**

  சுற்றாடல் முன்னோடிகளின் சுற்றாடல் செயற்பாடுகள் மற்றும் ஏனைய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கும் வகையில் வருடாந்தம் இருதடவை சுற்றாடல் செய்தி மடல் வெளியிடப்படுவதுடன் அது 2018 ஆம் ஆண்டு யூன் மற்றும் திசெம்பர் மாதங்களில் வெளியிடப்பட்டன.

- **ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு**

  ஆய்வு மற்றும் அபிவிருத்தி பிரிவின் பிரதான குறிக்கே.ாள்கள் சுற்றாடல் நிலைமை வீழ்ச்சி மற்றும் அதனை தவிர்த்துக் கொள்ளல் தொடர்பான ஆராய்ச்சி/ கல்வி/ ஆய்வு செய்தல், மேம்படுத்தல் மற்றும் இயைபாக்கல். அந்த தகவல்களை பரப்புதுல் மற்றும் இயற்கை வளங்களை நிலைத்திருக்கத்தகுந்தவாறு பயன்படுத்தி கொள்வதற்கு புவியியல் தரவு முறைமை (GIS) மற்றும் சேய்மைத் தொடர்பாடல் (RS) தொழில்நுட்பத்தை பயன்படுத்தல்.

- **பல்வேறு துறைகளின் நிபுணர்கள் அடங்கிய ஆராய்ச்சி குழுவின் உருவாக்கம்**

  மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஆராய்ச்சி மதியுரை குழுவின் வழிகாட்டலின் கீழ் இந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டில் 06 ஆராய்ச்சி முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றதுடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஏற்பாடுகளிற்கு இசைவான 04 ஆராய்ச்சி பிரேரணைகள் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் 02 ஆராய்ச்சி கருத்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டதோடு 08 ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **சுற்றாடல் மதிப்பீடு செய்வதற்காக உயிரியல் பல்வகைமை சுற்றாடல் முறைமை சேவைச் சுட்டிகள் மற்றும் வழிகாட்டல்களை மேம்படுத்தல்.**

  இந்த ஆராச்சியின் நோக்கமாவது, சுற்றாடல் மதிப்பீட்டு ஆய்வு செய்யும் போது பல்வேறு சுற்றுசூழல் முறைமை மூலம் மேற்கொள்ளப்படும் சேவைகள் பற்றிய தேவையான அறிவை விருத்தி செய்வதற்காக நாட்டின் உயிரியல் பல்வகைமை சுற்றாடல் முறைமைகள் பற்றிய இடம் சார் தகவல் முறைமையைக் கட்டமைத்தல். தற்போது எதிர்பார்க்கப்படுகின்ற ஆராய்ச்சியை மேற்கொள்ளும் வழிமுறை இனங்காணப்பட்டுள்ளது.

- இலங்கையில் கட்டுபொல் பயிர்ச்செய்கை மூலம் ஏற்படும் சுற்றாடல் மற்றும் சமூக சிக்கல்களை இனங்கண்டு கொள்வதற்காக ஆராய்ச்சி செய்தல் (அவதானிப்பு மற்றும் சிபாரிசு)

  இந்த ஆராய்ச்சியின் இறுதி அறிக்கை கட்டுப்பொல் பயிர் செய்கைக்கான பரிந்துரைகள் அடங்கியதாக தயாரித்து வெளியிடப்பட்டது. 2018.09.11 ஆம் திகதி நடத்தப்பட்ட தேசிய பொருளாதார சபை மூலம் இவ்வறிக்கையின் சிபாரிசுகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு இது தொடர்பாக அமைச்சரவைப் பத்திரமொன்று முன் வைக்கப்பட்டுள்ளது.

- **மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஏற்பாடுகளினஇசைவான முதன்மை துறைகளை அடையாளம் காணுதல்**

இயற்கை வள முகாமைத்துவும், சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு, கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம், சுற்றாடல் கல்வி மற்றும் அறிவூட்டல் மற்றும் சுற்றாடல் சட்டம் ஆகிய ஒவ்வொரு துறைகளின் வளவாளர்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிரேட்ட உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் இனங்காணப்பட்ட ஆராய்ச்சி முதன்மைத் துறைகள் (சிக்கல்கள் மற்றும் ஆராய்ச்சி தலைப்பு) தொடர்பாக இறுதி தீர்மானத்துக்கு வருவதற்காக தொழிபாட்டுக்குழுக் கூட்டம் நடாத்தப்பட்டது. இது தொடர்பான அறிக்கை வரைவு படுத்தப்பட்டுள்ளது

- **சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக வான்வழி அவதானிப்பு செயற்பாடு**

வான் வழி அவதானிப்பு செயற்பாட்டின் மூலம் இலங்கையின் சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக இலங்கை வான்படையுடன் கூட்டிணைப்பு நிகழ்ச்சியொன்று ஆரம்பிக்கப்பட்டது. வான்படை உத்தியோகத்தர்கள் குழுவினால் இது தொடர்பாக அறிவுறுத்தும் பயிற்சி நிகழ்ச்சிகள் செப்தெம்பர் 12 ஆம் திகதி மற்றும் திசெம்பர் 14 ஆம் திகதிகளில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிரேட்ட முகாமைத்துவும் மற்றும் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்டது.

• சுற்றாடல் வளங்கள் நிலைத்திருக்கத்தகு முகாமைத்துவம் தொடர்பாக இலங்கையின் சுற்றாடல் வளங்கள் பற்றிய வலையமைப்பு இடம் சார் தரவு முறைமையை கட்டியெழுப்புதல்.

நிருவாக எல்லைகள், வனசீவராசிகள் வளங்கள், ஒதுக்குக் காடுகள், தொல்பொருள் முக்கிய இடங்கள் போன்ற பல்வேறு தரவுகள் அடங்கியதாக இந்த வலையமைப்பு இடம்சார் தரவு முறைமையை இற்றைப்படுத்தல் 15 மாவட்டங்களில் கைத்தொழிற்சாலைகள் பற்றிய உலக அமைவிட முறைமை (GPS) நாளதுவரையாக்கம் செய்யப்பட்டதோடு இந்த தரவு வலையமைப்பு தரவுத் தொகுதிக்கு சேர்க்கப்பட்டது

•அரசியல் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டிய உரிய கைத்தொழில் செயற்பாடுகள்/ சேவை தொடர்பான இடம்-சார் தரவு முறைமை இற்றைப்படுத்தல்

சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டிய உரிய கைத்தொழில் செயற்பாடுகள்/ சேவை தொடர்பான புவியியல் இடம்சார் தரவு முறைமை ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகு மூலம் மாதாந்தம் இற்றைப்படுத்தப்படுகின்றது. மேற்படி தரவு தொகுதிக்கு அமைய 2018 வருட இறுதியில் பாரிய அளவிலான மாசு வெளியிடல் செயற்பாடுகள் கொண்ட 13,058 கைத்தொழில்களும், மத்திய அளவிலான மாசு வெளியிடல் செயற்பாடுகள் 10,601 கைத்தொழில்களும் இலங்கையில் நிறுவப்பட்டுள்ளன.

• GPS முறைமையை அடிப்படையாக கொண்ட சுற்றாடல் தகவல் முறைமையை மேலதிக அபிவிருத்தி செய்தல் மற்றும் இற்றைப்படுத்தல்

நாட்டின் மைய சுற்றாடல் தரவு முறைமை இது என்பதோடு சுற்றாடல் திட்டமிடல், முகாமைத்துவம், பின்னாய்வு, பகுப்பாய்வு, அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கான பொருத்தமான இடங்கள் அடையாளம் காணுதல், அனர்த்தங்களுக்கு தயாராகும் திட்டத்தைத் தயாரித்தல் மற்றம் அறிவூட்டும் நிகழ்ச்சிதிட்டங்களுக்காக இந்த தகவல் முறைமை பயனுள்ளதாகும்.

• துறைசார் மாவட்ட சுற்றாடல் விவரத்தொகுப்பு அடங்கிய இறுவட்டு தயாரித்தல் மற்றும் அச்சிடல்

துறைசார் மாவட்ட சுற்றாடல் உருத்தோங்கள் அந்தந்த மாவட்டங்களின் பிரதேச செயலகப்பிரிவு மட்டத்தில் சுற்றாடல் தகவல் மற்றும் சமூக பொருளாதார தகவல்கள் அடங்கிய.2018 ஆம் ஆண்டினுள், மாத்தளை, அம்பாறை, வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் மாவட்ட சுற்றாடல் விவரத் தொகுப்பு தயாரித்து CD அச்சிடப்பட்டது.

இணக்கப்பாட்டு பின்னாய்வுப் பிரிவு

இணக்கப்பாட்டு பின்னாய்வு, அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கான அனுமதி வழங்கும் செயற்பாட்டின் அடிப்படை அங்கமாகும். அவ்வாறே சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம், அட்டவணைப்படுத்தப்பட்ட கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ அனுமதிப்பத்திரம்)SWML), சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீடு மற்றும் அடிப்படை சுற்றாடல் பரிசோதனை வழிமுறைகளுக்குரிய நிலைமைகள் மற்றும் நிபதனைக்கு ஏற்ப உரிய செற்பாடுகள்/அட்டவணைப்படுத்தப்பட்ட கழிவுப்பொருட்கள் முகாமைத்துவ செயற்பாடுகள்/ உரிய கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை ஒழுங்குமுறையாக பின்னாய்வு செய்வதற்குரிய பொறிமுறையொன்றை உருவாக்குதல் கட்டாயமாகும்.

• முறையான இனக்கப்பாட்டு பின்னாய்வு வலைமைப்பொன்றைத் தாபித்தல் மற்றும் செயற்படுத்தல்

- 2018 ஆம் ஆண்டினுள் இணக்கப்பாட்டு பின்னாய்வு செயற்பாடுகளில் பிரதான வகையில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திர செயற்பாடு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டதோடு மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்கள் மூலம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திர பின்னாய்வு 12941 மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறே மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற இனக்கப்பாட்டு பின்னாய்வு செயற்பாடுகளின் வினைத்திறனை பரிசீலனை செய்வதற்காக இனக்கப்பாட்டு பின்னாய்வுப் பிரிவு பிரதான அடிப்படையில் களனி கங்கை மற்றும் களு கங்கை ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் அமைந்துள்ள கைத்தொழில்கள் தெரிவு செய்யப்பட்டு

பின்னாய்வு செய்யப்பட்டன. அதற்கு மேலதிகமாக, இனக்கப்பாட்டு பின்னாய்வு பிரிவினால் ஏனைய உரிய தொழில்நுட்ப பிரிவுகளின் ஒத்துழைப்புடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உயர் முகாமைத்துவம் அறிவிக்கும் உரிய செயற்பாடுகளுக்குரிய முறைப்பாடுகள் தொடர்பாக பின்னாய்வு செய்யப்பட்டது.
- அடிப்படை சுற்றாடல் பரிசோதனை மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ அனுமதிப்பத்திரத்திற்கான) SWML) இனக்கப்பாட்டு திட்டமிடலுக்கான அடிப்படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விசாரணைப் பிரிவு

பொலிதீன் தடை தொடர்பான ஒழுங்கு விதிகள் மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பான விசேட விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் விசாரணைப் பிரிவின் பிரதான பணிப்பொறுப்பாகும்.

• பொலிதீன் ஒழுங்குவிதிகளை மேற்கொள்ளல்

- இலங்கை பொலிஸாரின் ஆதரவுடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமை காரியாலயம் மற்றும் மாகாண.். மாவட்ட அலுவலகங்கள் மூலம் மொத்த நாடும் உள்ளடக்கும் வகையில் சுற்றிவளைப்பு நடாத்தப்பட்டன. 2018 சனவரி முதல் திசெம்பர் வரையான காலப்பகுதியினுள் 10,327 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒழுங்கு வித மீற்ல் 810 கண்டு பிடிக்கப்பட்டதுடன் மீறுகை தொடர்பாக 250 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

- பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையுடன் இணைந்து சட்டமுரணான உணவு பொதிசெய்தல் 17 கைத்தொழிற்சாலைகள அப்பணிகள் மேற்கொள்ளப்படும் சந்தர்பத்திலேயே சுற்றிவளைக்கப்பட்டன. வாடிக்கையாளர் பற்றிய சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அந்த உற்பத்திகள் கைப்பற்றப்பட்டதோடு குற்றவாளிகளுக்கு தண்டப்பணம் விதிப்பட்ட பின்னர் நீதவானின் கட்டளைக்கமைய மேற்படி விளைபொருட் மீள்சுழற்சிக்கு/ அழிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. சட்டமுரணான உற்பத்தி தொடர்பாக பொதுமக்களை அறிவூட்டல் செய்வதற்காக இந்த இணைந்த சுற்றி வளைப்புக்களின் தகவலகள் இரத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் ஊடாக பிரச்சாரம் செய்யப்பட்டன.

- அரச நிறுவனங்களில் செய்படுகின்ற உண்டிச்சாலைகளும் சுற்றி வளைக்கப்பட்டதோடு சட்டமுரணான உணவு சுற்றுவதற்கான தாள் பயன்படுத்தப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டது. அத்தகைய விளைபொருட்களை பயன்படுத்த வேண்டாமெனவும் சட்டத்திற்கமைய நடவடிக்கை எடுக்குமாறு அவர்களுக்கு எழுத்து மூலம் அறியத்தல் கொடுக்கப்பட்டது. அத்தகைய நிறுவனங்கள் 78 இனங்காணப்பட்டதோடு அவை மேலும் பின்னாய்வு செய்யப்பட்டன.
- சட்டமுரணான உற்பத்தி பற்றிய விசாரணைகளை மேலும் வலுவாக்கம் செய்வதற்காக, பொலிஸ் அதிகார சபையின் 71 ஆம் பிரிவின் கீழ் சட்டமுரணான விளைபொருடகள் கைப்பற்றுவதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் நியாயாதிக்கத்தை இலங்கை பொலிஸாருகக்கு ஒப்படைப்பதற்கு தீர்மானம் செய்யப்பட்டுள்ளதோடு அதற்கமைய சட்ட பிரிவுடன் இணைந்து தயாரிக்கப்பட்ட அந்த ஆவண வரைவு கருத்துக்களை விசாரணை செய்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

- **முறைப்பாட்டுப் பிரிவு**

முறைப்பாடுகளை வினைத்திறன்மிக்கதாக வழிநடாத்துவதற்கான கொறிமுறையொன்று மத்திய சுற்றாடல் அதிகார சபை வசமுள்ளதோடு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் முகாமைத்துவக் குழு கூட்டங்களில் முன்னேற்றம் மாதாந்தம் கலந்துரையாடப்படுகின்றன.

• மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு நேரடியாக கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளை முகாமை செய்தல்

2018 ஆம் ஆண்டினுள், மத்திய சுற்றாடல் அதிகார சபைக்குக் 2770 முறைப்பாடுகள் நேரடியாக கிடைத்துள்ளன. அம்முறைப்பாடுகளில் 2131 முறைப்பாடுகள்)77%) தீர்த்து வைக்கப்பட்டுள்ளதோடு ஏனைய முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டு வருகின்றன.

- " பொது மக்கள் முறைப்பாடுகள் முகாமைத்துவ முறைமை" ஊடாக கிடைத்த முறைப்பாடுகளை முகாமைத்துவம் செய்தல்
- 2018 ஆம் ஆண்டினுள் பொது மக்கள் முறைப்பாடுகள் முகாமைத்துவ முறைமை ஊடாக் 495 முறைப்பாடுகளில் 348 முறைப்பாடுகள் 70% தீர்க்கப்பட்டன. முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக கிடைத்துள்ள தகவல்கள் போதுமானதாக இல்லாத 5 முறைப்பாடுகள் விசாரிக்கப்படவிலலையென்பதோடு முறைமை ஊடாக கிடைத்த 142 முறைப்பாடுகள் தீர்வு காணப்பட்டு வருகின்றன.

- **சட்டப்பிரிவு**

தேசிய சுற்றாடல் சட்டத்தின் சட்டரீதியான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக வசதிகளை வழங்குதல் இந்தப் பிரிவின் பிரதான பணியாகும்.

.

- **வழக்குத் தாக்கல் செய்தல்**

- சட்ட பிரிவினால் 2018 ஆம் ஆண்டினுள் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்ட விசாரணைகள் நிறைவடைந்துள்ளன. அதற்கமைய மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு எதிராக மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் தொடரப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 445 ஆவதோடு புதிதாக 364 மேற்பட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
• 2018 வருடத்தினுள், மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு எதிராக நீதவான் நீதிமன்றங்களில், மாவட்ட நீதிமன்றங்களில், உயர் நீதிமன்றத்தில் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில தீர்ப்பு வழங்கப்பட வேண்டியுள்ள் வழக்குகளின் எண்ணிக்கை 60 ஆகும்

•சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பதிரம் இரத்துச் செய்தல், இடைநிறுத்தம் மற்றும் வழங்கல் நிராகரிப்புச் செய்தல்

கைத்தொழிற்சாலைகள் மூலம் ஏற்படும் சுற்றாடல் மாசு கருதி□ 56 கைத்தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை இரத்து செய்வதற்கு மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்வதை நிராகரிப்புச் செய்து 152 கைத்தொழிற்சாலைகளுக்கு கடிதங்கள் அனுப்புவதற்கும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளன.

- **சட்ட அறிவித்தல்கள்**

சுற்றாடல் மாசுறும் கைத்தொழிலகள் 195 இற்கு எதிராக 2018 ஆம் ஆண்டில் சட்ட அறிவித்தல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

- **ஆலோசனை சேவைகள்**

நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்ற மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு எதிரான மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை மூலம் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளுக்காக பதில வழங்குதல், எழுத்து மூலம் வியஹீடயங்களைத் தெரிவித்தல், ஆட்சேபனை தெரிவிப்பதற்காக சட்ட பிரிவின் அலுவலர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் 81 ஆலோசனை சேவைகளில் கலந்து கொண்டுள்ளனர்.

- **தேசிய சுற்றாடல் சட்டத்தை திருத்தம் செய்தல்**

கொள்ளவை அடிப்படையாகக் கொண்ட அனுமதிப்பத்திர முறைமையை அறிமுகம் செய்ததன் மூலம் “ மாசுபடுத்துவோர் செலுத்தும் கோட்பாடு) Polluter Pay principle)” ஈர நிலங்கள் மற்றும் ஆபத்தான கழிவுப் பொருட்கள் தொடர்பான கொள்கை தேசிய சுற்றாடல் யாப்பிற்கும் அறிமுகம் செய்தல் மற்றும் உள்ள தண்டனை வழங்குதல் தொடர்பான கொள்கையைய் மேம்படுத்தல் ஆகிய புதிய எண்ணக்கருவை அறிமுகப்படுத்துவதற்கு சட்ட பிரிவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த திருத்தத்திற்கு அமைச்சரவை அனுமதியை பெற்றுக் கொள்ளப்பட்டதோடுஉத்தேச திருத்த வரைவு செய்வதற்கான அமைச்சரவை அனுமதிப்பத்திரம் சட்ட வரைவு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற விசேட கருத்திட்டங்கள்

•“ பிலிசரு” தேசிய திண்மக்கழிவுகள் முகாமைத்துவக் கருத்திட்டம்
பிலிசரு கருத்திட்டம் மூலம் நிலைத்திருக்கவாறு சகல உள்ளூராட்சி நிறுவனங்களின் திண்மக்கழிவு முகாமைத்துவ கருத்திட்டங்களை திட்டமிடல் மற்றும் மேற்கொள்ளல்

2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் பௌதீகரீதியான முன்னேற்றம்.

- தற்போதுள்ள கூட்டுப்பசளை நிலையங்கள், புதிய கூட்டுப்பசளை கூடங்கள் மற்றும் ஏனைய திண்மக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டங்களை மேம்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகளை வகுத்தல்.

- உள்ளூராட்சி மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் கோரிக்கைகமைய புதிய உயிரியல் வாயு பிரிவு மற்றும் புதிய கழிவு முகாமைத்துவ கருத்திட்டமொன்றுக்கான நிதியுதவி பெற்றுக்கொடுக்கப்பட்டது
- தற்போது இருக்கும் கூட்டுப்பசளை கூடங்கள் 28 , உயிரியல் வாயு அலகு 01 மற்றம் பிளாஸ்ரிக் மீள்சுழற்ச்சி நிலையமொன்றை மறுசீரமைப்பதற்காக நிதியுதவி வழங்கப்பட்டது.
- உள்ளூராட்சி நிறுவனத்திற்காக உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் கொண்டு செல்வதற்கான வாகன என்பன வழங்குதல்
  இதன் கீழ் பெல பொறி 6, டெக்டர் மற்றும் டேலர் 05 மற்றும் கூட்டுப்பசளை இயந்திரம் 11 கொள்வனவு செய்யப்பட்டதோடு உள்ளூர் அதிகாரசபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

- மனையக கூட்டுபபசளை கூடைகள் மற்றும் கழிவு வேறுபிரிக்கும் கூடைகள் வழங்குதல்
  மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு மனையக கூட்டுப் பசளை கூடைகளட 300 பகிர்ந்தளிக்கப்பட்டன.
- பாடசாலைகள், மதத்தலங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் அரச பாதுகாப்பு படை ஆகியவற்றுக்கு கழிவுகளை வேறுபிரித்து இடுவதற்கான 1161 கூடைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

- **அறிவூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள்**

அறிவூட்டல் மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் 09 நடாத்தப்பட்டன.
விசேட 10 சந்தர்பங்களை உள்ளடக்கி அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.
கருத்திட்டத்தின் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் சிலருக்கு பயிற்சி நிகழ்ச்சிகள் இரண்டு நடாத்தப்பட்டன.

- **கம்பஹா மாவட்ட இணைந்த முகாமைத்துவ கழிவுப் பொருட்கள் முகாமைத்துவக் கருத்திட்டம் - பெதியாகந்த**

" பிலிசரு" கருத்திட்டத்தின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் பெதியாகந்த பிரதேசத்தில் இணைந்த கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. மேற்படி கருத்திட்டம் மூலம் 2018 ஆம் ஆண்டில் கீழுள்ள செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- நாள் ஒன்றுக்கு 05 மெட்றிக் டொன் கொள்திறன் கொண்ட கூட்டுப்பசளை நிலையத்தை நிர்மாணித்தல்
-"புனருதய" ஒதுக்கீட்டின் கீழ் நாள் ஒன்றுக்கு 15 கொள்திறன் கொண்ட கூட்டுப்பசளை நிலையத்தை நிர்மாணித்தல்
- தேவையான இயந்திரம் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக கழிவுப்பொருட்கள் முகாமைத்துவ அதிகார சபைக்கு நிதியுதவி பெற்றுக் கொடுத்தல்
- லீசேட் சேகரிக்கும் தாங்கி மற்றும் சுத்தம் செய்யம் முறைமை (Leachate collection tank& treatment system) நிர்மாணித்தல்

- **சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம்)NEPP)**

இந்த நிகழ்ச்சித்திட்டம் பாடசாலை முறைமை ஊடாக இளம் தலைமுறையினருக்கு நவீன சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகம் செய்யும் நோக்கில் கல்வி அமைச்சுடன் இணைந்து மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- ***"Eco Club" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் தொடர்பான தகவல்கள்***



	Northern	Southern	Western	Eastern	North Central	Uva	Central	Northwest	sabaragamuwa
Nature	2113	1810	1505	284	329	208	692	378	195
Bird	5345	6882	4008	1306	2115	1566	3584	1022	1394
Plant	9731	12657	8756	9051	5521	6543	8825	6643	2416

- ***EPP நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பதக்கங்கள் தொடர்பான தகவல்கள்***



	Northern	Southern	Western	Eastern	North Central	Uva	Central	Northwest	sabaragamuwa
Presidential	3	14	10	6	6	26	10	8	10
Gold	108	73	192	98	26	108	33	96	76
Silver	1129	727	393	317	197	358	569	209	170
Green	4325	3524	1688	4148	1049	2013	3830	623	1768
Pioneers	9208	12068	12585	9090	6379	8458	17630	9557	10700

- இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள்
- அதிபர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் 12 நடாத்தப்பட்டன.
- வலய மட்டத்தில் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்ற ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் 2 நடாத்தப்பட்டன.
- மாவட்ட மட்டத்தில் சுற்றாடல் முன்னோடிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் 05. நடாத்தப்பட்டன.
- சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சிக்களில் உயிர்ப்புடன் பங்குபற்றிய ஆசிரியர்களுக்காக வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சிகள் 2 நடாத்தப்பட்டன.
-

புதிய நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தல்

- பல்கலைக்கழக மாணவர்கள், தொழினுட்பக்கல்லூரி மாணவர்களுக்கு மற்றம் பிரிவெனாக்கள் மற்றும் ஏனைய மத இயக்கங்களுக்காக சுற்றாடல் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்தல்.
- தேசிய கல்விக் கல்லூரி பாடத்திட்டத்தில் சுற்றாடல் முன்னோடி எண்ணக்கருவை அறிமுகம் செய்தல்

• இலங்கையில் திண்மக் கழிவு பொருட்கள் வெளியேற்றல் வசதிகள் நிர்மாணக்கருத்திட்டம் (EDCF கருத்திட்டம்)

- இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், அனுராதபுரம் மாவட்டத்தில் கீரிகுளம், காலி மாவட்டத்தில் மொண்ரோடியாவத்தை, பொலன்னறுவை மாவட்டத்தில் மீகஸ்வெவ மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கீரிமலை ஆகிய இடங்களில் துப்புரவேற்பாட்டுச் நில நிரப்பல் கட்டிடங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
-
- - மேற்படி நிலையங்களின் பொருட்டு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக யானை மனித சேதங்களை மட்டுப்படுத்தல் மீகஸ்வெவ பிரதேசத்தில் மின்சார வேலி நிர்மாணிக்கப்பட்டது
- - மீகஸ்வெவ மற்றும் கீரிமலை கருத்திட்டங்களுக்காக சமூக அடிப்படை ஆராய்ச்சி மற்றும் மக்கள் மதியுரை மற்றும் வெளிப்படுத்தல் (Public Consultation& Disclosure program) மேற்கொள்வதற்காக ரஜரட்ட பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக் இரண்டு ஆராய்ச்சிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. ரஜரட்ட பல்கலைக்கழகம் வெற்றிகரமாக ஆய்வாராய்ச்சியை பூர்த்தி செயதுள்ளதுடன் இறுதி அறிக்கை 2018.09.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. அவ்வாறே யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மூலம் 2018.12.15 திகதி இறுதி அறிக்கை வரைவு முன்வைக்கப்பட்டது.

- 2018 நவம்பர் மாதம் 26 ஆம் திகதி முதல் நவம்பர் 29 ஆம் திகதி வரை கொரிய Eximbank முகவர்கள் இலங்கையில் தரித்திருந்ததோடு, கருத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக விசேடமாக சிவில் வேலை ஒப்பந்தம் வழங்கல் தொடர்பாக 2018 நவம்பர் 26 ஆம் திகதி நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சில் விரிவாக் கலந்துரையாடப்பட்டது.
- இதற்கு மேலதிகமாக, சுற்றாடல் ஊடகவியலாளர்களுக்கு ஒரு நாள் செயலமர்வொன்று 2018.08.21 ஆம் திகதி தொம்பே துப்புரவேற்பாட்டுச் கழிவு முகாமைத்துவ வளாகத்தில் ஒழுங்கு

செய்யப்பட்டதுடன் அது பிலிசரு கருத்திட்டம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஊடகப் பிரிவு இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது

•இலங்கையின் பிரதான நீர் மூலங்களின் நீர் நிலைமையை பின்னாய்வு செய்தல் (JICAகருத்திட்டம்)

- தொழில்நுட்ப ஒத்துழைப்பு கருத்திட்டத்தின் கீழ் 1CA நிபுணர் குழுவின் உதவியுடன் மேற்படி கருத்திட்டம் 2015 ஆம் ஆண்டு மார்ச்ச மாதம் முதல் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையான கால எல்லையினுள் மேற்கொள்ளப்பட்டது.
- மூன்று ஆண்டு கால காலப்பகுதியினுள் இந்தக் கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகள் பின்வருமாறு.
- துறைசார் நீர் இருப்புநிலைத் தரங்களை வர்த்தமானியில் வெளியிடல்.
- மத்திய பரிசோதனைக்கூடத்திற்குத் தேவையான பரிசோதனைக்கூட உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் கொள்வனவு செய்தல்.
- மூன்று ஆண்டு காலப் பகுதியினுள் நீர் முகாமைத்துவம், ஆய்வு கூட தரக்கணிப்பு மற்றும் நீர் மாசுக் கட்டுப்பாடு தொடர்பில் 10 நாட்கள் பயிற்சியொன்று மத்திய சுற்றாடல் அதிகார சபையின் துணை உறுப்பினர்கள் 36 பேருக்கு வழங்கப்பட்டது
- மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மத்திய பரிசோதனைக்கூடத்திற்காக ISO17025 பரிசோதனைக்கூட தரம் பெற்றுக் கொள்ளல்.
- சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திர முகாமைத்துவத்திற்காக மாசுபடுத்தல் மூலங்கள் பெயர் பட்டியல் (PSI) தரவு முறைமையைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்தல்
- தகவல் முகாமைத்துவ முறைமையை தாபித்தல்.
- 2018 ஆண்டில் கருத்திட்டத்திற்காக 1 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதோடு கருத்திட்டத்தின் இறுதி செயலமர்வு 2018 பெப்ரவரி மாதத்தில் நடாத்தப்பட்டது.

• கிரீன் பார்க் (பூங்கா) துப்புரவேற்பாட்டுச் கழிவு பெட்டகம் மற்றும் இணைந்த கழிவு முகாமைத்துவ நிலையம்

- தொம்பே கிரிந்திவெலவில் அமைந்துள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற கிரீன் பூங்கா துப்புரவேற்பாட்டுச் கழிலு சேரத்து வைக்குமிடம் இலங்கையின் முதலாவது துப்புரவேற்பாட்டுச் கழிவு பெட்டகமாகும். இந்த நிலையம் துப்புரவேற்பாட்டுச் கழிவுகளை சேர்த்து வைக்குமிடம், கூட்டுப் பசளை கூடம் மற்றும் பயிற்சி நிலையம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

- 2018 ஆம் ஆண்டில், துப்புரவேற்பாட்டுச் கழிவுப் பெட்டகத்திற்கு தொம்பே பிரதேச சபை மூலம் கழிவுப் பொருட்கள் 866.3 டொன்களும், கொழும்பு மாநகர சபை மூலம் கழிவுப் பொருட்கள 4522 டொன்களும் மற்றும் கம்பஹா மாவட்டத்தில் உள்ள உள்ளூர் அதிகாரசபைகள் மூலம் (பியகமை பிரதேச சபை, கம்பஹா நகர சபை மற்றும் அத்தநகல்ல. பிரதேச சபை) கழிவுப் பொருட்கள் 1686.4 டொன்களும் கொட்டப்பட்டதோடு தொம்பே பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குரிய கைத்தொழிற்சாலைகள் மூலம் ஆபத்தல்லாத தொழினுட்ப கழிவுப் பொருட்கள் 656 டொன்களும் கழிவுகளை சேரத்து வைக்கம் இடத்தில் கொட்டப்பட்டுள்ளன.

- கழிவுப் பெட்டகத்திற்கு மேலதிக கழிவுகளை கையேற்கும் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டில் Glass Wool 25 டொன்கள் கொட்டப்பட்டுள்ளதோடு. தொம்பே பிரதேச சபை அதிகாரப்பிரதேசத்தினுள் உள்ள கைத்தொழிற்சாலைகளுக்கு மேலதிகமாக, குறித்த கழிவுப் பொருட்களை கொட்டுவதற்காக கோரிய கைத்தொழிற்சாலைகள் பலவற்றிட்கு மத்திய

சுற்றாடல்அதிகார சபையின் இனக்கம் தெரிவிக்கப்பட்டதோடு 185.2 மொன் கழிவுகளை கமிவு கொட்டும் இடத்தில் கொட்டப்பட்டன.

- “ கிரீன் பூங்கா”” என்பதன் பொருள் மீண்டும் வலுவாக்கம் செய்து, நில அலங்காரம் மற்றும் கூட்டுப்பசளை மரக்கறி உற்பத்தி மேம்படுத்தலாகும். இது வெற்றிகரமாக இடம்பெறுகின்றது. அதற்கமைய மரக்கறிகள் உற்பத்தி மூலம் கிடைத்த வருமானம் 215,000 ரூபாவென்பதோடு குறைந்த வட்டிவீதத்தின் கீழ் கடன் வழங்கல் மற்றும் பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல் இந்த வருமானத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.
-

தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்கஆபரணங்கள் அதிகாரசபை

இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் தங்கஆபரணக் கைத்தொழில் அபிவிருத்தி,மேம்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்கஆபரணங்கள் அதிகார சபை நிறுவப்பட்டுள்ளது. அதிகார சபையினால் இரத்தினக்கல் சுரங்க அகழ்வுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கல், இரத்தினக்கல் படிவுகளைத் கண்டுபிடித்தல்,ஆபரணக் கைத்தொழிலை மேம்படுத்துவற்குப் பங்களிப்புச் செய்தல்,தங்கத்தின் அளவை நிர்ணயித்தல், இரத்தினக்கற்களை பரிசோதனை செய்தல் மற்றும் மதிப்பீடுசெய்தல், இரத்தினக்கல் ஏற்றுமதிசெய்யும் போது அதற்கானவசதிகளை வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதிகார சபையினால் செய்யப்பட்ட பிரதானபணிகள் (2018.01.01முதல் 2018.12.31வரை)

அனுமதிப் பத்திரம் வழங்குதல் மற்றும் ஒழுங்குபடுத்தல்

இரத்தினக்கல் மற்றும் தங்கஆபரணக் கைத்தொழிலை ஒழுங்குபடுத்துவதற்காக அதிகாரசபையினால் பின்வரும் அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

- **இரத்தினக்கல் அகழ்வு அனுமதிப்பத்திரம்**
- **வணிக அனுமதிப்பத்திரம்**
- **இரத்தினக்கல் வெட்டல் அனுமதிப்பத்திரம்**
- **இரத்தினக்கல் ஏல விற்பனை அனுமதிப்பத்திரம்**
- **இதற்கு மேலதிகமாகசட்ட விரோத இரத்தினக்கல் அகழ்வுகளை சுற்றிவளைத்துப் பிடித்தல்**

ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள்- அனுமதிப்பத்திரம் வழங்கல் மற்றும் சுற்றிவளைப்பு

விபரம்	2018 முதலாம் காலாண்டு	2018 அரண்டாம் கலாண்டு	2018 மூன்றாம் காலாண்டு	2018 நாலாம் காலாண்டு	2018 வருட மொத்தம்	2018 முதலாம் காலாண்டு	2018 அரண்டாம் கலாண்டு	2018 மூன்றாம் காலாண்டு	2018 நாலாம் காலாண்டு	2018 வருட மொத்தம்
	பௌதீகமுன்னேற்றம் (அனுமதிபத்திரஎணிக்கை)					நிதிமுன்னேற்றம் (வருமானம் மில் ரூபா)				
அகழ்வுஅனுமதிப்பத்திரம்	1189	862	1273	2208	**5532**	**7**	**7**	**9**	**12**	**35**
வணிகஅனுமதிப்பத்திரம்	2160	785	827	1023	**4795**	**25**	**8**	**5**	**11**	**49**
வெட்டல் அனுமதிப்பத்திரம்	111	50	16	34	**211**	**0.15**	**0.03**	**0.03**	**0.15**	**0.36**
ஏலவிற்பனைஅனுமதிப்பத்திரம்	153	63	103	96	**415**	**0.3**	**0.14**	**0.24**	**0.32**	**1**
சுற்றிவளைப்பு	490	313	473	353	**1629**	**0.89**	**4.91**	**4.2**	**7**	**17**

அனுமதிப்பத்திரம் வழங்கல் மற்றும் சுற்றிவளைப்பு
மூலம் - புள்ளிவிபரப் பிரிவு -தே.இ.க.ம.த. ஆ. பிரிவு

ஏற்றுமதிசெயலாற்றுகை

இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஏற்றுமதி மூலம், இலங்கையில் கிடைக்கின்ற இரத்தினக்கற்களை ஏற்றுமதிசெய்தல்,கெவுடகட்ட ஏற்றுமதிசெய்தல், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற கரடுமுரடான இரத்தினக்கற்களை வெட்டி மெருகூட்டி புதிய பெறுமதியொன்றைச் சேர்த்து மீளஏற்றுமதி செய்தல்,வைரம் மற்றும் வைரம் பொறிக்கப்பட்ட ஆபரணங்களை மீளஏற்றுமதி செய்தல் என்பனவாகும்.இந்த ஏற்றுமதி செயற்பாடுகள் கொழும்பு தலைமைக் காரியாலயத்துக்கு மேலதிகமாக கட்டுநாயக சர்வதேச விமான நிலைய வளாகத்தில் உள்ள அலுவலகம் மற்றும் இரத்தினபுரி கெவுட நிலையம் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. ஏற்றுமதி பெறுமதியாக அழைக்கப்படுவது உரிய ஏற்றுமதிக்கான மதிப்பீட்டு பெறுமதியாகும்.

இந்த இரத்தினக்கல் மற்றும் ஆபரணம் ஏற்றுமதியின் போது மதிப்பீடு மற்றும் அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக ஏற்றுமதி பெறுமதியில் 0.5% சேவைகட்டணம் அறவிடப்படுகின்றது. இவ்வாறு அறவிடப்படுகின்ற சேவைக் கட்டணம் சபையில் பிரதான வருமானத்தில் சேர்க்கப்படுகிறது.

2017 ஆம் வருட முடிவில் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் பிரதானமாக ஏற்றுமதி செய்யப்பட்ட (கொள்வனவு) 5 நாடுகள் ஐக்கிய அமேரிக்கா,சுவிட்சர்லாந்துகொட்லாந்து,யப்பான், ஜேர்மன் மற்றும் சீனா என்பனவாகும்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணம் ஏற்றுமதிப் பெறுமதி (ரூபா. மில்)

விபரம்	2018 முதலாம் காலாண்டு	2018 அரண்டாம் கலாண்டு	2018 மூன்றாம் காலாண்டு	2018 நாலாம் காலாண்டு	2018 வருட மொத்தம்	2018 முதலாம் காலாண்டு	2018 அரண்டாம் கலாண்டு	2018 மூன்றாம் காலாண்டு	2018 நாலாம் காலாண்டு	2018 வருட மொத்தம்
	ஏற்றுமதிப் பெறுமதி					ஏற்றுமதிசேவைக் கட்டணம் (வருமானம் - மில் ரூபா)				
இரத்தினக்கல்	8615	4254	4156	4678	**21,703**	48	38	22	38	**146**
ஆபரணம்	475	539	484	564	**2062**					
கரடுமுரடான இரத்தினக்கல் இறக்குமதிமற்றும் மீள் ஏற்றுமதி	139	120	197	145	**601**					
வைரம் மீள் ஏற்றுமதி	4326	4670	5134	5263	**19,393**					
வைரஆபரணமீள் ஏற்றுமுதி	65	43	34	48	**190**					
கெவுட.்.கெவுடகட்ட	5	5	5	4	**19**					

.இரத்தினக்கல் மற்றம் ஆபரணங்கள் ஏற்றுமதிப் பெறுமதி
மூலம் - புள்ளிவிபரப் பிரிவு - தே.இ.க.ம.த. ஆ. பிரிவு

ஏற்றுமதி மேம்பாட்டு செயலாற்றுகை

இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களுக்காகக் காணப்படுகின்ற தேசிய சந்தை மற்றும் வெளிநாட்டு சந்தையை விருத்திசெய்து புதிய சந்தைகளை நோக்கி ஏற்றுமதியார்களை அனுப்பிவைத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் புதிய உலக போக்குகளை இனங்கண்டு அது தொடர்பாக தேசிய ரீதியில் பயிற்சிச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. வெளிநாட்டு கண்காட்சிகளை ஏற்பாடு செய்வதன் மூலம் பின்வரும் நன்மைகள் கிடைக்கின்றன.

1. வெளிநாட்டு இரத்தினக்கல் மற்றும் ஆபரணம் வர்த்தக சங்கங்கள் மற்றும் அரச நிறுவனங்களுடன் உறவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளல்

2மிகவும் இலாபகரமான வியாபார பின்னணியை ஏற்படுத்திக் கொள்ளல்.

3. இலங்கை நீல இரத்தினக்கல்லுக்கான தலைநகரம் என்ற விருதை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளல்

4. சந்தை பற்றிய அறிவூட்டல் மற்றும் உரிய விடயங்களை ஏற்றுமதியாளர்களுக்குப் பெற்றுக் கொடுத்தல்.

5. வெளிநாட்டு பொருட் கட்டளைகளைப் பெறுதல் மூலம் அந்நியச் செலாவணியை அதிகரித்துக் கொள்ளல்.

சர்வதேச ஆபரணக் கண்காட்சி – லண்டன்

- **இனங்காணப்பட்டபுதியசந்தை–மியுனிச், ஜேர்மன்**

2018.01.01-2018.12.31 வரை வெளிநாட்டு கண்காட்சி

- சர்வதேச ஆபரணக் கண்காட்சி டோக்கியோ
- ஹெரங்கொங் சர்வதேச வைரம்,இரத்தினம்,முத்து கண்காட்சி HKTDC
- துபாய் லாஸ்வெகாஸ் கண்காட்சி
- தென் மற்றும் தென்கிழக்காசிய கண்காட்சி
- செங்காய் ஆபரண கண்காட்சி
- முனிச் கண்காட்சி - ஜேர்மன்
- சீனா சர்வதேச ஆபரணக் கண்காட்சி - பீஜீங்
- லண்டன் சர்வதேச ஆபரணக் கண்காட்சி
- 15ஆம் CAEXPO கண்காட்சி சீனா
- சீனா சர்வதேச ஏற்றுமதிக் கண்காட்சி செங்காய்

2018.01.01-2018.12.31 வரை உள்நாட்டு கண்காட்சி

- ஆயு லங்கா கண்காட்சி
- திதுல பிரபா கல்விக் கண்காட்சி
- விஞ்ஞான மற்றும் கல்விக் கண்காட்சி பண்டாரநாயக்க வித்தியாலயம்
- ஆயுர்வேத எக்ஸ்போ கண்காட்சி
- V2020 தொழில் முனைவோர க்கண்காட்சி
- கல்விக்கண்காட்சி -கம்பஹா பண்டாரநாயக்க வித்தியாலயம்
- பெசரீஸ் சர்வதேச கண்காட்சி
- ஜுவெல் லங்கா கண்காட்சி
- கல்விக் கண்காட்சி - லீட்ஸ் சர்வதேச பாடசாலை

சர்வதேச ஆபரணக் கண்காட்சி டோக்கியோ

அதிகார சபை ஆரம்பிக்கபட்டு 25 வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு இரத்தினக்கல் மற்றும் தங்கஆபரணங்கள் துறைகளைச் சேர்ந்தவர்களை பாராட்டி அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் சனாதிபதி விருது வழங்கல் விழாவொன்று 2018.11.23 ஆம் திகதி கொழும்பு செங்கீலா ஹோட்டலில் நடாத்தப்பட்டது.

மனையக சுற்றாடல் அதாவது வீடு, அலுவலகம், கைத்தொழில்சாலை, வகுப்பறை, போக்குவரத்து என்பன மனிதனால் நாளாந்த செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற வெளிச் சுற்றாடலுக்கு நேரடியாக திறந்த இடங்களில் பாதகமான வாயுக்கள் அதிகரிப்பது பயங்கரமான மற்றும் கொடிய சுகாதார தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. எனவே தூய்மையான வாயு 2025 அமுலாக்கல் திட்டத்தில் மனையக வாயு தர முகாமைத்துவம் மற்றும் அதற்கான வழிகாட்டலகளைத் தயாரித்தல் பிரதானமான தொழில்நுட்ப குழுவொன்று நியமனம் செய்யப்பட்டதோடு 2018/12/27 திகதி அதன் முதலாவது கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.

வளி மாசடைதல் மற்றும் வளி தர முகாமைத்துவம் தொடர்பான அறிவுறுத்தல் நிகழ்ச்சிகள்

வாயு மாசடைவதைக் கட்டுப்படுத்தி அதனை குறைத்துக் கொள்வதற்காக அறிவுறுத்தல் நிகழ்ச்சிகள் மூலம் பிரவேசமொன்றை பெறக்கூடிய வாய்ப்புண்டு. எனவே வாயு வள முகாமைத்துவ பிரிவின் மூலம் பொலிஸ் உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை அறிவுறுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டில் விசேட கவனம் செலுத்தப்பட்டது

வளி மாசடைதல், வாயு அளவினை முகாமைத்துவம் செய்தல் மற்றும் வாகனப் வாயு வெளிவிடல் பரிசீலனை செய்யும் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக போக்குவரத்து மற்றும் சுற்றாடல் பொலிஸ் உத்தியோகததர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் 2018 ஆம் ஆண்டில் ஒழுங்கு செய்யப்பட்டதோடு மேற்படி நிகழ்ச்சித்திட்டங்கள் குருணாகல்., பொலன்னறுவை, கேகாலை, காலி ஆகிய மாவட்டங்கள் உள்ளடக்கும் வகையில் மிக வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.

மேலும் பாடசாலை மாணவர்களை அறிவுறுத்துவதன் மூலம் வாயு.்.வளி மாசடைவைக் கட்டுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை பிள்ளைகள் மூலம் சமுதாயமயமாக்கல் மற்றும் அதற்காக அவர்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் வாயு.்.வளி மாசடைதல், அதன் மூலம் சுகாதாரம் மற்றும் சூழல் தொடர்பில் ஏற்படுத்தும் தாக்கங்கள், வாயு தர அளவினை முகாமைத்துவம் செய்தல் தொடர்பாக பாடசாலை மாணவர்களை அறிவூட்டும் நிகழ்ச்சிததிட்டங்கள் கேகாலை, குருநாகல், கம்பஹா ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்பட்டன.

வாயு மாசடைதல் மற்றும் அது சார்ந்த மற்றும் சூழல் பிரச்சினைகள் பற்றி பொதுமக்களை அறிவூட்டல் மற்றும் பசுமை மற்றும் நிலைத்திருக்கத்தகு சூழலுக்காக வாயு தர நிலைமைகளில் உள்ள முக்கியத்துவம் பற்றி பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில் ஊடகவியலாளர்களை அறிவூட்டும் செயலமர்வு 2018.12.27 ஆம் திகதி மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சில் நடாத்தப்பட்டது. பல்வேறு ஊடகங்களை பிரதிநிதித்துவம் செய்து 35 ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டதோடு இலங்கையில் வாயு நிலைமையை முகாமைத்துவம் செய்தல் தொடர்பாக இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகளின் வெற்றி மற்றும் செயற்பாடுகளின் திருப்பு முனை, வாகன புகை வெளிப்பாட்டு பரீட்சை வேலைத்திட்டத்தின் வெற்றி மற்றும் எதிர்கால செயற்பாடுகள், வாகனங்களின் எரிபொருள் வினைத்திறன், உத்தேச எரிபொருள் நிலைமை விவரப்படம், மனையக வாயு நிலைமை முகாமைத்துவம், வாயு மாசடைதல் சுகாதார தாக்கங்கள், வாயு நிலைமை மேற்பார்வை வழிமுறைகள், சுற்றாடல் நிலைத்திருக்கத்தகு போக்குவரத்து வழிமுறைகள், ஓரிடத்திற்கு வரையறுக்கப்பட்ட புகை வெளிப்பாடு கட்டுப்பாட்டு மூலோபாயம், கழிவுப்பொருள் முகாமைத்துவ மூலம் வாயு மாசடைவுக் கட்டுப்பாடு, ஓசோன் படை பலவீனமடைதல் மற்றும் ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்கு உலகளாவிய பிரவேசம் மற்றும் அதன் தேசிய பங்களிப்பு, உத்தேச பசுமை கட்டிட எண்ணக்கரு பற்றிய அறிமுகம் போன்ற பல்வேறு விடயங்களில் வாயு வள முகாமைத்துவ பற்றிய நிபுணர்கள் மூலம் விரிவுரைகள் மேற்கொள்ளப்பட்டன



உயிரியல் பல்வகைமைப் பிரிவு

இலங்கையில் உயிரியல் பல்வகைமையைப் பேணிப்பாதுகாத்தல்

இலங்கை1992ஆண்டில் உயிரியல் பல்வகைமை உடன்படிக்கையில் கையொப்பமிட்ட ஒரு தரப்பாக மாறியதோடு,1994 இல் அதற்கு ஒப்பதல் பெற்றுக்கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கையின் படி அனைத்து நாடுகளும் உயிரியல் பல்வகைமை பாதுகாப்புக்குரிய மூலோபாய அமுலாக்கல் திட்டத்தினைதயாரிக்கவேண்டும் என இதுதொடர்பாகநடத்தப்பட்ட10 ஆம் கூட்டத் தொடரின் போது இனக்கம் காணப்பட்டது.அதற்கமையமஹாவலிஅபிவிருத்திமற்றும் சுற்றாடல் அமைச்சுஅமைச்சின் உயிரியல் பல்வகைமைசெயலாளர்அலுவலகம் மூலம் தேசியஉயிரியல் பல்வகைமை மூலோபாயஅமுலாக்கல் திட்டம் 2016- 2022 ஆண்டுக்களுக்காகத் தயாரிக்கப்பட்டது.

இந்த தேசிய உயிரியல் பல்வகைமை மூலோபாய அமுலாக்கல் திட்டத்தின் தேசிய குறிக்கோள்களின் கீழுள்ள சயற்பாடுகள் உயிரியல் பல்வகைமை செயலாளர் காரியாலயம் மற்றும் பல்வேறு பங்குதார நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு தேசியஉயிரியல் பல்வகைமை மூலோபாய அமுலாக்கல் திட்டத்தை செயற்படுத்தல் இணைப்புப் பணிகள் உயிரியல் பல்வகைமை செயலாளர் அலுவலகம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கமைய 2018 ஆண்டில் இவ்வேலைத்திட்டத்திற்கு ஏற்ப உயிரியல் பல்வகைமை செயலாளர் காரியாலயத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் கீழேகாட்டப்பட்டுள்ளன.



தேசிய உயிர் பல்வகைமை அறிஞர்களின் குழு

உயிரியல் பல்வகைமை பேணிக்காப்பு மற்றும் நிலைத்திருக்கத்தகு அபிவிருத்தியின் பொருட்டு நிலைத்திருக்கத்தகு உயிரியல் பல்வகைமை உபயேகம் தொடர்பான தீர்மானம் மேற்கொள்வதற்காக சுற்றாடல் அமைச்சிற்கு உதவுவதற்கு தேசியஉயிரியல் பல்வகைமை நிபுணர்குழு உயிரியல் பல்வகைமை செயலாளர் காரியாலயத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது. தேசியஉயிரியல் பல்வகைமை நிபுணர்குழு ஊடாக பல்வேறு பிரச்சனைகள் பற்றிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதுடன் இதற்கு மேலதிகமாகதேசிய ஆலோசனை குழுக்களான உயிரின விசேட பாதுகாப்புக் குழு,ஆக்கிரமிப்பு வருகை உயிர்கள் பற்றிய குழு,உயிரினப் பாதுகாப்பு தொடர்பாக குழு,மகரந்தக் காவுகை பாதுகாப்பு குழு,பரம்பரை வழிவந்த அறிவு,உயிரியற் பல்வகைமை மற்றும் கண்டல் தாவரப் பாதுகாப்புத் தொடர்பான குழு என்பன தாபிக்கப்பட்டுள்ளன.. பல்வேறு பாதுகாப்பு செயற்பாடுகள் மற்றும் தொடர்பான தீர்ப்பு, தீர்மானங்கள் மற்றும் திட்டமிடல் தயாரிக்கும் போது பல்வகைப் பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த அறிஞர் குழு சிக்கல்களைத் தீர்த்தல் மற்றும் உரிய தொழில்நுட்ப சிபாரிசுகள் பெற்றுக் கொள்வதற்கு உதவுகின்றன

2018 வருடத்தினுள் குறித்த நிபுணர் குழுவினால் பின்வரும் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

- றுஹுனு பல்கலைக்கழகத்தின் தொலைக்கல்வி பிரிவின் கீழ் உயிரியல் பல்வகைமை பாடநெறியொன்றை அறிமுகம் செய்தல்.
- உயிரியல் வளங்கள் பயன்பாடு மற்றும் பயன்களை பகிர்ந்துகொள்ளும் போது தேசிய கொள்கையொன்றின் தேவைப்பாட்டை இனங்காணல்

தேசிய உயிரியல் பலவகைமை நிபுணர் குழுக்கூட்டம்.

சர்வதேசஉயிரியல்பல்வகைமைதினம் அனுஷ்டிப்பு

2018 மே 22ஆம் திகதிய சர்வதேச உயிரியல் பல்வகைமை தினம் "புவி மீது உயிர்களைக் காப்போம் - 25 வருட அனுபவத்தைப் பரிமாரிக் கொள்வோம்"என்ற தொனிப்பொருளில் 25 ஆவது வைபவம் மாகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு வளாகத்தில் இம்முறை கொண்டாடப்பட்டது

25 ஆவது வருடப்பூர்த்தி வழா காட்சிகள்

தேசிய சிவப்பு தகவல் ஆவணத்ததை இற்றைப்படுத்தல்

இலங்கை உயிரியல் பல்வகைமை கொண்ட நாடென்பதோடு உலக உயிரியல் பல்வகைமை உயர் வலயங்களில் ஒன்றாக பெயரிடப்பட்டிருப்பது அத்துறையில் காணப்படுகின்ற உயிரினப் பல்வகைமை உயர் பெறுமதியைக் கொண்டிருத்தல் மற்றும் அவற்றின் இருப்புக்கு விடுனக்கப்படுகின்ற சவால்களும் உயர் மட்டத்தில் காணப்படுவதை கருத்தில் கொண்டாகும்.

தாவரங்கள் தொடர்பான பாதுகாப்பு நிலைமையை மதிப்பிடலின் கீழ் 3492 விசேட தாவரங்களில் 2018 ஆம் ஆண்டினுள் 1600 விசேட தாவரங்கள் மதிப்பிடலுக்கு உட்படுத்தப்பட்டதோடு இந்த மதிப்பீட்டுக்கு தேசிய தாவரங்கள் கூடம் மற்றும் தாவரங்கள் தொடர்பான நிபுணர்களுடன் நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை 10 ஆகுமென்பதோடு இந்தச் செயற்பாட்டை எதிர்காலத்தில் மேற்கொள்வதன் மூலம் தேசிய சிவப்பு ஆவணத்தின் தாவரங்கள் தொடர்பான ஆவணத்தைவெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

விலங்குகள் தொடர்பான பாதுகாப்பு நிலைமையை மதிப்பிடலின் கீழ் 2018 ஆம் ஆண்டில் சிப்பிகள் மற்றும் கடல் துலையூட்டிகள் தொடர்பாக விலங்குகள் வகுதிகள் குழுக் கூட்டங்கள் 02 நடாத்தப்பட்டன.

உயிரியல் பல்வகைமை மற்றும் சுற்றாடல் முறைமை சேவை பெறுமதி தொடர்பாக பல்கலைக்கழக மாணவர்களை அறிவுறுத்தல்.

உயிரியல் பல்வகைமை மற்றும் சுற்றாடல் முறைமை சேவை பெறுமதிகளை இனங்கண்டு அவற்றைப் பாதுகாத்து நிலைபேறாகப் பயன்படுத்தல் தொடர்பான கோட்பாட்டு மற்றும் நடைமுறை செயலமர்வொன்று ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் நடாத்தப்பட்டது.

செயலர்வின் சில காட்சிகள்

இலங்கையின் பண்டைய உயிரியல் பல்வகைமை பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாட்டிற்கான அமுலாக்கல் திட்டம்.

ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட பண்டைய உயிரியல் பல்வகைமை அமுலாக்கல் திட்டம் பண்டைய உயிரியல் பல்வகைமை தொடர்பான அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் போது போன்றே பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அதனைப் பயன்படுத்துகின்ற ஏனைய தரப்புக்களின் வசதிக்காக சிங்கள் மொழியில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது.

பண்டைய உயிரியல் பல்வகைமை அமுலாக்கல் திட்டம்.

மண் உயிரியல் பல்வகைமையைப்பேணிப்பாதுகாத்தல்அமுலாக்கல் திட்டம்

இலங்கையில் விவசாய உயிரியல் பல்வகைமை பாதுகாப்பதற்காக நிலைத்திருக்கத்தகு விவசாய வழிமுறைகளை மேம்படுத்தல் மற்றும் தாபித்தல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டுமண் உயிரினங்கள் பேணிக்காப்புக்காக வரைவுப் செய்யப்பட்ட அமுலாக்கல் திட்டத்தை மேற்படிசேவையின் அறிஞர்களின் பங்களிப்புடன் மேம்படுத்தல்

அட்டவிசி போதி விருட்சம் (வெள்ளரசு) மர நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டினுள் அட்டவிசி வெள்ளரச மரங்கள் 50 நாட்டின் பல்வேறு பிரதேசங்களின் விகாரைகள், அரச நிறுவனங்கள் மற்றும் புண்ணிய தலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதனூடாக அரிய மற்றும் மத ரீதியில் முக்கியமான தாவர வளர்ப்பு ஊக்குவிக்கபட்டது

பாரம்பரிய அறிவு தொடர்பான ஆசிய வலய செயலமர்வு

மூதாதையர்வழிவந்த அறிவு தொடர்பான ஆசிய வலய நாடுகளுக்கான செயலமர்வு 2018 யூலை 27 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை கண்டியில் நடாத்தப்படடது. இதற்காக இந்தியா, பூட்டான், நேபாளம், பாகிஸ்தான், மலேசியா, பிலிபீன்ஸ், வியட்னாம், தஜிகிஸ்தான் மற்றும் லாவோஸ் ஆகிய நாடுகளின் வெளிநாட்டு பிரதிநிதிகள் 20 வரையிலும், இலங்கையில் இந்த துறைக்குரிய நிறுவனங்களைப் பிரதிநிதிப்படுத்தி குழுவொன்றும் கலந்து கொண்டன.

இந்த வலய செயலமர்வில் மூதாதையர்வழிவந்த அறிவைப் பேணிப்பர்துகாத்து அதன் வளமான உபயேகம் பற்றிய மற்றும் அதன் மூலம் கிடைக்கின்ற பயன்களை பகிர்ந்து கொள்ளும் விதம் பற்றியும் நீண்ட அடிப்படையில் கலந்துரையாடப்பட்டதோடு இலங்கையில் மூதாதையர்வழிவந்த சிகிச்சை முறை பற்றியும் நடைமுறை ரீதியான அறிவூட்டல் மேற்கொள்ளப்பட்டது..

தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் பற்றிய தரவுகளைச் சேகரிக்கும் நோக்கினைக் கொண்ட உயிரியற் பல்வகைமை தொடர்பான ஆய்வுக்கான நிதியுதவி வழங்குதல்

சிவப்பு தரவு ஆவணத்தை இற்றைப்படுத்தும் போது தரவு குறைபாடுள்ள தாவரங்கள மற்றும் விலங்குகள் தொடர்பாக தரவுகளைச் சேகரிக்கும் நோக்கில் ஆராய்ச்சியாளர்களுக்கு நிதியுதவி வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் கீழ் 2018 ஆம் ஆண்டுக்காக 3 ஆராய்ச்சி கருத்திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

1. **Distribution, Ecology and Phenology of Impatiens repens Moon (Balsaminaceae): a rediscovered Endemic Plant Species of Sri Lanka**
2. **Diversity, Systematics and Conservation of the Skink fauna (Scincidae) of Sri Lanka**
3. **Floristic Diversity of Ambokka Mountain Range.**

கண்டல் தாவரங்கள் பாதுகாப்பு மற்றும் நிலைத்திருக்கத்தகு உபயேகம்

• கண்டல் தாவரங்கள் பேணிக்காப்பு மற்றும் வளமான உபயேகம் தொடர்பான தேசிய கொள்கை வரைவு செய்யப்பட்டு அது தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது.

• 2018.06.05 ஆம் திகதி அம்பாறை சபஸ்திரவேலி (கண்டல் காடு) ஒதுக்குக்காடாக பிரகடனம் செய்யப்பட்டது.

• கண்டல் தாவர சுற்றாடல் முறைமையை பேணிக்காத்தல் மற்றும் வளமான பயன்பாட்டிற்காக அமைச்சில் தாபிக்கப்பட்டுள்ள நிபுணர் குழு மூலம் உபகுழுவொன்று நியமனம் செய்யப்பட்டு மீண்டும் பயிர் செய்தல் மற்றும் புனர்வாழ்வுக்கான வழிகாட்டலகளைத் தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

- புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் மற்றும் சிலாபம் காடுகளில் தெரிவு செய்யப்பட்ட அழிவுக்குற்பட்ட கண்டல் தாவர சுற்றாடல் முறைமை 10 ஹெக்டெயார் வனப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் இணைந்து புனரமைப்புச் செய்யப்பட்டது.

- மன்னார் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் காணப்படுகின்ற கண்டல் தாவர சுற்றாடல் முறைமையை பேணிக்காத்தல் மற்றும் நிலைபேறான அடிப்படையில் பயன்படுத்துவது எவ்வாறு என்பது பற்றி அம்மாவட்டங்களின் அரச உத்தியோகத்தர்கள் முப்படையினர், சுற்றாடல் பொலீஸ் இணைப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரை அறிவூட்டும் செயலமர்வுகள் மற்றும் கண்டல் தாவரங்களை நாட்டும் செயன்முறை நிகழ்ச்சித்திட்டங்கள் முறையே 2018 யூன் 8 மற்றும் 2018 யூலை 26 ஆகிய தினங்களில் மேற்கொள்ளப்பட்டன.

• கண்டல் தாவர சுற்றாடல் முறைமையை பேணிக்காத்தல் மற்றும் வளமான உபயேகம் பற்றி பாடசாலை மாணவர்கள் அறிவூட்டும் செயன்முறை செயலமர்வொன்று சிறிலங்கன் நெக்ஸ்ட் நீல ஹரித யுகம் நிகழ்ச்சித்திட்டத்தோடு இணைந்ததாக 2018 ஒக்தோபர் 19 ஆம் திகதி பண்டார நாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இங்கு செயலமர்வில் கலந்து கொண்ட மாணவர்கள் செயன்முறை ரீதியாக அவர்கள் பெறும் அறிவு பயன்படுத்தி ஏனைய பாடசாலை மாணவர்களையும் இணைத்துக்கொண்டு கண்டல் தாவரங்கள் சுற்றாடல் முறைமையை பாதுகாத்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான அறிவை வழங்குதல் மற்றும் ஆர்வத்தை ஏற்படுத்தல் என்கன மேற்கொள்ளப்பட்டன.

துறையில் கண்டல் தாவரங்களை நடல்

கண்டல் தாவர சுற்றாடல் முறைமை பாதுகாப்பு தொடர்பாக பாடசாலை மாணவர்களை அறிவுறுத்தல்.

காலநிலை மாற்றங்கள் பிரிவு

காலநிலை மாற்றத்துடன் தொடர்பான சவால்களுக்கு தேசிய அடிப்படையில் முகம்கொடுப்பதற்காக அபிவிருத்திச் செயற்பாடுகளினுள் உட்சேர்ப்பதற்கான ஒரு தளதத்தை உருவாக்குவதல் கொள்கைகள் மற்றும் புதிய நிகழ்ச்சித்திட்டங்களை விருத்தி செய்தல் உள்ளிட்ட காலநிலை மாற்றங்களுக்கு பதிலளிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட நிறுவன பொறிமுறையொன்றாகச் செயற்படல் காலநிலை மாற்றங்கள் தொடர்பான தேசிய கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முதன்மைகளை இனங்காணல் மற்றும் பொறிமுறையொன்றை உருவாக்குவதற்கு தேசிய மற்றும் துணைத் தேசிய மட்டத்திலான நிரல் முகவர் நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல், காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஆராய்ச்சிகளுக்காக வசதிகளை வழங்குதல் மற்றும் ஆராய்ச்சி முடிவு கொள்கை வகுத்தல் மற்றும் செற்பாடுகளுக்காகப் பகிர்ந்தளித்தல் காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கையில் செயலாளர் அலுவலகத்துடன் ஒருங்கிணைப்பு அலுவல்களை மேற்கொள்ளல் மற்றும் பங்குதார தரப்புக் கூட்டங்கள் மற்றும் ஏனைய காலநிலை மாற்றங்கள் தொடர்பான சங்கங்களில் இலங்கையின் பங்கேற்பு தொடர்பான எழுத்தாவணங்களைத் தயாரித்தல் காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் உடன்படிகக்கையின் பங்குதார தரப்புக்களின் கூட்டங்கள் மற்றும் கியாதோ உடன்படிகக்கைக்குரியதாக எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் தகவல்களை வழங்கும் நிலையமொன்றாக வசதிகளை வழங்குதல் மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான நியதிச்சட்ட நிறுவனங்களுக்கான அதிகாரமளிக்கப்பட்ட அதிகார சபையாக செயற்படுவதாகும்.இந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக காலநிலை மாற்றங்கள் தொடர்பான செயலகத்தினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காலநிலை மாற்றங்கள் தொடர்பான தேசிய கொள்கை

காநிலை மாற்றங்களுக்கு பழக்கப்படுத்ல மற்றும் பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்ததைக் கட்டுப்படுத்தல் என்பவற்றுக்குத் தேவையான கொள்கைத்திட்டம் காலநிலை மாற்றங்கள் தொடர்பான தேசிய கொள்கை மூலம் வழங்க்கப்பட்டுள்ளன.முன்னேற்றத்தை அறிக்கையிடுகின்ற காலப்பகுதியினுள் தேசிய கொள்ளையை செய்றப்படுத்தி காலநிலை மாற்றங்களுக்கு உட்படுகின்ற பிரதான துறைகளுக்கு உரியதாக தாக்கம் செலுத்துகின்ற பிரதேசங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன.. அதே போன்று மூன்றாம் தேசிய தொடர்பாடல் அறிக்கை தயாரித்தல கருத்திட்டத்தின் கீழ் பச்சைவீட்டு வாயு வெளியீட்டு இன்வென்றி தயாரித்தலும் இக்காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்படும்.

காலநிலை மாறற்றங்களுக்கான தேசிய இசைவாக்கத் திட்டம்

தேசிய இசைவாக்கத்திட்டம் நாட்டின் காலநிலை மாற்றத்திற்காக முகம்கொடுப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற தேசிய முயற்கிகளைக் கொண்ட வழிகாட்டுநெறியாகும்.. தேசமென்ற வகையில் ஏற்கடக்கூடிய ஆபத்துக்களைக் குறைத்துக் கொண்டு இசைவாக்கமடைதல் விருத்தி செய்து கொள்வதற்கு நடைமுறைச்சாத்தியமான திட்டமொன்றைத் தயாரிப்பது இதன் நோக்கமாகும். இந்த தேசிய இசைவாக்கத் திட்டத்தின் கீழ் இலங்கையினுள் காலநிலை மாற்றங்களின் பாதமான தாக்கங்களுக்கு பெரிதும் உட்படக்கூடிய 10 துறைகள் இனம்காண்ப்பட்டுள்ளன.

பிரதானமாக இனங்காணப்பட்ட துறைகளாக உணவுப் பாதுகாப்பு, நீர் வளங்கள், கரையோர மற்றும் கடல் பிரிவு, சுகாதாரம், மனித குடியிருப்புக்கள் மற்றும் கீழ்கட்டுமான வசதிகள், சுற்றாடல் முறைமை மற்றும் உயிரியல் பல்வகைமை, சுற்றுலா மற்றும் பொழுது போக்கு, விளையாட்டுக்கள், கலவி, விவசாய தொழிநுட்பப் பிரிவு, எரிபொருள் மற்றும் போக்குவரத்துத் துறைகள், தேசிய பிரச்சினைகள் மற்றும் ஆபத்து அவதானம் செலுத்த வேண்டிய பிரிவுகளாகும். தேசிய இசைவாக்கத் திட்டம் காலநிலை மாற்றங்கள் செயலகத்தின் இணையப்பக்கத்தில் (www.climatechange.lk) வெளியிடப்பட்டுள்ளன.

.

முன்னேற்றம் அறிக்கையிடப்படுகின்ற காலஎல்லைக்குள்,



- மாகாணங்களுக்கான தேசிய இசைவாக்க செயற்பாட்டுத் திட்டத்தை தயாரிப்பதற்காக அரச அலுவலர்களுக்கான செயலமர்வை ஒழுங்கு செய்தல்
- தேசிய இசைவாக்க செயற்பாட்டுத் திட்டத்தின் சிங்களம் மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் சிங்களப் பிரதி 1000 அச்சிடப்பட்டது.

காலநிலை தொழிநுட்பத் தேவைப்பாடுகள் மதிப்பீடு

இதன் கீழ் காலநிலை மாற்றங்களுக்கு சிறப்பாக முகம் கொடுப்பதற்கு தேவையான தொழிநுட்ப தேவைப்பாட்டு மதிப்பீடு இங்கு தயாரிக்கபபட்டுள்ளதோடு காலநிலை மாற்றங்கள் தொடர்பான கருத்திட்டங்களைத் தயாரிக்கும் போது மற்றும் மூன்றாம் தேசிய தொடர்பாடல் அறிக்கை தயாரிக்கும் போது இந்த மதிப்பீட்டைத் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

இலங்கையில் உத்தேச தேசிய அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புக்களை (INDCs) தயாரித்தல் மற்றும் செயற்படுத்தல்

பரிஸ் ஒப்பந்தப் படி உலக வெப்பத்தைக் கட்டுப்பாடு செய்வதற்காக இலங்கையினால் மேற்கொள்ள வேண்டிய மூலோபாயமான " உள்நாட்டில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பு" (Intended Nationally Determined Contributions- INDCs) வெளியிட்டு 2020- 2030ஆம் ஆண்டினுள் உள்நாட்டில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பு (INDCs) மேற்கொள்ள இனங்கியுள்ளது.

சக்தி, போக்குவரத், கைத்தொழில், கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம், உயிரியற் பல்வகைமை மற்றும் சுற்றாடல் முறைமை, சுகாதாரம், அனர்த்த முகாமைத்துவம், நீர் மற்றும் நீர்பாசனம், கமத்தொழிற், கால்நடை வளங்கள், கடல் மற்றும் கடலோரங்கள சார், நகர, மாநகர மற்றும் மனித குடியிருப்புக்கள், சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் பொழுது போக்கு ஆகிய துறைகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.. இந்த துறைகள் 13 இன், உள்நாட்டில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பு (INDCs) நடைமுறைப்படுத்துவதற்குரிய விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் மற்றும் மாகாண சபை அமைச்சர்களின் தலைமையில் ஆலோசனை சபை தாபிக்கப்பட்டது. மேலும் மூலோபாயத்திட்ட கொள்கை மற்றும் அமுலாக்கல் திட்டமிடலுக்காக திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல் பற்றிய நிபுணர் குழு உரிய அமைச்சுக்களின் செயலாளர்களின் தலைமையில் தாபிக்கப்பட்டன.

அதிமேதகு சனாதிபதி அவர்களால் ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுக் கூட்டத்தில், காலநிலை மாற்றங்கள் பற்றிய பரிஸ் ஒப்பந்தத்தின் கைச்சாத்திட்டு ஏற்றுக் கொள்ளும் சட்ட ரீதியான ஆவணம் கையளிக்கப்பட்டது. " உள்நாட்டில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பு" (NDCs)ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றங்கள் பற்றிய கட்டமைக்கப்பட்ட உடன்படிக்கை முன்வைக்கப்பட்டதுடன், உள்நாட்டில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பின் சிங்களம் மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

"ஸ்ரீலங்கா நெக்ஸ்ட் - நீல ஹரித்த யுகம்" சர்வதேச மாநாடும் கண்காட்சியும் 2017

இலங்கை காலநிலை மாற்றங்களின் பாதகமான தாக்கங்களுக்கு பெரிதும் உட்பட்டுள்ளது. காலநிலை பற்றிய சட்டக உடன்படிக்கையின் (ருகேஉளஉளஉ) பங்குதார நாடான இலங்கை கால நிலை மாற்ற சவால்களுக்கு முகம் கொடுத்தல் மற்றும் அதற்கு எதிராக செயற்படும் தனது உலக பணிப்பெறுப்பபை பரிந்துள்ளதோடு இந்த உடன்படிக்கையின் 21 ஆம் பங்குதாரர்களின் கூட்டத்தில் அனக்கம் வழங்கப்பட்ட பரீஸ் ஒப்பதத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இலங்கை தனது தேசிய ரீதியில் முடிவு செய்யப்பட்ட பங்களிப்பை முன்வைத்து அதனை மேற்கொள்வதற்கு தயாராகும் திட்டத்தினைத் தயாரித்துள்ளது. இலங்கை பரீஸ் ஒப்பந்தத்தின் 2030ஆம் நிகழ்சிசிநிரல் மற்றும் வளமான அபிவிருத்தி அடையிலக்குகளை மேற்கொள்வதற்கு வழங்கும் உண்மையான அர்ப்பணிப்பை வெளிக்காட்டுவதற்காக " இலங்கை நேக்ஸ்ட்- நீல ஹரித யுகம்" நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

அதற்கமைய மூன்றாவது" இலங்கை நேக்ஸ்ட்- நீல ஹரித யுகம்" சுற்றாடல் மாநாடு மற்றும் கண்காட்சி 2018 ஒக்தோபர் மாதம் 19- 20 ஆகிய நாட்களில் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் இணைப்பு நடவடிக்கைகள் காநிலை மாற்றங்கள் செயலாளர் அலுவலகம் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

- **காலநிலை மாற்றங்கள் ஆராய்ச்சி மாநாடு**

பலத்த ஆபத்திற்கு உட்பட்டுள்ள மக்கள், துறைகள் மற்றும் பிரதேசங்களின் தாக்குப் பிடிக்கும் இயலுமையை விருத்தி செய்வதற்காக பொருத்தமான செயற்பாடுகள் காலநிலை மாற்றங்களின் படும் விபத்துக்கள் மற்றும் பச்சைவீட்டு வாயு உமிழ்வைக் குறைப்பதற்கான உரிய துறைகள் மற்றும் செயற்பாடுகளை இனங்கண்டு கொள்வதற்கு காலநிலை மாற்றங்கள் பற்றிய விபரமான மற்றும் முழுமையான ஆராய்ச்சி உபாயமொன்று இருப்பது மிக முக்கியமானதாகும்.

இந்த காலநிலை மாற்றங்கள் ஆராய்ச்சி மூலோபாயத்தைத் தயாரிக்கும் செயற்பாடுகள் உரிய தரப்பு நிறுவனங்களின் தொழிற்படு பங்குபற்றலைப் பெறக்கூடிய நோக்கில்“ இலங்கை நேக்ஸ்ட்- நீல ஹரித யுகம்” 2018 வேலைத்திட்டத்திற்கு சமாந்தரமாக காலநிலை மாற்றங்கள் ஆராய்ச்சி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மாநாட்டின் பிரதான குறிக்கோள்கள் பின்வருமாறு.

- காலநிலை மாற்றங்கள் ஆராய்ச்சி உத்தி வரைவுக்கான கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளல்
- காலநிலை மாற்றங்கள் ஆராய்ச்சியில் உள்ள இடைவெளிகளை அடையாளம் காணுதல்
- காலநிலை மாற்றங்கள் செயலாளர் காரியாலயத்தில் காலநிலை மாற்றங்கள் ஆராய்ச்சி தொடர்பான தகவல்கள் களஞ்சியத்தை வெளியிடல்.
- காலநிலை மாற்றங்கள மற்றும் தொடர்புடைய சிக்கல்கள் சம்பந்தமாக இலங்கை ஆராய்ச்சியாளர்களின் அறிவை மேம்படுத்தல்

இந்த மாநாடு அரச நிறுவனங்கள், பல்கலைக்கழக மக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் ஆகியவற்றின் பங்களிப்புடன் நடத்தப்பட்டதோடு ஏற்பாட்டு நடவடிக்கை காலநிலை மாற்றங்கள் செயலாளர் காரியாலயம், இலங்கை பத்திரிகை நிறுவனம், ஜனதாக்சன், ஸ்கணின் ரெஸ்ட் மற்றும் அயிடியப நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டன.

காலநிலை மாற்றங்கள பற்றிய அறிவூட்டல் மற்றும் திறன் விருத்தி

• பாடசாலை ஆசிரியர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

உலக சுற்றாடல் தினத்திற்கு இணையாக 2018 யூன் மாதம் 28 ஆம் திகதி கேகாலை மாவட்ட செயலாளர் காரியாலய கேட்போர் கூடத்தில் அரச நிறுவனங்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்களை அறிவூட்டும் செயலமர்வு நடாத்தப்பட்டது.

அறிவுறுத்தல் கருவிகளை அச்சிடல்

" காலநிலை மாற்றங்கள் மற்றும் எமது எதிர்காலம்” பற்றிய துண்டுப்பிரசுரம்“காலநிலை மாற்றங்களை அறிந்து கொள்வோம்” துண்டுப்பிரசுரம் மீண்டும் அச்சிடப்பட்டது.





- **ஹரித காநிலை நிதிய (GCF) கருத்திட்டப் பிரேரணை சமர்ப்பித்தல் தொடர்பான அறிவூட்டல்** வெளிநாட்டு பிரதிநிதிகளுடன் தனியார் துறை பங்குதாரத் தரப்புக்களுக்கு ஹரித காலநிலை நிதியத்தில் (GCF) கருத்திட்டப் பிரேரணை சமர்ப்பித்தல் பற்றிய அறிவூட்டல் செயலமர்வொன்று 2018 மார்ச் மாதம் 15 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

- **மனித குடியிருப்புக்கள் காலநிலை மாற்றங்களின் பாரிய தாக்கங்களுக்கு முகம் கொடுப்பதற்கான வழிகாட்டியை அச்சிடல்**

மனித குடியிருப்புக்கள் காலநிலை மாற்றங்கள் தீய பாதிப்புக்களுக்கு முகம் கொடுப்பதற்கான வழிகாட்டியைத் தயாரிப்பதற்கான செயலமர்வுகள் இரண்டு நடாத்தப்பட்டதுடன் அதன் முதல் வரைவு மற்றும் எண்ணக்கரு பத்திரம் தயாரிக்கப்பட்டது

காலநிலை மாற்றங்கள் தொடர்பான தேசிய குழு

காலநிலை மாற்றங்கள் பற்றிய இடைக்கால நிறுவன இணைப்புக் குழு

காலநிலை மாற்றங்கள் பற்றிய இடைக்கால நிறுவன இணைப்பு குழு 2012 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் உருவாக்கப்பட்டதுடன் இது நிரல் அமைச்சு மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் பிரதிநிதித்துவம் செய்யப்படும் குழுவாகும். இந்த குழு தாபித்தலின் பிரதான குறிக்கோள் காலநிலை மாற்றங்கள் பற்றிய இசைவாக்கம் மற்றும் காலநிலை மாற்றங்களை குறைக்கும் நிபுணர்குழு ஆகிய இரண்டின் மூலம், பரிந்துரைக்கின்ற உபாயம் மற்றும் செயற்பாடுகள் இந்த குழுவின் மூலம் உரிய நிறுவனங்களின் கொள்கைகளில் உட்படுத்திக் கொள்ளல், முன்னேற்றத்தை அறிக்கையிடும் கால எல்லைக்குள், காலநிலை மாற்றங்கள் பற்றிய இடைக்கால நிறுவன இணைப்புக்குழுக் கூட்டங்கள் இரண்டு நடாத்தப்பட்டன.

காலநிலை மாற்றங்களுக்கு பழக்கப்படுத்தும் தேசிய நிபுணர் குழு

இந்த பிரிவினால் தேசிய காலநிலை மாற்ற கொள்கைகள் மற்றும் பழக்கப்படுத்தும் உபாயங்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய காலநிலை மாற்றங்களுக்கு பழக்கப்படும் அமுலாக்கல் திட்டமொன்றை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி அமுலாக்கல் திட்டம் தயாரித்தல் மற்றும் இலங்கையில் காலநிலை மாற்றங்களின் பாதகமான பாதிப்புக்களுக்கு பழக்கப்படுதல் தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக பழகப்படுத்தல் தேசிய நிபுணர் குழு தாபிக்கப்பட்டது.

கடந்த அறிக்கையிடப்பட்ட கால எல்லையினுள், காலநிலை மாற்றங்கள் பழக்கப்படல் தேசிய நிபுணர்களின் 11 ,12 குழுக் கூட்டங்களில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக வழிகாட்டல் வழங்கப்பட்டது.

- காலநிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படுகின்ற ஆபத்து மதிப்பீடு மற்றும் தேசிய அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு காலநிலை மாற்றங்களுக்கு இசைவாக்கமடைதல செயற்பாடுகளை உள்ளடக்கும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான தொழில்நுட்ப கருத்திட்டங்களை மேற்கொள்ளல்.

.

- காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஐக்கியநாடுகள் கட்டமைப்பு உடன்படிக்கைக்கு சமர்பிக்க வேண்டிய இலங்கையின் மூன்றாம் தேசிய தொடர்பாடல் அறிக்கையின் ஆபத்து நிலை மதிபீட்டின் மற்றும் பழக்கப்படுத்ல மூலோபாயத்திட்டம் பற்றிய அத்தியாயத்தைத் தயாரித்தல்.

- பரீஸ் உடன்படிக்கையின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஐக்கியநாடுகள் கட்டமைப்பு உடன்படிக்கையின் 24 ஆம் பங்குதாரத் தரப்புக்களின் கூட்டத்திற்காக பரீஸ் உடன்படிக்கையை மேற்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்புடைய இலங்கையின் தற்போதைய நிலை தொடர்பான பரிந்துரை சமர்ப்பித்தல்.

காலநிலை மாற்றங்களைக் குறைத்தல் தொடர்பான தேசிய நிபுணர் குழு

இலங்கையில் காலநிலை மாற்றங்களைக் குறைத்துக் கொள்வதற்காக செயற்படும் போது ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளின் போது வழிகாட்டுவதற்காக காலநிலை மாற்றங்கள் பிரிவின் மூலம் காலநிலை மாற்றங்களைக் குறைத்தல் பற்றிய தேசிய நிபுணர் குழுக் கூட்டங்கள் 2 நடாத்தப்படடன.

காலநிலை தொழில்நுட்ப பரிமாற்றல் நிலையம் மற்றும் வலையமைப்பு (CTCN) கீழ் காலநிலை மாற்றங்களின் தீய தாக்கங்களை மட்டுப்படுத்துவதற்கான பொருத்தமான தொழில்நுட்பத்தை அடையாளம் காணுதல் மற்றும் பிரபல்யம் செய்தல்

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் மூலம் உருவாக்கப்பட்ட காலநிலை மாற்றங்களின் பாதகமான தாக்கங்களை மட்டுப்படுத்துவதற்கான பொருத்தமான தொழில்நுட்பதத்தை அடையாளம் காணும் குழு மூலம் காலநிலை தொழில்நுட்ப பரிமாற்றல் நிலையம் மற்றும் வலையமைப்புக்கு (CTCN) சமர்ப்பிக்க முனனர் கருத்திட்டப் பிரேரணை தொடர்பான மதிப்பீடு மற்றும் முன்மொழிவு சமர்ப்பிக்கப்படுகின்றது. முன்னேற்றம் அறிக்கையிடும் கால எல்லைக்குள் பெருந்தோட்டத் துறையில் காலநிலை மாற்றங்கள் மூலம் ஏற்படும் தாக்கங்கள் மற்றும் கருத்திட்ட பிரேரணை தயாரித்தல் தொடர்பான செயலமர்வுகள் இரண்டு அரச மற்றும் தனியார் பிரிவுகளுக்காக நடாத்தப்பட்டது. தற்போது ஆக்கரபத்தன மற்றும் கொட்டகல பெருந்தோட்ட கம்பனி மற்றும் எல்பிடிய பெருந்தோட்டக் கம்பனியினால் கருத்திட்டப் பிரேரணை காலநிலை மாற்றங்கள் செயலாளர் காரியாலயத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

காபன் வெளியேற்றத்தைக் குறைக்கும் மூலோபாயத் திட்டத்தைத் (LCDS) தயாரித்தல்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் உலக வெப்பம் அதிகரித்துச் செல்லுதல் குறைப்பதற்காக உள்நாட்டில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பு (NDCs) வெளியிடப்பட்டுள்ளதுடன், அந்த உத்தேச மட்டங்களை அடைந்து கொள்வதற்காக பல்வேறு மூலோபாயத் திட்டங்களை தயாரிப்பது அவசியமாகும்

நிலைத்திருக்கத்தகு அபிவிருத்தி தொடர்பான காலப்பகுதியினுள் உள்நாட்டில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தை உலக முயற்சிகளுக்கு உதவுதற்காக காலத்திற்கேற்ப அவசியப்படுவது காபன் வெளியேற்றத்தைக் குறைக்கும் மூலோபாயத்திட்டம் தயாரிப்பதாகும். எனவே மஹவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் காலநிலை மாற்றங்கள் செயலாளர் காரியாலயம் இலங்கைக்கான காபன் வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான மூலோபாயத்திட்டத்தின் வரைவு (LCDS) மேம்படுத்துவதற்கு அர்ப்பணித்துள்ளது

- வரைவு செய்யப்பட்ட மூலோபாயத் திட்டத்தை மேலும் மேம்படுத்துவதற்காக நிபுணர் கருத்துகளை பெற்றுக்கொள்வதற்கு எரிபொருள், போக்குவரத்து, கைத்தொழில் மற்றும் கழிவுப்பொருள் ஆகிய பிரிவுகளுக்காக துறைசார் கூட்டம் நடாத்தப்பட்டது.
- வரைவு தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்தப்பட்டதுடன் நிபுணர்கள் மூலம் பெற்றுக் கொள்வதற்காக காலநிலை மாற்றங்கள் தொடர்பான நிபுணர் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது
- நிபுணர் குழுவின் கருத்துக்களின் படி மூலோபாயத் திட்டத்தைத் திருத்தம் செய்தல்

குருணாகல் நகரத்திற்கான காலநிலை தெளிவான நகரம் (Climate Smart Cities) தாபித்தல்

காலநிலை தெளிவான நகர கருத்திட்டத்தின் முன்மொழிவு, காலநிலை தொழில்நுட்ப பரிமாற்ற நிலையம் மற்றும் வலையமைப்பு (CTCN) சமர்ப்பிதத்து அதற்கான அனுமதியை பெற்றுக் கொள்ளப்பட்டது. காலநிலை தொழில்நுட்ப பரிமாற்ற நிலையம் மற்றும் வலையமைப்பு (CTCN) குருணாகல் நகரத்திற்காக காலநிலை தெளிவான் நகர் (Climate Smart Cities) தாபித்தலுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

how Soil is formed

Soil functions
Soils deliver ecosystem services that enable life on Earth
Carbon sequestration
Water purification and soil contaminant reduction
Climate regulation
Provision of food, fibre and fuel
Nutrient cycling
Cultural heritage
Habitat for organisms
Provision of construction materials
Flood regulation
Foundation for human infrastructure
Source of pharmaceuticals and genetic resources
2015 International Year of Soils
Food and Agriculture Organization of the United Nations

நில வளங்கள் பிரிவு

இலங்கையில் குறிப்பிடத்தக்க ஆபத்துக்களுக்கு உள்ளாகியுள்ள நில அழிவு மற்றும் அதன் சவால்கள் கருத்திற் கொண்டு 1995 ஆம் ஆண்டில் இலங்கை ஐக்கிய நாடுகள் பலைவனமாதலைத் தடுத்தல் உடன்படிக்கையின் ஒரு தரப்பாகச் செயற்படுகின்றது.
இந்த உடன்படிக்கையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் 2002 ஆம் ஆண்டில் நில அழிலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் தயரரிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் பாலைவனமாதலைத் தடுத்தல் உடன்படிக்கையில் பத்து வருட செயற்பாட்டு மூலோபாயத்திட்டத்தின் படி 2014 ஆம் ஆண்டில் அந்த நிகழ்ச்சித்திட்டம் மீண்டும் ஒருமுறை நாளதுவரையாக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சித்திட்டம் 2015 முதல் 2024 வரையான காலப்பகுதியினுள் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி இந்த அமுலாக்கல் வேலைத்திட்டத்தின் நீண்டகால மற்றும் குறுங்காலஅடிப்படையில் அமுலாக்கம் செய்வதற்காகவுள்ள பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வெயற்பாடுகள் மேற்பார்வை, நெறிப்படுத்தல் மற்றும் மதிப்பீடு தேசிய வழிநடாத்தல் குழுவின் மற்றும் தொழில்நுட்ப இணைப்பு குழுவினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. நில வளங்கள் பிரிவினால் மேற்கொள்ளப்ப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பல்வேறு செயற்பாடுகள் இத்தேசிய செயற்பாட்டு வேலைத்திட்டத்திற்கு ஏற்ப மேற்கொள்ளப்படுகின்றன.அதற்கமைய 2018 ஆம் ஆண்டில் பின்வரும் பிரதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

நிலஅழிவை குறைப்பதற்காக நிலம் மீளமைப்பு மண் பாதுகாப்பு மாதிரிகளை நிர்மாணித்தல்

- **மஹர சிறைச்சாலை வளாகம்**

கம்பஹா மாவட்டத்தில் மஹர பிரதேச செயலாளர் பிரிவில், மஹர சிறைச்சாலை வளாகத்தில் சிறைக்கைதிகளைக் கொண்டு மண்பாதுகாப்பு மாதிரி இடமொன்று நிருமாணிக்கப்பட்டதுடன் அதன் இரண்டாம் கட்டம் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை விமானப்படை முகாம் வளாகம் - மீரிகம

மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, கம்பஹா மாவட்ட செயலாளர் காரியாலயம், காணி பயன்பாட்டு மற்றும் கொள்கைத்திட்டமிடல் திணைக்களம் இணைந்து பழப்பயிர் பூங்கா (Fruit orchard) எண்ணக்கருவுடன் கூடியதாக மண் பாதுகாப்பு முறையொன்றைப் பயன்படுத்தி இந்த மாதிரியை நிர்மாணக்கும் வேலைத்திட்டத்தின் முதலாம் கட்டம் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளது..

.

• பாடசாலைகளில் நிலத்தர வீழ்ச்சியைக் குறைப்பதற்கான மண் பாதுகாப்பு முன்மாதிரி நிலையங்கள் அமைத்தல்

பாடசாலைகளில் நிலத்தர வீழ்ச்சியைக் குறைக்கும் நோக்கில் மலகல மஹா வித்யாலயம் மற்றும் மஹவ கஜநெக்ம மஹா வித்தியாலயம் ஆகியவற்றில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட நிலப்பிரதேசங்கள் 02 பயனுள்ள வகையில் பயன்படுத்திக் கொண்டு நிலத் தர வீழ்ச்சியைத் தடுப்பதற்காக மாதிரி இடங்கள் 2 தாபிக்கப்பட்டன. இதனூடாக மாணவர்களுக்கு கற்றல் செயற்பாடுகளின் போதுள்ள ஒருமுகத் தன்மையான மனநிலையிலிருந்து மீளக்கூடிய நிலை மற்றும் ஞாபக சக்தியை மேம்படுத்தும் சாத்தியம் என்பன கிடைக்கும்.

கனிபொருள் மாநாடு 2018

2018" இலங்கை நேக்சிட்" நீல ஹரித யுகம் நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவாக 2018 ஒக்தோபர் 20 ஆம் திகதி கொழும்பு, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்" கனிபொருள் மாநாடு 2018 நில வளங்கள்,பொருளாதார நன்மைகள்,சுற்றாடல் தாக்கங்கள் என்ற 3 தலைப்பில் நடாத்தப்பட்டது. இந்த மாநாட்டில் உள்நாட்டு வெளிநாட்டு கனிபொருள் கைத்தொழிலாளர்கள், பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் அழ்வுப் பணியகம், இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை, இமரத்தினக்கல் ஆய்வு மற்றும் பயிற்சி நிறுவனம் போன்ற நிறுவனங்களிலிருந்து அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மொரகஹாகந்த களுகங்கை நீர் போசனைப் பிரதேசங்களில் பாதுகாப்பு நிலைமை பற்றிய ஆராய்ச்சி அறிக்கையொன்றைத் தயார் செய்தல்

நில அழிவைத் தவிர்த்தல் தொடர்பான இலக்குகள் தயாரிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட இலக்குகள் அடைந்து கொள்வதற்கு நிலம் அழிவதை தடுப்பதற்காக மொரகஹாகந்த களுகங்கை நீர் போசனைப் பிரதேசங்களில், மற்றும் மண் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக ஆராய்ச்சி செய்து கருத்திடட அறிக்கையொன்றை தயாரித்து உதவி பெற்றுக்கொள்வதற்காக அனுப்புவதற்கு ICRAF நிறுவனத்தின் வெளிநாட்டு நிபுணர் குழுவொன்றுடன் இந்த அமைச்சின் நில வளங்கள் பிரிவின் உத்தியோகத்தர்கள் குழுவொன்று **2018.03.11- 14** வரை மற்றும் **2018.04.07- 08** வரையான நாட்களில் வெளிக்கள ஆய்வொன்றில் ஈடுபட்டனர்.

அறிவுறுத்தல் உபகரணங்கள் அச்சிடல்

"பொருளாதாரத்தை சீர்படுத்தக்கூடிய இலங்கையின கனிபொருள் வளங்கள்" நூல் இலங்கையில் கனிபொருள் வளங்கள், அவற்றின் பெறுமதி பற்றிய தகவல்கள் பல இலகு மொழியில் வெளியிடப்படுவதால் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கனிபொருள் துறை பற்றிய விருப்பம் மற்றும் ஆர்வம் காட்டுபவர்களுக்கு இந்த நூலை வழங்குதல் துறைநயின் அறிவு மற்றும் நாட்டத்தை அதிகரிப்பதற்கு உதவும் என்பதால் இது சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் இரண்டிலும் அச்சிடப்பட்டன.

இதற்கு மேலதிகமாக சுற்றாடல் துறையின் பெரிய திட்டம் மற்றும் பிளாஸ்டிக் மூலம் ஏற்படும் சுற்றாடல் மாசடைவு பற்றிய துண்டுப்பிரசுரம் ஒன்றும் அச்சிப்பட்டது.

அறிவுறுத்தல் நிகழ்ச்சிகளை நடாத்துதல்

நிலைபேறான நில முகாமைத்துவம் தொடர்பாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மாணவ, மாணவிகளை அறிவூட்டும் நிகழ்ச்சிததிட்டங்கள் பின்னவல மத்திய மஹா வித்தியாலயம், நுகேகொட அனுலா வித்தியாலயம் , தேஸ்டன் வித்தியாலயம் - கொழும்பு மற்றும் ஹ/யோதகண்டிய மஹா வித்தியாலயம் ஆகியவற்றில் நடாத்தப்பட்டன. மேலும் நிலைபேறான நில முகாமைத்துவம் தொடர்பாக தங்கொடுவ பிரதேச செயலாளர் காரியாலய உத்தியோகத்தர்கள் மற்றும் தங்கொடுவ பிரதேவாசிகளை அறிவூட்டும் நிகழ்ச்சியொன்றும் மற்றும் நிலைபேறான நில முகாமைத்துவம் மற்றும் கரையோர வளங்கள் பேணிக்காப்பு என்ற தலைப்பில் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் அதிகாரிகளை அறிவூட்டும் நிகழ்ச்சியொன்றும் நடாத்தப்பட்டது.

பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல்

நில வளங்களைப் பாதுகாத்து நில தர வீழ்ச்சியைத் தடுத்தல், மண் பேணிக்காப்பு என்பவற்றிட்காக நடைமுறை ரீதியாக மேற்கொள்ள வேண்டிய செற்பாடுகள் தொடர்பாக நடைமுறை அறிவை வழங்குதல் மற்றும் அந்த அறிவு மக்கள் மத்தியில் பரவிச்செல்வதற்கு வழிவகுக்கும் குறிக்கோளை மையமாகக் கொண்டு காணி பயன்பாட்டு மற்றும் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்துடன் இணைந்து வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சிகள் 04 மூலம் காணி பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள் 200 பயிற்சியளிக்கப்பட்டனர்

சர்வதேச தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- **உலக பாலைவனமாதலை தடுத்தல் தினக் கொண்டாட்டம்- 2018 யூன் 17**

  2018 யூன் 17 ஆம் திகதி சர்வதேச பாலைவனமாதலைத் தடுத்தல் தினத்தை முன்னிட்டு மஹர சிறைச்சாலை வளாகத்தில் தாபிக்கப்பட்ட மண் பாதுகாப்பு மாதிரி நிலையம் உத்தியோகபூர்வமாக மஹர சிறைச்சாலைக்கு ஒப்படைத்தல் மற்றும் கம்பஹா மாவட்டத்தின் விவசாயிகள் 150 பேருக்கு மண் பாதுகாப்புத் தொடர்பாக செயன்முறை ரீதியாக அறிவூட்டும் நிகழ்ச்சியொன்று கம்பஹா மாவட்ட காணி பயன்பாட்டு மற்றும் திட்டமிடல் காரியாலயத்தின் ஒத்துழைப்புடன் நடாத்தப்பட்டது. இங்கு வருகைதந்திருந்த விவசாயிகளுகக்கு பெறுமதியான பழ மரக்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

- **உலக நீர்த் தினக் கொண்டாட்டம்.- மார்ச் 22**

  உலக நீர் தினத்தைக் கொண்டாடும் முகமாக பின்னவல் மாகா வித்தியாலயத்தில் பாரிய குறைபாடொன்றாகக் காணப்பட்ட குடிநீரை போதுமானளவு சேமித்துக் கொள்வதற்குத் தேவையான தண்ணீர் தாங்கியொன்று அப்பாடசாலைக்கு வழங்கி வைக்கப்பட்டது.

- உலக மண் தினக் கொண்டாட்டம் - 2018

  2018 உலக மண் தினத்தை கொண்டாடும் வேலைத்திட்டம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, விவசாய திணைக்களத்தின் இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையம், உலக உணவு தாபனம் என்பன ஒன்றினைந்து ஹட்டன் ருவன்புர கிராமத்தில் நடாத்தப்பட்டதோடு அதில் 150 பேர் வரையான கிராமிய மக்கள் கலந்துகொண்டனர்

- **உலக மண் தினம் - 2018**

  2018 மண் தினத்தின் தொனிபொருளான மண் மாசடைதலுக்கு தீர்வாக (“ Be the Solution to Soil Pollution") கீழ் உலக சிக்கலாக மாறியுள்ள மண் மாசடைதலை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு ஆராய்ச்சியொன்று நில வளங்கள் சம்பத் பிரிவினால் பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாயக் கல்லூரியின் மண் ஆராய்ச்சிப் பிரிவுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. விவசாயர இரசாயனத் திரவங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்ற நுவரெலியா மாவட்டத்தில் சீதாஎலிய பிரதேசம் தெரிவு செய்யப்பட்டு மேற்படி பிரதேசத்தில் பிர-தான நிலப்பயன்பாடுகளி 2இல் அதாவது மரக்கறிகள் மற்றும் தேயிலைப் பயிர்ச் செய்கை செய்யப்படும் நிலப்பயன்பாடு 2 இன் மண் மாதிரிகளின் மூலப்பொருள் பரம்பல் பற்றிய ஆராய்ச்சியொன்று மேற்கொள்ளப்பட்டது.

- **உடல் கடல் தினக் கொண்டாட்டம்**

யூன் மாதம் 08 ஆந் திகதிய உலக கடல் தினத்தை முன்னிட்டு மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு மற்றும் கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையுடன் இணைந்து ஊடக அலுவலர்களை அறிவூட்டும் நிகழ்ச்சியொன்று திருகோணமலை பறவைத் தீவில் நடத்தப்பட்டதோடு அங்கு பவளப் பாறைகளை சுத்தம் செய்தல் மற்றும் சுழியோடல் அமர்வொன்றும் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்டது.

- **உலக சுற்றாடல் தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித்திட்டம்.**

மஹவலி அபிவிருத்தி, சுற்றாடல் அமைச்சு மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை, கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்துடன் இணைந்து சுற்றாடல் பாதுகாப்பு, பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் மூலம் சுற்றாடல் மாசடைவதைத் தவிர்த்துக் கொள்வது எவ்வாறு என்பது பற்றி பாடசாலை மாணவ, மாணவிகளை அறிவூட்டும் நிகழ்ச்சியொன்று நீர்கொழும்பு நகர மண்டபத்தில் மற்றும் கம்பஹா மாவட்டத்தில் நடத்தப்பட்டதோடு களப்புக்களை சுத்தம் செய்யும் நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடாத்தப்பட்டது.

நில அழிவைத் தடுத்தல் மற்றும் வளமான நில முகாமைத்துவம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட சிறு நிதியுதவி நிகழ்ச்சித்திட்டம். 2018

வளமான நில முகாமைத்துவம் மற்றும் நிலத் தர வீழ்ச்சியைத் தடுத்தல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மண், நீர், கரையோரம் மற்றும் கடல் ஆகிய பிரதான தலைப்புக்கள் தொடர்பாக ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகின்ற பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உரிய நிறுவனங்களிடமிருந்து ஆராய்ச்சி பிரேரணையைப் பெற்றுக் கொண்டு அதற்காக சிறு நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சித்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்காக பொருத்தமான ஆராய்ச்சிகளைத் தெரிவு செய்தல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மூலம் நடைபெற்றதோடு அங்கு 5ஆராய்ச்சிகளுக்கு சிறு நிதியுதவி வழங்கப்பட்டது. வருட இறுதியில் ஆராய்ச்சிகள் வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

மணல் மற்றும் கருங்கல் இறக்குமதி செய்தல் தொடர்பான வழிகாட்டுநெறியைத் தயாரித்தல்

இலங்கையினுள் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்காக அதிகளவில் தேவைப்படுகின்ற மணல் மற்றும் கருங்கல் மூலம் சூழலுக்கு ஏற்படுகின்ற பாதிப்பைக் குறைத்துக் கொண்டு உரிய கால எல்லையினுள் வழங்கும் நோக்கில் பாலைவன நாடு மூலம் இறக்குமதி செய்தல் தொடர்பாக கவனம் செலுர்ாப்பட்டுள்ளது. அதன்படி இந்த பொருட்களை உரிய தரங்கொண்டதாக மற்றும் இலங்கையில் சுற்றாடலுக்குப் பாதிப்பற்ற விதத்தில் இறக்குமதி செய்தல் தொடர்பான வழிகாட்டுநெறியொன்றைத் தயாரித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேசிய கனிபொருள் கொள்கையைத் தயாரித்தல்

அமைச்சரவையினால் வழங்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு அமைய விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு வரைவுப் செய்யப்பட்ட தேசிய கனிபொருள் கொள்கையைத் திருத்தம் செய்தல் மஹவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு மற்றும் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் அழ்வுப் பணியகம் இணைந்து மீண்டும் தயார் செய்யப்பட்டது. தேசிய கனிபொருள் கொள்கை வரைவு கனிபொருள் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர். அதற்கமைய இறுதி வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.



சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இரசாயனத் திரவங்கள் முகாமைத்துவப் பிரிவு

சூழல் மாசடைதல் கட்டுப்பாடு மற்றம் இரசாயனத் திரவங்கள் முகாமைத்துவப்பரிவு சூழல் மாசடைதல் கட்டுப்பாடு மற்றம் இரசாயனத் திரவங்கள் முகாமைத்துவம் தொடர்பில்தேசிய கொள்கை மற்றும் வழிகாட்டு நெறி மற்றும் அமுலாக்கல் திட்டத்தைத் தயாரிக்கின்றது.சூழல் மாசடைதல் கட்டுப்பாடு தொடர்பில் காற்று, நீர் மற்றும் மண் மாசடைதல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளதோடு இப்பிரிவினால் ஏனைய அரச மற்றும் அரசசார்பற்ற பங்குதாரர்களுடன் அரசாயனத் திரவங்கள் முகாமைத்துவம் மற்றும் சூழல் மாசடைதல் கட்டுப்பாட்டு அலுவல்களையும் நமைமுறைப்படுத்துகின்றது.
நிலையான அபிவிருத்தி 12 இலக்கின் நோக்கத்திற்கமைய நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி மற்றும் 12.4 இற்கமைய சுற்றாடல் நட்புறவான வித்தில் இரசாயனத் திரவங்கறுக்கான முகாமைத்துவம் மற்றும் அனைத்துக் கழிவுகள் வாழ்க்கைச் சக்கரம் முகாமைத்துவம் ஆகிய இலக்குகளை அடைந்த கொள்வதற்காக இப்பிரிவினால் நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுக்கின்றன.
மேற்படி குறிக்கோளுக்கு அமைய பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் உரிய குழுக்கள் மற்றும் மக்களுக்காக நடாதத்ப்பட்டதோடு, அதன் மூலம் சுற்றாடல் மாசடைவு மட்டுப்படுத்தல் மற்றும் நாட்டில் உரிய இரசாயனப் பதார்தங்கள் முகாமை எதிர்பார்க்கப்படுகிறது.

சுற்றாடல் மாசுக்கட்டுப்பாடு மற்றும் இரசாயனப் பதார்தங்கள் முகாமைத்துவம் தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் குழுக்களில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சைப் பிரதிநிதித்துவம் செய்தல் இந்த பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன

பாசல், ஸ்டொக்கம், மினமாடா ஆகிய இடைக்கால தேசிய உடன்படிக்கைகளின் தேசிய மையப்புள்ளியாக செயற்படுகின்ற இந்தப் பிரிவு, தேசிய செயல்பாட்டுக் குழுவை நடாத்தி ஆபத்தான கழிவுகள், நீண்டகாலம் நிலைத்திருக்கும் காபன் கழிவுப் பொருட்கள், பாதரசம் மற்றும் ரோடர்டம் உடன்படிக்கையின் கீழ் தொழினுட்ப இரசாயனப் திரவங்கள் முகாமைத்துவம் தொடர்பான ஏனைய தரப்பினர்களுடன் கலந்துரையாடி தீர்வு காணல் மற்றும் நிகழ்ச்சிமுறை செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. ரோடர்டம் உடன்படிக்கையின் மேற்கொள்ளப்படுகின்ற பூச்சி கொல்லிகள் தொடர்பான நடவடிக்கைகள் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பாசல் உடன்படிக்கை: இதனூடாக ஆபத்தாக கழிவுகள் , தேச எல்லை ஊடாக போக்குவரத்து மற்றும் வெளியேற்றல் கட்டுப்பாடு தொடர்பான நடவடிக்கைகளை எடுத்தல். இந்த உடன்படிக்கை மற்றும் தொடர்புடை 186 தரப்பினர் தற்போது உள்ளதோடு இந்த உடன்படிக்கை தொடர்பாக எமது நாட்டினுள் சுற்றாடல் சட்டத்தின் கீழ் ஆபத்தாக கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ ஒழுங்கு மேற்கொள்ளப்படுவதோடு ஆபத்தாக கழிவுப் பொருட்கள் தேச எல்லை ஊடாக கொண்டு செல்லல் ஒழுங்குபடுத்தப்படுகின்றது.

பாதரசம் பற்றிய மினமாடா உடன்படிக்கை: இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாக இருப்பது பாதரசம் காரணமாக இடம்பெறும் சுற்றாடல் மாசடைவைத் தடுத்தல் மற்றும் பாதரசம் உபயேகத்ததைக் கட்டுப்படுத்துவதாகும். சட்டரீதியான இணைப்பை கொண்ட உடன்படிக்கை ஆவதோடு இதன் மூலம் பல பிரிவுகள் ஊடாக பாதரசம் மூலம் மாசடைவதைக் கட்டுப்பாடு செய்வதன் மூலம் சுற்றாடல் மற்றும் மனித சுகாதாரத்திற்கு ஏற்படுகின்ற சேதத்தைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

நீண்ட காலம் உள்ள மாசுப்பொருட்கள் பற்றிய ஸ்டொக்கம் உடன்படிக்கை; இந்த உடன்படிக்ககை மூலம் நீண்டகாலம் நிலைத்திருக்கக் கூடிய இரசாயன மாசுப் பொருட்கள் மூலம் மனித சுகாதாரம் மற்றும் சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களை மட்டுப்படுத்தல் குறிக்கோளைக் கொண்டதாகும். இந்த இரசாயனப் பொருட்கள் மனிதர்களின் மற்றும் விலங்குகளின் இழையப் பிரிவுகளில் படிந்து நோய்த்தடுப்பு, நரம்பியல் மற்றும் இனப்பெருக்க முறைமை சார்ந்த நோய்ச் சிக்கல்கள் மற்றும் சில புற்றுநோய் நிலைமைகளை ஏற்படுத்துகின்றது.

ரோடர்டம் உடன்படிக்கை: இந்த உடன்படிகக்கையில் சில ஆபத்தான இரசாயனப் பொருட்கள் மற்றும் பூச்சி கொல்லிகள் நோய்த் இடைக்கல தேசிய வியாபாரத்தில் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் முன் அறிவுறுத்தல் விருப்பம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. இதனூடாக நாடுகள் இடையில் பொறுப்புக்கள் ஏற்படுகின்றன. இந்த உடன்படிக்கையின் கீழ் தொழினுட்ப இரசாயனப் பொருட்கள் மத்திய சுற்றாடல் அதிகார சபையால் ஒழுங்குபடுத்துதல் செய்யப்படுவதுடன் பூச்சிகொல்லிகள், பதிவின் மூலம் ஒழுங்குபடுத்தப்படுகின்றது.

2018.01.01 - 2018.12.31 வரை சுற்றாடல் மாசுக்கட்டுப்பர்டு மற்றும் இரசாயனப் பொருட்கள் முகாமைத்துவ பிரிவின் செயற்பாடுகள்

ஸ்டொக்கம் உடன்படிக்கையின் கீழ் தேசிய அமுலாக்கல் திட்டத்தை இற்றைப்படுத்தல்.

ஸ்டொக்கம் உடன்படிக்கையின் கீழ் பின்வரும் அறிக்கை தயாரித்தல் பூர்த்தி செய்ப்பட்டு அச்சிடடு செயற்படுத்துவதற்காக உரிய தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கைகளில் தற்போது பயன்படுத்தப்படும் அல்லது கண்கூடித்தனமாக உருவாக்கப்படும் நீண்ட காலம் உள்ள காபன் மாசுப் பொருட்கள் பற்றிய விபரங்கள் அடங்கியுள்ளன. இந்த இரசாயன மாசுப் பொருட்கள் பாவனையை மட்டுப்படுத்தல் மற்றும் மேற்படி மாசுப் பொருட்களை முறையாக முகாமைத்துவம் செய்தல் மற்றும் மாற்றுப்பயன்பாடு தொடர்பாக உரிய பிரிவுகளை அறிவூட்டல் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டதன்

நோக்கமாகும். இந்த மாசுப் பொருட்களாவன, கழிவுப் பொருட்களை எரிக்கும் போது ஏற்படும் டைஒக்சின் மற்றும் பியுரான வாயு, ரான்ஸ்பேமர் எண்ணையில் உள்ள பொலிக்லோரினேட் பயிபினயில் வினாலாகும். இந்த நிகழ்ச்சிகள் மூலம் இன்றளவில் எமது நாட்டினுள் பயன்படுத்தி வந்த நீண்டகாலம் உள்ள காபன் மாசுப் பொருட்கள் மற்றும் பூச்சி கொல்லிகள் அனைத்தையும் தடைசெய்ய முடிந்துள்ளது.

தயாரிக்கப்பட்ட அறிக்கை

1. ஸ்டொக்கம் உடன்படிக்கைக்குரிய தேசிய அமுலாக்கல் திட்டம்
2. நிலைத்திருக்கக் கூடிய காபன் மாசு பூச்சிகொல்லிகள்
3. நிகழ்நிலைப்படுத்தப்பட்ட பொலிக்லோரினேட் பயிபினயில் பொருட்பதிவேடு
4. ஒப்புதல் இன்றி (Unintentionally Produced) ஏற்படும் நிலைத்திருக்கக் கூடிய காபன் மாசு (டயொக்சின் மற்றும் பியுரான் பதிவேடு மற்றும் வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான பிரேரணை)
5. பப்லுரோஒக்டைன் சல்போனிக் அமிலம் மற்றும் கனிம (PFOS) மதிப்பீடு மற்றும் முகாமைத்துவம்
6. பொலிபிரோமினேட் டயிபினயில் (POPs- PBDEs) மற்றும் ஹெக்சப்ரோமோ பயிபினயில் (HBB) ஆரம்ப பதிவேடு மற்றும் அமுலாக்கல் திட்டம்

உலக சுற்றாடல் தினத்துடன் இணைந்த நிகழ்ச்சித்திட்டம்

கேகாலை மாவட்டத்தில் நடாத்தப்பட்ட உலக சுற்றாடல் தின தேசிய வைபவத்திற்கு இணையாக கழிவுக் கூடைகள் 23 அரச நிறுவனங்களுக்கு பகிர்ந்தளித்தல் மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சியொன்று என்பன நடாத்தப்பட்டன. இதற்காக பொலிஸ், நீதிமன்றம், நகரசபை, மதத்தல்கள் போன்ற நிறுவனங்கள் கலந்துகொண்டன.

1. “ பிளாஸ்டிக் மாசடைதலைத் தவிர்ப்போம் “ என்ற கருப்பொருளின் கீழ் மலபே ஸ்ரீ ரஹுல மகளிர் கல்லூரி மற்றும் மொரட்டுவை பரிசுத்த குடும்ப கணிணியாராமவில் அறிவூட்டும் நிகழ்ச்சி திட்டங்கள் இரண்டு நடாத்தப்பட்டது.

2. வரக்காபொலை நகரில் சுத்தம் செய்யும் நிகழ்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பு. இதற்காக ரெகிட் பென்கின்சேர் நிறுவனம் அனுசரணை வழங்கியது.

3. சுற்றாடல் தின தொனிப்பொருளுக்கு சமாந்தரமாக சுவரொட்டி மற்றும் துண்டுப்பிரசுரம் அச்சிடடு பகரிந்தித்தல்.

4. காசல் வைத்தியசாலை குழாமிற்கு ஆபத்தாக கழிவுகள் மற்றும் சாதாரண கழிவுகள் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.

5. நீண்டகாலம் உள்ள காபன் மாசுப் பொருட்கள் பற்றிய தாரா“ என்னும் தொலைக்காட்சி அறிக்கை நிகழ்ச்சியைத் தயாரித்தல்

6. மழை நீரில் பாதரசம் கலவைகள் கலந்துள்ளனவா என்பது குறித்து பரிசீலித்து பார்ப்பதற்கான உபகரணமொன்று தாய்வான் அரசாங்கம் வழங்கி உள்ளதோடு அதனை பேராதனை பல்கலைக்கழகத்தில் தாபிப்பதற்கான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளல். இதனூடாக ஆசியா பசுபிக் பாதரசம் கண்காணிப்பு வலையமைப்பு (Asia Pacific Mercury Monitoring Network/ APMMN) உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும.

7. சுகாதார துறையின் சகல மாகாண பரிசோதனைக்கூட ஊழியர்கள்” இரசாயன பொருட்கள் மற்றும் கழிவுகள் முகாமைத்துவம்” பற்றிய பயிற்சியளிக்கப்பட்டனர் (உத்தியோகத்தர்கள் 500)

8. திறந்த பல்கலைக்கழக பணியாட் குழாமிற்கு கழிவு முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டது

9. “ தேசிய இரசாயனப் பொருட்கள் முகாமைத்துவ கொள்கையை" தயாரிப்பதற்குரிய தரபிபனர்களுடன் செயலமர்வுகள், கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடலகள் நடாத்தப்பட்டன. இந்த கொள்கையைத் தயாரிப்பதன் மூலம் இரசாயனப் பொருட்களின் வாழ்ககைச் சக்கரம் முகாமைத்துவத்தை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

10. “ தேசிய கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ கொள்கை", 2007 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட தேசிய திண்மக்கழிவு முகாமைத்துவ கொள்கை நிகழ்நிலைப்படுத்தி தயாரிக்கப்பட்டது. இங்கு திண்ம மற்றும் வாயு கழிவுகள் இந்த கொள்கையில் உள்ளடக்கப்பட்டதோடு தற்போது ஏற்பட்டுள்ள புதிய சவால்கள் ஆகியவற்றுக்கு ஏற்றவாறு பிளாஸ்ரிக், கட்டிடக்கழிவுகள், இரத்திரனியல் கழிவுகள் மற்றும் ஏனைய ஆபத்தான கழிவுகள் முகாமைத்துவமும் இதில் உள்ளடக்கப்பட்டது. இங்கு உரிய தரப்புக்களின் பணிகள் இனங்காணப்பட்டுள்ளதோடு கொள்கை வரைவை அமைச்சரவை அனுமதிக்காக முன்வைக்க நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.



11. 2017 செப்தெம்பர் மாதம் விதிக்கப்பட்ட பொலிதீன் ஒழுங்குவிதி திறமையான முறையில் மேற்கொள்வதற்குரிய குழுக் கூட்டங்கள் பல நடாத்தப்பட்டதோடு இங்கு பொலித்தீன் வகைகள் தொடர்பான HS code (Harmonized System) தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது.

வன வளங்கள் பிரிவு

"வன ரோபா" தேசிய மரம் வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டம்

இலங்கையில் ஒதுக்குக்காடுகளை 32% வரை அதிகரித்துக் கொள்வதற்கான இலக்கினை எய்தும் பொருட்டு, அரச, அரசசார்பற்ற மற்றும் தனியார் தரப்புக்களின் உயிர்பான பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் வருடாந்த நிகழ்ச்சித் திட்டமொன்றாக" வன ரோபா" தேசிய மரம் வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ் மரம் நாட்டுதல் பற்றிய கவனத்தை அதிகரிக்கும் பொருட்டு ஒவ்வொரு வருடமும் ஒக்தோபர் மாதம்" வன ரோபா" தேசிய மரம் வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. அதற்கமைய 2018ஆம் ஆண்டில்" வன ரோபா" தேசிய மரம் வளர்ப்புக் நிகழ்ச்சித்திட்டதின் பிரதான விழா அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் 2018ஆம் ஆண்டு ஒக்தோபர் 05 ஆம் திகதி மன்னார் மாவட்டத்தில் தம்பனேகுளம் என்ற இடத்தில் நடாத்தப்பட்டது. இங்கு வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் 02 ஹெகடயார் காணியில் 2000 மரக்கன்றுகள் நடாத்தப்பட்டதோடு அதற்குச் சமாந்திரமாக 2018 ஆம் ஆண்டினுள் அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற மற்றும் தனியார் தரப்பினர்களின் உயிர்ப்பான பங்களிப்புடன் நாடு முழுவதும் ஒதுக்குக் காடுகள் தவிர்ந்த இடங்களில் 269,085 மரக்கன்றுகள் நாடடப்பட்டன.

2018ஆம் ஆண்டில்" வன ரோபா" தேசிய மரம் வளர்ப்புக் நிகழ்ச்சித்திட்டதின் பிரதான விழா மன்னார் மாவட்டத்தில் தம்பனேகுளம் என்ற இடத்தில் நடாத்தப்பட்டது

மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான பழ மரக்கன்றுகளை வழங்குதல்.

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் நடாத்தப்பட்ட மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்களுக்கு தேவையான பழமரக் கன்றுகளை விநியோகிப்பதற்காக இந்த அமைச்சின் கோரிக்கையின் அடிப்படையில் சனாதிபதி செயகத்தின் புனருதய சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 4 மில்லியன் ரூபா நிதி கமத்தொழிற் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது. கமத்தொழிற் திணைக்களம் உற்பத்தி செய்யப்பட்ட 28,993 பழ மரக்கன்றுகள் மேற்படி திணைக்களம் ஊடாக மாவட்ட செயலாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், முப்படைகள், பாடசாலைகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் ஒழுங்கு செய்த மரநடுகை நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வழங்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு வன வளங்கள் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

மாநகர துரு வியன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

மாநகர பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்கு ஆரோக்கயமான வசதியுடைய சுற்றாடல் நிலைமைகள் ஏற்படுத்தும் நோக்கில் 2018 ஆம் ஆண்டு முழுவதும் மாநகர துரு வியன்களைத் தாபித்தல் செய்யும் கருத்திட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இவற்றில் நீர்கொழும்பு நகரில் ராஜபக்ஷ பூங்கா, ஆதார வைத்தியசாலை, பள்ளி, அரச கட்டிடம் மற்றும் வீதியின் இரு பக்கங்களிலும்கங்களிலும் மரம் நாட்டுதல் மேற்கொள்ளப்பட்டன. (கரையோரப் பிரதேசம் என்பதால் மரக்கன்றுகளுக்கு வலை கொண்ட பாதுகாப்புக்கள் தாபிக்கப்பட்டன).

அதேபோன்று கம்பஹா நகரம், ராகமை மருத்துவ பீடம், களணி பல்கலைக்கழகம், ஹோமாகம நனோ தொழில்நுட்ப நிறுவனம் போன்ற இடங்களில் சிவப்பு சந்தனம், வெள்ளை சந்தனம், குறைவாகப் பயன்படுத்தப்படும் பழவகைகள் அடங்கிய பெறுமதியான தாவர வகைகள் நாட்டுதல். மேலும் ஹோமாஹம தொழில்நுட்ப நகரம், ஹக்மண பிரதேச சபைக்கு சொந்தமான பிரதேசம் மற்றும் இலங்கை மகாவலி அதிகார சபை இணைந்து வெலிக்கந்தை மகாவலி நகர் ஆகிய இடங்களில் பசுமையாக்குவதற்கான தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டது

Sri Lanka NEXT தேசிய நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை நேக்சிட் சுற்றாடல் நிகழ்ச்சிக்காக வாயு வளங்கள் பிரிவுடன் இணைந்து‘‘ புவியின் தெர்வுகள் ’’ என்ற பெயரிலமூத்த இசையமைப்பாளர் ஒருவரின் பங்களிப்புடன் பாடசாலை மாணவ, மாணவிகள் 400 பேருக்காக சூழல் மற்றும் இசை பற்றிய பங்கேற்பு இசை நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது.

ஏனைய அரச நிறுவனங்களுடன் இணைந்து மர நடுகை வேலைத்திட்டங்களை வழிநடாத்துதல்.

குறைவாகப் பயன்படுத்தப்படும் பழவகை பூங்காக்களை ஏற்படுத்துவதற்காக பாடசாலைகளைத் தெரிவு செய்வதற்காக கல்வி அமைச்சின், கமத்தொழிற் மற்றும் சுற்றாடல் கல்விப் பிரிவு மூலம் உள்ளகச் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய தெரிவு செய்யப்பட்ட 152 பாடசாலைகளில் பழவகைப் பூங்காக்களை உருவாக்கம் செய்வதற்காக பழ மரக்கன்றுகள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கையெடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக புனருதய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு பெற்றுகொடுக்கப்பட்டுள்ளது.இந்த நிகழ்ச்சித்திட்டத்தை சனாதிபதி செயலகத்தின் நிலைத்திரக்கத்தகு பாடசாலை நிகழ்சிசித்திட்டத்துடன் இணைந்து செயற்படுத்த தெரிவு செய்யப்பட்டுள்ளது

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து புதிதாக நிருமாணிக்கப்படுகின்ற வீடமைப்புத் திட்டங்களில் பழமரக் கன்றுகள் ,மரக்கன்றுகள் நடுகை மேற்கொள்ளப்பட்டுவருவதோடு தற்போது அத்தகைய 12 வீடமைப்புத்திட்டங்களில் மர நடுகை வேலைத்திட்டங்களுக்கு பங்களிப்பு செய்யப்பட்டுள்ளன.

வேறு நிறுவனங்கள் மூலம் மர நடுகைக்காக முன்வந்த விண்ணப்பதாரிகளுக்கு கமத்தொழிற் திணைக்களத்தினால் பழமரக் கன்றுகளை வழங்குதல், வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் மரக்கன்றுகள் வழங்குதல் மற்றும் மகாவலி அதிகார சபையின் நீராவிய பயிர்ச் செய்கை தோட்டத்தினால் மரக்னறுகளை வழங்குதல் நடவடிக்கைகள் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டன.

மாவட்ட சுற்றாடல் மாநாடு மற்றும் 2018 சர்வதேச சுற்றாடல் தினக்கொண்டாட்டம் 2018.05.04 ஆம் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் கேகாலையில் நடாத்தப்பட்ட வைபவத்தில் கலந்து கொண்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு 1000 ஒட்டு மா மரக் கன்றுகள் 1000 வில்வம் மரக்கன்றுகள், 1000 ரம்புட்டான் கன்றுகள் 500 மாதுளம் மரக்கன்றுகள் 500 அனோதா மரக்கன்றுகள் என்ற அடிப்படையில் 4000 பழக்கன்றுகள் பகிர்நதளிக்கப்பட்டன.

அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் மன்னார் பொது விளையாட்டரங்கில் 2018.10.05 ஆம் திகதி நடாத்தப்பட்ட ‘‘வன ரோபா’’ தேசிய மர நடுகை வைபவத்தில் கலந்து கொண்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு 1000 ஒட்டு மா மரக் கன்றுகள் 1000 மாதுளம் மரக்கன்றுகள் 500 தேசி மரக்கன்றுகள்,கொய்யா மரக்கன்றுனகள் 500 என்ற அடிப்படையில் 3000 பழக்கன்றுகள் பகிர்நதளிக்கப்பட்டன.

பாடசாலை மாணவர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்.

இந்நாட்டின் ஒதுக்குக்காடுகளை அதிகரிக்கும் தேசிய நிகழ்ச்சிததிட்டம் பல்வேறு கோணங்களில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் மர வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டம் மூலம் பாடசாலை சமூகத்தை அதற்காக ஆற்றுப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தல் மற்றும் நடைமுறைச் செய்ற்பாடுகள் ஊடாக காடுகள் பாதுகாப்பு தொடர்பாகவும், மரம் நாட்டுதல் தொடர்பாகவும், உயிரியல் பல்வகைமையைப் பேணிப் பாதுகாத்தல் தொடர்பாகவும் புதிய அறிவை வழங்குவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தமையும், பாடசாலைகள் மற்றும் வீடுகளில் முறையான விதத்தில் கழிவுகளை முகாமைத்துவம் செய்தல் தொடர்பான மனப்பாங்கு விருத்தியை ஏற்படுத்தல் என்பன இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களாகும்.

I. 2018 ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி அநுராதபுர மாவட்டத்தில் தம்மதின்ன மகா வித்தியாலயம்.- இதில் இப்பாடசாலையின் 6 - 11 தரங்களைச் சேர்ந்த 150 மாணவர்கள் மற்றும் ஆசிரிய, ஆசிரியைகள் கலந்துகொண்டனர். இங்கு இந்த நிகழச்சித்திட்டத்தின் கீழ் அமைச்சின் வன வளங்கள் பிரிவினால் கிலோ பேர 200 கன்றுகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன

II. 2018 செப்தெம்பர் மாதம் 26 ஆம் திகதி கேகாலை கிவுல்தெனிய மகாநாம மஹா வித்தியாலயம்

இதற்காக மேற்படி வித்தியாலயத்தின் 6 - 13 தரங்களைச் சேர்ந்த மாணவர்கள் 300 பேர் வரையிலும் மற்றும் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். வன வளங்கள் பிரிவின் ஒதுக்கீட்டின் மூலம் பழ மரக் கன்றுகள் 30 பாடசாலை மாணவர்களுக்கு நாட்டுவதற்காக வழங்கப்பட்டதோடு கழிவுகளை வகையீடு செய்து சேகரித்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் கழிவுகளை வகையீடு செய்யும் கூடைகள் சோடியொன்று மற்றும் கூட்டுப்பசளை தயாரிக்கக்கூடிய கூடைகள் இரண்டு மற்றும் அறிவூட்டும் இரண்டு பெயர்ப்பலகைகள் பாடசாலையில் தாபிக்கப்பட்டன.

வனங்களைப் பேணிப் பாதுகாக்கும் பொருட்டு காணிகளைக் கையகப்படுத்தல்

வனங்களைப் பேணிப் பாதுகாக்கும பொருட்டு காணிகளைக் கையகப்படுத்தல் 3 வலயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

I. நகல்ஸ் மலைத் தொடரைப் பேணிப்பாதுகாக்கும் பொருட்டு காணிகளைக் கையகப்படுத்தல்.

II. சிங்கராஜ வனத்தைப் பாதுகாப்பதற்காக காணிகளைக் கையகப்படுத்தல்.

III. வேறு – வனப்பயிரிடலுக்காகக் காணிகளைக் கையகப்படுத்தல்.

மேற்படி குறிக்கோள்களுக்காக வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு காணிகளை சுவீகரித்தல் நடவடிக்கை பல்வேறு சிக்கல்கள் காரணமாக மந்தகதியில் மேற்கொள்ளப்பட்டதோடு இதற்காக உரிய பிரதேச செயலாளர்கள், வனப் பாதுகாப்பு திணைக்களத் உத்தியோகத்தர்கள், காணி அமைச்சின உத்தியோகத்தர்கள், மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் அளவை உத்தியோகத்தர்கள் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் இது தொடர்பாக அனைத்து தரப்புக்களும் ஒன்றாக இணைந்து தற்போது சிக்கல்கள் நிலையில் உள்ள காணிகள் தொடர்பாக தீர்வுகளைக் பெற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

நகல்ஸ் காடுகள் பாதுகாப்புத் தொடர்பாக 2018 ஏப்ரல் மாதம் நடைபெற்ற செயலமர்வு மூலம் உடதும்பர பிரதேச செயலாளர் காரியாலயத்தில் 124 காணி கோப்புக்கள், 2018 யூன் மாதம் நடைபெற்ற செயலமர்வு மூலம் மெததும்பர் பிரதேச செயலாளர் காரியாலயத்தில் காணி 75 கோப்புக்கள் கலந்துரையாடி சிக்கல்களுக்கு தீர்வுகளைக் பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டது. இதன் பயனாக இந்த கோப்புக்களில் 75% வரை, அப்போது காணப்பட்ட பிரிவுகள் மட்டத்திலிருந்து அடுத்த பிரிவுகளின் மட்டம் வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. மேலும் உடதும்பர ,கொட்டபொல பிரதேச செயலகங்களுக்குரிய காணி கையகப்படுத்தல் தொடர்பான ஆட்சேபணை விசாரணைகள் 02 நடாத்தப்பட்டதுடன்,20

கோப்புக்களுக்குரிய காணி கையகப்படுத்தல் அலுவல்களை நிறைவு செய்வதற்கும் மற்றும் 21 கோப்புகளுக்குரிய காணி கையகப்படுத்தல் பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன.

பொதுமக்கள் முறைப்பாடுகள் ஒருங்கிணைப்பு

வனாந்தரக் காணிகள் மற்றும் சிறிய நீர் வலு நிலையங்கள் தொடர்பான பொதுமக்கள் முறைப்பாடுகளுக்கு களுத்துறை, முல்லைத்தீவு, இரத்தினபுரி மாவட்டங்களில் கள விசாரணைகளை நடாத்தி உரிய அவதானிப்புகளை வழங்க நடவடிக்கையெடுக்கப்பட்டதுடன் மத்திய சுற்றாடல் அதிகார சபை, வனப்பாதுகாப்புத் திணைக்களத்திற்கு உரிய சுற்றாடல் மதிப்பீட்டுக் குழுக்களின் உறுப்பினராகவும் இந்த பிரிவு செயற்பட்டது. பொதுமக்களின் 70 முறைப்பாடுகள் தொடர்பாக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (உம்- லோலுகஸ்வெவ, அமாவில் ஆரண்ய, , வட்டமடு காணிப் பிரச்சினை போன்றன.)இதற்கு மேலதிகமாக சிறிய நீர் வலு நிலையங்கள் தொடர்பாக காணப்பட்ட நிறுவனப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காகவும் இந்தப்பிரிவினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நீதிமன்ற உத்தரவு,வழக்குகள்,சுற்றாடல் நேயமிக்க பிரதேச சிக்கலான பிரச்சினைகள் தொடர்பான தலையீடு.

சுற்றாடல் திட்டமிடல் மற்றும் பொருளாதாரப் பிரிவு

2018 ஆம் ஆண்டில் இப்பிரிவினால் பிரதான 08 நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

01. பசுமைக் கிராமம் நி.திட்டம் 02. பசுமை கணக்கீடு

03.தூய்மையான உற்பத்தி 04. பசுமை அறிக்கையிடல

05.பசுமை பெறுகை 06. நீலப் பசுமை மூலிகைத் தோட்டம் தாபித்தல்

07. பட்டப்பின் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்

08. இலங்கை மனித உரிமைகள் மற்றும் மேம்பாட்டுக்கான தேசிய அமுலாக்கல் திட்டம்.

நீலப் பசுமை அழகான இலங்கை பசுமை சுஹுரு கிராமங்கள் அபிவிருத்தி செய்தல் நிகழ்ச்சித்திட்டம்

காலநிலை மாற்றங்களின்பாதகமான தாக்கங்களுக்கு உட்படுகின்ற மக்கள் வசிக்கின்ற கிராமங்களைத் தெரிவு செய்து கொண்டு அந்தப்பிர்சினைகளுக்கு தாக்குப் பிடிகக்கம் மேம்படுத்தும் நோக்கில் முழு நாடும் உள்ளடக்கப்படும் வகையில் மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது இதன் அடிப்படை உத்தியாக அமைவது பாதகமான காலநிலை தாக்கங்களுக்கு தாக்குப் பிடிக்கும் கொள்ளளவை அதிகரிக்கும் செயற்பாடுகளை உள்ளடக்கி பங்களிப்பு கிராம அபிவிருத்தி திட்டத்தைத தயாரித்து கூட்டாக நடைமுறைப்படுத்துவதாகும் அங்கு கிராம அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வளங்களைச் சேகரிப்பதன் மூலம் மற்றும் வழங்குதல் மூலமும் மேற்படி கிராமிய பிரசைகளுக்கு உரித்தாக்கிக் கொடுப்பதற்காக அரச,தனியார் மற்றும் அரச சார்பற்ற தரப்புக்கள் இணைந்து நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- நீலஹரித் அழகான இலங்கை சுஹுரு கிராம நிகழ்ச்சிக்காக இடை நிறுவன ஒருங்கிணைப்பு

- நீரஹரித கிராம நிகழ்ச்சிக்காக அத்தனகல்ல. மாவட்ட செயலாளர் காரியாலயத்தில் சமூர்த்தி உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்காக கலந்துரையாடல் ஒன்று மேற்படி சமூர்த்தி காரியாலயத்தில் நடாத்தப்பட்டது.

- அங்கு தற்போது அத்தனகல்ல. போபாகம- கெந்தலந்த நீலஹரித கிராமத்திற்கான பங்களிப்பு கிராம அபிவிருத்தி திட்டம், காணி பயன்பாட்டுத் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளதால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்கள் உத்தேச இணைந்த பிரவேசத்தினுள் மேற்கொள்ளல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

- சர்வதேச உயிரியல் பல்வகைமை உடன்படிக்கையின் பங்குதார அரசென்றாக மாறி 25 வருட பூர்த்தியை முன்னிட்டு குறைவான பயன்பாடுள்ள பழங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட உணவு முன்வைக்கப்பட்டது. நீலஹரித கிராம பிரிவுகளில் தற்போதுள்ள மரக்கறிகள்,பழங்கள் என்பனவற்றைப் பகிர்ந்து கொள்வதற்காக மக்கள் பங்கேற்பு கருவியொன்றாக உணவு சபையைத் தயாரித்தல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- நீலஹரித கிராம திட்டத்தின் பங்புதாரத் அமைப்பொன்றான கண்டி, குண்டசாலே இணைந்த அபிவிருத்தி சங்கம் மூலம் நீலஹரித கிராம நிகழ்ச்சித்திட்டத்தை தேசிய பொருளாதாரத்துடன் பிரதானப்படுத்தல் (mainstreaming) மற்றும் அளவிடல் (up-scaling) செய்வதற்காக மூலோபாய பிரவேசமொன்றைத் தயாரிப்பதற்காக செயலமர்வொன்று நடாத்தப்பட்டது.

- மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் அதிமேதகு சனாதிபதி மைத்திரபால சிறிசேன அவர்களின் ஆலொசனையின் பேரில் வடக்கு நெடுந்தீவுக்கான வளமான அபிவிருத்தி திட்டமொன்றை தயாரித்தல் அமைச்சின் வன வளங்கள் பிரிவின் மூலம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு சமமாக நெடுந்தீவு உள்ளடக்கப்படும் வகையில் நீலஹரித வலையமொன்றை பிரகடனப்படுத்தி தீவில் நீலஹரித கிராம நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்கு கள ஆய்வொன்றில் ஈடுபடல்.

நெடுந்தீவுப் பகுதியில் கள ஆய்வை மேற்கொள்ளல்

- வெலிக்கந்தை மகாவலி சீ வலயத்தின் ஹரித பாடசாலை மற்றும் ஹரித விவசாய அமைப்புகளை தாபிப்பதற்காக மற்றும் பிரிவு முகாமையாளர்களை பயிற்சியளிப்பதற்காக செயலமர்வொன்று வெலிக்கந்தை பிரிவு முகாமையாளர் அலுவலக கேட்போர் கூடத்தல் நடாத்தப்பட்டது. அங்கு மகாவலி பிரதேசத்தினுள் சுற்றாடல் கருத்திட்டத்தை மேற்கொள்வதற்காக உத்தியோகத்தர்கள் பயிற்சியளிக்கப்பட்டனர். மேலும் விளையாட்டு மற்றும் சுற்றாடல் படையணி தாபித்தல்- மகாவலி பீ வலயம்
    - இலங்கை மகாவலி அதிகார சபையின் மகாவலி கேந்திர நியைம் மூலம் தெஹியத்தகண்டி மகாவலி சீ வலயத்தின் விளையாட்டு மற்றும் சுற்றாடல் படையணி தாபிப்பதற்கு பங்களிப்பு பெற்றுக் கொடுத்தல். அங்கு பாடசாலை மாணவர்கள் **150** வரையில் கலந்துகொண்டதோடு அங்கு மா,கொய்யா மற்றும் பலா மரக்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

மா,கொய்யா மற்றும் பலா மரக்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்படல்- தெஹியத்தகண்டி

- இலங்கை நேக்சிஸ்ட்- நீல ஹரித யுகம் நோக்கி தேசிய கண்காட்சி மற்றும் உரையாடலுக்காக " நீல ஹரித கிராம உரையாடல்" என்ற நிகழ்ச்சிததிட்டம் முன்வைக்கப்பட்டது. அங்கு மாதிரி கிராம நிகழ்ச்சிமுறை மேறகொள்ளப்படுவதோடு ஏனைய அரச, அரசசார்பற்ற மற்றும் சனசமூக அடிப்படை நிறுவனங்கள் மற்றும் ஒன்றிணைந்த அணுகலாக நீர ஹரித கிராம நிகழ்ச்சிதிட்டத்தை மேற்கொள்ளக் கூடிய விதம் சமர்ப்பிக்கப்பட்டது.

- நீலஹரித கிராம நிகழ்ச்சிக்காக நிறுவன இணைப்பு கலந்துரையாடல் ஒன்று இணைந்த கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் தயாரித்தல் மற்றும் நீல பசுமை கிராமம் வழிகாட்டல் சஞ்சிகை வரைவைத் தயாரிப்பதற்காக 02 செயலமர்வுகள் நடத்தப்பட்டு வரைவு தயாரித்தல் நிறைவு செய்யப்பட்டது (பத்தரமுல்லை/ குண்டசாலை)

பசுமைக் கணக்கீட்டை இலங்கையில் தாபித்தல்:

தற்போதுள்ள வழிமுறைக்கமைய தேசிய பொருளாதாரத்திற்கு இயற்கைச் சுற்றாடல் மூலம் கிடைக்கும் பங்களிப்பு மற்றும் பொருளாதாரச் செயற்பாடுகள் காரணமாக சுற்றாடலுக்கு ஏற்படும் சேதங்கள் காரணமாக ஏற்படுகின்ற நட்டம் மொத்தத் தேசிய உற்பத்தி கணக்கிடுகின்ற போது கவனத்திற் கொள்ளப்படுவதிலலை. இந்த விடயம் காரணமாக கொள்கைகளை வகுக்கும் போது சூழல் சர்ந்த விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படாமையால் இயற்கை வளங்கள் அழிவுக்குற்பட்டுள்ளன. இயற்கை வளங்கள்

மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு கிடைக்கப் பெறுகின்ற பங்களிப்பைக் கணித்தல் மற்றும் அதனை மொத்தத் தேசிய உற்பத்திக்குச் சேர்த்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் மூலம் பசுமைக் கணக்கீட்டு வழிமுறை ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய ஐக்கிய நாடுகள் அமைப்பின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதாரக் கணக்கீட்டினுள் முழுமையான பொருளாதார பெறுமதி என்ற எண்ணக்கருவின் கீழ் சுற்றாடல் பங்களிப்பை உட்சேர்ப்பதற்கு முன்மொழியப்பட்டது.

பசுமைக் கணக்கீட்டின் கீழ் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- ஹரித கணக்கீடு பற்றி பங்குதாரத்தரப்புக்களுடன் தற்போதைய நிலைமை மற்றும் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் பற்றி செயலாளர் தலைமையில் கலந்துரையாடல் ஒன்றுநடாத்தப்பட்டது
- ஹரித கணக்கீடு பற்றி அமைச்சின் அதிகாரிகளை அறிவூட்டும் செயலமர்வு நடாத்துதல்.
- சக்திப் பிரிவின் ஹரித கணக்கீட்டுப் பெறுமதிகள் கணிப்பீடு செய்தல் தொடர்பான ஆரம்ப கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டது

சக்திப் பிரிவின் ஹரித கணக்கீட்டுப் பெறுமதிகள் கணிப்பீடு தொடர்பான ஆரம்ப கலந்துரையாடல்

- ஹரித கணக்கீடு பற்றிய நீர் பிரிவின் சர்வதேச வகைப்படுத்தல் (ISIC) தேசிய மட்டத்தில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தயாரிப்பதற்காக பங்குதார நிறுவனங்களுக்கு அறிவூட்டுதல் மற்றும் அந்த நிறுவனங்களுடன் இணைந்து வகையீடுகளைத் தயாரித்தல்.

நீர் பிரிவின் ஹரித கணக்கு கணிப்பீடு பற்றிய நிறுவனங்களை அறிவூட்டும் செயலமர்வு

- ஹரித கணக்கிடல் பற்றி நீர் பிரிவின் இரண்டாம் செயலமர்வை நடாத்துதல் (நீர் பிரிவு மதிப்பீடு செய்வதற்காக தயாரிக்கப்பட்ட அட்டவணையை நிறுவனங்களுடன் கலந்துரையாடுதல. தாபனங்கள் சிலவற்றின் மத்திய நிலையத்தை அடையாளம் காணுதல்) தரவு விண்ணப்பப் செய்வதற்காக ஒவ்வொரு நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்புதல் மற்றும் ஒவ்வொரு நிறுவனத்திற்காகவும் தனித்தனியாக தரவு பெற்றுக் கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட அட்டவணையை அனுப்புதல்

நீர்ப்பிரிவின் பசுமைக்கணகக்கிடல் தொடர்பான இரண்டாம் செயலர்வு

வளங்கள் வினைத்திறன் மற்றும் தூய்மையான உற்பத்திக் கொள்கையை ஊக்குவித்தல்.

நிலைபேறற்ற நுகர்வுப் பழக்கம் காரணமாக இயற்கை வளங்கள் மீதான கேள்வி நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இருப்பினும் தூய்மையான உற்பத்தியை மேற்கொள்வதன் மூலம் வளங்களைப் பயன்படுத்தல் வினைத்திறனை அதிகரித்து இயற்கை வளங்களை தேய்வடைவதைக் (குறைவடைவதை) குறைத்து மாசடைதல் மற்றும் உற்பத்திச் செலவு என்பவற்றைக் குறைத்துக் கொள்ள முடியமென உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

1. கைத்தொழிலாளர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திதட்டம் (Switch-Asia கருத்திட்டம் ஊடாக நடாத்தப்பட்டது)

தேசிய பசுமை அறிக்கையிடல் வழிமுறையை நடைமுறைப்படுத்தல்.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அசைச்சின் மூலம் உற்பத்தி மற்றும் சேவைகள் துறையின் நிலையான செயலாற்றுகையை அறிக்கையிடுவதற்காக 2011 ஆம் ஆண்டில் தேசிய பசுமை அறிக்கையிடல் வழிமுறை தாபிக்கப்பட்டது. உற்பத்தி மற்றும் சேவைகள் துறையின் நிலையான துறையின் நிலையான செயலாற்றுகையை தொடர்பாடல் செய்வதற்காக தேசிய பசுமை அறிக்கையிடல் வழிமுறை பயனுள்ளவிதத்தில் பயன்படுத்தப்பட்டன.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை நோக்கம் உற்பத்தி மற்றும் சேவை வழங்குநர்களின் நிலையான செயலாற்றுகை மதிப்பீடு மற்றும் நிலையான செயலாற்றுகை அறிக்கையிடல் ஆற்றல் விருத்தியாகும். தேசிய பசுமை அறிக்கையிடலில் தற்போது உற்பத்தி மற்றும் சேவைகள் நிறுவனங்கள் 120 வரை இதில் இணைந்துள்ளதோடு பசுமை அறிக்கை வருடாந்தம் அவர்களால் சமர்ப்பிக்கப்படுகின்றன. தேசிய பசுமை (ஹரித) அறிக்கையிடல் வழிமுறையின் கீழ் கீழ்வரும் செயற்பாடுக்ள மேற்கொள்ளப்பட்டன.

- இந்த வருடத்தில் மேலும் 30 கைத்தொழிலாளர்கள் வரை பசுமை அறிக்கையிடல் தொடர்பாக பதிவு செய்துகொண்டனர்.
- 2018 ஆண்டுக்கான பசுமை அறிக்கை 05 கைத்தொழிலாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டதோடு இலங்கை NEXT நிகழ்ச்சித்திட்டத்தினால் நடாத்தப்பட்ட சனாதிபதி விருதுவழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் போது அந்த சனாதிபதி விருது வழங்கிவைக்கப்பட்டது.

- 2018 ஆம் ஆண்டினுள் பதிவு செய்யப்பட்ட கைத்தொழிலாளர்கள் (இரண்டாம் மட்டம்) அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 02 நடாத்தப்பட்டன.

பசுமைப் பெறுகை

- தேசிய பசுமை பெறுகை வழிகாட்டல் இரண்டாம் வரைவுக்கான முன்மொழிவு மற்றும் கருத்துக்கள் தேசிய பெறுகை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- பசுமை உற்பத்தி மற்றும் பயன்பாடு தொடர்பான கருதிட்டத்தோடு இணைந்ததாக அறிவூட்டும் 5 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

நீல ஹரித மூலிகைப் பூங்கா ஒன்றைத் தாபித்தல்:

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம்

- அரிய தாவர விசேட பாதுகாப்பு மற்றும் நிலைத்திருக்கத்தகு பாவனைக்கு சந்தர்ப்பம் அளித்தல்.
- நீலப் பசுமை கிராமம் நிகழ்ச்சித்திட்த்தின் கீழ் பசுமை தொழில் உருவாக்கத்திற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.
- பசுமை தொழில் விருத்தி செய்தல்.
- உயிரியற் பல்வகைமை பேணிப்பாதுகாத்தல்
- 5.கல்விப் பெறுமதி கொண்ட மூலிகைப் பூங்கா ஒன்றைத் தாபித்தல்

2018 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படுகின்ற நீல ஹரித மூலிகைப்பூங்காக்களை தாபித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மூலிகைப்பூங்கா 03 ஐப் தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன் கீழ், வெலிக்கந்தை கிராமிய வைத்தியசாலை, மீகொட ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் யகிரல ஆகிய மூலிகைப் பூங்காக்களில் பொருத்தமான மூலிகை கன்றுகளை நாட்டுவதற்காக சுற்றாடல் திட்டமிடல் மற்றும் பொருளாதார பிரிவு திட்டமிட்டுள்ளது. மூலிகைக் கன்றுகளை நாட்டுதல் வனரோபா தேசிய மரநடுகை நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவாக 2018 ஒக்தோபர் மாதம் முதல் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இங்கு வெலிக்கந்தை நகரத்தை பசுமை நகரமாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெலிக்கந்தை கிராமிய வைத்தியசாலை வளாகத்தில் தற்போது காணப்படும் மூலிகை பூங்காவை மேலும் அபிவிருத்தி செய்வதற்கும், மீகோட ஆயுர்வேத வைத்தியசாலைக்குச் சொந்தமாகவுள்ள மூலிகைப் பூங்காவை மேம்படுத்துவதற்கும் மற்றும் மேல் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தினால் யகிரலபிரதேசத்தில் தாபிக்கப்படுகின்ற மூலிகைப் பூங்காவுக்குத் தேவையான உயர்தரமான மூலிகைக் கன்றுகளை வழங்கப்படும். இங்கு மேற்படி நிறுவனத்தினூடாக செய்யப்பட்ட வேண்டுகோள் படி உரிய இடங்களில் காலநிலை நிலைமைகளுக்குப் பொருத்தமான மற்றும் பரிகார நடவடிக்கையாக தேவைப்பாடு காணப்படுகின்ற மூலிகைக் கன்றுகளை பெற்றுக் கொடுத்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது

வெலிகந்த மூலிகைப் பூங்காவுக்கான மரக் கன்றுகளை நடுதல்

பட்டப்பின் படிப்பு டிப்ளோமா நிகழ்ச்சி:

சுற்றாடல் திட்டமிடல் தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கருத்திட்ட பட்டப் பாடநெறி ஊக்குவிப்புக்காக மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் Country Town Planning department உடன் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன். இந்தப் பட்டப்பின் படிப்பு பயிற்சி நெறிக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் 2017ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய இந்த பாடநெறிக்காக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு 2018.08.04 ஆம் திகதி தொடக்கம் இப்பாடநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் மற்றும் மேம்பாடு தொடர்பான தேசிய அமுலாக்கல் திட்டம்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் உறுப்பாண்மை பெற்றுக் கொள்ளல் வரை இலங்கை தனது சனநாயக மற்றும் மக்கள் மைய கொள்கைகளுக்கு ஏற்ப செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, ஐக்கிய நாடுகள் பிரதான மனித உரிமைகள் உடன்படிக்கை மற்றும் ஏனைய தரப்புகளுக்கிடையிலான பல தொண்டர் அடிப்படையில் தரப்பொன்றாக மாற்றியுள்ளமை மற்றும் அனைத்து இலங்கைப் பிரசைகளின் உரிமையை மேம்படுத்தல் மற்றும் பாதுகாப்பு நோக்கம் கொண்ட மாற்று (Protocol) புரட்டகோலாகும்.

உலக சுற்றாடல் பங்களிப்புச் செயற்பாடுகளினுள் இலங்கை தொழிற்படுரீதியாக கலந்து கொண்டதோடு பல்தரப்பு சுற்றாடல் உடன்படிக்கை மற்றும் வெளியீடுகள் ஏறத்தாழ 40 வரையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. நியதிச்சட்ட ரீதியாக பாதுகாக்கப்பட வேண்டிய அடிப்படை உரிமையாக சுற்றாடலக்குள்ள உரிமையை அடையாளம் காணுதல் கட்டாயமாக இருத்தல் வேண்டுமென்பதோடு சுற்றாடலுக்குரிய சட்டங்கள் மற்றும் கொள்கைகள் வலுவாக்கம் செய்வதற்காக தேசிய அமுலாக்கல் திட்டத்தினுள் அதற்கு முதன்மை வழங்க வேண்டும்.

மேற்படி விடயங்களைக் கருத்திற் கொண்டு, மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு மற்றும் ஏனைய தரப்புக்களின் தொழிற்படு பங்குபற்றலுடன் இலங்கை அரசாங்கத்தினால் தேசிய மனித உரிமைகள் அமுலாக்கல் திட்டம் 2017- 2021 தயாரிக்கப்பட்டதோடு, அதனை 2017 ஒக்தோபர் மாதம் அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தேசிய மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக தேசிய அமுலாக்கல் திட்டம் தொடர்பாக முன்னேற்ற மீளாய்வு/ சிபாரிசு/ பிரேரணை செயற்படுத்தல் குறுகிய கால (2018.06.30 வரை), மத்தியகால (2019.12.31), நீண்ட கால (2021.12.31) என்றவாறு செயற்படுத்தல் அல்லது இணைப்புச் செய்வதற்காக உரிய அமைச்சு/ நிறுவனங்கள் குறிப்பாக அடையாளம் காணப்பட்டுள்ளது

கௌரவ பிரதமர் அவர்களின் தலைமையில் இடைக்கல அமைச்சுக் குழு மூலம் அமுலாக்கல் திட்டம் நடைமுறைப்படுத்தல் முன்னேற்ற மீளாய்வு செய்யப்படுவதோடு சிவில் சமூக தரப்புக்களின் பங்குபற்றலுடன் சுற்றாடல் விடயத்துடன் இணைந்த அனைத்து நிறுவனங்களின் பங்களிப்புடன் நடைபெறும் துறைசார் குழுவுக்கு ஒவ்வொரு மாதமும் உத்தியோகத்தர்களின் குழுவுக்கு முன்னேற்றம் அறிக்கையிடுவதற்கு நேரிடுகின்றது

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- சுற்றாடல் உரிமைகள் தொடர்பாக இணங்காணப்பட்ட குறுகிய கால செயற்பாடுகள் மூலம் ஒன்று தவிர்ந்த 2018.06.30 திகதிக்கு நிறைவேற்றல் (தேசிய சுற்றாடல் சட்டத்தை திருத்தம் செய்யும் செயற்பாடுகள் குறுகிய கால செயற்பாடொன்று என்ற வகையில் இனங்காணப்பட்டுள்ள போதிலும் ஆனால் அது பல கட்டங்கள் ஊடாக செய்யப்பட வேண்டிய காரணத்தால் 2018.06.30 தினத்தன்று நிறைவு செய்ய முடியவில்லை. எனினும் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் வரை பணிகளை நிறைவு செய்யப்பட்டுள்ளன.)
- ஒவ்வொரு மாத இறுதியிலும் சுற்றாடல் உரிமைகள் தொடர்பாக துறைசார் குழுக் கூட்டம் நடத்தி முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டு நல்லிணக்க பொறிமுறை தொடர்பாக இணைப்புச் செயலாளர் பணியகம் அறிக்கையிடல்
- ஏனைய அமைச்சுக்களின் அமுலாக்கல் திட்டத்திற்காக இந்த அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் பங்கு கொள்ளும் சந்தர்ப்பங்களில் அதற்காக நடைபெறும் துறைசார் குழுக் கூட்டம் தொடர்பாக கலந்துகொள்ளல் மற்றும் அறிக்கை வழங்குதல்.

சுற்றாடல் கல்வி மற்றும்
மேம்பாட்டுப் பிரிவு

2018 ஆம் ஆண்டின் சர்வதேச சுற்றாடல் தின வைபவம்

2018 ஆம் ஆண்டின் சர்வதேச சுற்றாடல் தின வைபவம் மற்றும் சுழல் பாதுகாப்பு மாநாடு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் மற்றும் பாராளுமன்ற அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்கேற்புடன், விசேடஅதிதிகள் மற்றும் பாடசாலை மாணவ மாணவியர்களின் பங்குபற்றலுடன் 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆம் திகதி கேகாலை சுதந்திர மாவத்தையில் நடாத்தப்பட்டது. பிளாஸ்டிக் முறையற்ற பாவனையினால் ஏற்படுகின்ற சுழல் மாசடைவை தவிர்ப்பபோம் (Beat Plastic Pollution) என்பது இவ்வருட சர்வதேச சுற்றாடல் தினத்தின் தொனிப்பொருளாகும்.

அதிமேதகு சனாதிபதி அவர்கள் வைபவத்திற்காக வரவேற்றக்கப்படும் காட்சி

சுற்றாடல் உறுதியுரை

2018 சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வில்வம் மரக்கன்று நாட்டப்படும் காட்சி

“சொபா சலன” குறுந்திரைப்பட போட்டி நிகழ்ச்சியொன்றை நடாத்துதல்.

இளம் திரைப்படத்துறையினர் மத்தியில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பான சிந்தனையை வளர்ப்பதன் ஊடாக ஆக்கபூர்வ சமூக உரையாடலொன்றை கட்டியெழுப்பும் நோக்காகக் கொண்டு உலக சுற்றுச் சூழல் தினத்திற்கு இணையான நிகழ்ச்சியொன்றாக “சொபா சலன” குறுந்திரைப்பட போட்டி நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. படைப்பாளர்களினால் முன்வைக்கப்பட்ட படைப்புக்கள் தேர்ச்சிபெற்ற நடுவர் குழுவொன்றின் மூலம் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டதோடு விருது விழாவானது Sri Lanka Next “நீல ஹரித்த யுகயக்” நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக அமைச்சின் செயலாளரின் தலைமையின் கீழ் தேர்ச்சிபெற்ற நடுவர் குழு மற்றும் படைப்பாளிகளின் பங்குபற்றுதலுடன் 2017.10.17 ம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. மிகச் சிறந்த படைப்புக்களை உருவாக்கும் நோக்கில் படைப்பாளிகள் மற்றும் நடுவர் குழுவினருக்கிடையில் ஓர் அறிவார்ந்த உரையாடலொன்றை உருவாக்குவதற்கான வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது

திறமை விருது முதலாம் இடம்: திரு.நாலக்க விஜேரத்ன

කුසලතා සම්මාන දෙවන ස්ථානය - සුදීෂ රත්නායක

කුසලතා සම්මාන තෙවන ස්ථානය - මනෝද්‍ය අමරසීව



කුසලතා සම්මාන සිව්වන ස්ථානය - එස්. මනෝජ්

சுற்றாடல் பிரச்சினைகள் பற்றிய ஊடக அறிக்கையை ஒருங்கிணைத்தல்

தொலைக்காட்சி ஊடகங்களில் ஒளிபரப்பாகும் சுற்றாடல் பிரச்சினை மற்றும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் சுற்றாடல் தொடர்பான பிரச்சினைகள் சம்பந்தமான நிறுவன ரீதியான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது இந்த பிரிவின் ஊடாக நடைபெறும். விஷேடமாக இதனூடாக தற்காலத்தில் தோன்றியுள்ள சுற்றாடல் பிரச்சினைகளுக்காக அமைச்சு மட்டத்திலான தலையீட்டுடன் தீர்வுகளைக் காண்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் சுற்றாடல் பிரச்சினைகளை குறைப்பது இதன் பிரதான நோக்கமாகும்.

.தற்கமைய அறிக்கையிடப்படுகின்ற காலப்பகுதிக்குரியதாக 07 தொலைக்காட்சி அவைரிசைகளில் ஒளிபரப்பான 236 சுற்றாடல் பிரச்சினைகள் இனங்கானப்பட்டு அவை தொடர்பில் நடவடிக்கையெடுக்கப்பட்டது. மேலும் பத்திரிகைகளில் வெளியான சுற்றாடல் நட்புறவு தலைப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்தி 128 பிரச்சினைகள் தொடர்பில் குறித்த நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

.

சுற்றாடல் கல்வி அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்

இந்த பிரிவின் ஊடாக மாணவர்கள், அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களின் சுற்றாடல் உணர்வுகள், சுற்றாடல் சம்பந்தமான அறிவை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நாடாளாவிய ரீதியில் நடாத்தப்படுகின்றன. 2018ம் வருடத்தில் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் உட்பட 2150 பேர்களை அறிவூட்டுவதற்காக 06 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

பசுமை வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு

சிறிய மற்றும் நடுத்தர அளவிளான தெழில்முயற்சியாளர்கள், பசுமை வேலைவாய்ப்புக்களுக்காக அனுப்புவது இதன் பிரதான நோக்கமாகும். அதற்காக விரும்பம் தெரிவிக்கின்ற இளைஞர் யுவதிகளை அறிவூட்டுதல் மற்றும் பசுமை வேலைவாய்ப்புக்கள் சம்பந்தமாக செயன்முறைப் பயிற்சிகளை வழங்குவது இதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. 2018ம் வருடத்தில் பாதுக்கை,யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் 02 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டு 172 தெழில்முயற்சியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

சொபா பரிசர (இயற்கை சுற்றாடல்) வெளியீடுகள் மற்றும் சொபா புவத் செய்தி மடல்களை வெளியிடுதல்

தற்காலத்தில் ஏற்பட்டுள்ள உலகலாவிய சுற்றாடல் நெருக்கடி நிலைமை காரணமாக சுற்றாடல் பாதுகாப்பு மீதான அறிவை பெற்றுக் கொடுப்பது மற்றும் மனோரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதன் ஊடாக சுற்றாடல் ரீதியில் உணர்வுள்ள சமுகமொன்றை உருவாக்கும் நோக்காக் கொண்டு ஒவ்வொரு வருடமும் சுற்றாடல் அமைச்சின் மூலம் “சொபா சங்கராவ” வெளியிடப்படுகிறது. அதற்கிணங்க கடந்த வருடத்தில் “சொபா சங்கராவ” இரண்டு பாகங்கள் வெளியிடப்பட்டன. மேலும் அமைச்சின் சமகால தகவல்கள் மற்றும் அவ்வப்போது ஏற்பாடு செய்யப்படுகின்ற நிகழ்ச்சிகள் தொடர்பான தகவல்கள் என்பன உள்ளடக்கிய “சொபா புவத் ஹசுன” 2018 ஆம் ஆண்டுக்கான ஒரு பாகம் பிரசுரிக்கப்பட்டது. இந்த வெளியீடானது நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக வாசிகசாலைகள், பாடசாலைகள் மற்றும் பிரதேச சபை அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

கொள்கைத் திட்டமிடல் மற்றும் ஒழுங்குபடுத்தல் பிரிவு

2003 ஆம் அண்டில் தயாரிக்கப்பட்ட சுற்றாடல் கொள்கையை காலத்தின் தேவைக்கேற்ப இற்றைப்படுத்தும் நடவடிக்கை 2017ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம் சுற்றாடல் கொள்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய புதிய துறைகளை இணங்காண்பதும் பிரதான கொள்கையிலுள்ள அடையாளம் காணப்பட்ட இடைவெளிகளை நிரப்பக்கூடிய வகையில் கொள்கையை இற்றைப்படுத்தி வரைவுகள் தயாரிப்பதும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக மற்றைய பங்குதார நிரல் அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களை அறிவுறுத்தி கொள்கை தயாரிப்பின் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படவுள்ளது.

புதிய சுற்றாடல் கொள்கையுடன் பொருந்தக்கூடிய வகையில் தேசிய சுற்றாடல் செயற்பாட்டுத் திட்டத்தை இற்றைப்படுத்தும் நடவடிக்கையும் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு அதற்காக காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் சவால்களுக்கு முகம்கொடுப்பது, தாவரங்கள், விலங்குகள் மற்றும் சுற்றாடல் கட்டமைப்பைப் பாதுகாப்பது, கடற்கரை மற்றும் சூழவுள்ள கடற்பரப்பை விவேகமான முறையில் பயன்படுத்துவது, பொறுப்புடன்கூடிய நிலப் பயன்பாடு, சரியான தெரிவுக்கான அறிவு போன்ற குறிக்கோள்களை இற்றைப்படுத்தும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன.

மீளாய்வு வருடத்தினுள் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக முன்வைக்கப்பட்டதோடு அவற்றில் திரட்டு நிதியத்தின் கீழ் செயற்படுத்துவதற்காக 2 செயற்திட்டப் செயற்படுத்துவதற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு முடிந்துள்ளது.

புதிய செயற்திட்டங்கள் 3 இற்காக அமைச்சரவை பத்திரம் முன்வைக்கப்பட்டதோடு அவற்றில் 1 இற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது

அவ்வாறே தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக அனுமதிக்கப்பட்ட திரட்டு நிதியத்தின் கீழ் நிதி ஒதுக்கீட்டு ஏற்பாடுகளைப் பெற்றுக்கொண்டு செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் செயற்திட்டத்திற்காக அமைச்சின் செயன்முறைத் திட்டத்தை தயாரித்தலும் அதன் கீழ் செயற்படும் நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளுக்கு நிதி ஒதுக்கீட்டு ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்ளவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டு ஏற்பாடுகளின் கீழ் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் மற்றும் செயற்திட்டங்களின் முன்னேற்றத்தை விசாரித்தல் மற்றும் உரியவர்களுக்கு முன்னேற்றம் தொடர்பாக அறிக்கையிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் ஜனாதிபதி செயலாளர் அலுவலகத்தின் ஊடாக நிதியளிக்கப்படும் புனருதய நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளைத் தொடர்புபடுத்தி அதற்குரிய முன்னேற்ற ஆய்வை நடாத்துதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், அமைச்சின் சகல பிரிவுகளுடனும் இணைந்து கூட்டமொன்றை நடாத்தியதுடன் இடைக்கிடை ஒன்றிணைந்து இந்த அமைச்சின் தரவுகளின் தேவைகளை அடையாளம் கண்டதுடன் பின்னர் அதற்கு மேலதிகமாக பசுமைக் கணக்கிற்கு உரிய தரவுகள் மற்றும் நீடுநிலைக்கக்கூடிய அபிவிருத்தி இலக்கிற்கான தரவுகளின் தேவைப்பாடுகளையும் சேகரித்துக் கொண்டு அவ்வாறான தரவுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய மூலங்கள் போன்றவை அடங்கிய ஆவணமொன்று தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதற்கு மேலதிகமாக நிலையான அபிவிருத்தி இலக்குகளில் சுற்றாடல் விடயத்திற்குரிய புள்ளிவிபரங்களிலுள்ள அடிப்படைத் தரவுகள் உரிய நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு தயாரித்ததுடன், உரிய புள்ளிவிபரங்களுக்கான தரவுகள் இலங்கையினுள் தயாரிக்கப்படாத சந்தர்ப்பங்களில் அப்புள்ளிவிபரங்களுக்காக Proxy புள்ளிவிபரங்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே நிலையான அபிவிருத்தி இலக்காகக் கொண்ட கூட்டங்களில் பங்குபற்றி சுற்றாடல் விடயதிற்குரிய குறிக்கோளை அடைந்துகொள்வதற்கான ஏனைய செயற்பாடுகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.





சர்வதேச உறவுகள் பிரிவு

தெற்காசிய சுற்றாடல் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் (சகொப்) 14 ஆம் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் - 2018 மார்ச் 26 தொடக்கம் 28 வரை கொழும்பில் நடாத்தப்பட்டது.

14 ஆம் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தின் ஆரம்ப அமர்வு 2018 மார்ச் மாதம் 28 ஆம் திகதி உறுப்புரிமை நாடுகளின் உயர் நிலை உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் கொழும்பில் நடைபெற்றது. அதன் ஆரம்ப கூட்டம், தேசிய மைய நிறுவனங்களின் சிரேட்ட அலுவலர்களின் பங்களிப்புடன் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 மற்றும் 27 நாட்களில் கொழுமபில் நடைபெற்றது. 14 ஆம் நிறைவேற்று குழுக் கூட்டம் ஆப்கானிஸ்தான அரசாங்க அனுசரணையுடன கூடியதாக மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஒத்துழைப்புடன் சகெப் செயலாளர் காரியாலயத்திலஒருங்கிணைப்புடன் நடாத்தப்பட்டது. அதற்கமைய தெற்காசிய சுற்றாடல் ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் (சகெப்) செயலாளர் காரியாலயம் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் விடுதி நிருமானத்திற்காக காணியை வழங்குவதற்கு இலங்கை அனுசரணை நாடு என்ற வகையில் இணக்கத்தை தெரிவித்துள்ளதோடு இந்த காணியை குறித்தாதுக்கிக் கொள்வதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதோடு ஏனைய நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

பசுமைச் சுற்றாடல் நிதியத்தின் நிறைவேறற்றுப் பணிப்பாளரின் இலங்கை விஜயம்.

ஹரித காலநிலை நிதியம் (GREEN Climate Fund (GCF)) பிரதான சர்வதேச நிதி நிறுவனமொன்பதோடு அபிவிருத்தி அடைந்து வருகின்ற் நாடுகளின் காநிலை மாற்றங்களுக்கு தாக்குப்பிடிக்கின்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்கு சலுகை நிதியுதவிகளை வழங்குகின்றது. எனவே, நாட்டில் காலநிலை மாற்றங்களுக்கு தாக்குப்பிடிக்கின்ற ஆற்றல்களை மேம்படுத்தும் கருத்திட்டங்களுக்கு நிதியம் பெற்றுக் கொள்வதற்காக மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஹரித காலநிலை நிதியத்துடன் மிகவும் நெருக்கமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

ஹரித காலநிலை நிதியத்தின் (GREEN Climate Fund (GCF)) நிறைவேற்று பணிப்பாளர், உயர்ஸ்தானிகர் திரு. ஹேவாட் பம்சேயி அவர்கள் தலைமையிலான குழுவொன்று கடந்த ஏப்ரல் மாதத்தின் போது இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர். அதன் போது அந்த நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் கமப்பொருளாதார வனப்பயிர் ஆராய்ச்சி சர்வதேச கவுன்ஸிலின் (International Council for Research in Agro Forestry (ICRAF)) நிபுணர்கள் சகிதம் இலங்கையின் மத்திய மலைநாடு மற்றும் நகல்ஸ் வனப்பகுதி மற்றும் நீரேந்து பிரதேசங்களின் காலநிலை மாற்றங்கள் தாக்கங்கள் பற்றிய கண்காணிப்பொன்று வானிலிருந்து மேற்கொள்ளப்பட்டது.. காநிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படுகின்ற சவால்களுக்கு முகம்கொடுப்பதற்கு மிகவும் ஆபத்துக்கு உட்படுகின்ற மக்களுக்கள்,பிரதேசங்கள் மற்றும் துறைகளுக்கு இடையில் ஆற்றல்களை மேம்படுத்துவற்குள்ள சந்தர்ப்பங்கள் தொடர்பாக நிறைவேற்று பணிப்பாளர் மற்றும் அவரது குழுவினர் அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுடன் இரு தரப்பு கலந்துரையாடல் ஒன்றும் நடாத்தப்பட்டது.

பொதுநல வாய நீல சாசனத்திற்கு அமைய கண்டல் தாவர மீளமைப்பு தொடர்பான வெற்றியாளராவதற்கு இலங்கை உறுதி வழங்கல்

பொது நலவாய நாடுகளுக்களின் அரச தலைவர்களால் நீல சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து கடல் பிரிவுகள் பாதுகாப்பு பற்றிய ஒருங்கிணைப்புத் தொடர்பில் இணக்கப்பாட்டிற்கு வந்தனர் இந்த சந்தர்பத்தில் இலங்கை கண்டல் தாவர மீள் உருவாக்கம் பற்றிய வெற்றியாளராகும் எதிர்பார்ப்புப் பற்றி அறிவித்தல் வெளியிட்டது.. சைப்பிரஸ், கென்யா, அவுஸ்திரேலியா, பேலீஸ், மொராசியஸ், ஐக்கிய இராஜ்ஜியம், வனவாட்டு,நிவ்சீலாந்து, பீஜீ மற்றும் கனடா ஆகிய நாடுகள் நிலைத்திருக்கத்தகு கடல் அபிவிருத்தி மற்றும் ஒன்றுபடுவதற்கு வாக்குறுதியளித்தன

பிளாஸ்டிக் மாசடைதலைத் குறைக்கும் நோக்கில் இலங்கை பொதுநலவாய தூய்மையான கடல் சுட்டணியுடன் இணைவு

பிளாஸ்டிக் பாவனையை மட்டுப்படுத்தல் மூலம் உலக கடல் சுத்தம் செய்யும் எதிர்பார்ப்புடன் கூடியதாக நிவ்சீலாந்து,கானா மற்றும் இலங்கை பிளாஸ்டிக் மாசடைதலுக்கு எதிராக போராட்டங்களை வலுவூட்டுவதற்காக அங்கத்துவ நாடுகள் இணைக்கும் நோக்கில் ஐக்கிய இராச்சியம் மற்றும் வகவாட்டு ஆகிய அரச தலைவர்களைக் கொண்ட பொது நலவாய நாடுகளுக்கிடையிலான கடல் கூட்டனியில் இணைந்து கொண்டது.

4. இலங்கை கொரல் பாறை தொடர்பான சர்வதேச நிகழ்ச்சித்திட்டத்தில் அங்கத்துவம் பெறல்

அயலமண்டலப் கொரல் பாறைகள் உள்ள நாடுகளுக்கிடையில் இலங்கை விசேட நிலையிலுள்ளது.. உலகம் முழுவதும் பரந்துள்ள இந்த முருகைக்கற் வளங்களை பாதுகாக்கும் நோக்கில், விதிமுறைப்படாத பங்குரிமை கொண்ட முருகைக்கறகள் பற்றிய சர்வதேச நிகழ்ச்சித்திட்டம் International Initiative (Coral Reef ICRI) தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் முருகைக்கற்களை பேணிக்காப்பதற்குத் தேவையான திறனை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் முருகைக்கற்கள் பற்றிய சர்வதேச)ICRI) உடன் தொடர்புபடுவதற்கு இலங்கை அண்மையில் தீர்மானித்தது அதற்கமைய இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பபெற்றுள்ளதோடு தேவையான இதர பணிகள் நடைபெற்று வருகின்றன.

.

சுற்றாடல் துறை தொடர்பான இரட்டை/ பல் தரப்புகளுக்கிடையான ஒப்பந்தம்

பின்வரும் ஒப்பந்தங்களுக்கான அமைச்சரவைப் பத்திர வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

- இலங்கையில் பயினஸ் வனப்பம் பயிர் உள்நாட்டு தாவரங்களைக் கொண்ட ம் பயிர் என மாற்றம் செய்யும் கருத்திட்டம சார்பாக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, பாதுகாப்பு திணைக்களம் மற்றும் காடுகள் நிலையான முகாமைத்துவம் மற்றும் புனர்வாழ்வு தொடர்பான ஆசியா வலய வலையமைப்பு (Asia Pacific Mangement and Network for Sustainable Forest Rehabilitattion- APFNet) இத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்
- இலங்கையில் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம், அவுஸ்திரேலிய அரசாங்க புவிச்சரிதவியல் நிறுவனத்திற்கும் இடையிலான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப் பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தம்.

அவ்வாறே ஏனைய ஒப்பந்தங்களான,

- காலநிலை மாற்றம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் மற்றும் கொரிய ஆரசிற்கிடையிலான ஒப்பந்தம்.
- இலங்கை புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம், பிரித்தானிய புவிச்சரிதவியல் ஆய்வு பணியகம் இடையிலான உடன்படிக்கை.
- இலங்கை புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம், ஜேர்மன் ஹொல்ம்ஹோல்ட் நிலையத்தோடு இணைந்த புவிச்சரிதவியல் தொடர்பான ஜேர்மன் ஆராய்ச்சி நிலையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- தாய்லாந்து இரத்தினக்கல் மற்றும் ஆபரணம் நிறுவனம் மற்றும் இலங்கை இரத்தினக்கல மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கிடையில் உடன்படிக்கை.

- கரையோர மற்றும் கடல் ஒத்துழைப்பு பற்றிய இலங்கை சனநாகக் குடியரசின் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு மற்றும் சீனக்குடியரசுக்கிடையில் கடல் நிருவாக (State Oceanic Administration (SOA) உடன்படிக்கை.
- இலங்கை மற்றும் வியட்னாமிற்கிடையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறை ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையைச் செய்வதற்காக பங்குதார நாடுகளின் இணக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உரிய தூதரக அலுவலகங்களுக்கு அனுப்பிவைத்தல்.

உலக சுற்றாடல் வசதிகளின் கீழான கருத்திட்டம்.

உலக சுற்றாடல் வசதிகள் வட்டம் 6 கீழ்" ஒத்துழைப்புடன் முகாமைத்துவத்திற்கு: இயற்கை வளங்கள் முகாமைத்துவம் தொடர்பாக வனப்பயிரிடல் விவசாயம் மற்றும் பாதுகாப்பு ஆகிய பிரிவு, பிரசைகள் மைய சுற்றாடல் முறைமையைக் கொண்ட பிரவேசம் மூலம் ஒன்றிணைத்தல்" என்ற கருத்திட்டம் தொடர்பாக அனுமதி கிடைத்ததோடு அதன் பூர்த்தியான கருத்திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கு தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவினால் ஆரம்ப செயலமர்வு மற்றும் பிரதேச ஆரம்ப செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. அவ்வாறே" சுற்றாடல் மற்றும் சமூக அடிப்படையில் உணர்தகு விவசாய சுற்றாடல் முறைமையை தாபித்தல் மூலம் பூமி தர வீழ்ச்சியை மட்டுப்படுத்தல் மற்றும் உணவு பாதுகாப்பை ஏற்படுத்தி சுகாதார பண்புகள் நிறைந்த விவசாய மக்கள் மற்றும் செழிப்பான வாழ்வின் இருப்பை உறுதி செய்தல்" என்ற கருத்திட்டத்திற்கு அனுமதி கிடைத்ததோடு அதன் முழுமையான கருத்திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான அடிப்படைமூலப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சர்வதேச சுற்றாடல் அமைப்புக்கள், உடன்படிக்கைகள், பங்களிப்பு நிகழ்ச்சிமுறை மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு வருடாந்த பங்களிப்பு நிதி மற்றும் சேமநல நிதி செலுத்துதல்

2018 ஆம் ஆண்டுக்கான பின்வரும் சர்வதேச சுற்றாடல் அமைப்புக்கள், உடன்படிக்கைகள், பங்களிப்பு நிகழ்ச்சிமுறை மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு வருடாந்த பங்களிப்பு நிதி மற்றும் பராமரிப்பு நிதி செலுத்தி முடிக்கப்பட்டுள்ளன.

- ஐக்கிய நாடுகள் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம் (UNEP)
- பாலைவனமாதலைத் தடுப்பதற்காக ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை (UNCCD)
- காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஐக்கியநாடுகள் கட்டமைக்கப்பட்ட உடன்படிக்கை (UNFCCC)
- ஆபத்தான கழிவுகள் தேச எல்லையூடாக கொண்டு செல்லல் மற்றும் அழித்தலுக்கான பாசல்)Basel) உடன்படிக்கை
- மினமாட்டா உடன்படிக்கை
- நீண்ட காலம் நிலைத்திருக்கும் காபன் மாசுப் பொருட்கள் தொடர்பான ஸ்டொக்கம் (Stockholm) உடன்படிக்கை
- உலக பாதுகாப்பு சங்கம் (IUCN)
- உயிரியல் பல்வகைமை உடன்படிக்கை

(Biological Diversity)

- உயிர் பாதுகாப்புக்கான கடிஜினா)Biosafety) அமைப்பு
- தெற்கு ஆசிய சுற்றாடல் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான)SACEP) பங்களிப்பு நிதி
- தெற்கு ஆசிய சுற்றாடல் ஒத்துழைப்புக்கான)SACEP) பராமரிப்பு நிதி
- சூழல் தொடர்பான தெற்கு ஆசிய ஒத்துழைப்பு வேலைத்திட்டத்திற்கு கீழ் உள்ள தெற்கு ஆசிய கடல் நிகழ்ச்சித்திட்டம்)SASP)

சட்டப் பிரிவு

சுற்றாடல் முகாமைத்துவத்தினூடாக நிலைபேறான அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக சட்ட ஏற்பாடுகளை ஆராய்ந்து பார்த்து மேலும் விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன..

- அமைச்சின் மற்றம் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் வழக்கு அலுவல்களுக்கு உதவி வழங்குதல்.
- சட்டங்கள்.்.வர்த்தமானி தொடர்பான அலுவல்கள்
- மேன்முறையீடுகளை விசாரணை செய்தல்
- ஒப்பந்தங்கள் தயாரித்தல்/பரீட்சித்தல்
- பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கையெடுத்தல்
- அமைச்சின் ஒவ்வொரு பிரிவினாலும் முன்வைக்கப்படுகின்ற சட்டப்பிரச்சினைகள் தொடர்பாக ஆலோசனை வழங்குதல்.

  சுற்றாடல் சட்டங்கள் தொடர்பாக செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல்/ நடாத்துதல்

சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பிரதானமான நடவடிக்கைகளின் முன்னேற்றம் - 2018/01/01 - 2018/12/31				
இலக்கம்	**பிரதான நடவடிக்கை**	**இலக்கம்**	**பிரதான நடவடிக்கை**	**இலக்கம்**
1	பொலிஸ் அலுவலர்களை சுற்றாடல் சட்டம் தொடர்பாக அறிவுறுத்தும் செயலமர்வு – மாத்தறை மாவட்டம்		2	0.2433
2	மேன்முறையீடுகளை விசாரணை செய்தல்	1.1. தேசிய சுற்றுச் சூழல் சட்டத்தின் கீழ் மேன்முறையீடுகளை விசாரணை செய்தல்	116	
		1.2. சுரங்கம் மற்றும் கனிமப் பொருட்கள் சட்டத்தின் கீழ் மேன்முறையீடுகளை விசாரணை செய்தல்	52	
		1.3. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை சட்டத்தின் கீழ் மேன்முறையீடுகளை விசாரணை செய்தல்	28	
		1.4. கடலோர பாதுகாப்பு மற்றும் கடற்கரை வள முகாமைத்துவ சட்டத்தின் கீழ் மேன்முறையீடுகளை விசாரணை செய்தல்	145	
3	அமைச்சு தொடர்பான வழக்கு / மனித உரிமை வழக்கு தொடர்பாக ஒத்துழைப்பு வழங்கல்		27	
4	சட்டங்கள்/வர்த்தமானிப் பத்திரம் தயாரித்தல் தொடர்பான சட்ட வரைவுகள்/ சட்டமாஅதிபர் திணைக்களத்திற்கு ஒத்துழைப்பு வழங்கல்		17	
5	அமைச்சுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கான ஒப்பந்தங்கள் தயாரித்தல்/பரீட்சித்தல்		59	
6	பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கையெடுத்தல்		99	

பொலிஸ் அலுவலர்களுக்காக நடாத்தப்பட்ட அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டம்

தாபனப் பிரிவு

மாகாவலி அபிவிருத்தி மற்றம் சுற்றாடல் அமைச்சின் தாபனப் பிரிவு, அமைச்சின் பொதுவான நிருவாக அலுவல்கள் மற்றும் அமைச்சுக்குரிய திணைக்களங்கள், நிறுவனங்களின் நிருவாக அலுவல்கள் மற்றும் ஒருங்கிணைப்பு அலுவல்கள் என்பனவற்றை மேற்கொள்கின்றது. அதற்கமைய பின்வரும் பணிகள் இப்பிரிவினால் ஆற்றப்படுகின்றன.

- அமைச்சின் ஊழியர்களின் மற்றும் பிரதி அமைச்சின் ஊழியர்களின் சகல தனிப்பட்ட கடிதக் கோவை தொடர்பான நடவடிக்கைகள்
- அமைச்சின் ஊழியர்களின் விடுமுறை, புகையிரத அனுமதிச்சீட்டு மற்றும் தவணை அனுமதிப்பத்திரம் தொடர்பான நடவடிக்கைகள்
- அமைச்சின் ஊழியர்கள் பிரதி அமைச்சின் ஊழியர்களின் மேலதிக, விடுமுறை நாட் சம்பளம் மற்றும் பிரயாணச் செலவு தொடர்பான நடவடிக்கைகள்
- அமைச்சின் ஊழியர்களின் தகவல்கள் மற்றும் நி. ஒ 71 கீழ் பதவிகளை அனுமதித்துக் கொள்ளல் தொடர்பான நடவடிக்கைகள்
- சகல பதவிகளுக்குரிய வெற்றிடங்களை நிரப்புதல், நியமனம், ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வு வழங்கல், இடமாற்றங்கள் பெற்றுக் கொடுத்தல், ஓய்வுபெறல் தொடர்பான நடவடிக்கைகள்
- ஆளணிக்குரிய இடர் கடன், ஆதனக் கடன் வழங்குதல் தொடர்பான நடவடிக்கைகள்
- அக்ரஹாரா காப்புறுதி முறையின் பயன்களை வழங்குதல் தொடர்பான நடவடிக்கைகள்
- போக்குவரத்து விடயம் தொடர்பான உரிய சகல கடமை
- பாராளுமன்ற கேள்விகள், பாராளுமன்ற ஒத்திவைத்தல் பிரேரணை, பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் கீழ் முனவைக்கப்படுகின்ற கேள்விகளுக்கு பதிலகளைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் தொடர்பான நடவடிக்கைகள்
- வருடாந்த பாராளுமன்ற அனுமதிப்பத்திரம், பாராளுமன்றத்தில் நடைபெறும் கூட்டம்.·. குழுக்களுக்கு அமைச்சின் மற்றும் நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் பெயர்கள் பாராளுமன்றத்திற்கு அனுப்பி அனுமதி.·. அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளல்
- அமைச்சின் மற்றும் கீழ் உள்ள நிறுவனங்களின் சட்டங்கள், சட்ட ஒழுங்குவிதி வர்த்தமானி, வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள், செயலாற்றகை அறிக்கை.·. அமுலாக்கல் திட்டம் ஆகியவற்றை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்
- அமைச்சின் மற்றும் கீழுள்ள திணைக்களங்களின், நிறுவனங்களின் அலுவலர்களுக்கு சகாய் அடிப்படையில் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கல் பணிகளை
- அமைச்சின் சகல உத்தியோகத்தர்களின் அடையாள அட்டை தயாரித்து வழங்கல் நடவடிக்கை
- அமைச்சின் உத்தியோகத்தர்களின் அஞ்சல் வாக்கு தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் தேர்தல் கடமைகளுக்கான உத்தியோகத்தர்களின் தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பான நடவடிக்கைகள்
- தகவல் சட்டத்தின் கீழ் அமைச்சுடன் தொடர்பாக தகவல்களை முன்வைத்தல் பணிகள்
- அமைச்சு மற்றும் கீழ் உள்ள நிறுவனங்களுக்கு வாகனக் கொள்வனவு செய்வதற்கு உரிய கோரிக்கைகளை மீளாய்வு செய்து திறைசேரி அனுமதியை பெற்றுக் கொள்ளல்
- அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களது மற்றும் நிறுவனங்களின் பதவியணியை அனுமதித்துக் கொள்ளல், ஆட்சேர்ப்பு திட்டங்களை அனுமதித்துக் கொள்ளல் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அனுமதியை பெற்றுக் கொள்ளல் மற்றும் கொடுப்பனவு வழங்கல் தொடர்பாக ஆலோசனை பெற்றுக் கொள்வதற்காக அனுப்புதல்
- அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கான சொந்த வெளிநாட்டு விடுமுறை மற்றும் மேலதிக எரிபொருள் மீளளிப்புத் தொடர்பாக அனுமதியைப் பெற்றுக் கொடுத்தல்
- அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கு தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையை நியமனம் செய்தல்
- அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களது மற்றும் நிறுவனங்களின் நேர்முகப் பரீட்சைகளுக்கு அமைச்சின் பிரதிநிதிகளை பெயர் குறித்தல்
- அமைச்சு மற்றும் கீழ் உள்ள திணைக்களங்களது மற்றும் நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் தொடர்பாக பொதுமக்கள் முறைப்பாட்டு செயற் குழுவுக்கு அறிக்கைகளை சமர்ப்பித்தல்

சேவை நிரந்தரம் செய்தல் -2018

திணைக்கள நிறைவேற்று	18
அபிவிருத்தி அலுவலர்	04
அரச முகாமைத்துவ சேவை	01
ஒன்றிணைந்த சாரதி சேவை	04

பதவி உயர்வு - 2018

அபிவிருத்தி அலுவலர்	-
அரச முகாமைத்துவ சேவை	02
ஒன்றிணைந்த சாரதி சேவை	04
அலுவலக கனிட்ட ஊ. சேவை	-

இளைப்பாறல் - 2018

அரச முகாமைத்துவ சேவை	-	02
ஒன்றிணைந்த சாரதி சேவை	-	01
அலுவலக கனிட்ட ஊ. சேவை	-	01

கடன் வழங்கல் - 2018

இடர் கடன்	122
ஆதனக் கடன்	04

சொந்த வெளிநாட்டு விடுமுறை	-	192
அஞ்சல் வாக்கு தொடர்பாக தகவல்களை சமர்ப்பித்தல்	-	185
அடையாள அட்டை தயாரித்தல்	-	211
பாராளுமன்றக் கேள்விகளுக்கு பதில் சமர்ப்பித்தல்	-	32
சட்டங்கள், ஒழுங்குவிதிகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்	-	07
வருடாந்த அறிக்கை மற்றும் செயலாற்றுகை அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல	-	04
நிவாரண அடிப்படையில் வாகன இறக்குமதி அனு.பத்திரம் விநியோகித்தல்	-	86
அமைச்சரவைப் பத்திரம்	-	53
தகவறியும் சட்டத்திற்கமைய பதிலளித்தல்	-	48

ஏனைய கடமை அலுவல்கள் தொடர்பில் கடிதங்கள் கிடைக்கப்பெறுகின்ற ஒழுங்கில் நடவக்கையெடுக்கப்பட்டதோடு, எண்ணிக்கை அடிப்படையில் சமர்ப்பிப்பது அசளகரியமானதாகும்.

குழாம் வாகனங்களின் முகாமைத்துவம்

தொடர் இல	ஆதனத்தின் வகை	2018.12.31 ஆம் திகதிக்கு உள்ள நிலைமை
1.	கெப் வண்டி	27
2.	மோட்டார் வண்டி	28
3.	வேன்	03
4.	ஜீப்	14
5.	மோட்டார் சைக்கிள்	01
மொத்தம்		**73**

2018 ஆம் ஆண்டில் வானங்கள் திருத்தம் செய்தல் மற்றும் பராமரிப்பு சேவை என்பன மேற்கொள்ளப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை - 282

விசாரணைப் பிரிவு

அமைச்சுப் பிரிவு மற்றும் அமைச்சின்கீழ் செயற்படுகின்ற சகல நிறுவனங்கள் தொடர்பாக விசாரணை செய்தல், நிறுவன மட்டத்தில் முறைப்பாடுகள் தொடர்பாக செயற்படுதல் பற்றிய மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்பு மூலம் முறைகேடுகளைக் மட்டுப்படுத்துவதற்கான் விதிமுறையான செயற்பாடுகளை தொடர்ச்சியாகப் பேணிச் செல்லல் இந்த பிரிவின் பிராதான பணிப்பொறுப்பாகும். அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களுக்குரிய விசாரணைகளை மேற்கொள்ளல், முறைப்பாடுகளுக்கு காரணமான சிக்கல்களை அடையாளம் காணல், அத்தகைய சிக்கல்கள் மீண்டும் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான முன்மொழிவுகளை முன் வைத்தல் விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்ட் தகவல்களின் அடிப்படையில் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முன்மொழிவுகளை வழங்குதல், அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் முறைப்பாடுகள் தொடர்பாக செயற்படுதல் தொடர்பாக மேற்பார்வை செய்தல், கிடைக்கும் பொதுமக்கள் முறைப்பாடுகளுக்குப் பொருத்தமான தீர்வுகளைக் வழங்குவதற்காக தாபனங்களை இணைப்புச் செய்தல் என்பன விசாரணைப் பிரின் பிரதான பணிப் பொறுப்புக்களாகும்

ஒவ்வொரு நிறுவனத்திற்கு தொடர்பாக 2018 ஆம் ஆண்டில் கிடைத்த முறைப்பாடுகள் மற்றும் அவை தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்.

.

நிறுவனம்	கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை	அறிக்கை கோரப்பட்டுள்ள எண்ணிக்கை	பதில் கிடைக்கப் பெற்றுள்ள எண்ணிக்கை	விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ள எண்ணிக்கை
வனப் பாதுபாப்பு திணைக்களம்	**74**	67	38	07
கரையோரப் பாதுகாப்பு மற்றும் கடற்கரை வள முகாமைத்துவ திணைக்களம்	**08**	08	03	-
இலங்கை மகாவலி அதிகார சபை	**37**	31	-	06
மத்திய சுற்றாடல் அதிகார சபை	**96**	91	55	05
தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபை	**23**	20	09	03
கடல் மாசுறல் தடுப்பு அதிகார சபை	**03**	-	-	03
புவியியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்	**106**	93	42	13
அரச மரக் கூட்டுத்தாபனம்	**11**	07	04	04
இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்	**01**	-	-	01
இந்த அமைச்சு தொடர்பாக கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள்	**01**	-	-	01
மொரகஹகந்த ,களுகங்கை கருத்திட்டம்	**41**	39	20	02
மொத்தம்	**401**	**356**	**171**	**45**

மனித வளங்கள் விருத்திப்பிரிவு

மனித வள அபிவிருத்தி பிரிவு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்காக அமைச்சின் சகல வகுதிகளுக்கும் உரிய உத்தியோகத்தர்கள் கலந்துகொள்ளச் செய்யப்படுவதோடு மேற்படி காலப்பகுதியில் பின்வரும் உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக 537 உத்தியோகத்தர்கள் கலந்துகொள்ளச் செய்யப்பட்டனர்.

	பயிற்சி பற்றிய விபரங்கள்	**செயலர்வுகள் மூலம் பயிற்றுவிக்கப்பட்ட அலுவலர்கள் எண்ணிக்கை**
